உ

கடவுள் துணை.

தாண்டவமூர்த்திசுவாமிகள்

செய்த

கைவல்லிய நவநீத மூலமும்,

பிறையாறு

அருணாசல சுவாமிகள்

இயற்றிய உரையும்

அமரம்பேடு

இரங்கசாமிமுதலியார் & சன்ஸ்

அவர்களது

பூமகள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1924.

இதன் விலை ரூபா-1.

அ. இரங்கசாமிமுதலியார் அண்டு சன்ஸ்
பூமகள்விலாசம் பிரஸ்,
நெ-24, தாண்டவராயப்பிள்ளைவீதி
சென்னை.

௨

கடவுள் துணை.

உரைச்சிறப்புப்பாயிரம்.

சீர்வளர் பிரம சிருட்டியின் முனமே
ஏர்வளர் சத்தா யிலங்குறு பிரமம்
பரமுல குயிரெனப் படுபொரு ளெவற்றினும்
முரணுருஅச் சுசாதிய முதலிய பேதம்
அற்றொளிர் பரமா காச சயம்புவாய்
உற்றதன் னிலைமையி னேரிறை குறையா
தெறிதிரைக் கரத்தா லினமணி கொழிக்கும்
செறிபுனற் பொன்னிசூழ் செம்பிய னாட்டில்
பொன்னிலத் தவரிழி பொற்புறு படியென
நன்னிலை மாடமார் நன்னில மதனில்
செந்தண லோம்புந் திறந்திரி யாதுயர்
அந்தணர் குலத்தி னவதரித் தருளிய
நாரா யணகுரு நாண்மலர்ப் பதத்தைப்
பேரா தவனருள் பெற்றிடு மதனால்
முற்றுணர் தாண்டவ மூர்த்தி யனுபவப்
பெற்றியி னுலகோர் பேரின் படையக்
கிளரும்வே தாந்தக் கீரோ ததியைத்
தளர்வறு சமாதித் தாழியி னிறைத்திட்
டகமுறு விசார வனலினுற் காய்ச்சி
மகிழ்குரு வாக்கிய மத்தாற் கடைந்து
ஞானகை வல்ய நவநீ தத்தை
ஆனபே ரன்பி னளித்தன னதனை
எளிதினில் யாவரு மின்புடன் றுய்க்க

ஒளிமணக் கிருதமா யுரைசெய்விக் கும்படி
சகவாழ் வனைத்துஞ் சத்திய மலவெனத்
திகழுறு மலைகான் சென்றுசெய் தவத்தோர்
உடனுறைந் துடலொறுத் துணர்வுறப் பட்டினத்
தடிக ளெனத்துறந் தரனுறை காசியை
நாடியாத் திரைசெயு நாட்டுக் கோட்டைப்
பீடுறு மருணா சலப்பெருந் தவத்தோன்
அருளிய மொழியினை யன்புட னுட்கொண்
டருளென நிலமகட் கணிகலை யான
நிலைக்கடல் வயிற்றி னிரப்பிப் பற்பல
கலைக்கட றன்னைக் கருத்து ளடக்கிய
அகத்திய முனிவாழ் பொதியமும் பொதிய
நகத்துரு சந்தன மரமகி லுங்கொடு
நீர்வரு பொருநையு நிகழுமந் நீரால்
ஏர்பெரு செந்நெற் கரும்பெனக் கன்னல்
கமுகெனக் கமுகுந் தெங்கெனத் தெங்குதான்
அமுதுகு மெழிலிக் கானகா லென்னத்
திகழ்வுற வளங்களுஞ் சேர்ந்தினி தோங்கும்
புகழ்பெறு பாண்டிப் புத்தே ணாட்டில்
களைகளை கடைசியர் கண்ணூ டுறுமுகம்
அளைவுறு சாயையை யம்புய மீது
புல்லிதழ்க் குவளை பூத்ததென் றதனை
வல்லிதிற் கையால் வவ்வுறக் கண்டாங்
குழத்தியர் புன்னகை கண்டியங் கிடவும்
உழவர்க ளுழுறு மொண்பணை சூழும்
வாதவூ ரடிகண் மதியுரு வாகப்
போதபூ ரணனோர் பூசுர னாகிக்
குருந்தடி யமர்ந்தருள் கோதில் பெருந்துறை

மருகிற் பளிக்குமேன் மாடத் துலவும்
மின்னனூர் முகமதி தமைவிண் மதிதான்
தன்னனு ரரசு தனைக்கொளு மொன்னலர்
என்னக் கலங்கி யேங்குறு மமயத்
தன்னூர் கூந்த லரவெனக் கண்டு
பயமற் றேகுறும் பான்மையு மறையவர்
வயமுறு மரசர் வணிகர்சூத் திரமுறை
மன்னுமா வித்திரா வயலெனு நகரோன்
பொன்னிசூழ் பூம்புகார் வணிகர் குலோத்தமன்
நாரியர் மனங்க ணயமுற நாடும்
சீரியல் வேளிற் சிறந்தநல் லெழிலான்
மாலைவண் டுணுநறுக் காந்தளு நவமணி
மாலையு மார்பில் வயங்குவெண் கவிகையான்
அறிஞர்நல் குரவெனு மங்கி தணியப்
பொறிவனஞ் சொரியுநற் புயல்கர முடையான்
சித்திது சடமீ தென்றவை தேர்ந்து
முத்தியைப் பெறமுயன் மூதறி வுடையோன்
இல்லற மதனி லிருந்துமெய்த் துறவே
நல்லற மெனவே காந்தத்தை நண்ணி
சாதுசங் கத்தொடு சாத்திரார்த் தங்களை
மூதுணர் வுறநித மோதிநன் மோன
நிலையினின் றைம்புல நெறிச்செலு மனதை
அலைவுறு தடங்கு மடக்கியப் பதிஞன்
ஈன்றிடுங் கறுத்தா னெனுமால் கேட்பச்
சான்றோ ரனுபவச் சாம்பிரதா யந்தழீஇத்
தகைபெறும் பன்னூற் கருத்தையுந் தனது
சகசா நந்தமுந் தழுவியவ் வனலால்
உருக்குமவ் வுரையிற் குயர்பரா நந்த

கிருத மெனப்பயிர் கண்டு கிளத்தினன்
விண்ணவர் முதலோர் வீடுறு மெய்த்தவம்
நண்ணுற வந்துறுங் காவிரி நாட்டிடைத்
திருத்துருத் தியினோர் தேசிக வரசாய்
அருமறை முடிவா மாதனத் திருந்து
சித்தியாங் குறுநில மன்னரைச் செயித்து
முத்திமா வுலகாண் டிடமுடி சூடும்
இந்திர பீடத் தெழிற்கர பாத்திர
சுந்தர னடிமுடி சூடிய தெத்தாத்
திரய னடிபெருஞ் செங்கம லன்றாள்
மருவுறு நாகையின் மன்னுபே ரறிஞன்
அகோசர சயம்பு வாகிய வோர்முதல்
சுகோததி யுருவாய்த் தோன்றரு ணசலக்
குரவ னடிமுடி கொண்டடி யவர்க்குப்
பரவுணர் வாம்பொருள் காட்டுமெய்ப் பானு
ஓதரு முவகை விளக்கு முவாமதி
சாதன மொன்றுமி லாத்தமி யேனையும்
ஓர்பொரு ளாக வுவகையிற் கூவிச்
சீர்பதந் தலைமேற் றிகழ்வுறச் சூட்டி
ஒருமொழி யமுதை யுள்ளுற வூட்டி
நிருவிகற் பாங்க நிட்டையி னிறீஇ
மிகுசொரு பானு பூதியை விளக்கிச்
சகசா நந்தந் தலைமீக் கொண்டு
சும்மா விருக்கச் சுகமென வருளிய
எம்மா னெழிலுற் றிலங்கும் பிறைசை
அருண சலசு வாமிக ளென்னத்
திருநா மம்பெறுந் தேசிகோத் தமனே.

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

கைவல்லிய நவநீதம்.

பாயிரம்.

[அவதாரிகை.]—வடநூலாராய்ச்சியில் வல்லமையுள்ள இந்நூலாசிரியர் தாமடைந்த சுவானுபூதிப் பிரத்தியக்ஷத்தை உலகம் எளிதிலடைந்து ஆனந்தாதீத மாகும்பொருட்டு அருளினாற் சொல்லப்புகுந்த இந்நூல் இனிது முடியுமாறு, அதன் அந்தரங்கமான பிரஞ்ஞானம் பிரமம் என்னும் இருக்குவேத மகாவாக்கியார்த்தமாக விளங்கும் அத்துவித ஸ்வரூபத்தை விலட்சணமாகவுஞ் சலட்சணமாகவுந் துதிப்பான் றொடங்கி, இச்செய்யுளில் சமாதியின்கண் உதயமானவிலட்சணமாகிய கூடஸ்த பிரமத்தைத் துதிக்கின்றார்.

பொன்னில மாதராசை பொருந்தினர் பொருந்தா ருள்ளந்
தன்னிலந் தரத்திற் சீவ சாக்ஷிமாத் திரமாய் நிற்கும்
எந்நிலங் களினு மிக்க வெழுநில மவற்றின் மேலாம்
நன்னில மருவு மேக நாயகன் பதங்கள் போற்றி.

(இதன்பொருள்.) பொன்னினிடத்தும் மண்ணினிடத்தும் மடவாரிடத்தும் ஆசையுள்ள அஞ்ஞானிகளும் நிராசையுள்ள மெய்ஞ்ஞானிகளுமாகிய இவர்களது இதயாம்பரத்தில் நான்கு பூதங்களிலும் நிறைந்திருக்கின்ற ஆகாயத்தைப்போலக் கூடஸ்த சைதன்னியமாத்திரமாக நிறைந்திருக்கின்ற எவ்விதமான நிலங்களிலும் மேலாய ஞானபூமிகளேழனுள் முடிவாகிய துரியபூமியிற் பொருந்

திய ஒன்றாகிய பிரம சைதன்னியத்தின் திருவடிகளை வணங்குவாம். எ-று.

பதசாரம். சகல சமயங்களுக்கு மேலானது ஞானபூமி என்பார் 'எந்நிலங்களினுமிக்க வெழுநிலம்' எனவும், அவைகளின் முடிவானது துரியபூமி என்பார் 'நன்னிலம்' எனவும், அதனிடமாக விளங்குகின்றது துரியாதீதம் என்பார் 'ஏகநாயகன்' எனவும், அஃதே துரிய ஸ்வரூபமாய்ச் சொரூபமுதல், ஸ்தம்ப பரியந்தஞ் சர்வ வியாபகமாய் வியாபித்து விளங்குவது என்பார் 'பொன்னில மாதராசை பொருந்தினர் பொருந்தா ருள்ளந், தன்னிலந் தரத்திற் சீவ சாட்சிமாத் திரமாய் நிற்கும்' எனவும், யாவர்க்குஞ் சைதன்னியத்தின் தற்பிரகாசமான கூடஸ்த பிரமமே இடம் என்பார் 'பதங்கள்' எனவும், அவைகளின் ஐக்கியமே அத்துவிதம் என்பார் 'போற்றி' எனவும், கூறினர். பொன்னில மாதரென்பது இச்சையை விளைப்பதற்குக் காரணமான ஈடணாத்திரியமெனக்கொள்க. புத்திரேடணை என்பதை யவனுரிமையிற் பெறுவதாகிய அரசின்மேல் வைத்துக் கூறினர்.

இதன்தாற்பரியம். அகோசரமான நிரதிசயானந்த வஸ்து கோசரிக்குமிடத்துப் பூரணானந்தமாகப் பிரவேசித்து நித்தியானந்த சாக்ஷாத்காரமாகத் தடித்து அதில் அதீதமாக விளங்குவதைப் பிரமமாகவும், அஃதே விடய சம்பந்தங்களிற் றாக்கற்றிருந்ததைப் பிரத்யேகாத்ம ஸ்வரூபமாகவுந் துதித்ததாம். (க)

அ—கை. இச்செய்யுளில் முற்கூறிய அத்துவித வஸ்துவைச் சகச நிட்டையிற் சலக்ஷணமாக விளங்கிய சுயஞ்சைதன்னியமாகத் துதிக்கின்றார்.

ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேதுவா மயனாய் மாலாய்
ஆன்றவீ சனுமாய்த் தானே யனந்தமூர்த் தியுமாய் நிற்கும்

பூன்றமுத் தனுமா யின்பப் புணரியா தவனுய் நாளும்
தோன்றிய விமலபோத சொரூபத்தைப் பணிகின் றேனே.

இ-ள். சிருஷ்டி ஸ்திதி சங்காரம் என்னும் இம்முத்தொழிற்கும் ஏதுவாகிய பிரமனுகியும், விஷ்ணுவாகியும், மாட்சிமையுள்ள உருத்திரனுகியும், இன்னும் அநேக வடிவங்களாகியும் இருக்கின்ற பூரணமான முக்தனுகியும், ஆனந்த சமுத்திரத்தி லுதிக்கு ஞான சூரியனுகியும், சதோதயமாகிய சுத்த சைதன்னியமான பிரமஸ்வரூபத்தை வணங்குகின்றேன். எ-று.

ப-ம். தனது ஸ்புரணமெல்லாந் தனது வடிவமாக விளங்கும் என்பார் 'அயனுய் மாலா யான்ற வீசனுமாய்த் தானே யனந்தமூர்த்தியுமாய் நிற்கும்' எனவும், பேரின்பவிளக்கமே சைதன்னியம் என்பார் 'இன்பப் புணரியாதவன்' எனவும், உற்பத்தி திதி லயங்களின்றி விளங்கின சுத்த சைதன்னியம் என்பார் 'நாளுந்தோன்றிய விமலபோத சொரூபம்' எனவும், கூறினர்.

இ-ம். சர்வம் பிரமமயம் என்னும் உபதேச வாக்கியப்படிக்கு ஸ்வரூப சாக்ஷாத்காரமான சுத்த சைதன்னியத்தைத் துதிசெய்ததாம். (உ)

அ-கை. முற்கூறிய ஆத்மஸ்வரூபமே வடிவமான அருளிறையை அதீதமாகவுஞ் சாக்ஷாத்காரமாகவுந் துதிக்கத் தொடங்கி இக் கவியி லதீதமாகத் துதிக்கின்றார்.

எவருடை யருளால் யானே யெங்குமாம் பிரம மென்பால்
கவருடைப் புவன மெல்லாங் கற்பித மென்ற றிந்து
சுவரிடை வெளிபோல் யானே சொரூப சுபாவ மானேன்
அவருடைப் பதும பாத மனுதினம் பணிகின் றேனே.

இ-ள். யாவருடைய கிருபையினுல் நானே எவ்விடத்திலும் நிறைந்திருக்கின்ற பிரமஸ்வரூபமும் என்னிடத்தில் தோற்றி விரிச்

திருக்கின்ற உலக முழுவதும் பொய்யென்றறிந்து கவரிடத்திருக்குங் ககனம்போல் நானே பிரமசுபாவமும் ஆயினேன், ஆதலால் அவரது கமலமலர்போன்ற திருவடிகளை எப்போதும் வணங்குகின்றேன். எ-று.

ப—ம். சர்வம் பிரமமென்பார் 'எங்குமாம் பிரமம்,' எனவும், சர்வமு மில்லையென்பார் 'கவருடைப் புவனமெல்லாங் கற்பிதம்' எனவும், யாவுந் தன்மயமாக விளங்குவன வென்பார் 'சொரூப சுபாவமானேன்' எனவும், கூறினர்.

இ—ம். சர்வமாய்ச் சர்வமிலதா யிருக்கின்ற தன்னைத் தன்னிடத்துத் தானயிருந்து விளக்கிய குருதுரியத்தை வணங்கின்றாம்.

அ—கை. இச்செய்யுளிற் சற்குரு சொரூபத்தைச் சாக்ஷாத்காரமாகத் துதிக்கின்ருர்.

என்னுடை மனது புத்தி யிந்திய சரீர மெல்லாம்
என்னுடை யறிவி னலே யிரவிமுன் னிமமே யாக்கி
என்னுடை நீயு நானு மேகமென் றைக்கியஞ் செய்ய
என்னுடைக் குருவாய்த்தோன்று மீசனை யிறைஞ்சினேனே.

இ-ள். என்னுடைய மனம் புத்திகளாகிய அந்தக்கரணமும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும் தூலதேகமுமாகிய இவைகளனைத்தும் எனது ஆத்ம ஞானத்தினல் சூரியனைக்கண்ட பனியைப்போலச்செய்து, எனது சொரூபமாகிய நீ என்பதும் உனது சொரூபமாகிய நானென்பதும் ஒன்றேயென அத்துவிதமாக்க, எனது ஆசாரியராக உதயமான அருளிறையை வணங்கினேன். எ-று.

ப—ம். தனது பிரியத்தடிப்பே குரு ஸ்வரூபமென்பார் 'என்னுடைக் குரு' எனவும், தன்னை யிரக்ஷிக்கு நிமித்தம் உதயமானது அருளிறை யென்பார் 'ஈசன்' எனவும் கூறினர்.

இ—ம். மனமுதலிய தத்துவங்க ளனைத்தையுஞ் சமாதிஞானத்திறைக்கரைத்து அதனிலுதயமாகும் ஆனந்தமாகிய அஃதே இஃது, இஃதே அஃது என்னும் அத்துவ ஸ்வரூபத்தைத் தரிசிப்பிக்கும் பொருட்டுப் பூரணமே ஒருருவாக எழுந்தருளிய வாசாரியரை வணங்கினதாம். (௪)

அ—கை. தனது ஆசிரியரைவணங்கி அவரருளினுற் கூறப்புகுந்த இந் நூன்முகத்திற் கூறப்படும் விஷயமும், இதனுலுண்டாகும் பயனும், இந்நூற்கும் இதிற் கூறப்படுவதாகிய விஷயத்திற்குமுள்ள சம்பந்தமும், இது கேட்டற்குரிய அதிகாரியும் ஆகிய அனுபந்த சதுட்டயம் இந்நூல் கற்கு மாணுக்கன் உணரும்பொருட்டு உரைக்கவேண்டுதலின் அவற்றுள் அதிகாரியும் விஷயமும் இச்செய்யுளிற் கூறுகின்றூர்.

அந்தமு நடுவு மின்றி யாதியு மின்றி வான்போல்
சந்தத மொளிரு ஞான சற்குரு பாதம் போற்றிப்
பந்தமும் வீடுங் காட்டப் பரந்தநூல் பார்க்க மாட்டா
மைந்தரு முணரு மாறு வஸ்துதத் துவஞ்சொல் வேனே.

இ-ள். ஆதிமத்தியாந்த ரகிதமாய் ஆகாயத்தைப் போலச் சதோதயமாய் விளங்குகின்ற ஞானுசாரியரது பாதத்தை வணங்கிப் பெத்தமு முத்தியுமாகிய இவைகளின் ஸ்வரூபத்தைத் தெரிவிக்கும்பொருட்டு விரிந்திருக்கின்ற வேதாந்த சாத்திரங்களை ஆராய்ந்தறியச் சத்தியில்லாத சீஷரும் எளிதிலுணரும்படி பரவஸ்துவி னுண்மையைச் சொல்வேன். மைந்தரென்பது அதிகாரியெனவும், வஸ்து . தத்துவமென்பது விடயமெனவுங் கொள்க. 'பரந்தநூல் பார்க்கமாட்டா மைந்தரும்' என்னும் உம்மையாற் பார்ப்பவர்க ளென்பதுமாயிற்று.

ப-ம். கால முதலியவை நசிக்கினுந் தான் நசியாதிருத்தலின் 'அந்தமின்றி' எனவும், இடையின்றித் தான் பூரணாநந்தமாக விளங்குதலின் 'நடுவின்றி' எனவும், எப்போதுந் தான் சுயமாய்ப் பிரகாசித்தலின் 'ஆதியுமின்றி' எனவும், இங்ஙனஞ் சதோதயமாக விளங்கிய சச்சிதானந்தமான சுத்தசைதன்னியமே குரு சொரூபமாதலால் 'சந்ததமொளிருஞான சற்குரு' எனவும், தான் அதன்மயமாய் நிற்றலின் 'பாதம்போற்றி' எனவும், கல்வி அல்லலெனக்கண்டு அஃதின் சாரமான தன்னை விரைவிற் றெரிந்துகொள்ள விருப்பமுற்றவர்கள் எளிதிலுணரும்படி யுணர்த்துதலின் 'பரந்தநூல் பார்க்கமாட்டா மைந்தருமுணருமாறு வஸ்து தத்துவஞ் சொல்வேன்' எனவும், கூறினர். (ரு)

அ-கை. இச்செய்யுளில் சம்பந்தமும் பிரயோசனமுங் கூறுகின்றார்.

படர்ந்தவே தாந்த மென்னும் பாற்கடன் மொண்டு
முன்னூல், குடங்களி னிறைத்து வைத்தார் குரவர்க ளெல்
லாங் காய்ச்சிக், கடைந்தெடுத் தளித்தே னிந்தக் கைவல்ய
நவநீ தத்தை, அடைந்தவர் விடய மண்டின் றலைவரோ
பசியி லாரே.

இ-ள். விரிந்திருக்கின்ற உபநிடதமென்னும் க்ஷீரசமுத்திரத்தில் முகந்து, முந்நூலாகிய கடங்களில் ஆசிரியர்கள் நிறைத்து வைத்தார்கள்; அவைகளனைத்தையுங் காய்ச்சிக் கடைதல் செய்து இஞ்ஞானசாத்திரமாகிய கைவல்ய நவநீதத்தை எடுத்துக் கொடுத்தேன்; இதைப் புசித்தவர்கள் நித்திய திருத்தி யடைந்தவர்களாதலால் விடயவானந்த மென்னு மண்ணைப் புசித்துப் பவத்திற் சுழல்வார்களோ சுழலார். எ-று.

கைவல்லிய நவநீதமென்பது சம்பந்தமும் அடைந்தவர் பசியிலாரென்பது பிரயோசனமுமா மெனக்கொள்க.

ப—ம். வேதமுடிவான மகாவாக்கியம் ஓர் மொழியாயினும் அஃது சீடனுக்கும் போதமாகும்பொருட்டு உண்டான சுத்தவேதாந்த சாத்திரங்களுக்கு அளவின்மையால் 'படர்ந்த வேதாந்த மென்னும் பாற்கடல்' எனவும், அவைகளில் தங்களுக்கு அனுபவமாகும் பொருட்டு ஆசிரியரெடுத்தறிவித்த வாக்கியங்களை யெடுத்துக் கோடலை 'மொண்டு' எனவும், தாம் பெற்ற பேறு உலகம் பெறும்படி பாவினமாகிய நூல்களில் அவ்வாக்கியங்களை அமைத்தலை, 'முன்னூற்குடங்களி னிறைத்துவைத்தார் குரவர்கள்' எனவும், அப் பல சாத்திரங்களிலுள்ள வாக்கியங்களைச் சேகரித்தலை 'எல்லாம்' எனவும், அவ்வாக்கியங்களின் பூருவபக்ஷத்தை நீக்கி விசாரத்தாற் சித்தாந்தப்படுத்துதலைக் 'காய்ச்சி' எனவும், அச்சித்தாந்தத்தைக் குருவுபதேசத்தாற் சமாதியில் அனுபவமாக ஆராய்தலைக் 'கடைந்து' எனவும், அதிலுதயமான நிருவாண சுகத்தை யெடுத்து ஓர் நூலாகத் தந்ததை 'எடுத்தளித்தேனிந்தக் கைவல்ய நவநீதத்தை' எனவும், இஃதைப்பெற் றனுபவித்துத் திருத்தியடைதலை 'அடைந்தவர் பசியிலார்' எனவும், இவ்வாரூடர் விடய விச்சையினுற் சனன மரணத்திற் சுழலாரென்பதை 'விடய மண்டின் றலைவரோ' எனவும், கூறினர்.

இ—ம். பிரம மென்னுங் காமதேனுவிற் சுரந்த சுருதிகளென்னும் பாலை, விசாரமென்னும் அக்கினியாற் பூருவபக்ஷமென்னு நீர் சுண்ட, சித்தாந்தமென்னு மதுரமிகக்காய்ச்சி, விருத்திஞானமென்னும் பிரைகுத்தி, உபதேசமென்னு மத்திட்டு, அனுபவ ஆராய்ச்சி யென்னுங் கடைதலைச்செய்து, அதிலெழாநின்ற கைவல்லியமென்னும் நவநீதத்தை அனுபவித்தலை யடைந்து, நித்திய திருத்தியான

பசியிலார் விடயானந்தமான மண்ணைப் புசியார்கள் எனக் கூறின தாம். (கூ)

அ—கை. உபாசனமூர்த்தியை வணங்கி இந்நூலின் படலவகை கூறுகின்றார்.

முத்தனை வேங்கடேச முகுந்தனை யென்னையாட் கொண்ட
கத்தனை வணங்கிச் சொல்லுங் கைவல்ய நவநீ தத்தைத்
தத்துவ விளக்க மென்றுஞ் சந்தேகந் தெளித லென்றும்
வைத்திரு படல மாக வகுத்துரை செய்கின் றேனே.

இ-ள். பாசங்களை நீக்கி நிற்பவனை, வேங்கடாசலபதியாகிய திருமாலை, என்னை அடிமைகொண்ட இறைவனைப்பணிந்து உரைக்குங் கைவல்லிய நவநீதமென்னு ஞானசாத்திரத்தைத் தத்துவவிளக்கம் எனவும் சந்தேகந் தெளிதல் எனவும் நாமந்தரித்து இரண்டு படலமாகப் பிரித்துச் சொல்லுகின்றேன். எ-று.

இ—ம். வெளிப்படை. (எ)

பாயிர முற்றிற்று.

முதலாவது

தத்துவவிளக்கப்படலம்.

அ-கை. முற்கூறிய படலங்களுள் 'தத்துவ விளக்கம் என்னும் படலத்தில் தத்துவத்தை விளக்கும் பொருட்டு முதற்கண் அதுகேட்கும் அதிகாரிக்குரிய சாதன சதுட்டய இலக்கணங் கூறுகின்றார்.

நித்திய வநித்தி யங்க ணிண்ணயந் தெரிவி வேகம்
மத்திய விகப ரங்கள் வருபோகங் களினி ராசை
சத்திய முரைக்க வேண்டுஞ் சமாதியென் றாறு கூட்டம்
முத்தியை விரும்பு மிச்சை மொழிவர்சா தனமிந் நான்கே.

இ-ள். நித்தியா நித்திய வஸ்துக்களின் நிச்சயந் தெரிகின்ற விவேகமும், இடையிலுள்ள இகலோக பரலோகங்களில் உண்டாகின்ற செல்வங்களில் விராகமும், உண்மையாகச் சொல்லத்தகுந்த சமாதி சட்க சம்பத்தியும் முமூட்சுத்துவமும் ஆகிய இந்நான்கையும் சாதன சதுட்டயம் என்று சத்துக்கள் சொல்லுவார்கள். எ-று. (௪)

சமந்தமம் விடல்ச கித்தல் சமாதானஞ் சிரத்தை யாறும்
சமமகக் கரண தண்டந் தமம்புரக் கரண தண்டம்
அமர்மனோ விவகா ரங்க ளருகலே விடலென் றுகும்
அமர்செயுஞ் சுகதுக் காதி யனுபவிப் பதுச கித்தல்.

இ-ள். சமமெனவும் தமமெனவும் உபரதியெனவும் திதீக்ஷை யெனவும் சமாதானமெனவும் சிரத்தையெனவும் ஆறும்; சமமாவது அந்தக்கரணத்தைத் தண்டித்தலாம்; தமமாவது புறத்தின்கண்

ணுள்ள தசேந்திரியங்களைத் தண்டித்தலாம்; விடலென்பது விரும்பப்பட்ட குடும்பவிவகாரங்களைச் சுருங்கச்செய்தலாம்; சகித்தலாவது கலகஞ்செய்கின்ற இன்பதுன்ப முதலியவைகளைப் பிராரத்தமென்று சமசித்தமாய் அனுபவிப்பதாம். எ-று. (உ)

சிரவணப் பொருளைத் தானே சித்தஞ்சிந் திக்கு மாறு
சரசமாய் வைக்கு மித்தைச் சமாதான மென்பர் மேலோர்
பரமசற் குருநூ லன்பு பற்றலே சிரத்தை யாகும்
வரமிகு சமாதி யாறு வகையாஞ்சொற் பொருளீ தாமே.

இ-ள். வேதாந்தசிரவணார்த்தங்களை உள்ளமானது பிரியமாய்ச் சிந்திக்கும்படி இனிய தன்மையாகச் செய்யும் இதை மகான்கள் சமாதானமென்று சொல்லுவார்கள்; மேலான ஆசிரியரிடத்தும் வேதாந்த சாத்திரங்களிடத்தும் அன்புவைத்தல் சிரத்தையாம்; மேன்மை மிகுந்த சமாதியென்னும் ஆறுபிரிவான பதத்துக்கு அருத்தம் இதுவாம். எ-று.

இ-ம். அநித்திய வஸ்துக்க ளிவையெனக் கண்டு நித்தியவஸ்துவை யடைதற்கேதுவான குணங்களையே சாதனசதுட்டயமாகக் கூறினதாம். (ங)

அ-கை. அச்சாதனங்கள் இன்றியமையாச் சிறப்பினவெனவும் அதனாலுண்டாகும் பயன் இஃதெனவுங் கூறுகின்றார்.

சாதன மின்றி யொன்றைச் சாதிப்பா ருலகி லில்லை
ஆதலா லிந்த நான்கு மறிந்தவர்க் கறிவுண் டாகும்
நூதன விவேகி யுள்ள நுழையாது நுழையு மாகில்
பூதசென் மங்கள் கோடி புனிதனும் புருட னாமே.

இ-ள். சாதனமில்லாமல் ஒரு காரியத்தைச் சாதிப்பவர்கள் பூமியின்கணில்லை; ஆகையால் இச்சாதன சதுட்டயங்களைப்பெற்ற வர்களுக்கு ஞானோதயமாம்; புதிய விவேகியின் மனதில் புகாது; புகுமானால் இறந்தகாலத்துள்ள அனந்தசனனங்களில் சித்தசுத்தி யுள்ளவனாகிய புமானும். எ-று.

இ-ம். மெய்யுணர்வை உணர்தற்கு இச்சாதனங்கள் அவசியம் வேண்டுமென்பதாம். (சு)

அ—கை. அச்சாதனமுள்ள சீடனது தீவிரதர பக்குவத்தை அறிவித்தல்.

இவனதி காரி யானே னிந்திரி யங்க ளாலும், புவன
தெய் வங்க ளாலும் பூதபௌ திகங்க ளாலும், தவனமுன்
றடைந்து வெய்யிற் சகித்திடாப் புழுப்போல் வெம்பிப்,
பவமறு ஞான தீர்த்தம் படிந்திடப் பதறி னானே.

இ-ள். இச்சாதன சதுட்டய முள்ளவனே இந்நூலுக் கதிகாரி யானவன்; ஆதியாத்மிகத்தினாலும் ஆதிதெய்விகத்தினாலும் ஆதி பௌதிகங்களானும் தாபந்திர யாக்கினியை அடைந்து, சூரியனது உஷ்ண கிரணத்தைச் சகிக்கமாட்டாத கிருமியைப்போல வெப்ப முற்று, பிறவியை யொழிக்கின்ற ஞானசாகரத்தின் மூழ்கத் தீவிர முற்றான். எ-று.

இ—ம். தாபத்திரயாக்கினியாகிய சம்சார துன்பங்களுக்கு ஆற் றாதவனே அவை நீங்கிப் பிரமானந்தமடைய விரைவன் என்பதாம்.

அ—கை. அத்தீவிரதர பக்குவனுக்கு ஆசிரியர் தரிசனமாதல்.

ஆனவிம் மனைவி மக்க ளர்த்தவீ டனைகண் மூன்றில்
கானவர் வலையிற் பட்டுக் கைதப்பி யோடு மான்போல்

போனவன் வெறுங்கை யோடே போகாத வண்ணஞ் சென்
ஞானசற் குருவைக் கண்டு நன்ருக வணங்கி ஞனே. [று

இ-ள். தனக்கான இவ்வில்லாளும் புத்திரரும் தனமும் ஆகிய ஈடணுத்திரயங்களினின்றும் வேடர்கள் வீசும் வலைக்குள் அகப்பட்டுத் தவறிச்செல்லும் மானைப்போல ஓடினவன், சும்மா செல்லாதபடி உளத்தில் அன்பும் புறத்தில் ஆராதனைக்குரிய வஸ்துக்களுங் கொண்டுபோய் ஞானுசாரியனைத் தரிசனஞ்செய்து, திரிகரணசுத்தியாகப் பூசித்துப் பணிந்தான். எ-று.

இ-ம். ஈடணுத்திரயமான துன்பங்களினின்றும் நீங்கிய இவனுக்கு இன்பவடிவமான சற்குரு தரிசனமாயிற்று என்பதாம். (சு)

அ-கை. தரிசனஞ்செய்த அவ்வாசிரியரிடத்திற் செய்யும் விண்ணப்பம்.

வணங்கிநின் றழுது சொல்வான் மாயவாழ் வெனுஞ்
சோகத்தால், உணங்கினே னைய னேயென் னுள்ளமே குளிரும் வண்ணம், பிணங்கிய கோச பாசப் பின்னலைச் சின்னமாக்கி, இணங்கிய குருவே யென்னை யிரக்ஷிக்க வேண்டுமென்ருன்.

இ-ள். பணிந்தெழுந்து நின்று கண்ணீர் சொரிய அழுதுரைப்பான்: பொய்யான குடும்ப வாழ்க்கையென்னும் துன்பத்திஞல் வாடினேன். எனதாசிரியரே! உன் உள்ளங்குளிரும் வண்ணம் செறிந்த பஞ்சகோசமாகிய மின்னலைத் தூளாக்கி முத்தியை அடைவிப்பதற்கு உடன்பட்டிருக்கும் ஆசிரியரே! அடியேனை முத்தியிற் சேர்க்கவேண்டும் என்று சொன்னுன். எ-று.

இ-ம். அறிவின்மையால் வரும் பவத்துன்பத்தை நீக்கி அறிவிஞல் வரும் இன்பத்தில் மூழ்கும்படி செய்விக்க, ஆசிரியரை வேண்டிக்கோடலாம். (எ)

அ—கை. அங்ஙனம் விரும்பிய சீடனைப் பரிசோதித்தல்.

அன்னதன் * சிசுவை யைய னாமைமீன் பறவை போலத்
தன்னகங் கருதி நோக்கித் தடவிச்சந் நிதியி ருத்தி
உன்னது பிறவி மாற்று முபாயமொன் றுண்டு சொல்வேன்
சொன்னது கேட்பா யாகிற் றொடர்பவந் தொலையுமென்றான்.

இ-ள். அப்படிக் குறைகூறி யிரந்த தம்முடைய சீடனைக் குருவானவர் கூர்மத்தைப்போலத் தமதுளத்தில நினைத்து, மச்சத்தைப் போலப் பூரண திருஷ்டிவைத்து, பக்ஷியைப்போல அஸ்தமஸ்தகசையோகஞ்செய்து எதிரிலிருக்கவைத்து, உனது பவத்துன்பத்தை நீக்குந் தந்திரமொன்றிருக்கின்றது உபதேசிப்பேன்; போதித்தவண்ணங் கேட்டு நடப்பாயாகில் சிருட்டிமுதல் தொடருஞ் சனனமானது நீங்கும் என்றருளிச் செய்தார். எ-று.

ப—ம். விஷயத்தை நினைக்கும் ஆகாமியத்தைக் கெடுத்து அறிவையுணரும்படி சிந்தித்தாரென்பார் 'ஆமைபோற்கருதி' எனவும், முன் பந்தப்பட்டிருக்கின்ற சஞ்சிதமொழிந்து தனது சத்தாமாத்திரமான திருஷ்டி வரும்படி பார்த்தாரென்பார் 'மீன்போனோக்கி' எனவும், பிராரத்தமாக வந்த பௌதிகவடிவம் நித்தியானந்தமாக விளங்கத் தனது பூரணானந்தமாக வியாபித்தாரென்பார் 'பறவைபோற்றடவி' எனவுங் கூறினர்.

இ—ம். சமஸ்காரஞ்செய்த ஆசிரியர் உபதேசிப்பதற்காக அகமமதைகள் உளவோ இலவோ என ஆராய்ந்ததாம். (அ)

அ—கை. ஆசிரியர் வசனத்தில் அகமகிழ்ந்து அன்புகூர்தல்.

தொடர்பவந் தொலையு மென்று சொன்னதைக் கேட்ட
போதே, தடமடு மூழ்கி னான்போற் சரீரமுங் குளிர்ந்துள்

* "அன்னை தன்சிசுவை" எனவும் பாடம்.

ளாறி, அடருமன் பொழுகு மாபோ லானந்த பாஷ்பங் காட்டி, மடன்மலர்ப் பாத மீண்டும் வணங்கிநின் றீதுசொல்வான்.

இ-ள். தொன்றுதொட்டுத் தொடராநின்ற சனனமானது நீங்குமென்று அருளியதைக் கேட்டபோதே விசாலமான தடாகத்தில் முழுகினவனைப்போலத் தேகமுங்குளிர்ச்சியாய் மனமுங்குளிர்ந்து, நிறைந்த அன்பானது கரையழித்துச் செல்லுவதுபோல இரண்டு கண்களிலும் ஆநந்தபாஷ்பம் பெருக, இதழ்விரிந்த கமல மலர் போன்ற பாதங்களை மீண்டும் பணிந்து எழுந்து நின்று, இதனைச் சொல்லத் தொடங்குவான். எ-று. (௯)

அ—கை. சீடன் விண்ணப்பத்தினுல் அகம் இன்றென்பதைக் குறிப்பினுல் அறிதல்.

சொன்னது கேட்க மாட்டாத் தொண்டனு னுலுஞ் சுவாமி
நின்னது கருணையாலே நீரென்னை யாள லாமே
உன்னது பிறவி மாற்று முபாயமொன் றுண்டென் றீரே
இன்னதென் றதைநீர் காட்டி யீடேற்றல் வேண்டுமென்றுன்.

இ-ள். போதித்ததைக் கேட்டு நடக்கமாட்டாத அடிமையானுலும், என் தெய்வமே! தேவரீரது கிருபையினுல் தேவரீர் அடியேனைத் தடுத்தாளலாமே? உனது பவத்தைக் கெடுக்கும் தந்திரமொன்று இருக்கின்றதென்று அருள் செய்தீரே, அவ்வுபாயம் இத்தன்மையதென்று தேவரீர் காண்பித்து இரக்ஷிக்க வேண்டுமென்றுன். எ-று.

இ—ம். சீடனறிவு எவ்வளவு துல்லியமானுலும் அதன் கண்ணுதயமான ஆனந்தத்திற்கு விளக்கமாக அதை விளக்குதல் குரு துரியமாதலால் குருவருளே விளக்கவேண்டு மென்பதாம். (க0)

அ—கை. அகம்பாவம் இன்றென்பதை அறிந்து ஆத்மஸ்வரூபத்தை உபதேசிக்கத் தொடங்கல்.

அடங்கிய விருத்தி யானென் றறிந்தபின் செறிந்தமண்ணின், குடம்பையுட் புழுமுன் னூதுங் குளவியின் கொள்கை போலத், தொடங்கிய குருவுமான்ம சொரூபமே மருவ வேண்டி, உடம்பினுட் சீவ னைப்பார்த் துபதேச மோதுவாரே.

இ-ள். விருத்தியடங்கினவனென்று தெரிந்தபின்பு நெருங்கிய மட்கூட்டினுள் இருக்கின்ற கிருமியின் முன்னே சத்திக்குங் குளவியினது தன்மையைப்போல உபதேசிக்கத் தொடங்கிய ஆசாரியரும் ஆத்மஸ்வரூபத்தைச் சீடனடையும் பொருட்டுத் தேகத்துள் இருக்கும் சீவனைநோக்கி உபதேசஞ் செய்வார். எ-று.

இ-ம். சீடனது யதார்த்த ஸ்வரூபத்தைப் பார்த்து அவன் அஃதாக விளங்கும் பொருட்டு அனுக்கிரகிக்கத் தொடங்கினதாம். (கக)

அ—கை. பவத்தை நீக்கும்பொருட்டு அஃதுண்டான காரணமும் அஃது நிற்குங்கால அளவையுங் கூறல்.

வாராயென் மகனே தன்னை மறந்தவன் பிறந்தி றந்து
தீராத சுழல்காற் றுற்ற செத்தைபோற் சுற்றிச் சுற்றிப்
போராத கால நேமிப் பிரமையிற் றிரிவன் போதம்
ஆராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந் தானே.

இ-ள். எனது புத்திரனே! கேளாய், தனது ஆத்மசொரூபத்தை விசாரித்தறியாதவன், அறிவினால் ஆராய்ந்தறியும் ஆத்மாவைப் பிரமமென்று தெரியுமட்டும் சனித்து மரித்து, ஓயாத சுழல்காற்றிலகப்பட்ட சருகைப்போல அச்சனன மரணத்திற் சுழன்று சுழ

ன்று, நீங்காத கால சக்கரத்தினது சுழற்சியிற் சஞ்சரிப்பான். எ-று.

இ—ம். அறிவின்மையால் உண்டான பவம் அறிவு உதயமாய்த் தன்னைத்தானென உணருமட்டும் இருக்கும் என்பதாம். (கஉ)

அ—கை. மகாவாக்கிய உபதேசப் பிரகாரம் அறியவேண்டிய பொருள் இதுவென அறைதல்.

தன்னையுந் தனக்கா தாரத் தலைவனையுங் கண்டானேல்
பின்னையத் தலைவன் றானுப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்
உன்னைநீ யறிவா யாகி லுனக்கொரு கேடு மில்லை
என்னைநீ கேட்கை யாலே யீதுப தேசித் தேனே.

இ-ள். கூடஸ்தனையும் தனக்கிடமான பிரமத்தையும் தரிசிப்பானுயின், பின்பு அப்பிரமமே கூடஸ்தனுய் அக் கூடஸ்தனே பிரமமாய்ச் சநந நீங்குவான்; உனது அத்துவிதஸ்வரூபத்தை நீ தெரிந்து கொள்ளுவாயானுல் உனக்கொரு கெடுதியுமில்லை; என்னை நீ கேட்கின்றபடியால் எனது அனுபவமான இதைச் சொன்னேன். எ-று.

ப—ம். நசிப்பான தேகமுதல் பிரகிருதி பரியந்தம் ஒவ்வொன்றினும் நசியாமல் தானுய்ச் சேடித்திருக்கிற பிரத்தியேகாத்மசைதன்னியத்தைத் 'தன்னை' எனவும், அங்ஙனஞ் சேடித்ததானே அவைக ளனைத்தினும் பூரணமான பிரம சைதன்னியாய் விளங்குவதைத் 'தலைவன்' எனவும், அஃதே இஃது இஃதே அஃதாய் விளங்குஞ் சுத்த சைதன்னியந் தானுகுவதைப் 'பின்னையத்தலைவன் றானுய்ப் பிரமமாய்' எனவும், அங்ஙனம் விளங்கிய அனுபவத்திற்கும் உதயாஸ்த மனம் இன்மையால் சநநமரண மின்றென்பதைப் 'பிறப்புத்தீர்வன்' எனவுங் கூறினுர். (கந)

அ-கை. தன்னை யறியவேண்டும் என்பதைச் சர்வத்திர சாதாரணமாகக்கொள்ளுந் தேகமெனக்கருதி, அதை அறிந்தவர்கள் சநந மரணம் நீங்காமையான் அஃதின் உண்மையை யுணரவினுதல்.

என்னைத்தா னசட னாக வெண்ணியோ சொன்னீ ரையா
தன்னைத்தா னறியா மாந்தர் தரணியி லொருவ ருண்டோ
பின்னைத்தா னவர்க ளெல்லாம் பிறந்திறந் துழலுவானேன்
நின்னைத்தா னம்பி னேற்கு நிண்ணய மருளுவீரே.

இ-ள். எனதாசிரியரே; என்னை யான் அறியாதவனாகக் கருதியோ சொன்னீர்? தன்னைத் தெரியாத மனிதர் பூமியின்கணொருவருளரோ? பின்பு அவர்கள் அனைவரும் சநந மரணத்திற் சுழலுவானேன்? தேவரீரை நம்பின அடியேனுக்கு நிச்சயத்தைச் சொல்வீர். எ-று.

ப-ம். ஆசிரியர் தமதனுபவப்படி தேகத்தில் தானாயிருந்த தன்னை அறியவேண்டும் என்ன, அஃதனுபவமாகாதசீடன்தேகமே தான் எனக்கருதி; என்னை யான் அறியவில்லையா என்றானென்பார் 'என்னைத்தா னசடனாக வெண்ணியோ சொன்னீர்' எனவும், இங்ஙனம் அறிந்த யாவர்க்குஞ் சநந மரணம் ஏன் நீங்கவில்லை யென்பானென்பார் 'பின்னைத்தா னவர்களெல்லாம் பிறந்திறந் துழலுவானேன்' எனவும், தான் என்பது இஃதென உண்மையாகத் தெரிவிக்க வேண்டுமென்பா னென்பார் 'நிண்ணய மருளுவீர்' எனவும் கூறினார்.

இ-ம். தான் என்பது அனுபவமாகும்பொருட்டு அதனியல்பை விசாரித்தாம். (கச)

அ-கை. தான் என்பது இஃதெனக் கூறியுந் தோன்றாததற்காக ஆசிரியர் வருத்தமுற்று இரங்குதல்.

இன்னது தேகந் தேகி யிவனென வுணர்வன் யாவன்
அன்னவன் றன்னைத் தானென் றறிந்தவ னாகு மென்றார்
சொன்னபின் றேகி யாரித் தூலமல் லாம லென்றான்
பின்னது கேட்ட வையர் பீழையு நகையுங் கொண்டார்.

இ-ள். சரீரமானது இத்தன்மையுள்ளது. சரீரி இத்தன்மை யுள்ளவன் என்று அறிகின்றவன் எவனோ அவன் கூடஸ்தனைப் பிரமமென்று தெரிந்தவனாவன் என்றார்; அங்ஙனம் போதித்தபின்பு இச்சரீரம் அன்றி சரீரி யார் என்று கேட்டான்; பின்பு அவன் அனு பவத்தைக கேட்ட ஆசிரியர் துன்பமும் புன்னகையுங் கொண்டனர். எ-று.

ப-ம். இத்தேகந் தானாக எண்ணியிருப்பனை எங்ஙனம் உய் விக்கலாம் என ஆலோசிக்கும் மனவருத்தமும், தேகந் தான் என அறிந்தவன் தேகியையுந் தான் என்று அறிவனென்று மகிழ்ச்சியுங் கொண்டார் என்பார் 'பீழையு நகையுங் கொண்டார்' எனக் கூறி னார்.

இ-ம். ஆசிரியர் தமதனுபவமான சுத்த சைதன்னியத்தைத் தான் எனக் கூறச் சீடன் தனக்கனுபவமான தேகந்தான் அன்றித் தான் வேறுளனோ என வினாவினதாம். (கரு)

அ-கை. தேகந்தான் அன்று, அதன் கண் உள்ள தேகியே தான் என்பது தனக்குத் தானே தோன்ற, அவத்தாத்திரயங்களை அறிகின்றவன் யார் என ஆசிரியர் வினாதல்.

தேகம தல்லால் வேறே தேகியார் காணே னென்றாய்
மோகமாங் கனவில் வந்து * மூளைத்திடு மவனார் சொல்லாய்
சோகமாங் கனவு தோன்றாச் சுழுத்திகண் டவனார் சொல்லா
ஆகநீ நனவி லெண்ணு மறிவுதா னேது சொல்லாய். [ய்

* "மூளைத்தவனெவனீ" எனவும் பாடம்.

இ—ள். சரீரத்தையன்றி வேருயுள்ள சரீரி யார்? யான் கண்டிலேன் என்ருய்; மோகமாகிய சொப்பனத்தி லுதித்தவன் யாவன்? இதனை நீசொல்; மயக்கமாகிய சொப்பனந் தோன்ருத சுழுத்தியில் சூனியமாகத் தரிசித்தவன்யார்? சொல்வாய்; ஆகிய இவ்விரண்டையும் நீ சாக்கிரத்தில் நினைக்கும் அறிவு யாது? சொல். எ-று.

இ—ம். தேகத்தைத் தவிரத் தேகி ஒருவன் உளன் என்பது தோன்ற வினவினதாம். (கசு)

அ—கை. தேகத்தின்கண் அவத்தைகளை அறிகின்ற தேகி ஒருவன் உளனெனத் தோன்றுகிறது. அதனை விளக்கவேண்டும் எனல்.

நனவுகண் டதுநான் கண்ட நனவுள நினைவு நீங்கிக்
கனவு கண்டதுமி ரண்டுங் காணுத சுழுத்தி கண்டும்
தினமனு பவித்த லொக்குந் தெரியவு மில்லை சற்றே
மனதினி லுதிக்கும் பின்னை மறைக்குமதருளு வீரே.

இ—ள். சாக்கிரா வத்தையில் பார்த்ததும், யான் பார்த்த சாக்கிரத்திலுள்ள நினைப்பு நீங்கிச் சொப்பனத்தில் பார்த்ததும், இவ்விரண்டவத்தைகளின் தொழிலில்லாத சுழுத்தியில் சூனியத்தைப் பார்த்ததும், நாடோறு மனுபவிப்பதனுல் தேவரீர் தேகி ஒருவன் இருக்கின்ருனென் றருளியது ஒக்கும்; அது பிரத்தியக்ஷமாகவுமில்லை; சற்று மனதிற் ருேன்றுகின்றது; பின்பு மறைகின்றது; அதின் ஸ்வரூபத்தைக் கிருபை செய்வீர். எ-று.

கண்டதென்பது கண்டு மெனவும் மறையு மென்பது மறைக்கு மெனவுந் திரிந்து நின்றன.

இ—ம். தான் என்பது தேகம் அன்று, தேகி என அவத்தைகளை முன்னிட்டறிவிக்க, ஒருவாற்ருன் அறிந்த சீடன் அஃது மின்

யினிபோலத் தோன்றி மறைதலின், அதன் யதார்த்த ஸ்வரூபம் இஃதென விளங்க அனுக்கிரகிக்க வேண்டிக்கோடலாம். (௧௭)

அ–கை. முன்தேகந் தானுயிருந்தவனைக் கிஞ்சித்து விலக்ஷணப் படுத்திப் பின் தடஸ்தவிலக்கணையான் முன்பு சடமான தேக விலக்கணங் கூறி, அதை நீங்கிப்பின் சித்தே தானுன தேகி இலக்கணங் கூறத் தொடங்கல்.

ஞாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டுவார்போல்
ஆலத்தி னுடுக்கள் காட்டி யருந்ததி காட்டுவார்போல்
தூலத்தை முன்பு காட்டிச் சூக்கும சொரூப மான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர் தொடங்கி னாரே.

இ-ள். பூமியின்கணுள்ள தருக்களைக் காண்பித்துத் தனியான மூன்றாம்பிறையைத் தரிசிப்பவர் போலவும், ஆகாயத்தின்கணுள்ள நக்ஷத்திரங்களைக் காட்டி அருந்ததியைக் காண்பிப்பவர்போலவும், தூலமாயுள்ள தத்துவங்களை முன்னே தரிசிப்பித்து, அணுவுக்கணுவான காரணத்தைப் பின் தரிசிப்பிக்க ஆசிரியர் ஆரம்பித்தார் எ-று.

ஆலமென்பது ஆகுபெயர்.

இ–ம். போதமாகும்படி போதிக்குமரபு கூறினதாம். (௧௮)

அ–கை. தானாகிய சித்தைத் தனியே தரிசிப்பிக்கும் நிமித்தம் தன்னைச் சகசீவ பரமாகத் தோற்றுவிக்கும் ஆரோப யுத்தியையும், அத்துவிதமான கூடஸ்த பிரமமாகத் தோற்றுவிக்கும் அபவாத யுத்தியையுங் கூறத்தொடங்கல்.

அத்தியா ரோப மென்று மபவாத மென்றுஞ் சொல்லும்
உத்தியாற் பந்தம் வீடென் றுரைக்கும்வேதாந்த மெல்லாம்
மித்தையா மாரோ பத்தாற் பந்தமா மபவா தத்தால்
முத்தியா மிவ்வி ரண்டின் முந்தியா ரோபங் கேளாய்.

இ-ள். அத்தியாரோபம் என்று சொல்லுகின்ற உத்தியினால் பந்தமெனவும், அபவாதம் என்று சொல்லுகின்ற உத்தியினால் வீடெனவும், உபநிடதம் அனைத்தும் சொல்லும்; ஆதலால், இல்லாத ஆரோபத்தால் பெத்தமாம்: அபவாதத்தினால் வீடாம்: இவ்விருவகையில் முன்பு ஆரோபத்தைக் கேட்பாய். எ-று.

இ-ம். அத்தியாரோப அபவாத விலக்கணங் கூறினதாம். (கக)

அ-கை. அத்தியாரோப இலக்கணத்தை திஷ்டாந்த ரூபமாகக் கூறுதல்.

ஆரோபி மத்தி யாசங் கற்பனை யாவ வெல்லாம்
ஓரோர் வஸ்து வினைவேறே யோரோர் வஸ்து வெனவோர்தல்
நாரூடு பணியாத் தோன்ற னரனாகத் தறியிற் றோன்றல்
நீரூடு கானற் றோன்ற னிரந்தரம் வெளியிற் றோன்றல்.

இ-ள். ஆரோபமென்றும் அத்தியாசமென்றும் கற்பனையென்றும் ஆவன அனைத்தும் ஒவ்வொரு பொருளை வேறான ஒவ்வொரு பொருளென அறிதலாம்; பழுதையினிடத்துச் சர்ப்பந் தோற்றுதல், கட்டையினிடத்து மகனாகத் தோற்றுதல், கானலினிடத்துச் சலந்தோற்றுதல், ஆகாயத்தினிடத்தில் தரமின்மை தோற்றுதல். எ-று. (உ0)

அ-கை. முற்கூறிய திஷ்டாந்தம்போலச் சுத்த சைதன்னியத்தில் சகசீவபரந் தோற்றுமெனல்.

இப்படிப் போல நாம ரூபங்க ளிரண்டு மின்றி
ஒப்பமா யிரண்டற் றொன்று யுணர்வொளி நிறைவாய் நிற்கும்
அப்பிர மத்திற் றோன்று மைம்பூத விகார மெல்லாம்
செப்பிய கற்பிதத்தாற் செனித்தவென் றறிந்துகொள்ளே.

இ-ள். இவைபோல நாமரூபமான இரண்டு தன்மைகள் இன்றி ஒற்றுமையாயும், துவிதம் இன்றி ஏகமாயும், ஞானப்பிரகாச நிறை

வாயும் இருக்கின்ற அந்தப் பிரமத்தில் தோற்றுநின்ற பஞ்சபூதம் முதலிய வேறுபாடனைத்தும் சொல்லாநின்ற ஆரோபத்தால் உண்டானவைகளென்று தெரிவாய்.

இ—ம். உள்ளதான சகத்தில் இல்லாததான சகசீவ பரந் தோன்று முறைமை இங்ஙனமெனக் கூறினதாம். (உக)

அ-கை. பிரமத்தில் கற்பிதமாகச் சீவேஸ்வர சகத்து உண்டான முறையை இருவகையாகக் கூறத் தொடங்கி முன்னர் ஒரு வகையைக் கூறுகின்றார்.

அதுதானெப் படியென் றக்கா லநாதியாஞ் சீவ ரெல்லாம்
பொதுவான சுழுத்தி போலப் பொருந்துமவ் வியத்தந் தன்
இதுகால தத்து வப்பே ரீசனுட் பார்வை யாலே [னில்
முதுமூல சுபாவம் விட்டு முக்குணம் வியத்த மாமே.

இ—ள். அக்கற்பனு சிருஷ்டி எப்படி உண்டாயிற் றெனின், அநாதியாயுள்ள சித்துரூபமான சீவகோடிகள் யாவும் சகலருக்கும் சாதாரண அநுபவமான சுழுத்தியைப்போல சூனியமாயிருக்கும் மூலப்பிரகிருதியாகிய மாயையின்கண்ணே அமையும்; இம்மாயையானது காலதத்துவமென்னும் நாமமுடைய ஈசுரனுடைய திருஷ்டியினுலே முன்னிருந்த காரணத்தன்மையை யொழித்து மூன்று குணங்களாக வெளிப்படும். (உஉ)

அ—கை. முக்குண இயல்பு கூறல்.

உத்தம வெளுப்பு நீல முபயமாஞ் சிவப்பு மாகும்
சுத்த சத்துவந் தமத்தோ டசுத்ததத் துவப்பேர் சொல்லும்
சத்துவ மழுக்கி ருட்டாய்ச் சாற்றுமுக் குணமு மூன்றாய்
ஒத்துள வெனினுந் தம்மு ளொருகுண மதிக மாமே.

இ—ள். முதலாவதான வெண்ணிறமும், இரண்டாவதான செம்மைநிறமும், மூன்றாவதான கருநிறமும் ஆகாநின்ற தூய்தான

சத்துவகுணமும் ரசோகுணமும் தமோகுணமும் என நாமங் கூறப் பெறும்; சத்துவமான சுத்தமும் அழுக்கும் இருட்டுமாகச்சொல்லப் பட்ட இம்மூன்று குணங்களும் மூன்றாகி ஒத்திருப்பவைகளாயினும் அவைகளுள் இரண்டடங்கி யொருகுணம் விசேடித்து நிற்கும். எ-று.

இ—ம். வித்தைவடிவமான சீவர்கள் பந்தப்பட்டிருக்குந்தங்கள் மறதியான அவ்வியத்தத்தில் காலதத்துவமு முக்குணங்களும் விய த்தமாயின வென்பதாம். (உரு).

அ—கை. மற்றொருவகைச் சிருட்டியின் மரபு கூறத் தொடங்கல்.

ஒருவழி யிதுவா மித்தை யொருவழி வேறுச் சொல்வார்
மருபுமவ் வியத்தந் தானே மகதத்வ மாகு மென்றும்
அருண்மக தத்து வந்தா னகங்கார மாகுமென்றும்
கருவகங் கார மூன்றாய்க் காட்டிய குணமா மென்றும்.

இ—ள். ஒருமார்க்கமிதுவாம்; இதையே மற்றொரு மார்க்கமாகச் சொல்லுவார்கள்; அஃது எங்ஙனமெனின், பொருந்திய அவ்வியத் தமே மகதத்துவமாம் எனவும், சொல்லிய மகதத்துவமே அகங்கார தத்துவமாம் எனவும், கருவாகிய அகங்காரமே மூன்றாத்தெரிவித்த குணங்களாம் எனவுஞ் சொல்லப்படும். எ—று.

இ—ம். சுத்த சைதன்னியமான தன்னை எதிரிட்டறிய உதய மான அறிவுக்கு முன்புண்டான மறதியே அவ்வியத்தமான பிர கிருதி எனவும், அவ்வறிவு பகிர்முக உண்முகமான இடமே மகதத் துவமெனவும்; அஃது தன்னிடத்துப் பிரதிபலனமான ஆரோ பத்தை நான் என்பதே அகங்கார தத்துவம் எனவும், அதனிர்ச் சலமே சத்துவம் எனவும், அதன் சலனமே ரஜசு எனவும், அதன்

மக்கினமே தமம் எனவும் உண்டான உகபற் சிருட்டியைத் தன தனுபவத்திற்காண்க. (௨௪)

அ—கை. மேற்கூறிய குணங்களிற் சகசீவபர உற்பவ்த்தியைக் கூறுவான் தொடங்கி முன்னர்ப் பரன் உற்பத்தியைக் கூறுகின்றார்.

இக்குணங் களிலேவிண்போன் றிருக்குஞ்சிற் சாயைதோன்
முக்குணங் களினுந் தூய்தா முதற்குண மாயை யாகும்[றும்
அக்குணம் பிரமச் சாயை யந்தரி யாமி மாயை
எக்குணங் களும்பற் றுதோ னிமித்தகா ரணமா மீசன்.

இ—ள். இம்மூன்று குணங்களில் ஆகாயம்போல நிரவயமாயிருக்கின்ற சிற்சாயை பிரதிபலிக்கும்; மூன்று குணங்களிலும் சுத்தமாகிய சத்துவகுணம் மாயையாம்; அந்தச் சத்துவத்திற் பிரதிபலித்த பிரமப்பிரதி பலனமே அந்தரியாமியாம். மாயா சம்பந்தமான எந்தக் குணங்களும் பற்றுதவனே பஞ்சபூத பவுதிக முதலிய சிருட்டிக்கு நிமித்தகாரணமாகிய ஈசனும். எ-று. (௨௫)

அ—கை. ஈசனது காரணசரீர உற்பத்தியையுஞ் சீவனது உற்பத்தியையுங் கூறல்.

ஈசனுக் கிது சுழுத்தி யிதுவே காரண சரீரம்
கோசமா னந்த மாகுங் குணமிரா சதம வித்தைத்
தேசறு மவித்தை தோறுஞ் சிற்சாயை சீவ கோடி
நாசமா முயிர்க் கப்போது நாமமும் பிராஞ்ஞ னுமே.

இ—ள். இவ்வீஸ்வரனுக்கு இம்மாயையே சுழுத்தி யவத்தையாம்; இஃதே காரண சரீரமாம்; இதுவே ஆனந்த மயகோசமாம்; ரசோகுணம் அவித்தையாம்; விளக்கமில்லாத அவித்தைகள்தோறும் பிரதிபலித்த ஞானப்பிரதி பலனமே சீவராசிகளாம்; யாவை

யும் இறந்த சுழுத்தியை அபிமானிக்கும் சீவர்களுக்கு அவ்வவசரத்தில் பெயர் பிராஞ்ஞனும். எ-று. (உசு)

அ-கை. சீவனது காரண சரீர உற்பத்தியைக் கூறுகின்றார்.

அழுங்கொடு பற்றுஞ் சீவர்க் கதுவேயா னந்த கோசம்
சுழுத்தி காரண சரீரஞ் சொன்னவிம் மட்டு மோகம்
முழுங்குணத் திரண்டால்வந்த மூலவா ரோபஞ்சொன்னேம்
வழுத்துசூக் குமவா ரோப வழியுநீ மொழியக் கேளாய்.

இ-ள். அவித்தையைச் சேர்ந்திருக்கின்ற சீவர்களுக்கு அவ்வவித்தையே ஆநந்தமயகோசமாம்; அஃதே சுழுத்தி அவத்தையாம்; அஃதே காரண சரீரமாம்; சொல்லிய இதுபரியந்தம் மயக்கமாகத் தோற்றிய பிரகிருதியின் முழுதுமான சத்துவ ரசோகுணத்திலுண்டான காரணசரீர அத்தியாசத்தை உரைத்தோம்; சொல்லப்பட்ட சூக்கும சரீர அத்தியாச முண்டான மார்க்கத்தையும் யாஞ்சொல்ல நீ கேட்பாய். எ-று.

ப-ம். சுத்த சைதன்னியைச்சாயை அதிஷ்டான மாதலின் அதனைப் பிரமகூடஸ்த ரெனவும், அஃது சத்துவ ரசோகுணத்தில் தங்குதலின் அக்குணங்களை மாயை அவித்தையெனவும், அவற்றில் பிரதிபிம்பித்த சாயை ஆரோபமாதலின் அவற்றைச் சீவேஸ்வர ரெனவும், அம்மாயை அவித்தைகள் மேல் விளைவுக்குக் காரணம் ஆதலின் அவைகளைக் காரண சரீரமெனவும், அவைகளில் அனைத்தும் அடங்கி நிற்றலைச் சுழுத்தி அவத்தை யெனவும், அவைகளில் அன்புற்று நிற்றலை ஆநந்தமய கோசமெனவும், அவைகளை அபிமானித்து நிற்பவரை அந்தரியாமி பிரஞ்ஞனெனவுங் கொள்க.

இ-ம். சீவேசுவர உற்பத்தியும் அவர்களுக்குண்டான காரண சரீர அத்தியாசமும் கூறினதாம். (உஎ)

அ—கை. சீவேசுவரர்களுக்குச் சூட்சும சரீரம் உண்டான முறைமையைக் கூறுவான் தொடங்கி முன்பு சத்திகளின் தோற்றம் உரைத்தல்.

ஏமமா யாவி நோத வீசனு ரருளினாலே
பூமலி யுயிர்கட் கெல்லாம் போகசா தனமுண் டாகத்
தாமத குணமி ரண்டு சத்தியாய்ப் பிரிந்து தோன்றும்
வீமமா மூட லென்றும் விவிதமாந் தோற்ற மென்றும்.

இ—ள். மோகமாகிய மாயையை விளையாட்டாகவுடைய ஈசுவரனுடைய கிருபையினால் பொலிவு மிகுந்த சீவர்கள் அனைவர்க்கும் அனுபோகசாதனம் உண்டாகும் பொருட்டுத் தமோகுணமானது பயங்கரமான ஆவர்ணமெனவும், நாநாவிதமாகும் விக்ஷேபமெனவும் இரண்டு சத்திகளாய்ப் பிரிந்து தோன்றும். எ-று.

ப—ம். உயிர்கட்கெல்லாம் போகசாதனம் உண்டாக என்பது கூறற் சீவர்கள் சமஷ்டியே ஈசுவரனாதலின், அவ்வீசுவரனுக்குங் கொள்க.

இ—ம். தமோகுணப் பிரதிபலமான சிற்சாயையின் அறிவின்மை ஆவரணம், அறிவு விக்ஷேபமும் என இரண்டு சத்திகளாயின் என்பதாம். (உஅ)

அ—கை. விக்ஷேபசத்தியில் தன்மாத்திரையான சூட்சமபூத உற்பத்தி கூறல்.

தோற்றமாஞ் சத்திதன்னிற் சொல்லிய விண்ணும்விண்ணில்
காற்றதாங் காற்றிற் றீயாங் கனலினீர் நீரின் மண்ணும்
போற்றுமிவ் வைந்து நொய்ய பூதங்க ளென்றும் பேராம்
சாற்றுமற் றிவற்றிற் போக சாதன தனுவுண் டாகும்.

இ-ள். விசேஷபசத்தியில் சொல்லப்படும் சத்ததன்மாத்திரை யான ஆகாயமுண்டாகும்; அவ்வாகாயத்தில் பரிசதன்மாத்திரை யான வாயுவுண்டாகும்; அவ்வாயுவில் ரூபதன்மாத்திரையான அக் கினியுண்டாகும்; அவ்வக்கினியில் ரசதன்மாத்திரையான அப்பு வுண்டாகும்; அவ்வப்புவில் கந்ததன்மாத்திரையான பிருதிவியுண் டாகும்; போற்றப்பட்ட இத்தன்மாத்திரைகளைந்தும் சூக்குமபூதங்க ளென்று பெயர் பெறும்; சொல்லப்பட்ட இத்தன்மாத்திரைகளில் அனுபோகத்துச் சாதனமான சூக்கும சரீரந் தோன்றும். எ-று. ()

அ—கை. தன்மாத்திரை சத்துவகுணத்தில் அந்தக்கரணஞானேந் திரிய உற்பத்தி கூறல்.

ஆதிமுக் குணமிப் பூத மடங்கலுந் தொடர்ந்து நிற்கும்
கோதில்வெண் குணத்தி லைந்து கூறுணர் கருவி யாகும்
ஓதிய பின்னை யைந்து முளம்புந்தி யிரண்டா ஞான
சாதன மாமிவ் வேழுஞ் சற்குணப் பிரிவி னாலே.

இ-ள். முன் உண்டான மூன்று குணங்களும் இத்தன்மாத்தி ரைகள் ஐந்திலும் கூடியிருக்கும் குற்றமற்ற சத்துவகுணத்தில் வியஷ்டியான ஐந்து பங்கும் ஞானேந்திரியங்களாம்; சொல்லப் பட்ட சமஷ்டியான ஐந்து பங்கும் மனம் என இரண்டாகும் சத் துவகுண அம்சம் ஆதலால் இந்த எழும் அறிகருவிகளாம். எ-று. ()

அ—கை. தன்மாத்திரையின் ரசோகுணத்தில் வாயு கன்மேந்திரி யங்களின் உற்பத்தி கூறல்.

இராசத குணத்தில் வேறிட் டெடுத்தகூ றைந்து மைந்தும்
பிராணவா யுக்களென்றும் பெருந்தொழிற் கன்மமென்றும்

பராவிய பெயரா மிந்தப் பதினேழு மிலிங்க தேகம்
சுராசுரர் நரர்வி லங்காய்த் தோன்றிய வுயிர்கட் கெல்லாம்.

இ-ள். ரசோகுணத்தில் எடுத்து ஒன்றாகவைத்தபங்கு ஐந்தும் பிராணாதி பஞ்சவாயுக்களெனவும், தனித்தனியே எடுத்தபங்கு ஐந்தும் பெரிய கிரியையைச் செய்யுங் கன்மேந்திரியங்க ளெனவும், பரவிய நாமங்களாம்; இப்பதினேழு தத்துவங்களும் தேவர்களும் அவுணர்களும் மனிதர்களும் மிருகங்களுமாகி உண்டான சீவர்களை அனைவர்க்கும் சூக்கும சரீரங்களாம். எ-று.

சில நூலாசிரியர் சூக்குமதேகம் இருபத்துநான்கு தத்துவம் என்றதை இந்நூலாசிரியர் விடயம் ஐந்தையும் ஞானேந்திரியத்தில் அடக்கியும், அகங்காரத்தையுஞ் சித்தத்தையும் மனம் புத்தியில் அடக்கியும், பதினேழாகக் கூறினரெனக்கொள்க.

இ—ம். சீவேஸ்வரருக்கு உண்டான சூக்கும சரீர அத்தியாயங் கூறினதாம். (௩௧)

அ—கை. சூக்குமதேகத்தினால் வருங் கற்பனா நாமங்களைக்கூறல்.

இவ்வுடன் மருவுஞ் சீவர்க் கிலங்குதை சதனென் றாகும்
இவ்வுடன் மருவு மீசற் கிரணிய கருப்ப னாகும்
இவ்வுட லிரண்டு பேர்க்கு மிலிங்கசூக் கும சரீரம்
இவ்வுடற் கோச மூன்று மிதுகன வவத்தை யாமே.

இ-ள். இவ்வியஷ்டி சூக்குமதேகத்தைச் சேர்ந்து அபிமானிக்குஞ் சீவர்களுக்கு விளங்காநின்ற அபிமானி நாமம் தைசதன் என்பதாம்; இச்சமஷ்டி சூக்குமதேகத்தைச் சேர்ந்து அபிமானிக்கிற ஈஸ்வரனுக்கு அபிமானி நாமம் இரணிய கருப்பனென்பதாம்; இச்சரீரம் சீவேஸ்வர ரிருவர்க்கும் சூக்கும சரீரமாம்; இச்சரீரத்துக்

குப் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் எனக் கோசங்கள் மூன்றாகும்; இது சொப்பனவஸ்தையாம். எ-று.

தன்மாத்திரைகள் சூக்குமம் ஆதலின் அவற்றைச் சூக்குமபூதமெனவும், அவற்றின் தடிப்பைச் சூக்குமதேகமெனவும், அதை அபிமானிப்பவர்களை இரணியகருப்பன் தைசதனெனவும், அது மனோராச்சியஞ் செய்தலைச் சொப்பனவஸ்தையெனவும், அஃது பிராண மனோ புத்திகளாகத் தன்னை மறைத்தலைக் கோசங்களெனவுங் கொள்க. (௩௨)

அ—கை. பாஞ்சபூத பௌதிகமான சகத்து உற்பத்தியைக் கூறுவான் தொடங்கி அஃதுண்டாகுதற் கேது கூறுகின்றார்.

சூக்கும சகமிம் மட்டுஞ் சொல்லினோ மிப்பாற் றூலம்
ஆக்குமா ரோபந் தானு மடைவினின் மொழியக் கேளாய்
தாக்குமிவ் வுயிர்க்குத் தூல தனுவும்போ கமுமுண் டாகக்
காக்குமிவ் வீசன் பஞ்சீ கரணங்கள் செய்தான் றானே.

இ-ள். சூக்கும சரீரப் பிரபஞ்சத்தை இதுபரியந்தஞ் சொன்னோம்; மேல் தூலபூதமும் தூலதேகமுமுண்டாக்கும் அத்தியாசத்தையும் கிரமமாகச் சொல்லக் கேட்பாய்; சூக்கும சரீரத்திற் சேர்ந்திருக்கின்ற இச்சீவர்களுக்குத் தூலதேகமும் அனுபோகமும் உண்டாகும்படி சீவர்களைப்பாதுகாக்கும் இவ்வீசுவரன் பஞ்சீகரித்தலைச் செய்தனன். எ-று.

தனுவும் போகமும் என்ற உம்மையால் அண்டமும் புவனமுங் கொள்க. (௩௩)

அ—கை. பஞ்சீகரணமும் அவற்றினால் ஆய காரியமுங்கூறல்.

ஐந்துபூத மும்பத் தாக்கி யவைபாதி நந்நான் காக்கி
நந்துதன் பாதி விட்டு நாலொடு நாலுங் கூட்ட
வந்தன தூல பூத மகாபூத மவற்றி னின்றும்
தந்தன நான்காந் தூல தனுவண்ட புவன போகம்.

இ-ள். தமோகுணப் பங்காகிய சூக்கும பஞ்சபூதங்களைப் பத்துப் பங்கு செய்து, அவற்றிற் பகுத்த பாதியை ஒவ்வொன்றை நான்கு நான்கு செய்து, கேடில்லாத தன் அம்சமான பாதியை நீக்கி, மற்ற நான்கோடு நான்கையுஞ் சேர்க்கத் தூலபூதமும் உண்டாயின; தூலபூதமாகிய அவைகளினின்று உண்டாக்கப்பட்டன தூலசரீரமும் அண்டமும் புவனமும் போகங்களும் ஆகிய நான்குமாம். எ-று.

அண்டம் என்பது பஞ்சபூதசமஷ்டி எனவும், புவனம் என்பது அவைகளினுள்ள பதப்பிராப்தி ஸ்தானங்கள் எனவுங் கொள்க.

இ-ம். சூட்சுமபூத பஞ்சீகரிக்கத் தூலபூதமும் அவற்றில் தூலசரீர முதலிய நான்குந் தோற்றின என்பதாம். (௩௪)

அ-கை. தூலதேகத்திலுல் வருங் கற்பனு நாமங்களைக் கூறல்.

தூலமே மருவுஞ் சீவன் சொல்லிய விசுவ னாகும்
தூலமே மருவு மீசன் சூழ்விராட் புருட னாகும்
தூலஞ்சாக் கிரவ வத்தை சொன்னதோ ரன்ன கோசம்
தூலகற் பனையீதென்று தொகுத்தது மனத்திற்கொள்வாய்.

இ-ள். வியஷ்டி தூலதேகத்தைச் சேர்ந்து அபிமானிக்கின்ற சீவனுக் கபிமானிநாமஞ் சொல்லப்பட்ட விசுவன் என்பதாம்; சமஷ்டி தூலதேகத்தைச்சேர்ந்து அபிமானிக்கின்ற ஈசுவரனுக்கபி

மானிநாமம் கருதாநின்ற விராட்புருடன் என்பதாம்; இவை இருவர்க்குந் தூலதேகமாம்; இவை இவ்விருவர்க்குஞ் சாக்கிராவத்தையாம்; சொல்லிய இது இவ்விருவர்க்கும் அன்னமயகோசமாம்; தூலசரீர அத்தியாசம் இதுவென்று தொகுத்துச் சொன்னதை மனதிலுணர்வாய். எ-று.

தன்மாத்திரை மிசிரமானதைத் தூலபூதம் எனவும், அஃதோருருவமானதைத் தூலசரீரம் எனவும், அதை அபிமானிப்பவர்களை விசுவன் விராட்டு எனவும், அதினென் றெதிரிட்டு அறிதலைச் சாக்கிராவத்தை எனவும், அஃது அன்னமயமாதலின், அதனை அன்னமயகோசம் எனவுங் கொள்க.

இ-ம். அபிமான நாமமுதலியவைகள் உண்டான அத்தியாசங் கூறினதாம். (௩௫)

அ-கை. சீவேசுரர்களுக்கு உபாதி ஒன்றாயின் அவர்கள் பேதமறிவது எங்ஙனம் என்ற வினாவுக்கு உத்தரம்.

சீரிய வீசனுர்க்குஞ் சீவர்க்கு முபாதி யொன்றேல்
ஆரிய குருவே பேத மறிவதெப் படியென் றக்கால்
காரிய வுபாதி சீவன் காரண வுபாதி யீசன்
வீரிய மிகு சமட்டி வியட்டியாற் பேத மாமே.

இ-ள். சிறப்பையுடைய ஈசுவரனுக்கும் சீவனுக்கும் உபாதி ஒன்றானால், அறிவுருவான ஆசிரியரே! சீவேசுரர் என்கிற வேற்றுமை யறிவது எவ்வாறு என்பாயாகில், காரியோபாதியுள்ள சீவர்கள் வியஷ்டியினாலும் காரணோபாதியுள்ள ஈசுவரன் வீரமிகுந்த சமஷ்டியினாலும் பேதமாகும். எ-று. (௩௬)

இதுவுமது.

மரங்கள்போல் வியட்டி பேதம் வனமெனல் சமட்டி பேதம்
சரங்கடா வரங்கள் பேதந் தனியுடல் வியட்டி யென்பார்

பரம்பிய வெல்லாங் கூட்டிப் பார்ப்பது சமட்டி யென்பார்
இரங்கிய பலசீ வர்க்கு மீசற்கும் பேத மீதே.

இ-ள். தருக்களைப்போல வியஷ்டியின் பேதமாம்; வனம் என்பது சமஷ்டியின்பேதமாம்; சராசரவுயிர்களின் பேதமான தனிமையான தேகத்தை வியஷ்டி என்று சொல்லுவார்கள்; விரிந்த தூல தேக முதலிய அனைத்தையுஞ் சேர்த்துக் காண்பது சமட்டி என்று சொல்லுவார்கள்: இரங்காநின்ற அநந்த சீவர்களுக்கும் ஈசுவரனுக்கும் பேதம் இதுவாம். எ-று.

இ-ம். சமட்டியினால் ஈசுவரனுக்கும் காரணோபாதியும், வியட்டினாற் சீவருக்குக் காரியோபாதியுமாம் என்பதாம். (௩எ)

அ-கை. அத்தியாரோப உத்தியினால் தன்னிடத்தில் ஆரோபமாகத் தோற்றின சகசீவபரங்களைக் கூறி அவைகள் உண்டான கிரமப்படி லயிப்பிக்கும் அபவாத வுத்தியைக் கூறத் தொடங்கல்.

கற்பனை வந்த வாறு காட்டினோங் காண்ப வெல்லாம்
சொப்பனம் போலவெண்ணித் துணிந்தவன் ஞானியாவான்
செற்புதை மழைகா லம்போய்த் தெளிந்தவா காயம்போல
அற்புத முத்தி சேரு மபவாத வழியுங் கேளாய்.

இ-ள். ஆரோபமான சிருட்டியுண்டான முறையை அறிவித்தோம்; திரிசியம் அனைத்தையும் கனவைப்போலக் கருதித் தெளிந்தவன் ஞானியாவான்; மேகம் நிறைந்திருக்கின்ற வருஷகால நீங்கிச் சரற்காலத்தில் தெளிந்த ஆகாயம்போல அற்புதமான மோக்ஷமடையும் அபவாத மார்க்கத்தையுங் கேட்பாய். எ-று. (௩அ)

அ-கை. அபவாத இலக்கணங்கூறல்.

அரவன்று கயிறென்றாற்போ லாளன்று தறியென்றாற்போல்
குரவன்ற னுபதே சத்தாற் குருநூல் வெளிச்சங் கொண்டு
புரமன்று புவனமன்று பூதங்க ளன்று ஞானத்
திரமென்றும் பிரம மென்றுந் தெளிவதே யபவா தங்காண்.

இ-ள். சர்ப்பமன்று பழுதையென்றது போலவும், மகனன்று குற்றியென்பதுபோலவும், ஆசிரியர் உபதேசமென்னு ஞானக்கண்ணினால் தத்துவத்தைச் சொல்லும் ஞானசாஸ்திரங்களாகிய பிரகாசத்தைக் கொண்டு, தேக முதலிய தத்துவங்களன்று, அவைகட்கு அதிட்டானமான கூடஸ்த சைதன்னிய மென்னும் புவனங்களுமன்று, பஞ்சபூதங்களுமன்று, அவைகட்கு அதிட்டானமான ஸ்திரஞான மெனவும் பிரமமெனவும் அனுபவமாய்த் தெளிவதே அபவாதமாம். எ-று.

புவனமென்பது சகளீகரித்திருக்குங் கைலாசமுதலிய ஸ்தானமும், பூதங்களென்பது விராட்டுருவமும் எனக்கொள்க.

இ-ம். ஆரோபத்தை நீக்கி அதிஷ்டானத்தைத் தரிசிப்பித்ததாம். (௩௯)

அ-கை. அதிஷ்டானத்தைத் தவிர ஆரோபம் இன்றெனல்.

படமுநூ லும்போற்செய்த பணியும்பொன் னும்போற்பார்க்
கடமுமண் ணும்போ லொன்றாங் காரிய கார ணங்கள்[கின்
உடன்முதற் சுபாவ மீறு யொன்றிலொன் றுதித்த வாறே
அடைவினி லொடுக்கிக் காண்ப தபவாத வுபாய மாமே.

இ-ள். வஸ்திரமும் நூலும் போலவும், செய்த ஆபரணமும் பொன்னும் போலவும், கலசமும் மண்ணும் போலவும், பார்க்குமிடத்தில் காரிய காரணங்க ளிரண்டும் ஒன்றேயாம்; தூலதேக

முதற்பிரகிருதி பரியந்தம் ஒன்றிலொன்றுண்டானபிரகாரம் முறையாக அடக்கிச் சுத்தப்பிரமத்தைத் தரிசிப்பது அபவாத உத்தியாம். எ-று.

இ-ம். தன்னிடத்தில் கற்பிதமான சகசீவபரங்களைத் தனது உருவமாக ஒடுக்கிக் காண்பதே அபவாத உத்தியென்பதாம். (சO)

அ-கை. முற்கூறிய ஆவரணசத்தியின் இலக்கணம் யாதெனவினுதல்.

தூடணை தமத்தில் வந்த தோற்றமாஞ் சத்தி செய்யும்
ஈடணை விகாரஞ் சொன்னீ ரிரண்டுசத் திகளென் றீரே
மூடலாஞ் சத்தி செய்யு மோகமுஞ் சொல்லு மையா
கேடறுங் குருவேயென்னக் கிருபையோ டருள்செய்வாரே.

இ-ள். நித்தியமாகிய குருசுவாமியே! தூஷிக்கத்தக்க தமோகுணத்தில் உண்டான விக்ஷேபசத்தி செய்யாநின்ற இச்சாரூபப் பிரபஞ்சம் உண்டான வேறுபாடுகளைச் சொன்னீர்; இரண்டு சத்திகளென்று சொன்னீரே, ஆவரணசத்தி செய்கின்ற மயக்கத்தையும் அருளவேண்டுமென்றுகேட்க, கருணையோடும் ஆசிரியர் அனுக்கிரகிப்பார். எ-று. (சக)

அ—கை. ஆவரணசத்தியின் தன்மைகூறல்.

தானிகர் தனக்கா மீசன் றனையுந்தங் களைத்தாங் கண்ட
ஞானிக ளுடையு மன்றி நாஸ்தின பாதி யென்னும்
ஊனிறை யுயிர்க ளுள்ளி னுணர்விழிக் குருடாம் வண்ணம்
வானிலந் திசைகண் மூடு மழைநிசி யிருள்போன் மூடும்.

இ-ள். தனக்குத்தானே சமானமாகிய பிரமமயமான ஈசனையும், தாமாகிய கூடஸ்தரைத் தரிசித்த ஞானவான்களையும் அல்லாமல்

பிரமமென்பது வேறு இல்லை; இருக்கிற் காணேனே என்கின்ற இரு முகத்தினால், தேகத்தில் வசிக்கும் சீவர்களின் அகத்தின் விளங்கிய ஞானதிருட்டியானது தெரியாதபடி, விண் மண் திக்குகளை மூடுகின்ற கார்காலத்து இரவின் இருளைப்போல, ஆவரண சத்தியானது மறைக்கும். எ-று.

இ-ம். கூடஸ்தபிரமங்களை மறையாமல் அவைகளின் ஆரோபமான சீவேசுவரர்களை மறைக்குமென்பதாம். (சஉ)

இதுவுமது.

பூன்றமாம் பிரமத் துக்கும் புறத்துள விகாரங் கட்கும்
ஆன்றகூ டத்த னுக்கு மகத்துள விகாரங் கட்கும்
தோன்றிய பேதஞ் சற்றுந் தோன்றுமன் மறைத்து மூடும்
ஊன்றிய பவவி யாதி யுண்டாக்கு முபாதி யீதே.

இ-ள். பூரணமான பிரமஸ்வரூபத்துக்கும், புறம்பிலுள்ள ஈசன் முதலிய வேறுபாடுகளுக்கும், மாட்சிமையுள்ள அறிவுருவான கூடஸ்தனுக்கும், அகத்திலுள்ள சீவன் முதலிய வேறுபாடுகளுக்கும் உண்டான சித்சடபேதங்களை எவ்வளவுந் தோற்றுமல் மறைக்கும் ஸ்திரமான பவப்பிணியை விளைவிக்கும் உபாதியானது இவ்வாவரண சத்தியேயாம். எ-று.

இ-ம். அதிஷ்டான ஆரோபங்களின் பேதந் தெரியவொட்டாமல் நாஸ்தி நபாதி என்னும் இருமுகத்தால் ஞானதிருஷ்டியை மறைக்குதல் ஆவரணசத்தியின் தன்மை என்பதாம். (சங)

அ-கை. அதிஷ்டான திருஷ்டி சாமானியமாகத் தோற்றிய பின்னர், அஃது மறைபடும்போது மறைபடாதபோதும் ஆரோபந் தோன்றக் கணக்கில்லையே என்ற சீடனைநோக்கி, அவ்வதிஷ்டான இலக்கணத்தை இரண்டுவிதமாகக் கூறுகின்றார்:

ஆதார மறைந்து போனு லாரோப மெங்கே தோன்றும்
ஆதார மறையா தாயி னாரோப மிலேயே யென்ருல்
ஆதாரஞ் சம விசேட மாமென விரண்டு கூறும்
ஆதாரஞ் சமமா மெங்கு மாரோபம் விசேட மாமே.

இ-ள். பிம்பம் மறையுமானுல் பிரதிபிம்பம் எங்ஙனந் தோன்றும்? பிம்பம் மறையவில்லையெனின் பிரதிபிம்ப மில்லையேயெனின், ஆதாரமானது சமமாமெனவும் விசேடமாமெனவும் இரண்டு வகையாம்; சமமானது எவ்விடத்துமுள்ள ஆதாரமாகும்; விசேடமானது கற்பிதமாம். எ-று.

இ-ம். ஆதாரமான சுத்தசைதன்னியம் பூரணமான கூடஸ்த பிரமமாக விளங்கு மிடத்தில் சமம் எனவும், அதனி லுதயமான அறிவு சீவேசுவர சகத்தாக விரிந்தொடுங்குமிடத்து விசேடம் எனவும், இங்ஙனம் உதித்தொடுங்கும் அறிவுண்மையாயினும் அக்கிரியைகள் மித்தையாதலின் அவ்விசேடத்தை ஆரோபம் எனவுங் கொள்க. (சச)

இதுவுமது.

சகமதி லிதுவென் சுட்டாச் சமானக்கண் மறைந்தி டாது
மிகவுரை கயிறும் பாம்பும் விசேடங்கண் மறைந்துபோகும்
அகமெனுஞ் சமானந் தன்னை யஞ்ஞான மறைத் திடாது
பகர்வதோர் விசேடஞ் சீவன் பரனெனு மவரை மூடும்.

இ-ள். உலகத்தின்கண் இதுவென்று சுட்டப்படாத சமமாகிய கண்கள் ஒன்று மறைக்க அதனுல் மறைபடா; மிகவுஞ் சொல்லாநின்ற பழுதையுஞ் சர்ப்பமுமாகிய விசேடமாக்த் தோன்றினவை என்றும் மறைக்க மறைபடும்; அதனைப்போலத் தானென்னுங் கூடஸ்த பிரமத்தை அறிமையான ஆவரணம் மறைக்கமாட்டாது;

சொல்லப்பட்ட ஓர் விசேடமாகிய சீவேசுவர ரென்கிற அவர்களை மறைக்கும். எ-று.

ப-ம். 'சீவன் பரனெனும் அவரைமூடும்' என்றது அவர்களு ணர்வை எனவும், 'அஞ்ஞான மறைத்திடாது' என்றது, ஆவரண மறைத்திடாதெனவும், கானலிருக்குமிடத்துச் சலந்தோற்றுதலும், அக்கானலாய்ப் பார்க்குமிடத்து அஃது தோற்றியும் இல்லாதது போல ஆதாரமிருக்குமிடத் தாரோபந் தோற்றுதலும், அவ்வாதார மாய்ப் பார்க்குமிடத்து அஃது தோற்றியும் இல்லாததே யாமென வுங்கொள்க.

இ-ம். ஆரோபமான சீவேசுவரரைத் தமக்கு ஆதாரமான கூடஸ்த பிரமத்தைப் பார்க்கவொட்டாமல் அவரது உணர்வை இவ்வாவரண மறைக்குமே அன்றி ஆதாரத்தை மறைக்கமாட்டாதென்பதாம். (சரு)

அ-கை. அவ்வுணர்வை மனமுதலாகத் தோன்றின விக்ஷேபகாரியம் மறைத்ததே அன்றி ஆவரணமெங்கே மறைத்ததெனல்.

கேவல நிலைதோன் ருமற் கெடுத்தது பஞ்ச கோசம்
சீவனுஞ் சகத்து மாகிச் செனித்தவி க்ஷேப மன்றோ
ஆவர ணந்தா னேபா ழனர்த்தமென் றுரைத்த தேதோ
மேவருங் குருவே யென்று வினவின மகனே கேளாய்.

இ-ள். முத்திநிச்சயந் தோன்றுமல் அழித்தது பஞ்சகோசமும் சிதாபாசனும் உலகமுமாய் உண்டான விக்ஷேபமன்றோ? அங்ஙன மிருக்க ஆவரணமே பாழ் எனவும் அநர்த்தம் எனவும் சொல்லிய தென்னை? அடைதற்கரிய ஆசாரியரே, என்றுகேட்ட மாணக்கனே! நீ கேட்பாய். எ-று.

ஆநந்தமயகோசமும் சீவனும் விக்ஷேபகாரியங்கள் அல்லாதன வாயிருக்க அங்ஙனங் கூறியது என்னை எனின், அந்தக்கரணப் பிரதிபலன் சீவனும், அவன் அறியாமை ஆநந்தமயகோசமும் ஆதலால் இங்ஙனம் கூறியதெனக் கொள்க.

இ—ம். வெளிப்படை. (சசு)

அ—கை. விக்ஷேப சத்தியினால் உண்டாகும் நன்மையும் ஆவரண சத்தியினால் உண்டாகுந் தீங்கையுங் கூறுகின்றார்.

தோற்றமாஞ் சத்தி தானே துன்பமாம் பவமா னாலும்
ஆற்றலான் முத்தி சேர்வார்க் கனுகூல சகாய மாகும்
ஊற்றமாம் பகற்கா லம்போ லுபகார நிசியி லுண்டோ [தே.
மாற்றமென் னுரைப்பேன்மைந்தா மறைப்பதுமிகப்பொல்லா

இ-ள். விக்ஷேபசத்தியே துன்பமயமான ஜநநத்துக்குக்காரண மானாலும் சிரவணாதி முயற்சியினால் வீடடைபவர்களுக்கு அது மிகவும் சகாயமாம்; அறிதற் குதவியாகும் பகற்காலம்போலச் சகாய மானது இரவிலுளதோ? என்ன சொல்வேன் மகனே! மூடுகின்ற ஆவரணம் மிகவும் பொல்லாததாம். எ-று. (சஎ)

அ—கை. இன்னும் அதனை வற்புறுத்தல்.

சுழுத்தியிற் பிரளயத்திற் தோற்றமாஞ் சகங்கண் மாண்டும்
அழுத்தியபவம்போய்முத்தி யடைந்தபே ரொருவருண்டோ
முழுத்தவி க்ஷேப மெல்லா முத்தியிற் கூட்டு கிற்கும்
கொழுத்தவா வரண முத்தி கூடாமற் கெடுத்த கேடே.

இ-ள். நாள்தோறும் உண்டாகாநிற்கும் பிரளயமாகிய சுழுத்தியிலும் பிரமப் பிரளயத்திலும் உண்டான உலக முதலியன நசித்

தும், அப்போது தம்மைத் துன்பத்தின் மூழ்கப்பண்ணிய சகந நீங்கி வீட்டைப் பெற்றவர்கள் ஒருவருளரோ, இல்லை; முழுதும் விக்ஷேப காரியமான அனைத்தும் வீட்டிற்சேர்க்கும்; அறியாமை யிருந்த ஆவரணமானது வீட்டைச்சேராமல்கெடுத்தகேடாம்.எ-று.

ப-ம். மனோதி யானுதியால் பரம சுகத்தை அடைதலின் 'விக்ஷேப மெல்லா முத்தியிற் கூட்டுகிற்கும்' என்றார்.

இ-ம். முத்தியை அடைதற்கு அறிதலுள்ள விக்ஷேபம் சாதன மாமே அன்றி அறியாமையான ஆவரணம் ஆகாது என்பதாம். ()

அ-கை. மித்தையான விக்ஷேபசத்தியினுல் வெளிப்படும் மித்தையே ஆமெனில் அங்ஙனம் ஆகாது எனல்.

சுத்தியில் வெள்ளி போலத் தோன்றிய தோற்ற மான
சத்தியும் பொய்யே யென்றாற் சத்திசா தனமாய் வந்த
முத்தியும் பொய்யா மென்னின் மோகநித் திரை விலங்கால்
நித்திரை தெளியு மாபோ னிருவாண நிலைமெய் யாமே.

இ-ள். கிளிஞ்சிலில் ரசதாரோபம்போல உண்டான விக்ஷேப சத்தியும் மித்தையாயின், அவ்விட்சேபசத்தி ரூபமான குருசாஸ்திராதி சாதனமாக உண்டானவீடும் மித்தையாம் என்பாயாகில், மோகமான சொப்பனத்திற்கண்ட சிங்கத்தினுல் நித்திரைதெளிந்து சாக்கிரம் வருவதுபோல, அச்சத்தியினு லுண்டாகு முத்திநிலையும் உண்மையேயாம். எ-று.

இ-ம். மித்தையான சொப்பன சிங்கத்தினு லுண்டான சாக்கிரம் சத்தியமானதுபோல மித்தையான விக்ஷேபசத்தியின் காரியமான தியானுதிகளாலுண்டான வீடும் சத்தியமேயாம் என்பதாம்.

அ-கை. இச்சத்திகளின் காரணமான மாயையை நீக்கும் ஏதுக் கூறல்.

இம்பரி னஞ்சை நஞ்சா லிரும்பினை யிரும்பா லெய்யும்
அம்பினை யம்பாற் பற்று மழுக்கினை யழுக்கான் மாய்ப்பர்
வம்பியன் மாயை தன்னை மாயையான் மாய்ப்பர் பின்னைத்
தம்பமா யதுவுங் கூடச் சவஞ்சுடு தடிபோற் போமே.

(இ-ள்.) இவ்வுலகத்தில் சர்ப்பந்தீண்டின விஷத்தை ஔஷதமான விஷத்தினாலும், இரும்பை அரமாகிய இரும்பினாலும், விடும் அம்பை அதற்குப் பகையான அம்பினாலும், வஸ்திரத்தில் பிடித்த அழுக்கை அதை நீக்கும் உழமண் முதலிய அழுக்கினாலும் கெடுப்பார்கள்; அங்ஙனமே, அசுத்தமாயையைச் சுத்தமாயையால் கெடுப்பார்கள்; பின்பு பற்றுக்கோடான அச்சுத்தமாயையும் அசுத்தமாயையும் அசுத்த மாயையோடுகூடப் பிரேததகனஞ் செய்யுந் தண்டம் அதனோடு வேவுதல்போலக் கெடும். எ-று.

இ-ம். சகத்து ரூபமான அசுத்தமாயை சித்ரூபமான மாயையினால் கெடுத்தவிடத்து, உதயமான பரஞானத்திற் சுத்தமாயையும் அசுத்தமாயையோடு கெடும் என்பதாம். (ருo)

அ-கை. ஆத்மாக்களுக்கு இவ்விருவிதமான மாயைகளால் சத்தாவத்தைகள் வருமாறும் அவற்றின் நாமமுங் கூறல்.

இந்தமா யையினாற் சீவர்க் கேழவத் தைகளுண் டாகும்
அந்தவே ழத்தை தம்மை யடைவினின் மொழியக் கேளாய்
முந்தவஞ் ஞான மூடன் மூளத்தல் காணாத ஞானம்
சந்ததங் கண்ட ஞானந் தழல்கெடல் குளிர்மை யாதல்.

இ-ள். இம்மாயையினால் சீவர்களுக்குச் சத்தாவத்தைகள் உளவாம்; அவ்வேழவத்தைகளின் நாமங்களைக் கிரமமாகச் சொல்லக் கேட்பாய்; முன்னம் அஞ்ஞானமும் ஆவரணமும் விக்ஷேபமும்

பரோக்ஷஞானமும் நித்தியாரோபஞானமும், துக்க நிவர்த்தியும், தடையற்ற ஆநந்தமுமாம். எ-று. (ருக)

அ—கை. அச்சத்தாவத்தைகளின் தன்மையைக் கூறல்.

பிரமமாந் தனை மறந்த பேதைமை யேயஞ் ஞானம்
பரனிலை காணு மென்று பகர்தலா வரண மூடல்
நரனொரு கரத்தாற்சீவ னெனனல் முளைத்த றோற்றம் [னம்.
குரவன்வாக் கியத்தாற் றன்னைக் குறிகொளல் பரோக்ஷஞா

இ-ள். பிரமஸ்வரூபமாகிய தன்னை மறந்த அறியாமையே அஞ்ஞானமாம்; பிரமம் இல்லை இருந்தாற் காணு என்று சொல்லுதல் மூடல் என்னும் ஆவரண சத்தியாம்; ஒரு புருடன் ஓர் நினைப்பினுல் நான் சீவன் எனல் விக்ஷேப சத்தியாம்; ஆசிரியருபதேசத்தினுல் பிரமத்தைக் குறிப்பாகத் தெரிந்துகொள்ளுதல் பரோக்ஷஞானமாம். எ-று. (ருஉ)

இதுவுமது.

தத்துவ விசாரஞ் செய்து சகலமுந் தேகமும் போய்
அத்து விதந்தா னுக லபரோக்ஷ ஞான மாகும்
சுத்தனுஞ் சீவ பேதங் கழிவதே துக்கம் போதல்
முத்தனு மெல்லாஞ் செய்து முடிந்ததா நந்த மாமே.

இ-ள். பிரமவிசாரஞ் செய்து எல்லா ஐயமு நீங்கி, கூடஸ்த பிரம ஐக்கியமான அத்துவித ஸ்வரூபந் தானுக விளங்குதல் அபரோக்ஷஞானம்; அகம்பாவமான சீவேஸ்வரபேதம் நீங்கலே தக்க நிவர்த்தியாம்; சகல துக்கங்களினின்று விடுபட்டவனுய்ச் செய்யத் தக்கன வனைத்துஞ்செய்து அடையத்தக்கன வனைத்தும் அடைந்தனம் என்னும் சந்தோஷமே ஆநந்தமாம். எ-று.

இ—ம். அஞ்ஞானம் ஆவரணம் இரண்டும் அசுத்தமாயா சம்பந்தம் விக்ஷேபம் பரோக்ஷம் இரண்டும் சுத்தசுத்தமாயா சம்பந்தம்; அபரோக்ஷ முதலிய மூன்றுஞ் சுத்தமாயா சம்பந்தமாம்; அவைகளில் அபரோக்ஷ ஞானத்தினுல் பரோக்ஷமும், விக்ஷேபசத்தியின் காரியமான திரிஸ்யமும், துக்கநிவர்த்தியினுல் ஆவரணமும், தடையற்ற ஆநந்தத்தினுல் அஞ்ஞானமு நீங்கும்; அவைகள் நீங்கவே இவைகள் நாமங்களு நீங்கி நிரதிசயாநந்தமாகத்தானே விளங்குமென்பதாம். (ருங)

அ—கை. அச்சத்தாவத்தையை விளக்கு நிமித்தம் தசபுமான் திட்டாந்தங்கூறல்.

இதுநினக் கறியும் வண்ண மிப்படி யொருதிட் டாந்தம்
புதுமையாங் கதைகேள் பத்துப் புருடரோ ராற்றை நீந்தி
உதகதீ ரத்தி லேறி யொருவ னென்பதுபே ரெண்ணி
அதனொடு தசமன் றானென் றறியாமன் மயங்கி நின்றான்.

இ-ள். இஃது உனக்குத்தெரியும்படி இவ்வண்ணம் ஒருதிட்டாந்தமாக வியப்பான ஒருகதை கூறுவன் கேட்பாய்; பதின்மர் ஒரு நதியைநீந்தி நதிக்கரையிலேறி ஒரு புருடன் ஒன்பது பெயரையெண்ணி அவர்களோடும் எண்ணினதான் பத்தாவான் என்றுதெரியாமல் பிரமித்து நின்றான். எ-று. (ருச)

அ—கை. திட்டாந்த தாட்டாந்தங்களுக்கு ஒப்புமைகாட்டல்.

அறியாத மயலஞ் ஞான மவனில்லைக் காணே மென்றல்
பிரியவா வரண மாகும் பீழைகொண் டழல் விக்ஷேபம்
நெறியாளன் றசம னுண்டு நிற்கின்றா னென்ற சொல்லைக்
குறியாக வெண்ணி நோக்கிக் கொள்வது பரோக்ஷ ஞானம்.

இ-ள். தன்னைத்தெரியாத மயக்கமே அஞ்ஞானமாம்; அத் தசமகன் இல்லை; இல்லாமையால் காண்கிலோம் எனல் அறி

யாமை நீங்காத ஆவரணமாம்; தசமனைக் காணேமென்று துன்ப முற்றலரல்விக்ஷேபமாம்; வழிச்செல்வோன்இவன்கருத்தைக்கண்டு பதின்மனுளன், இவ்விடத்திருக்கிறான் என்று சொல்லிய வசனத்தைக் குறிப்பாக நினைத்து அறிந்துகொள்வது பரோட்ச ஞானமாம். எ-று. (ருரு)

இதுவுமது.

புண்ணிய பதிதன் பின்னும் புருடரோன் பதின்மர் தம்மை
எண்ணிய நீபத் தாவா னென்னவே தன்னைக் காணல்
கண்ணினுற் கண்டஞானங் கரைதல்போ வதுநோய்போதல்
திண்ணிய மனதி லையந் தெளிதலா நந்த மாமே.

இ-ள். புண்ணியவானான நெறிச்செல்வோன் பின்பும் ஒன்பது புருடர்களை எண்ணின நீ பத்தாவானுவாய் என்றுசொல்லவே, தன்னைத் தசமனாகக் காண்டல் அபரோட்ச ஞானமாம்; அழுகை நீங்கினது துக்க நிவர்த்தியாம்; வன்மையான உள்ளத்தில் சந்தேகந் தீர்தல் தடையற்ற ஆநந்தமாம். எ-று.

இ-ம். தசமன் திட்டாந்தத்தினல் தன்னை மறந்ததனல் வந்த உபாதிகளையுந் தத்தரிசனத்தில் அவைகளின் நீக்கையுங் கூறினதாம். (ருச)

அ-கை. தசமன் தன்னைத்தானெனக்கண்டதுபோலத் தன்னைத் தானுகத் தரிசிப்பிக்கவேண்டும் என்ற சீடனை நோக்கி மகாவாக்கியார்த்த நிரூபகத்தினல் அத்துவிதமான தன்னை அறிவிக்கத்தொடங்கல்.

தசபுமான் றனைக்கண் டாற்போற் றேசிக மூர்த்தியே யென்
நிசவடி வினையான் காண நீர்காட்டல் வேண்டு மென்றான்
சுசிபெறு மிலக்கி யார்த்தந் தொம்பதந் தற்ப தங்கள்
அசிபத மைக்கியஞ் செய்யு மதிசய வுண்மை கேளாய்.

இ-ள். ஆசாரியரே! பதின்மனுனவன் தன்னைக்கண்டதுபோல எனது தத்துவதீனமான பிரமத்தை நான் தரிசிக்கும்படி தேவரீர் காண்பிக்க வேண்டுமென்று கேட்டான், (நீ அது என்னும்) தொம்பத தற்பதங்களின் பரிசுத்தமாகிய இலக்கியார்த்தமான கூடஸ்த பிரமத்தினுள் ஐக்கியத்தை (அது நீயானுய் என்னும்) அசிபதபொருளானது காட்டும்; இந்த அற்புதமான உண்மையைக் கேட்பாய். எ-று. (ருஎ)

அ—கை. ஒன்ருன சைதன்னியமே நான்கு சைதன்னியமாகத் தோன்றுமெனல்.

விண்ணொன்றே மகாவிண் ணென்று மேகவிண் ணொன்றும் பாரில், மண்ணென்ற கடவிண் ணென்று மருவிய சலவின் ணென்றும், எண்ணுங் கற்பனைபோ லென்றே யெங்குமாம் பிரமமீசன், நண்ணுங்கூ டஸ்தன்சீவ ஞன்குசை தன்னிய மாமே.

இ-ள். ஆகாயமொன்றே மகாஆகாயமெனவும், மேகசலப்பிரதிபிம்ப ஆகாயமெனவும், மண்ணென்ற கட ஆகாயமெனவும், அதிற்பொருந்திய கடசலப் பிரதிபிம்ப ஆகாயமெனவும், நினைக்கப்பட்ட கற்பிதத்தைப்போல ஏகமான சுத்த சைதன்னியமே பூரணமாகிய பிரமமெனவும் ஈஸ்வரனெனவும் பொருந்திய கூடஸ்த னெனவும் சீவனெனவும் நான்கு சித்துக்களாம். எ-று. (ருஅ)

அ—கை. ஆரோப சைதன்னியத்தை நீக்கி அதிஷ்டான சைதன்னியத்தை அடையவேண்டுமெனல்.

பூச்சிய வீசன் சீவன் புகல்பத மிரண்டி னுக்கும்
வாச்சிய மிலக்கி யந்தான் மலமிலாப் பிரம மாத்மா
காச்சிய பாலினெய்போற் கலந்தொன்ருங் கடைந்தெடுக்கும்
ஆச்சிய மென்ன வுன்னை யறிந்துநீ பிரிந்து கொள்ளே.

இ-ள். மகா வாக்கியத்திற் சொல்லும் தற்பதம் தொம்பதமான இருபதங்கட்கும் வாச்சியார்த்தமானவை ஆரோபமான சீவேஸ்வரராம்; இலக்கியார்த்தமானது நிர்மலமான பிரமகூடஸ்தராம்; காச்சின பாலில் வெண்ணெயைப்போலச் சடத்திற்சேர்ந்து ஒருமித்திருக்கின்ற ஆத்மாவைத் தரிசித்துக் கடைந்தெடுத்து உருக்கிய நெய்போல நீ அநாத்மாவினின்று பிரிவாயாக. எ-று.

இ-ம். தற்பததொம்பதங்களின் வாச்சியார்த்தமான சீவேஸ்வரன் ஆரோபமெனக்கண்டு அவைகளை நீக்கி இலக்கியார்த்தமான கூடஸ்த பிரம அதிஷ்டானத்தை யொன்ருகக்காணின் அதுவே அசிபதார்த்தமான சுத்த சைதன்னியமாம் என்பதாம். (ருகூ)

அ-கை. தன்னைத் தரிசிப்பிக்கு நிமித்தம் தானல்லாதவைகளை நியதி களைதல்.

பிறிவதெப் படிபென்றக்காற் பிணமாகு முடனென்னும்
அறிவினைக் கொல்ல வேண்டு மைம்பூத விகார மன்றே
வெறியதோர் துருத்தி மூச்சு விடுவது போல முக்கால்
எறிபிரா னனுநீ யல்லை யிராசத குணவி காரம்.

இ-ள். அநாத்மாவை நீங்குவது எங்ஙனம் எனின், சவமாய்ச் சிதைகின்ற தேகம் பஞ்சபூத விகாரமாதலால், அதை நானெனக் கருதும் பிராந்தியைக்கெடுத்தல்வேண்டும்; வெறுந்துருத்தியானது காற்றை விடுவதுபோல மூக்கினல் வீசும் பிராணவாயுவும் ரசோ குணத்தின் விகாரம் ஆதலால் அதுவும் நீ யல்லை. எ-று. (சு0)

இதுவுமது.

கரணமா மனது புந்தி கருந்தாவா மவைபான் மாவோ
தரமுள விரண்டு கோசஞ் சத்துவ குணவி காரம்
வரமறு கனவா னந்த மயனையு நானென் றதே
விரவிய தமவஞ் ஞான விருத்தியின் விகார மாமே.

இ-ள். அந்தக்கரணமான மனமும், அகம்பாவமாகிய புத்தியும், பேதமுள்ள மனோமயகோசமும்,விஞ்ஞானமயகோசமும், ஸ்திரமில்லாத சொப்பனமும், சத்துவகுணவிகாரமாம்; ஆதலால் அவ்விரண்டும் ஆத்மாவோ; அல்ல; பொருந்திய தமோரூபமான அவித்தியாவிருத்தியினது விகாரமாம்; ஆதலால் ஆனந்தமயகோசனென சீவனையும் ஆத்மாவென்று கருதாதே. எ-று.

இ-ம். தேகமுதல் அவித்தை பரியந்தமான மூன்று தேகமும் மூன்றவத்தையும் மூன்றபிமானியும் பஞ்சகோசங்களுந் தான் அன்றென நியதிகளைந்தாம். (சுக)

அ-கை. நியதிகளைந்த நீ அவ்விடத்திலுள்ள சுத்த சைதன்னியத்தைத்தரிசித்து அதுவாகும்பொருட்டுப் பஞ்சகோசவிலக்ஷணனுவாய் எனல்.

சத்தொடு சித்தா நந்தஞ் சமந்திரஞ் சாக்ஷி யேகம்
நித்தியம் வியாபி யான்மா நீயது வாய றிந்து
பொத்தொடு சடந்துக் காதி பொருந்துபே தங்க ளான
குத்திர பஞ்ச கோசக் குகைவிட்டு வெளியி லாவாய்.

இ-ள். சத்து சித்தும் ஆநந்தமும் சமமும் ஸ்திரமும் சாக்ஷியும் ஏகமும் நித்தியமும் பூரணமும் ஆகி விளங்குவது ஆத்மஸ்வரூபம்; ஆதலால், கூடஸ்தனே பிரமம் பிரமமே கூடஸ்தன் என அத்துவித ஸ்வரூபமாகத்தரிசித்து அனர்த சடதுக்கமுதலியவற்றை அடையாநின்ற வேறுபாடுகளுள்ள வஞ்சகமான பஞ்சகோசமாகிய தேகத்தை நீங்கி வெளிப்படுவாய். எ-று.

இ-ம். பஞ்சகோசங்களைக் கண்டு அவைகட்கு விலக்ஷணனுவாய் என்பதாம். (சுஉ)

அ-கை. விலக்ஷணமான இடத்தைப்பார்த்து இவ்விருளோ நான் என வினுதல்.

பஞ்சகோ சமும்விட் டப்பாற் பார்க்கின்ற போது பாழே
விஞ்சிய ததுவல் லாமல் வேறொன் றுந் தெரியக்கா ணேன்
அஞ்சன விருளை யோநா னகமென வனுப விப்பேன்
வஞ்சமில் குருவே யென்ற மகன்மதி தெளியச் சொல்வார்.

இ-ள். உண்மையான ஆசாரியரே! ஐந்து கோசமான மூன்று தேகத்தையும் நீக்கி அப்பால் பார்க்கும்பொழுது சூனியமே சேடித்திருக்கின்றது; அச்சூனியமே அன்றி மற்றொன்றும் தோன்றக் காண்கிலேன்; கரிய அந்தகாரத்தையா யான் நான் என்று அனுபவிப்பேன்? என்றுகேட்ட சீடனறிவு தெளியும்படி போதிப்பார். எ-று.

அஞ்சன இருளென்பது பிரகிருதி எனக்கொள்க.

இ-ம். நியதிகளைந்தான் இருக்க அதனைக்காணுமல் நியதிகளையப்பட்டவைகள் தோற்றுமையைத் தான் தோற்றவில்லை எனக் கலங்கி வினவினதாம். (சுங)

அ-கை. பிரகிருதியை நீக்கிச் சுத்த சைதன்னியனான தன்னைத் தரிசிப்பிக்கும்பொருட்டு இருளைக்கண்டவன் பாழா? அவனே நீ எனக் காண்பாய் எனல்.

முன்புக றசமன் புத்தி மோகத்தா லெண்ணி யெண்ணி
ஒன்பது பேரைக் கண்ட வொருவனுந் தனைங்காணுத
பின்பவ னிடையிற் கண்ட பெரியபா ழவனோ பாராய்
அன்புள மகனே காண்ப தடங்கலுங் காண்பா னீயே.

இ-ள். முன் சொல்லிய பதின்மனுனவன் புத்தி மயக்கத்தினுல் நினைத்து ஒன்பது பெயர்களைப்பார்த்த ஒருவனுகிய தன்னைப் பாராதபின் தன்னிடத்திலே தன்னைத் தசமனுகப்பார்த்த அவனு பெரும்பாழ்? பார்ப்பாய் அன்புள்ள புத்திரா! சூனியமுதலிய திரிஸ்யங்க ளனைத்தையும் பார்ப்பவன் நீயே ஆவாய். எ-று.

இ-ம். அவ்விருளாகிய அறியாமை நீ அன்று அதனைக்கண்ட ஞானமே நீயென அறிவித்ததாம். (கூச)

அ-கை. அங்ஙனம் அதிஷ்டான சைதன்னியமான தனது சந்நிதியிற் சகலமும் உதித்தொடுங்கு மெனல்.

தூலசூக் குமமஞ் ஞானந் தோன்றமூன் றவத்தை தாமும்
காலமோர் மூன்றுஞ் சன்மக் கடலெழுங் கல்லோ லங்கள்
போலவே வந்து வந்து போனவெத் தனையென் பேனுன்
ஆலமர் கடவு ளாணை யவைக்கெலாஞ் சாக்ஷி நீயே.

இ-ள். தூலசூக்கும காரணமாகிய சரீரத்திரயங்களும், தோற்றுநின்ற சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்னும் அவத்தாத் திரயங்களும் விசுவ தைசச பிராஞ்ஞகன் என்னும் அபிமானத்திரயங்களும், திரிகாலங்களும், பிறப்பாகிய சமுத்திரத்தி லுண்டான பேரலைகளைப்போலவே உண்டாகி உண்டாகி அழிந்தன; யான் எவ்வளவென்று சொல்வேன்; கல்லாலின் நிழலில் எழுந்தருளிய சற்குருவின் ஆஞ்ஞைப்படிக்கு அவைகளனைத்திற்கும் நீயே சாட்சியாம். எ-று.

இ-ம். ஆரோபமான அவித்தை முதலியனவைகளின் ஏகதேசமும் அவைகட்கு அதிட்டானமான ஆத்மஞான வியாபகத்தையுந் தெரிவித்ததாம். (கூரு)

அ-கை. அவ்வாத்மஞானத்தைத் தவிர மற்றோர் ஞானம் அன்றென்பதை உறுதிப்படுத்தும்நிமித்தந் தன்னையறிவது தானே எனல்.

எல்லாங்கண் டறியுமென்னை யேதுகொண் டறிவேனென்று, சொல்லாதே சுடமாஞ் சோதிச் சுடருக்குச் சுடர்வே

றுண்டோ, பல்லார்முன் றசமன்றன்னைப் பார்ப்பதுந் தனை
க்கொண்டே தான், அல்லாது பதினொன் ருனுமவ னிடத்
துண்டோ பாராய்.

இ-ள். அனைத்தையும் பார்த்தறிகின்ற என்னை எதைக்கொ
ண்டு அறிவேனென்று உரையாதே; சுயஞ்சோதியானபிரகாசத்தை
அறிவிப்பதற்குப் பிரகாசம் வேறுமுளதோ? பலர்முன்னர் பதின்
மனைக் காண்பதும் தன்னைக்கொண்டே அன்றுபதினோராம் புருட
னும் அத்தசமனிடத்து உளனோ? பார்ப்பாய். எ-று.

இ-ம். ஆத்ம சைதன்னியம் ஒன்றே என்று அறிவித்ததாம்.

அ-கை. சர்வஞ்ஞத்துவ கிஞ்சிஞ்ஞத்துவத்தையும் அறிவறியா
மையையும் நீங்கிச் சுத்தசைதன்னியத்தைத் தரிசிப்பித்தல்.

அறிவுக்கு மறிவுசெய்யு மறிவு வேறுண் டென்றெண்ணும்
அறிவற்ற குதர்க்க மூடர் கனவத்தை பலமாய்த் தீரும்
அறிபடும் பொருணீ யல்லை யறிபடாப் பொருணீ யல்லை
அறிபொரு ளாகுமுன்னை யனுபவித் தறிவாய் நீயே.

இ-ள். சுயஞ் சைதன்னியத்துக்கும் அறிவிக்கும் ஞானம் மற்
றொன்றிருக்கின்றதென்று நினைக்கின்ற உணர்வற்றகுதர்க்கஞ்செய்
யும் அஞ்ஞானிகளுக்கு அனவஸ்தாதோஷம் பிரயோசனமாய் முடி
யும்; திரிசியவஸ்துக்களும் நீ அல்லை; அறியாமையான சூனியவஸ்
துக்களும் நீ அல்லை; சைதன்னிய வஸ்துவான உனதாத்ம ஸ்வரூப
த்தை நீ அனுபவித் துணர்வாய். எ-று.

இ-ம். துவிதமாகிய அபரவுணர்வை நீக்கி அத்துவிதமான பர
வுணர்வு இதுவென உணர்த்தியதாம். (சூஎ)

அ—கை. அப்பரவுணர்வே தானாக விளங்கிய சிதானந்தமே சர்வமாக விளங்குகின்றதென உணர்த்துதல்.

மதுரமாங் கட்டி சுட்ட மாப்பணி யார மெல்லாம்
மதுரமாக் கியவ தற்கு மதுரந்தான் சுபாவ மன்றோ
அதுவிது வெனுஞ் சடங்க ளறிவாக வறிவைத் தந்தே
அதுவிது விரண்டு மாகா வகம்பொரு ளறிவாய் நீயே.

இ-ள். தித்திப்பாகிய கருப்புக்கட்டி சேர்த்துச் சுடப்பட்ட மாப்பலகாரங்க ளனைத்தையும் மதுரமாகச்செய்த அவ்வெல்லக்கட்டிக்கு மதுரமானது சுபாவம் அன்றோ? அது என்னுஞ் சமஷ்டியும் இது என்னும் வியஷ்டியுமான திரிசியவஸ்துக்களை அறியும்படியான ஞானதிருஷ்டியைக்கொடுத்துச் சீவேஸ்வர துவிதமாகாததானாகிய அத்துவித வஸ்துவை நீயே தரிசிப்பாய். எ-று.

இ—ம். தனது அம்சத்தைத்தவிர வேறொன்றும் இல்லை எனத் தனது வியாபகத்தை விளக்கியதாம். (சுஅ)

அ—கை. இவ்வத்துவித நிலைசித்திக்கும்பொருட்டு அதிஷ்டானத்துக்கு ஐக்கியமேயன்றி ஆரோபத்திற்கு ஐக்கியம்இன்றெனல்.

இந்தநீ தொம்ப தத்தி னிலக்கியப் பொருளா மென்றும்
பந்தமில் பிரம மேதற் பதந்தனி லிலக்கி யார்த்தம்
அந்தமாஞ் சீவ னீச னவர்களே வாச்சி யார்த்தம்
சந்ததம் பேத மாவார் தமக்கைக் கியங்கூ டாதே.

இ-ள். இத்தன்மையுள்ள கூடஸ்தனை நீயே தொம்பதத்தினுடைய லக்ஷியார்த்தமாம்; எப்பொழுதும் மாயாரகிதமான பிரமம் என்னும் அதுவே தற்பதத்தி னுடைய லக்ஷியார்த்தமாம்; தோன்றி அழியும் சீவஈஸ்வரர் ஆன அவர்களே வாச்சியார்த்தமாம்;

என்றும் பேதமாகிய சீவ ஈஸ்வரர்களுக்கு ஏகமாதல் கூடாதாம். எ-று.

பேதகமாவார்க்கு ஐக்கியங் கூடாதென்றதனுல் அபேதமாவார்க்கு ஐக்கியங் கூடுமென்ருயிற்று.

இ-ம். மகாவாக்கியத்தின் இலக்கியார்த்தமான கூடஸ்த பிரமம் அபேதமாதலின் அவர்கட்கு ஐக்கியம் கூடுமென்பதாம்.(சுகூ)

இதுவுமது.

பேதமா னதுவுங் கேளாய் பேராலு மிடங்க ளாலும்
ஓதரு முபாதி யாலு முடலாலு முணர்வி னுலும்
பாதலம் விசும்பும் போலப் பலதர மகன்று நிற்பார்
ஆதலா லிவர்க்கெந் நாளு மைக்யமென் பதுகூ டாதே.

இ-ள். சீவ ஈஸ்வரர்களுக்குண்டான பேதத்தைக்கேட்பாயாக; சீவ ஈஸ்வரர்கள் என்னும் தங்கள் நாமங்களினுலும், அண்ட பிண்டங்களாயிருக்கின்ற ஸ்தானங்களினுலும், சொல்லுதற்கரியகாரண காரியமாகிய உபாதிகளினுலும் சமஷ்டி வியஷ்டியாகிய தேகங்களினுலும், சர்வஞ்ஞத்துவம் என்னும் ஞானத்தினுலும், அவர்கள் பாதாளமும் விண்ணுலகமும் போலவும் நாநாவிதத்தினுலும் பேதமுற்று நிற்பார்கள்: ஆதலால், இத்தன்மையுள்ள சீவேஸ்வரர்களுக்கு எப்பொழுதும் கலத்தலென்பது கூடாதாம். எ-று.

இ-ம். மகா வாக்கியத்தின் வாச்சியார்த்தமான சீவேஸ்வரர் இங்ஙனம் பேதமாதலின் அவர்கட்கு ஐக்கியங்கூடாதென்பதாம். ()

அ-கை. மகா வாக்கியார்த்தப்படி கூடஸ்தபிரமம் ஏகம் என்னும் பொருள்தோன்ற மூவித இலக்கணையைக் கூறுகின்ருர்.

வடநூல்வல் லவர்கள்சொல்லும் வாசகப் பொருள்சேராமல்
இடராகிற் பொருளாம் வண்ண மிலக்கணை யுரையாற்கொள்
திடமான வதுவு மூன்றுச் செப்புவார் விட்ட தென்றும்[வர்
விடலிலா தென்றும் விட்டும் விடாததென் றும்பே ராமே.

இ-ள். வடநூலாசிரியர் சாஸ்திரங்களிற் சொல்லாநின்ற வாச்சியார்த்தத்தினல் பொருள் விளங்காது தடைபடின், அர்த்தமாகும் பொருட்டு இலக்கியார்த்தத்தினல் பொருள் கொள்வார்கள்; திறமாக அவ்விலக்கணையையும் மூன்றுவிதமாகச் சொல்லுவார்கள்; அவற்றிற்கு விட்ட இலக்கணை எனவும், விடாத இலக்கணை எனவும், விட்டும் விடாத இலக்கணை எனவும், நாமங்களாம். எ-று.

இ-ம். இலக்கணையின் நாமங்களைக் கூறினதாம். (எக)

அ-கை. அவற்றிற்கு உதாரணங்கூறல்.

கங்கையிற் கோஷமென்றுங் கருப்புச்சேப் போடுமென்றும்
தங்கிய சோயந் தேவ தத்தனென் றுஞ்சொல் வார்கள்
இங்குதா ரணங்க ளாக்கி யிந்தமூன் றுரைக ளாலே
துங்கநூல் விரோதமான சொல்லெலாம் பொருளாந்தானே.

இ-ள். கங்கைக்கண் இடைச்சேரி எனவும், கருமை செம்மைகள் செல்லுகின்ற எனவும், தங்காநின்ற அவனே யிவனுன தேவதத்தனென்னும் ஓர் புருடன் எனவும் உரைப்பார்கள்; இவ்விடத்து உதாரணங்களாகக்கொண்டு இம்மூன்று இலக்கணைப் பொருள்களினல் மேலான சாஸ்திரங்களில் அர்த்தம் பொருந்தாமல் வேறுபடுகின்ற வாக்கியங்களனைத்தும் அருத்தமாம். எ-று.

ப-ம். கங்கைக்கணிடைச்சேரி யென்னு மிடத்து, கங்கையினிடத் திடைச்சேரி யிருக்குமா? அதன் கரையி லிருக்குமென்று அதைவிட் டிதைக்கொள்வது விட்ட இலக்கணை யென்பார் 'கங்கையிற் கோஷம்' எனவும், கருமை செம்மை செல்லுகின்றன

என்னுமிடத்து அவைகள் தனியே செல்லுமா? கருமை நிறமாகிய பசுவும் செம்மைநிறமாகிய குதிரையுஞ் செல்லுகின்றன என்று அந் நிறத்தைவிடாமல் அவ்வான்மாக்களைக் கொள்வது விடாத இலக் கணை என்பார் 'கருப்புச் சேப்போடும்' எனவும், அவ்விடமும் அக் காலமும் அவ்வேடமும் உள்ள அவனே இவ்விடமும் இக்கால மும் இவ்வேடமும் உள்ள இவன் என அவைகளைநீக்கி இப் புருடனை மாத்திரங் கொள்ளும்போது, அவ்விடம் முதலானவை கள் நீங்கி இப்புருடன் மாத்திரம் இருக்கின்றதை விட்டும்விடாத இலக்கணையென்பார் 'தங்கியசோயந் தேவதத்தன்' எனவும், இவ் விலக்கணை வாக்கியப்படி பொருள்கோடலே நூல்களனைத்தினு முள்ள அவிரோதமான பொருள்கோட லென்பார். 'இந்த மூன் றுரைகளாலே துங்கநூல் விரோதமான சொல்லெலலாம் பொரு ளாம்' எனவுங் கூறினர்.

இ-ம். தொம்பதார்த்தத்தை விட்ட இலக்கணையால் தரிசிக்க வேண்டுமென்பது, தூலமுதல் அவித்தைபரியந்தமான சரீரத்திர யங்களைவிட்டு, அவைகட்கு விலக்ஷணமான கூடஸ்த சைதன்னி யத்தைத் தரிசிப்பதும்; தற்பதார்த்தத்தைவிடாத இலக்கணையால் தரிசிக்கவேண்டுமென்பது, சைதன்னியம் ஆனந்தானுபூதியின்றி விளங்காமையால், இச்சைதன்னியத்தை விடாமல் ஆநந்தோப் பிர மத்தைத் தரிசிப்பதும், அசிபதார்த்தத்தை விட்டும் விடாத இலக் கணையால் தரிசிக்கவேண்டுமென்பது, ஆநந்தமின்றி யறியவும், அறி வின்றி ஆநந்தமு மின்மையால், அவைகளின் பேதமானது துவிதத் தைவிட்டு, அபேதமான அத்துவித வஸ்துவைவிடாமல் தரிசிப்பது மாம். (எஉ)

இதுவுமது.

பன்னிய சோய மென்னும் பதங்களின் வாச்சி யார்த்தம்
அன்னிய தேயங் கால மவனிவ னென்ப வெல்லாம்

சொன்னவிவ்விரோதம்விட்டுத் தொகையிலக்கியம்விடாமல்
உன்னி டிற்றேவ தத்த ஞெருவனை வெளியாக் காட்டும்.

இ-ள். முன்சொன்ன அவனே இவனென்னும் பதங்களுக்கு வாச்சியார்த்தமானது வேறான தேசமும் காலமும் அவன் இவனென்பனவாகச் சொல்லப்பட்ட விரோதமாயுள்ள இவ்வனைத்தையும் விடுத்து முடிவில் இலக்கியார்த்தத்தை விடாமல் சிந்திக்கில் தேவதத்தனென்னு மொருபுருடனையே பிரத்தியக்ஷமாகக் காண்பிக்கும். எ-று.

இ-ம். இவ்விலக்கணையின் பொருளொருமையை நன்றாகத் தெரிவித்ததாம். (எங)

அ-கை. இத்திஷ்டாந்தப்படி தாஷ்டாந்தத்தை விளக்குதல்.

தத்துவப் பதங்க டாமுஞ் சாக்ஷியாய்ப் பிரம மான
வத்துவை விடாமற் பேத வாச்சியார்த் தத்தை விட்டு
நித்தமு மதுநீ யாகு நீயது வாகு மென்னும்
அர்த்தமு மகண்ட மென்றே யசிபத வைக்கியங் காட்டும்.

இ-ள். மகாவாக்கியமான அது நீஎன்னும் பதங்கள் பிரமமாயும் சாக்ஷியுமாயுமுள்ள சேதனபாகமான இலக்கியார்த்தத்தை விடாமல் பேததர்மங்களையுடைய வாச்சிய பாகங்களை விடுத்து, சர்வகாலமும், பிரமமே நீயாம், நீயே பிரமமாம் என்று சொல்லும் அசிபதத்தின் பொருளும் ஏகமே என்று ஐக்கியத்தை யுணர்த்தும். எ-று.

இ-ம். ஆசிரியர் உபதேசப்படி வேத நிச்சயம் இருப்பது தோன்ற அதின் முடிவான மகாவாக்கியத்தின் இலக்கியார்த்தமான கூடஸ்த பிரமத்தின் ஒருமையை உணர்த்தியதாம். (எச)

அ-கை. இவ்வத்துவிதமான சுவானுபூதியே தானாக விளங்குவாய் எனல்.

கடநீரின் மேகநீரிற் கண்டவா னிரண்டு பொய்யே
குடவானும் பெரிய வானுங் கூடியொன் றுமெப் போதும்
இடமான பிரமஞ் சாக்ஷி யிரண்டுமெப் போது மேகம்
திடமாகச் சுவானு பூதி சிவோகமென் றிருந்தி டாயே.

இ-ள். கடசலத்திலும் மேகசலத்திலும் தோற்றுகின்ற பிரதிபிம்ப ஆகாயமான இரண்டும் மித்தையேயாம்; கடாகாயமும் மகாகாயமும் எக்காலமும் கலந்து ஏகமாகும்; (அதுபோல) வியாபகமான பிரமமும் கூடஸ்தனும் ஆகிய இரண்டு சைதன்னியமும் எக்காலமும் ஒன்றேயாம்; ஆதலின் ஸ்திரமாகச் சுவானுபூதியாகிய சிவோகம் என்று இருப்பாய். எ-று.

இ-ம். சுருதி குருவாக்கியார்த்தம் ஒன்றுபட்ட அத்துவிதமான சுத்த சைதன்னியமே தானாக விளங்குவாய் என, மௌனநிலையை உணர்த்தி, ஆசிரியர் மௌனமாயிருந்தா ரென்பதாம்.

அ-கை. குருவாக்கியப்படி சமாதியில் தன்னைத் தரிசித்தல்.

தஞ்சமாங் குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப் பாமல்
பஞ்சகோ சமுங் கடந்து பாழையுந் தள்ளி யுள்ளில்
கொஞ்சமா மிருப்பும் விட்டுக் கூடஸ்த பிரம மென்னும்
நெஞ்சமு நழுவி யொன்றாய் நின்றபூ ரணத்தைக் கண்டான்.

இ-ள். தனக்கு உயிர்த்துணையான ஆசிரிய ரனுக்கிரகஞ்செய்த தற்பத தொம்பத சோதனைசெய்த மார்க்கங்கள் தவறாமல் ஐந்து கோசங்கட்கும் விலட்சணனாய் அங்ஙனங்கண்ட சூனியத்தையும் நீக்கி, உள்ளத்தில் அற்பமாகத் தோற்றியிருக்கின்ற ஸ்மரணத்தையும்விடுத்து, கூடஸ்த பிரமம் என்கின்ற நினைவும் இறந்து, அத்துவிதமாயிருந்த பரிபூரணஸ்வரூபத்தைத் தரிசித்தான். எ-று.

அ-கை. சமாதிகூடி சுவானுபூதிமயமாதல்.

அனுபவா நந்த வெள்ளத் தழுந்தியே யகண்ட மாகித்
தனுக ரணங்க ளாதி சகலமு மிறந்து சித்தாய்
மனதுபூ ரணமாய்த் தேசிக மானசற் குருவுங் காண
நனவினிற் சுழுத்தி யாகி நன்மகன் சுபாவ மானான்.

இ-ள். சுவானுபவமாகிய நிரதிசயாநந்த சமுத்திரத்தில்மூழ்கி, அகண்டாகாரமாய்த் தேகேந்திரிய அந்தக்கரணம் முதலிய அனைத்தும் நசித்து, சின்மாத்திரானுபவத்தினால் மனம் பூரணமாகி, பூரணமே திருவுருக்கொண்ட ஆசிரியரும் பார்க்கும்படி நனவிற்சுழுத்தியை அடைந்து, நற்சீடன் தனதியல்பான ஸ்வரூபமாக விளங்கினான் எ-று.

இ-ம். சுருதி குருவாக்கியப்படி சுவானுபவம் விளங்கிற்றென்பதாம். (எஎ)

அ-கை. சமாதியினின்றும் வெளிப்படல்.

அளிமக னெடும்போ திவ்வா றானபின் மனது மெல்ல
வெளியில்வந் திடவுணர்ந் தான் விமலதே சிகனைக்கண்டான்
துளிவிழிசொரியப்பாதந் தொழுதுவீழ்ந் தெழுந்துசூழ்ந்தா
குளிர்முகச் சுவாமிகேட்கக் கும்பிட்டுநின்று சொல்வான். [ன்

இ-ள். கனிவுள்ள சீடனானவன் வெகுநேரம் இவ்வண்ணமாக விளங்கினபின்பு, ஸ்வரூப சமஸ்காரமான மனது மெள்ள அச்சமாதியினின்றுந் துரிதமாய் வெளிப்பட, அறிந்தவனாய் நிர்மலமான ஆசாரியரைப்பார்த்துக் கண்கள் ஆநந்தபாஷ்பம் பொழிய அவரது பாதத்தில் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, பின்பெழுந்து வலம் வந்து பிர்மாநந்தம் விளங்குகின்ற முகத்தையுடைய ஆசாரியர்கேட்கும்படி சிரசின்மேல் அஞ்சலியோடு நின்று துதிப்பான். எ-று.

இ—ம். சமாதி அனுபவ சமஸ்காரத்தோடு சகநிட்டைக்கு வெளிப்பட்டதாம். சகநிட்டை — சதாநிட்டை. (எஅ)

அ—கை. கைம்மாறு காணேன் எனக் குருவைத் துதிசெய்தல்.

ஐயனே யெனது ளேநின் றனதுசென் மங்க ளாண்ட
மெய்யனே யுபதே சிக்க வெளிவந்த குருவே போற்றி
உய்யவே முத்தி நல்கு முதவிக்கோ ருதவி நாயேன்
செய்யவே றொன்றுங் காணேன் றிருவடி போற்றி போற்றி.

இ—ள். ஆசாரியரே! என துள்ளத்தினின்று அளவிறந்த பவங்கள் தோறும் ஆளாநின்ற கர்த்தனே! அனுக்கிரகிக்கும் நிமித்தம் மானிட வடிவுகொண் டெழுந்தருளிய ஆசிரியரே! வணங்குகின்றேன்; அடியேன் ஈடேறும்பொருட்டு வீடளித்தசகாயத்திற்கு ஒரு கைம்மாறு அடியேன்செய்ய மற்றொன்றுங் காண்கிலன்; ஆகையால் தேவரீர் அழகிய பாதங்களைத் துதிக்கின்றேன். எ—று. (எகூ)

அ—கை. சமாதி அனுபவம் பெற்ற சீடனை நோக்கிச் சகநிட்டை அனுபவம் உதயமாம்பொருட்டு உனதனுபவந் தடையின்றி விளங்குமெனில் அஃதே கைம்மாறு எனக் கூறுதல்.

சிட்டனிவ் வாறு சொல்லத் தேசிகர் மகிழ்ந்து நோக்கிக்
கிட்டவா வென விருத்திக் கிருபையோ டருளிச் செய்வார்
துட்டமாந் தடைகண்மூன் றுந் தொடாராமற் சொரூபஞான
நிட்டனா யிருப்பா யாகி னீசெய்யு முதவி யாமே.

இ—ள். சீடனானவன் இவ்வண்ணந் துதித்துரைக்க, ஆசிரியரானவர் மகிழ்ச்சியுடன் பார்த்து, சமீபத்தில் வாவென்று அழைத்து இருக்கச் செய்து, கருணையோடும் அனுக்கிரகஞ் செய்வார்; பொல்லாதனவாகிய பிரதிபந்தங்கள் மூன்றும்தொடர்ந்துவாராமல் ஸ்வரூப சைதன்னிய சமாதியை உடையவனாய் இருப்பாயானால் இஃதே நீ எனக்குச் செய்யுங் கைம்மாறாகும். எ-று.

இ-ம். தானென அனுபவமான சுகபோகத்தைத் தவிர வேறு கருதாமல் இருக்கவேண்டு மென்பதாம். (அ0)

அ-கை. அனுபவமான அத்துவித ஞானந் தடைகளினால் நீங்குமோ? சீடனை நோக்கி அவைகளுண்டான அனுபவந் திறமாக விளங்காது எனல்.

நீநானென் றிரண் டில்லாம னிறைந்தபூ ரணமா யெங்கும்
நானாகத் தெளிந்த ஞான நழுவுமோ குருவே யென்றான்
தானாகும் பிரம ரூபஞ் சற்குரு நூலாற் றோன்றும்
ஆனாலுந் தடைகளுண்டே லனுபவ முறைத்தி டாதே.

இ-ள். நீ எனவும் நான் எனவும் துவிதமின்றி அத்துவிதமாக வியாபித்த பரிபூரணமாய் எவ்விடத்தும் தானாகவறிந்த சைதன்னியமானது, ஆசாரியரே! நழுவுமோ? என்று கேட்டான்; தன்மயமான பிரமஸ்வரூபமானது உபதேசத்தினாலும் வேதாந்த சாஸ்திரங்களினாலும் உதிக்குமானாலும் பிரதிபந்தங்க ளிருக்குமானால் அவ்வனுபவம் ஸ்திரப்படாது. எ-று.

நீ என்பது முன்னிலையிற் குருவாக விளங்கிய ஆனந்தமெனவும், நான் என்பது தன்மையிற் சீடனாக விளங்கிய அறிவெனவுங் கொள்க. (அக)

அ-கை. தடைகளையும் அவற்றை நீக்கும் உபாயங்களையுங்கூறல்.

தடைகளே தெனிலஞ் ஞானஞ் சந்தேகம் விபரீ தங்கள்
படர்செயு மிந்த மூன்றும் பலசன்மப் பழக்கத் தாலே
உடனுடன் வரும்வந் தக்கா லுயர்ஞானங் கெடுமி வற்றைத்
திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்த றெளித லாலே.

இ-ள். அத்தடைகள் யாவையென்றால், அஞ்ஞானமும் சந்தேகமும் விபரீதங்களுமாம்; துன்பஞ்செய்யும் இம்மூன்று தடைகளும் அநந்தசென்மப் பழக்கத்தினால் அடிக்கடிவரும்; அங்ஙனம் வருமாகில் மேலான ஞானம் மறைபடும்; இத்தடைகளைத் திடமாகச் சிரவணத்தினாலும் மனனத்தினாலும் நிதித்தியாசனத்தினாலும் நீக்குவாய். எ-று. (அஉ)

அ—கை. தடைகள் உளவாயின் அனுபவம் விளங்காது எனத் திருஷ்டாந்த முகத்தால் அறிவித்தல்.

அக்கினி கட்டுப் பட்டா லற்பமுஞ் சுடமாட் டாது
மக்கின ஞானத் தாலே வந்தபந் தமும்வே வாது
சிக்கெனப் பழகிக் கேட்டல் சிந்தித்த றெளித லாலே
விக்கின மடஞ்சந் தேகம் விபரீதம் போக்கு வாயே.

இ-ள். மந்திரத்தினால் நெருப்பானது ஸ்தம்பனமானால் சற்றும் எரிக்கமாட்டாது; அதுபோல, அஞ்ஞானம் சந்தேகம் விபரீதங்களால் தடையுண்ட தத்துவஞானத்தால் வரப்பட்ட திரிசிய வாசனையும் கெடாது; ஆதலால் இடைவிடாமற் பழக்கஞ்செய்து சிரவணத்தினால் ஞானத்துக்குத் தடையாகிய அஞ்ஞானத்தையும், மனனத்தினால் சந்தேகத்தையும், சுவானுபவமாய்த் தெளிதலினால் கற்பிதமான திரிசியத்தையும் நீக்குவாய். எ-று. (அங)

அ—கை. அத்தடைகளின் இயல்பு கூறல்.

பிரமபா வனையை மூடிப் பேதங்காட் டுவதஞ் ஞானம்
குரவன்வாக் கியநம் பாமற் குழம்பின மனஞ்சந் தேகம்
திரமறு சகமெய் யென்றுந் தேகநா னென்று முள்ளே
விரவிய மோகந் தானே விபரீத மென்பர் மேலோர்.

இ-ள். திருக்கு ஸ்மரணத்தை மறைத்துத் திரிசியத்தைக் காண்பிப்பது அஞ்ஞானமாம்; ஆசாரியர் உபதேச வாக்கியார்த்

தத்தை நம்புதல் செய்யாமல் மனக்கலக்க முறுதல் சந்தேகமாம்; நிலையில்லாத சகம் சத்தியமெனவும், சரீரம் யானெனவும், மனத்தின்கண் பொருந்தின மயக்கமே விபரீதம் என்றுஞ் சொல்லுவார்கள் மகான்கள். எ-று. (௮௪)

அ—கை. அத்தடைகளைக்கெடுக்குங் கேட்டல் முதலியவைகளின் இயல்பு கூறல்.

தத்துவ வனுபோகந் தான் சாதித்தல் கேட்ட லென்பார்
ஒத்துள பொருளு கத்தா லுசாவல் சிந்தித்த லென்பார்
சித்தமே காந்த மான தரிசனந் தெளித லென்பார்
நித்தமிப் படிசெய் தக்கா னிர்வாணம் பெறுவாய் நீயே.

இ-ள். மகாவாக்கியார்த்தமான பிரமோப தேசத்தைக் குருமுகமாகப் பெறுதலைக் கேட்டல் என்றுரைப்பார்கள்; அதன் ஐக்கியார்த்தத்தை விசாரித்தலைச் சிந்தித்தல் என்று சொல்லுவார்கள்; மனமானது தனிமையான சுவானுபூதியைத் தரிசித்தலைத் தெளிதல் என்று சொல்லுவார்கள்; எப்போதும் இவ்வண்ணம் அனுசந்தத்தினால் நீ முத்தியை யடைவாய். எ-று. (௮௫)

இ—ம். அஞ்ஞானம் முதலிய தடைகளைக் கேட்டல் முதலிய உபாயங்களால் கெடுக்கிற் சுவானுபவந் தடையின்றி விளங்கும் என்பதாம்.

அ—கை. அக்கேட்டல் முதலியவைகள் வேண்டுங் கால அளவு கூறல்.

எத்தனை நாண்ஞா தாவு ஞானமு மிருக்கு முன்பால்
அத்தனை நாளும் வேண்டு மப்பாலோர் செயலும் வேண்டா
நித்தமும் வெளிபோற் பற்று ஞேயமாத் திரமாய்ச் சீவன்
முத்த ரானவர் விதேக முத்திபெற் றிருப்ப ரென்றும்.

இ-ள். எவ்வளவுகாலம் காண்பானும் காட்சியும் இருக்குமோ அவ்வளவு காலமும் இக்கேட்டல் முதலிய மூன்றும் வேண்டும்; அதற்குமேல் ஓரனுஷ்டானமும் வேண்டுவதில்லை; எப்போதும் நான்கு பூதத்தினாலுந் தாக்கற்றிருக்கின்ற ஆகாயத்தைப்போலத் திரிசியங்களிற் பற்றுதுநிற்கும் ஆத்மஸ்வரூபமாய் சீவன் முத்தியை யடைந்தவர்கள் எப்பொழுதும் விதேக கைவல்யத்தை அடைந் திருப்பார்கள். எ-று.

இ-ம். காண்பானுங் காட்சியும் நீங்கி ஸ்வரூபந் தானாகிற பரியந்தம் கேட்டல் முதலியவைகளைப் பழகல்வேண்டும் என்பதாம். ()

அ-கை. அச்சீவன் முத்தர்கள் தொகையும் நாமமுஞ் சொல்லி அவர்களின் இயல்பு கூறத் தொடங்கல்.

ஞானமார் சீவன் முத்தர் நால்வகை யாவர் கேளாய்
வானிகர் பிரமவித்து வரன்வரி யான்வ ரிட்டன்
ஆனவர் நாம மீதா மவர்களிற் பிரம வித்தின்
தானமு மற்றை மூவர் தாரதம் மியமுஞ் சொல்வேன்.

இ-ள். ஞானநிறைந்த சீவன்முத்தர்கள் நான்குவிதமாவார்கள்; அவர்களது பெயர், ஆகாயத்துக் கொப்பான பிரமவித்து, பிரமவரன், பிரமவரியான், பிரமவரிட்டன் ஆகிய இவையாம்; அவர்களுக்குள் பிரமவித்தின் நிலையையும் ஏனைய மூவருடைய தாரதம்மியத்தையுஞ் சொல்வேன் கேட்பாயாக. எ-று.

இ-ம். வெளிப்படை. (அ௬)

அ-கை. சீவன்முத்தர்களில் பிரமவித்தின் இயல்பு கூறல்.

தீரராய்ப் பிரம வித்தாய்த் தெளிந்தவர் தெளியு முன்னம்
வாரமா யிருந்த தங்கள் வருணமாச் சிரமஞ் சொன்ன
பாரகா ரியமா னாலும் பலர்க்குப கார மாக
நேரதாச் செய்வார் தீர்ந்த நிலைவிடாச் சீவன் முத்தர்.

இ-ள். தீரமுள்ளவர்களாய்ப் பிரமவித்தாய்த் தெளிந்த சீவன் முத்தர்கள் இங்ஙனந் தெளிவதற்கு முன்பு உரிமையாயிருந்த தங்களுடைய வர்ணச்சிரமங்களைக் குறித்துக் கன்மநூலாற் சொல்லப்பட்டவைகள் வருத்தமான கருமங்களாயினும் யாவர்க்கும் அனுகூலமாகக் கிரமமாக அவற்றைச் செய்வார்கள், முடிவான நிச்சயத்தைவிட்டு நீங்கார்கள். எ-று.

இ-ம். பிரமவித்து லோகோபகார நிமித்தம் சற்கருமத்தை அனுஷ்டிப்பான் என்பதாம். (அஅ)

இதுவுமது.

காமமா திகள்வந் தாலுங் கணத்திற்போ மனத்திற் பற்றார்
தாமரை யிலைத்தண் ணீர்போற் சகத்தொடுங் கூடிவாழ்வார்
பாமர ரெனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டார்
ஊமரு மாவா ருள்ளத் துவகையாஞ் சீவன் முத்தர்.

இ-ள். காம முதலியவைகள் ஒருபோது நேரிட்டாலும் அநிச்சாபிராரத்தமாகக் கணத்தில் நீங்கும்; மனத்தில் வையார்கள்; தாமரையிலைத் தண்ணீர்போல உலகத்தாருடன் சேர்ந்து வாழ்வார்கள்; அஞ்ஞானிகளைப்போலக் காட்டுவார்கள்; வித்துவத் திறத்தைக் காண்பியார்கள்; உள்ளத்தின்கண் நித்தியாநந்தத்தையுடைய பிரமவித்தானவர்கள் மௌனமாயு மிருப்பார்கள். எ-று.

காமமாதிகள் வந்தாலும் என்ற வும்மை அவைகள் வாரா என்பதை உணர்த்தியதாம்.

ப-ம். பிராரத்தம் அனுபவித்துத் தீரும்படியான இச்சையாதிகள் ஒருபோது ஏகதேசமாக உதிக்கினும் அவைகள் ஆத்மசுகத்தை விளக்குதற்கு வெஞ்சகமா நின்று விளக்கித் தான் உடனே நசித்தலின் "காமமாதிகள் வந்தாலுங் கணத்திற்போம்" எனவும்,

மனம் பூரணாநந்தமாகத் தெளிந்திருத்தலின் "மனத்தில் பற்றார்" எனவும், உலகருடன் மனம் ஒவ்வாமல் வாக்குங்காயமும் ஒத்திருத்தலை, "தாமரையிலைத் தண்ணீர்போற் சகத்தோடுங்கூடிவாழ்வார்" எனவும், எவரெவர் எங்ஙனம் எங்ஙனம் வஸ்து நிச்சயங்கூறினும் அந்நிச்சயங்கள் அனைத்தும் தமது சுவானுபவத்திற் கொத்தலின் அவைகளை மறுக்க அறியாத பேதையர்கள் போலக் காட்டுதலை, "பாமரரெனக் காண்பிப்பார்" எனவும், அங்ஙனம் நிச்சயித்த நிச்சயங்கள் அனைத்துந் தமது அனுபவ வியாபகத்திற்கு அங்கமாகத் தாம் அவைகளின் அங்கியாக விளங்கும் அனுபவத்தை அறிவியாதிருத்தலை, "பண்டிதத்திறமைகாட்டார்" எனவும், துரியாதீதமான மகாமௌனமாயிருத்தலை, "ஊமருமாவார்" எனவும், மனஞ்சென்ற இடமெல்லாஞ் சிதாநந்தமாக விளங்குதலை, "உள்ளத்துவகையாம்" எனவுங் கூறினார்.

இ—ம். பிரமவித்தின் அனுபவ விலாசத்தைக் கூறினதாம். (அசு)

இதுவுமது.

பேதகன் மத்தால் வந்த பிராரத்த நாநா வாகும்
ஆதலால் விவகா ரங்க ளவரவர்க் கான வாகும்
மாதவஞ் செயினுஞ் செய்வர் வாணிபஞ் செயினுஞ் செய்வர்
பூதலம் புரப்ப ரையம் புகுந்துண்பர் சீவன் முத்தர்.

இ-ள். அறிவின்மையான சஞ்சிதகன்மத்தால் உண்டான பிராரத்த கன்மம் பலவிதமாம்; ஆதலினால், விருத்திகள் அவரவர்களுக்கு நியமித்தவையாம்; பிரமவித்தானவர்கள் மகா தவத்தைச்செய்தாலுஞ் செய்வார்கள்; வியாபாரஞ் செய்தாலுஞ் செய்வார்கள்; பூமிபாலனஞ் செய்தாலுஞ் செய்வார்கள்; பிச்சைவாங்கிப் புசித்தாலும் புசிப்பார்கள். எ-று.

இ–ம். பிரமவித்து எத்தொழிலைச் செய்யினும் அவைகள் பிராரத்தகன்மமே அன்றி அவர்க்கில்லை என்பதாம். (கூo)

இதுவுமது.

சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன்
நின்றது புசிப்பார் வெய்யி னிலவாய்விண் விழுது வீழ்ந்தும்
பொன்றினசவம்வாழ்ந்தாலும்புதுமையாயொன்றும்பாரார்
நன்றுதீ தென்னுர் சாட்சி நடுவான சீவன் முத்தர்.

இ-ள். முன் நீங்கினவைகளை நினைத்து வாடார்கள்; எதிர் காலத்துவரும் பொருளை நினைத்து மகிழார்கள்; நிகழ்காலத்துள்ள பொருளைப் பிராரத்தமென்று அனுபவிப்பார்கள்; உஷ்ண கிரணமானது அமிர்தகிரணமாய் ஆகாயத்தினின்று விழுதாக இறங்கினும், மரித்த பிரேதஞ் சீவித்தாலும், அதிசயமாக ஒன்றையுங் காணுர்கள்; இது நன்றென்றுந் தீதென்றுஞ் சொல்லார்கள்; சாக்ஷியாய் மத்தியகதமாய் விளங்கிய பிரமவித்துக்கள். எ–று.

ப–ம். முன்புள்ள அறிவின்மையையும் பின்புள்ள திரிசிய உணர்வையுங் காணுது நடுநிலையாகிய பரவுணர்விற் சுகித்திருத்தலின் "சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன், நின்றது புசிப்பார்" எனவும், சகலவிசித்திரமும் தமது லீலையாகக் கருதி அவைகளில் வியப்புறு திருத்தலின் "வெய்யி னிலவாய்விண் விழுது வீழ்ந்தும் பொன்றின சவம் வாழ்ந்தாலும் புதுமையா யொன்றும் பாரார்" எனவும், சர்வமுந் தமது சித்துருவமாக விளங்குதலின் "நன்றுதீ தென்னுர்" எனவும், மத்தியகத சர்வ சாக்ஷியான தாம் அத்துவிதமாக விளங்குதலின் "சாட்சி நடுவான சீவன் முத்தர்" எனவுங் கூறினுர்.

இ–ம். பிரமவித்து மனம் அடங்கி அனுபவமாய் நிற்றலின் ஒன்றைக் கருதலும் வியப்புறுதலும் இலன் என்பதாம். இந்நான்கு

செய்யுளில் முந்தின பிரம வித்தின் இயல்பைக் கூறினதெனக் கொள்க. (கக)

அ—கை. மற்றமூவர் இயல்பு கூறல்.

பின்னைமூ வரிலி ரண்டு பேர்களுஞ் சமாதி யோகம்
தன்னையுற் றிருப்பார் தேக சஞ்சார நிமித்தந் தானுய்
உன்னுவோன் வரன்வேற்ருேரா னுணர்பவன் வரியா னுகும்
அன்னியர் தம்மாற் றன்னு லறியாதோன் வரிட்ட னுமே.

இ-ள். மற்ற மூன்றுபேர்களில் பிரமவரன் பிரமவரியான் என்னும் இரண்டு சீவன்முத்தர்களும் சமாதி ஞானத்தை அடைந்திருப்பார்கள்; தேகஞ் சஞ்சரிக்கும்பொருட்டுத் தானுய் உணவு முதலியவற்றை நினைப்பவன் பிரமவரனும்; அன்னியராகிய சீடர் முதலியயோரால் உணவு முதலியவைகளைக் கொள்ள வறிபவன் பிரமவரியானும்; பிறராலும் தன்னுலும் அவ்வுணவு முதலியவைகளைக் கொள்ள வறியாதவன் பிரமவரிட்டனும். எ-று.

பிரமவரிட்டன் சமாதியில் அதீதமானவன் எனக்கொள்க.

இ—ம். பின்னுள்ள பிரமவரன் பிரமவரியான் பிரமவரிட்டன் இவர்கள் இயல்பைக் கூறினதாம். (கஉ)

அ—கை. இந்நால்வர் பயன்களைக் கூறல்.

அரிதாகு மிவர்க ளிவ்வா றநேகரா னுலுமுத்தி
சரியாகும் பாடு பட்ட சமாதிக்குப் பலனே தென்ருல்
பெரிதான திட்ட துக்கம் பிரமவித் தனுப விப்பான்
வரியானும் வரனு மற்றை வரிட்டனுஞ் சுகமாய் வாழ்வார்.

இ-ள். திரிலோகத்திலுங் கிடைத்தற்கரிய இச்சீவன் முத்தர்கள் இவ்வண்ணம் அநந்தரானுலும், அவரடைந்த ஞானத்தில் தாரதம்மிய மின்மையால் வீடொரு தன்மைத்தாம்; வருத்தமுற்றுச்செய்த

நிஷ்டைக்குப் பிரயோசனம் யாதென்னில், பிரமவரியானும் பிரமவரனும் பிரமவரிட்டனும் நிரதி யாநந்தமாக வாழ்வார்கள்; ஏனைய அச்சமாதியில் பாடுபடாத பிரமவித்தானவன் பிராரத்தவசத்தால் நேரிடும் பெருந்துன்பங்களை அனுபவிப்பான். எ-று.

இ—ம். இச்சீவன் முத்தர்கள் பிராரத்தத்தினால் வருஞ் சுகதுக்கானுபவத்தில் தாரதம்மியராயினும் பிரமாநந்தகைவல்யப்பேற்றில் அஃதிலர் என்பதாம். (கூங)

அ—கை. பெத்தமுத்தர்களின் இயல்பு கூறல்.

பிரமஞா னிகளுங் கன்மப் பேதையர் போலே வாழ்ந்தால்
திரமுறு மஞ்ஞானம்போய்ச் செனியாத வழியேதென்னின்
பரவுமா காய மொன்றிற் பற்ருது மற்றை நாலும்
விரவின தோடுங் கூடும் விதமிரு வோரு மாவார்.

இ-ள். ஸ்வரூபஞானிகளும் கன்மிகளான அஞ்ஞானிகளைப் போலச் சீவித்திருந்தால், நிலையாகத் தோற்றிய அறியாமை நசித்து இனிப் பிறவாத மார்க்கம் யாதென்றால், வியாபித்திருக்குங் ககனமானது ஒன்றிலுந் தோயாது நிற்க, மற்றை நான்கு பூதங்களும் ஒன்றுடனொன்று கலக்கும், இவ்விதமாக ஞானி அஞ்ஞானிக ளிருவரும் ஆகுவர். எ-று.

இ—ம். ஞானி அஞ்ஞானிகளின் கிரியை ஒன்ருயினுங் கருத்து வேறு என்பதாம். (கூச)

அ—கை. சீவன் முத்தர்களின் தரிசன மகிமை சொல்லி அவர்கள் விதேக முத்தரான வழி சொல்லத் தொடங்கல்.

சீவன்முத் தரைச்சே வித்தோர் சிவனய னெடுமா லான
மூவரு மகிழ நோன்பு முழுவதுஞ் செய்து சன்ம

பாவன மாஞ ரென்று பலமறை முழங்கு மிப்பால்
மேவருஞ் சீவன் முத்தர் விதேகமுத் தியுநீ கேளாய்.

இ-ள். சீவன்முத்தர்களைத் தரிசித்தவர்கள் சிவனும் பிரமனும் திருமாலும் ஆகிய மும்மூர்த்திகளு மிக மகிழத் தவங்களனைத்து முடித்துப் பவம் பரிசுத்தமானுர்களென்று அநந்தவேதங்கள் முறையிடுகின்றன; இனி அறிதற்கரிய சீவன் முக்தர்களடையும் விதேக முத்திப் பலத்தையும் நீ கேட்பாயாக. எ-று.

சன்ம பாவனமாஞரென்பது ஞானதனுவாயினுரெனக்கொள்க.

அ—கை. கன்மத்திரய ஒழிபு கூறல்.

பஞ்சினை யூழித் தீப்போற் பலசன்ம விவித வித்தாம்
சஞ்சித மெல்லா ஞானத் தழல்சுட்டு வெண்ணீ றாக்கும்
கிஞ்சிலா காமி யந்தான் கிட்டாமல் விட்டுப் போகும்
விஞ்சின பிரார‌த் தத்தின் வினையது பவத்துத் தீரும்.

இ-ள். பஞ்சை வடவைத் தீ எரிப்பதுபோல அநந்த பவங்களுண்டாவதற்குப் பலவித விதைகளான சஞ்சிதகன்மங்கள் அனைத்தையும் ஞானுக்கினியான எரித்து வெண்மையாகிய சாம்பலாக்கும்; ஆகாமிய கன்மமானது அற்பமும் நெருங்காமல் நீங்கும்; சேடித்த பிராரத்தகன்மமானது மூன்று விதமாக அநுபவித்து நீங்கும். எ-று.

சஞ்சிதம்—சென்ற செனனங்களிற் செய்யப்பட்டு பலனனுபவிக்காமல் நின்ற கருமம். பிராரத்தம்—சென்ற சனனங்களிற்செய்யப்பட்டு வர்த்தமான சனனத்துக்கு ஏதுவாகிய கருமம். ஆகாமியம்—வர்த்தமான சனனத்திற் செய்யப்பட்டு மறு சனனத்துக்கு ஏதுவான கர்மம்.

மூவிதமான இச்சை அனிச்சை பரவிச்சை என்பனவாம். (கசு.)

அ—கை. இருவினை நீங்கும் வகை கூறல்.

பொறுமையாற்பிராரத்தத்தைப் புசிக்குநாட்செய்தகன்மம்
மறுமையிற் றொடர்ந்திடாமன் மாண்டுபோம் வழியேதென்
சிறியவ ரிகழ்ந்துஞானிசெய்தபா வத்தைக்கொள்வர் [னின்
அறிபவ ரறிந்து பூசித் தறமெலாம் பறித்துண் பாரே.

இ-ள். சாந்தத்தினுல் பிராரத்த கன்மத்தை அனுபவிக்குங் காலத்தில் சீவன் முத்தர்கள் செய்யுங் கருமங்கள் மேற்பிறவியைக் கொடுப்பதற்குத் தொடர்ந்துவாராமல் நசிக்கும் மார்க்கம் யாதென்றால், மூடர்கள் நிந்தித்து ஞானவான் செய்யும் பாவகன்மத்தைப் பெற்றுக்கொள்ளுவார்கள்; விவேகிகள் சிவசொரூபமென்றறிந்து ஆராதித்து அவர்கள் செய்யுந் தருமங்களனைத்தையும் கவர்ந்து அனுபவிப்பார்கள். எ-று. (கஎ)

அ—கை. சரீரத்திரய ஒழிபு கூறல்.

அறியமெய்ஞ் ஞானத் தீயா லவித்தையா முடனீ றாமே
பெரியதூ லமுங்கா லத்தாற் பிணமாகி விழுமந் நேரம்
உரியசூக் கும சரீர முலையிரும் புண்ட நீர்போல்
துரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தி லிறந்து போமே.

இ-ள். அரிதற்கரிய ஞானக்கினியினுல் காரண சரீரம் நசிக்கும்; பருத்த தூலசரீரமும் காலநியமப்படி பிரேதமாம்; அப்போது சாதனத்துக்குரித்தான சூக்குமதேகமானது கொல்லன் உலையிற் காய்ந்த அயமானது கிரகித்த சலத்தைப்போலத் துரியமாகவும் வியாபகமாகவும் இருந்த பிரமஸ்வரூபத்தில் நசிக்கும். எ-று.

இ—ம். சஞ்சிதவினையுங் காரண சரீரமும் பரஞானத்தினுல் கெடுதலும், ஆகாமியவினையுஞ் சூக்குமதேகமும் அந்த ஞானத்தில்

லயமாகுதலும், பிராரத்த கன்மமுந் தூலதேகமும் நியமித்த கால அளவில் நீங்குதலும் ஆம் என்பதாம். (கூஅ)

அ—கை. விதேகமுத்தியின் இயல்பு கூறல்.

கடமெனு முபாதி போனாற் ககனமொன் றானாற் போல
உடலெனு முபாதி போன வுத்தரஞ் சீவன்முத்தர்
அடிமுடி நடுவு மின்றி யகம்புற மின்றி நின்ற
படிதிகழ் விதேக முத்திப் பதமடைந் திருப்ப ரென்றும்.

இ-ள். குடமென்கிற உபாதி நீங்கினால் கடாகாய முதலிய நான்கும் ஏகமானதுபோல, மூன்று தேகமென்கிற உபாதி நீங்கின க்ஷணம் சீவன் முத்தரானவர் ஆதிமத்தியாந்த ரகிதமாய் உட்புற மின்றி எப்போது மிருந்தவண்ணம் விளங்குகின்ற விதேகமுத்திப் பதத்தைப் பெற்றிருப்பார். எ-று. (கூகூ)

அ—கை. இவ்வனுபவம் எஞ்ஞான்றும் விளங்குவது எனல்.

சொல்லிய மகனே யெங்குஞ் சூழ்வெளி யிருக்க மண்ணைக்
கல்லிய பின்பு தோன்றுங் கிணற்றினா காயம் போல
ஒல்லையாம் பிரம நூலா லுற்றது போலே தோன்றும்
எல்லையி னுமெப்போது மேகமென் றிருந்தி டாயே.

இ-ள். முன் அனுபவஞ்சொன்ன புத்திரா! எவ்விதத்தும் சூழ்ந்த ஆகாயம்இருக்கப் பூமியை அகழ்ந்தபின்பு உண்டானதுபோலத் தோற்றுகின்ற கூப ஆகாசம்போல, அநாதியாய் விளங்குகின்ற பிரமஸ்வரூபமானது ஆத்ம ஞான சாஸ்திரங்களால் உதித்தது போலத் தோன்றும்; பிரமாணாதீதமான சுத்தசைதன்னிய ஸ்வரூபமான யாம் எக்காலமும் ஒன்றே என்றிருப்பாய். எ-று.

இ—ம். இப்போது உதித்ததுபோலத் தோற்றிய அனுபவஞ் சிருட்டிக்கு முன்னும் பின்னும் நடுவுமான எப்போதும் இருந்து

நித்திய திருத்தியாக விளங்கிய சச்சிதாநந்தமேயன்றி இப்போது உதித்தது அன்றென்பதாம். (க00)

அ—கை. சத்து அசத்து இவைகளின் உண்மையைத்தெரிவித்தல்.

கானனீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர்க னூர்
வானமை கயிற்றிற் பாம்பு மலடிசேய் முயலின் கோடு
பீனமாந் தறிபு மானிப் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே
ஞானமெய் மகனே யுன்னை நம்மாணை மறந்தி டாதே.

இ-ள். கானற்சலம் போலவும், சுத்திகா ரசிதம்போலவும், கந்தர்ப்பநகரம் போலவும், சொப்பனநகரம் போலவும்; ஆகாய நீலம் போலவும், ரச்சு சர்ப்பம்போலவும், வந்தியா புத்திரன்போலவும், சச விஷானம்போலவும், பருத்தகட்டைசோரனைப்போலவும், பிரமத்தில் கற்பிதமாகத் தோற்றுகின்ற இச்சகத்து அனைத்தும் மித்தையேயாம்; சுத்தசைதன்னியம் ஒன்றே உண்மையாம்; மாணுக்கனே! இங்ஙனம் விளங்கிய உனது ஸ்வரூப சைதன்னியத்தை நமதாக்கினைப்படிக்கு மறவாமல் அதுவாய் விளங்குவாய். எ-று.

இ—ம். எப்போதுஞ் சத்தான சுகபோதம் இருக்கின்றதே அன்றி அசத்தான திரிசியங்கள் இல என்பதாம். (க0க)

தத்துவவிளக்கப்படலம்

முற்றிற்று.

இரண்டாவது

சந்தேகந்தெளிதற்படலம்.

அவதாரிகை:—முன்படலத்தில் தத்துவமாகிய ஆநந்த பிரஜ்ஞை யை நிஷ்டா பிரஜ்ஞையால் விளக்கி, இனிச்சொரூப பிரஜ்ஞை யினுல் முன்கற்பனையாகத்தோற்றிய சீவேஸ்வரசகம் சிற்சுகா காரமாக விளங்குவதை விளக்கும்பொருட்டுச் சந்தேகந்தெளி தலைக் கூறுகின்றார்.

நரர்குழி பறித்து மெள்ள நாட்டிய நெடிய கம்பம்
உரமுறக் குத்திக் குத்தி யுரப்பிக்கு முபாயம் போலப்
பரமமாஞ் சொரூபந் தன்னிற் பற்றிய மனோ விருத்தி
திரநிலை பெறச்சந் தேகந் தெளிதலை மொழிகின் றேனே.

இ-ள். மானிடர்கள் பள்ளங் கல்லி மெல்ல எடுத்து நட்ட நீண்ட ஸ்தம்பமானது அசைவின்றி ஸ்திரமாக நிற்கும்பொருட்டுக் குத்திக் குத்திப் பலப்படுத்துகின்ற யுத்தியைப்போலப் பிரமஸ்வ ரூபத்தில் பொருந்திய சித்தவிருத்தியானது ஸ்திரநிலையை அடை யும்பொருட்டுச் சந்தேகந் தெளிதலைச் சொல்லுகின்றேன். எ-று.

இத்திட்டாந்தம் தூண கநநநியாயமெனக் கொள்க. தூண= கம்பம், கநநம்=புதைத்தல், நியாயம்=திருஷ்டாந்தம்.

ப-ம். தானல்லாத விஷயங்களை நீக்கித் தானாகிய பிரமத்திற் கலந்த மனம் அப்பிரமவியாபகமான பூரணவிருத்தியில் சஞ்சரிக்கு மிடத்தில் சர்வம் பிரமமயம் என்னுஞ் சாக்ஷாத்காரானுபவந் தடை யின்றி விளங்குவதே விவகரித்தும் விவகரியாத நிலையாதலின்,

அதற்குத் தடையாய் உள்ளவைகளைக் களைதல் வேண்டுமென்பார் "சொரூபந் தன்னிற்பற்றிய மனோவிருத்தித் திரளிலைபெறச் சந்தேகந்தெளிதல்."

இ—ம். சித்தினிடத்து உதயமாய்ப் பகிர்முகம் இன்றி அச்சித்தில் கரைந்த மனமானது சென்ற இடமெல்லாம் சிதாநந்தமாக ரமிக்கும்பொருட்டுச் சந்தேகந்தெளிதலைக் கூறத்தொடங்கினதாம்.

அ—கை. குரு குலவாசஞ் செய்யும் தன்மையைக் கூறல்.

நற்கருத் துடையோ னாகி ஞானவா னாகி நின்றோன்
மர்க்கட நியாயம் போல மகாபூத விகாரந்தொட்டு
நிற்குண விதேக முத்தி நிலைபரி யந்தஞ் சொன்ன
சற்குரு வினைவி டாமற் சந்தத மனுசரித் தான்.

இ-ள். பேராநந்தமான சிந்தையை யுடையவனாய்ச் சைதன்னிய ஸ்வரூபியாகி இருந்த சீடனானவன் மர்க்கட நியாயத்தைப் போலப் பஞ்சபூதகாரியமான தூலதேகமுதல் திரிகுண ரகிதமான விதே ககைவல்யமட்டும் அருளிய ஆசாரியரை விட்டு நீங்காமல் சதாகாலமுந் தொடர்ந்து நின்றான். எ—று.

மர்க்கடநியாயம்=குரங்கின்குட்டி தன் தாய்க்குரங்கு எங்கே தாவினும், தான் அதனை விடாதுபற்றி நிற்றல். மார்ச்சால நியாயம்=தாய்ப்பூனை தன் குட்டிகள் கிடக்குமிடந்தேடிக் காப்பாற்றுதல்.

இ—ம். வெளிப்படை. (உ)

அ—கை. ஆசிரியர் சீடனை அனுபவம் வினாதல்.

சந்ததம் புருடன் றன்னைச் சாயைபோல் விடாம லன்பாய்
மைந்தனை நோக்கிச் சாக்ஷி மாத்திர மாய்நின் றோயோ

சிந்தையி லையமெல் லாந் தீர்ந்தவோ தெளிவி னுள்ளே
அந்தரங் கலந்த துண்டோ வனுபவ முரைசெய் வாயே.

இ-ள். எப்பொழுதும் ஓர்புருடனைவிட்டு நீங்காத சாயையைபோல ஆசாரியரைவிட்டு நீங்காமல் அன்புருவமாய்நிற்கின்ற சீடனே அருட்கண்சாத்திப் பிரத்யேகாத்ம ஸ்வரூபமாக நிற்கின்றாயா? மனத்தின் கணுள்ள சமுசயங்க ளனைத்தும் நீங்கினவோ? தெளிவின்கண் சீவேஸ்வர சகத்பேதம் சேர்ந்ததுமுளதோ? உனதனுபவத்தைச் சொல்வாய். எ-று.

இ-ம். பேதமின்றித் தெளிவாகச் சுவானுபவமாய் விளங்குகின்றாயா? என மூவகையாக வினவினதாம். (ரு)

அ-கை. முன்வினு மூன்றற்கும் விடைகூறல்.

எனவுரைத் தருளு மாசா னிருபதம் வணங்கி யெந்தாய்
சனனவன் காட்டின் மோகத் தமத்தெழு பேதப் பேய்கள்
உனதரு ளுதய வெற்பி லுபதேச வருக்கன் றோன்றி
மனவிழி தெரிய ஞான வான்கதிர் பரந்தா லுண்டோ.

இ-ள். என்று கேட்டருளிய தேசிகருடைய உபயபாதங்களைப் பணிந்து, என்னுடைய பிதாவே! வலிமையாகிய சனனஆரண்யத்திலிருக்கும் அஞ்ஞானமாகிய இருளில்தோன்றுகின்ற பேதங்களென்னும் பிசாசங்கள், தேவரீது கருணை என்னும் உதயகிரியில், பிரமோபதேசம் என்னும் சூரியனுதித்து, அகக்கண்விளங்க மேலான சிற்பிரகாசமானது வியாபித்தால் இருக்குமோ. எ-று.

ப-ம். சாக்ஷிமாத்திரமாய் விளங்குகின்றது என்பார். "உபதேசவருக்கன்றோன்றி" எனவும், சிந்தையில் ஐயமெல்லாந் தீர்த்ததென்பார். "மனவிழிதெரிய" எனவும், அந்தரமானபேதம் உதிக்க

வில்லை என்பார், "ஞானவான்கதிர் பரந்தாலுண்டோ" எனவுங் கூறினர்.

இ—ம். தனது அனுபவத்தில் சந்தேக விபரீதம் இன்றென்பதை அறிவித்ததாம். (ச)

அ—கை. சமாதியில் தடை இன்றுயினும் சகசத்தில் அவையின்றி நிற்பதற்கு வினவ வேண்டுவது உண்டெனல்.

மந்திர மூர்த்தி தன்னுன் மாற்றிய பேய்போ னுலும்
எந்திர மெழுதிக் கட்டி யினிவரா வகைசெய் வார்போல்
முந்தியுன் னுபதேசத் தான் மோகம்போ னுலு மையா
புந்திநின் றுரைக்க வின்னும் புகலும்விண் ணப்ப முண்டே.

இ-ள். எனதாசிரியரே! மாந்திரிகனுல் நீக்கப்பட்ட பிசாசமானது நீங்கினுலும், எந்திர ஸ்தாபனஞ்செய்து மேல்வாராத வண்ணஞ் செய்பவர்களைப்போல, முன்னமே தேவரீரனுக்கிரகத்தினுல் மயக்கம் நீங்கினுலும், அறிவு நிலைபெறும்பொருட்டு மேலும் அடியேன் கேட்கும் விண்ணப்பமுளது. எ-று.

இ—ம். சகசத்துக்குத் தடையாயுள்ள சந்தேகங்களை நீக்கும் பொருட்டு வினவத் தொடங்கினதாம். (ரு)

அ—கை. சீடன் தனக்கு அனுபவமான பிரமவஸ்து மனேவாக்குகளுக்கு அகோசரமா? கோசரமா? என அறியும் நிமித்தமும் அங்ஙனமுங் கூறும் சுருதி வாக்கியத்தை இரண்டு சங்கையாக வினுதல்.

ஆகமப் பிரமா ணத்தா லறியென்றும் வாக்குக் கெட்டா
தேகமாம் பிரம மென்று மிதயத்தா லுணர்வா யென்றும்
சோகமா மனத்திற் கெட்டாச் சுயஞ்சோதியென்றுஞ் சொ
மோகமா மிரண்டு சங்கை முளைத்தன பறித்திடீரே. [ன்னீர்

இ-ள். அத்துவிதப் பிரமத்தை வேதமுடிவான மகாவாக்கியப் பிரமாணத்தினுல் அறிவாய் எனவும், இவ்வேத வாக்கியத்துக் கெட்டமாட்டாது எனவும், இச்சுயம்பிரகாசத்தைமனதினுலறிவாய் எனவும், துன்பமான மனத்திற்கு அறிதற் கரியது எனவும் அருளினீர்; மயக்கமாகிய இரண்டு சங்கைகள் உளவாயின, அவைகளைக் களைந்திடீர். எ-று.

பிரமவஸ்து மனோவாக்குக்களுக்கு அகோசரமுங் கோசரமும் ஆம் என வேதங் கூறினதை ஆசிரியர் கூறினதாகக்கொண்டு வினவினது என்க.

இ—ம். வெளிப்படை. (௬)

அ—கை. முதற்சங்கையில் பிரமம் சுருதிக்கு அகோசரமாம் என்றதற்கு உத்தரங் கூறல்.

மற்றைமுப் பிரமா ணத்தால் வஸ்துநிர் ணயங்கூ டாதே
உற்றதோர் விடயம் பூத முபய மன் றாத லாலே
குற்றமாங் குணவி சேடங் கூடாம லிருக்கை யாலே
இற்றது வாக்குக் கெட்டா தென்பதை யறிவாய் நீயே.

இ-ள். பரப்பிரமமானது, பஞ்சேந்திரியங்களுக்கு விஷயமான சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் ஆகிய ஐந்தும், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களும், உபமான வுபமேயங்களாகிய இரண்டும், அன்று ஆகலான் பிரத்தியக்ஷம், அநுமானம், உபமானம் என்னும் மூன்றுபிரமாணங்களாலும் பிரமசொரூப நிச்சயஞ்செய்தல் கூடாது இத்தன்மைத்தான பரப்பிரமம், குற்றமுள்ள குண விசேஷங்களைப் பொருந்தாமல் இருத்தலாலே, சத்தரூபமாகிய வேதத்துக் கெட்டாது என்று நீ அறியக்கடவாய். எ-று.

இ—ம். பிரமம் அகோசரம் என்பதை உறுதிப்படுத்தும் நிமித்தம் ஆகம முதலிய நான்கு பிரமாணங்களினாலும் அறியக்கூடாதது என அறிவித்ததாம். (எ)

அ—கை. அச்சங்கையில் பிரமம் சுருதிக்குக் கோசரமாம் என்றதற்கு உத்தரம்.

வாக்கியந் தனக்கெட் டாத வஸ்துவென் றுரைத்த வேதம்
வாக்கிய விருத்தி யாலவ் வஸ்துவைக் காட்டிற் றன்றோ
வாக்கியங் களிலே மான மாவதே தென்று யாகில்
வாக்கிய மிரண்டு மெய்யே மறைகள்பொய் யாநீ கேளாய்.

இ-ள். வாக்குக்கு எட்டாத பொருளென்று சொன்ன வேதமானது மகாவாக்கிய விசாரத்தால் அப்பிரமப்பொருளைக் காட்டியது; இவ்விரண்டு வாக்கியங்களில் பிரமாணமாவது யாது? என்று கேட்பாயாகில், இவ்விரண்டு வாக்கியமும் உண்மையே; வேதங்கள் அசத்தியம் உரையா, ஆகையால் அதை நீ கேட்பாய். எ-று.

அன்றோ என்பது அசை.

இ—ம். வெளிப்படை. (அ)

அ—கை. பிரமம் சுருதி வாக்கியங்களுக்கு அகோசரமும் கோசரமும் ஆமெனக் கூறுதல்.

தன்பதி யல்லாப் பேர்க டமையல்ல னல்ல னென்றாள்
அன்பனைக் கேட்ட நேர மவள்வெட்கி மௌன மானாள்
என்பது போல நீக்கி யிதன்றிதன் றெனச்சே டித்த
பின்பரப் பிரமந் தன்னைப் பேசாமற் பேசும் வேதம்.

இ-ள். தன் நாயகன் அல்லாதவர்களை இவன் அல்லன் இவன் அல்லன் எனக் கூறின தலைவி, நாயகனைக் காட்டிக் கேட்டபோது அத்தலைவியானவள் வெட்கமுற்றுப் பேசாதிருந்தாள் என்பது

போல, இது அன்று இது அன்று தள்ளிப் பின்பு சேஷித்துநின்ற பரப்பிரம வஸ்துவை வேதமானது சொல்லாமற் சொல்லும். எ-று.

இ-ம். சுருதி சத்து ரூபத்தால் அறிவிக்காமல் அருத்தரூபத்தால் அறிவிக்கும் என்பதாம். (கூ)

அ-கை. இரண்டாஞ் சங்கையில் பிரமம் மனத்திற் கெட்டும் எட்டாது என்பதற்கு உத்தரங்கூறுவான்தொடங்கி மனோற்பத்தியின் காரணங் கூறுகின்றார்.

முந்திய சங்கை தீர மொழிந்ததை யறிந்து கொள்வாய்
பிந்திய சங்கை தீரப் பேசுமுத் தரநீ கேளாய்
இந்தியங் களுக் கிராச னிதயமா மதினெண் ணங்கள்
புந்தியு மனமு மென்றே புறத்தகத் துலாவி யாடும்.

இ-ள். முதற்சங்கை தீரும்படி சொன்னதைத் தெரிந்துகொள்வாயாக; இரண்டாஞ்சங்கை தீரும்படிசொல்லும் உத்தரத்தையும் நீ கேட்பாய்; மன முதலிய இந்திரியங்களுக்குத் தலைவன் ஞானமாம்; அதின் நினைவுகள் புத்தி எனவும் மனம் எனவும் புறம்பிலும் உள்ளிலும் சஞ்சரிக்கும். எ-று.

இ-ம். ஞானஸ்மரணமே மனமும் புத்தியுமாம் என்பதாம்.

இதுவுமது.

உன்முகம்போற் கண்ணாடிக்குள் ளொருமுகங்கண்டாற்போ
சின்மய வடிவின் சாயை சித்துப்போற் புத்திதோன்றும் [ல்
நின்மல விருத்தி யந்த நிழல்வழி யாயு லாவும்
தன்மநன் மகனே யித்தைத் தானன்றோ ஞான மென்பார்.

இ-ள். தர்மவடிவாகிய சற்புத்திரா! உன்னுடைய முகம்போல எதிரிட்ட கண்ணாடிக்குள்ளே ஓர் முகங் கண்டதுபோலச் சைதன்

ணிய ஸ்வரூபச் சாயையே அறிவைப்போலப் புத்தியில் பிரதிபலிக்கும்; நின்மல விருத்தியானது அச்சாயையின் மார்க்கமாகச் சஞ்சரிக்கும், இவ்விருத்தியை அன்றோ அறிவென்றுசத்துக்கள்சொல்லுவார்கள். எ-று.

ப—ம். அந்தக்கரணப் பிரதிபலனம் சிதாபாசனென்பார், "சித்துப்போற் புத்தி தோன்றும்" எனவும், புத்தியில் தங்குஞ் சிற்சாயையே விருத்தி யென்பார், "நின்மல விருத்தி" எனவும், அவ்விருத்தி சிதாபாசனுக்கு இடமாக விளங்குமென்பார் "அந்த நிழல்வழியா யுலாவும்" எனவும், லோகாந்த குந்தம்போலச் சிதாபாசாந்த விருத்தியே ஞானமென்பார், "இதைத்தானன்றோ ஞான மென்பார்" எனவுங் கூறினார்.

இ—ம். விருத்திஞானமும் சிதாபாசனும் இத்தன்மையவெனக் கூறின தாம். (கக)

இதுவுமது.

உருக்கிய தராநீர் நாநா வுருவங்க ளானாற் போல
விருத்திகள் கடப டாதி விடயமாய்ப் பரிண மிக்கும்
அருப்பல விடய மெல்லா மாபாசன் றோற்று விக்கும்
இருட்டினில்விளக்குங்கண் ணுமில்லாமற்பொருள்காணாதே.

இ-ள். குகையில்வைத்துருக்கிய தராநீரானது பலவடிவமானது போல, அந்தக்கரண விருத்திகளானவை கடபட்முதலிய ஆகாரங்களாக வேறுபடும்; விடயங்களனைத்தையும் அரும்பலமென்னப்பட்ட சிதாபாசன் தெரிவிக்கும்; தீபமும் விழியும் இன்றி இருளிலிருக்கும் வஸ்து தெரியமாட்டாது. எ-று.

இ—ம். சிற்சாயையே சகத்தாகத் தோற்றுதலின், "விருத்தியே கடபடாதி விடயமாய்ப் பரிணமிக்கும்" என்றார். (கஉ

இதுவுமது.

எரிகின்ற விளக்காற் கண்ணு லிருட்பொருள் காண வேண்டும், தெரிகின்ற பரிதி காணச் சென்றிடிற் கண்ணே போதும், விரிகின்ற சகத்தைக் காண விருத்தியும் பலமும் வேண்டும், புரிகின்ற விருத்தி யொன்றே போதுமெய்ப் பொருள்காண் போர்க்கே.

இ-ள். பிரகாசிக்கின்ற தீபத்தினுலும் விழியினுலும் இருட்டின்கண் உள்ள வஸ்துவைப் பார்க்கவேண்டும்; தெரியாநின்ற சூரியனைப் பார்க்கச் சென்ருல் நேத்திரமொன்றுமே போதும்; அவைபோலப் பரந்த உலகத்தைப்பார்க்க விருத்தியும் பலமும் வேண்டும்; உண்மையான பிரமவஸ்துவைத் தரிசிப்பவர்களுக்கு முன்சொல்லிய விருத்தி யொன்றுமே போதும். எ-று.

ப-ம். விஷயாஞ்ஞானத்தைப் போக்குதற்கு விருத்தி ஞானமும், அதை அறிதற்குப் பலரூபமான சிதாபாசனும் வேண்டுமென்பார், "சகத்தைக்காண விருத்தியும் பலமும் வேண்டும்" ஆத்மாவைத் தரிசித்தற்கு விசாரரூபமான விருத்திஞானம் வேண்டுமென்பார், "விருத்தியொன்றே போதுமெய்ப்பொருள் காண்போர்க்கு" எனவுங் கூறினர்.

இ-ம். லோகாந்த குந்தம்போல ஆதாரமான விருத்தி ஞானமும் ஆதேயமான சிதாபாசனுமாகிய இவ்விரண்டி னிலக்கணமுங் கூறியதாம். (கரு)

அ-கை. மனத்தின் உருவங் கூறல்.

விருத்தியும் பலமுங் கூடும் விகாரமே மனமென் பார்கள்
கருத்தெழும்விருத்திவேண்டுங் கணக்கினுன் மனத்திற்கெட்
இருத்திய பலமாமிந்த மனத்திற்கெட் டாது கண்டாய்[டும்
அருத்தமிப் படியென் றைய மகன்றுநீ தெளிந்தி டாயே.

இ-ள். விருத்தியும் பலமுஞ் சேர்ந்த விகார ரூபமே மனம் என்று சத்துக்கள் சொல்லுவார்கள்; பகுத்தறியும் நினைவில் உண்டாகும் விசார ஞானமானது சித்தை அறிதற்கு ஒருதலையாக வேண்டுதலின், அவ்விருத்தி ரூபமான மனத்திற்குச் சித்து எட்டும்; வருத்துகின்ற விடயத்தை அறியும் பலரூபமான இம்மனத்திற்குச் சித்து எட்டாது, முன் சொல்லிய இரண்டுக்கும் பொருள் இவ்வண்ண மென்றறிந்து சந்தேக நீங்கி நீ தெளியக்கடவாய். எ-று.

சித்து சம்பந்தஞானம்விருத்தியும், சடசம்பந்த ஞானம்பலமும் எனக்கொள்க.

ப-ம். சிற்சடரூபமனம் என்பார், "விருத்தியும் பலமுங்கூடும் விகாரமே மனம்" எனவும், சித்தம் சமான விருத்தியினால் சித்தை அறியலாமென்பார், "விருத்திவேண்டுங் கணக்கினான் மனதிற் கெட்டும்" எனவும், சடாம்சமான மனத்தினாற் சித்தை யறியக்கூடாதென்பார், "பலமா மிந்த மனத்திற் கெட்டாது" எனவுங் கூறினார்.

இ-ம். அகமுகமுள்ள மனதிற்கு பிரமம் அறியப்படும் எனவும், பகிர்முகமுள்ள மனதிற்கு அறியப்படாதெனவுந் தெரிவித்ததாம்.

அ-கை. முற்கூறிய கடாவிடைகளால் கோசராகோசரம் இன்றி, சுத்தப் பிரமமான சுவானுபூதியே தானென் றறிந்து அதில் உதிக்கு மனதை அதிற் கரைக்கும் பொருட்டு ஒரு சங்கை வினாதல்.

வஞ்சகமில் பரமார்த்த குருவேசொன்ன வழிகளறிந் தேனினியோர் வசனங்கேளீர், சஞ்சலமற் றகண்ட பூரணமாய்ச்சித்தந் ததாகார மாவதன்றோ சமாதி யோகம்; உஞ்சலையொத் தலைவதுதன் சுபாவமாகி யொருகணத்திற் பல

வுலகாவுதிக்குமிந்த, நெஞ்சகம்வஸ் துவிலசையா நிவாததீப நிலேபடைவ தெப்படியோ நீர்சொல்வீரே.

இ-ள். வஞ்சனை யின்றி யதார்த்தமாக விளங்கிய ஆசாரியரே! தேவரீ ரனுக்கிரகித்த மார்க்கங்களேத் தெரிந்துக் கொண்டேன்; இன்னுமொரு விண்ணப்பங் கேட்கவேண்டும்; மனமானது சலன மின்றி அகண்டபரிபூரண ஸ்வரூபமாய்த் தன்மயமாவதன்றே நிஷ்டையி லுதிக்கு ஞானம்? ஊசலேப்போலச் சஞ்சலப்படுவது தன தியல்பாய் ஒரு க்ஷணத்தில் நாநாவுலகமாய்த் தோன்றுகின்ற இந்த மனம் பிரமத்தில் சலனமின்றிக் காற்றில்லாத விளக்கைப்போல நிலேபெறுவது எவ்வண்ணம்? தேவரீரருள்செய்வீராக. எ-று.

இ-ம். வெளிப்படை. (கரு)

அ-கை. மனத்தின் முக்குணமும் அவைகளால் உண்டாகும் பயனுங் கூறல்.

கருதுமனே குணமூன்ரு மூன்றிலொன்று கதித்தெழுந்தான் மற்றிரண்டுங் கரந்துநிற்கும், த்ருமமிகு சத்துவமேலானபோது சன்மார்க்க மானதெய்வ சம்பத் துண்டாம், மருவுமிரா சதமாகி லுலகதேக வாதனையாஞ் சாத்திரவாதனையுமாகும், அருமகனே தாமதமே லானபோதி லசுரசம்பத்துண்டாகு மறிந்துகொள்ளே.

இ-ள். நினைக்கின்ற மனத்திற்குத் திரிகுணமாம்; அம்மூன்று குணங்களில் ஒன்று மிகுந்தெழுமாயின் மற்ற இரண்டுகுணங்களும் மறைந்திருக்கும்; சற்கருமத்திற் கேதுவாகிய உயர்ந்த சத்துவகுணமானதுமிகுந்தபோது சன்மார்க்கமாகியதெய்வசம்பத்துண்டாகும்;

பொருந்திய ரசோகுண மிகுமாயின் லோகவாதனையும் தேகவாதனையும் சாஸ்திர வாதனையும் உண்டாகும்; தமோகுண மிகுந்தபோதில் அசுரச் செல்வமுண்டாகும்; தெரிந்துகொள்வாயாக. எ-று. ()

அ—கை. சித்தம் சமானசத்துவஞ் சேடிக்கின் மனஞ்சித்தில் அசைவின்றி நிற்கும் எனல்.

மனதுசத் துவசொரூப மற்றிரண்டும்வந்து கலந்தனவற்றைமாற்றி னாற்போம், தனதுசன் மார்க்கம்விடா திருந்தபோது தாமதமு மிராசதமுஞ் சமிக்கும் பின்னைக், கனபரிணமஞ்சலனம் போம்போனக்காற் களங்கமற்று நின்றவாகாயம்போலும், நினதுளமப் படியாமப் பிரமத்தொன்றாய் நிருவிகற்ப சமாதியிலே நிற்குந்தானே.

இ-ள். மனமானது சத்துவ வடிவமாம்; மற்ற ரசோ தமோ குணங்களாகிய இரண்டும் வந்து சேர்ந்தவைகளாம்; அவ்விரண்டு குணங்களையும் நீக்கிடின் நீங்கும்; தனது சன்மார்க்கமான சத்துவ குணத்தை விடாமலிருந்தபோது தமோகுணமும் ரசோகுணமு நசிக்கும்; பின்பு கனமான திரிசியமாதலும் அதிற் சலன மடைதலும் நீங்கும்; அவை நீங்கினல் நிர்மலமாயிருந்த ஆகாயத்தைப்போலும் உன் மனமானது அவ்வண்ணமாம்; அப்பிரம ஸ்வரூபத்தில் ஏகமாய் நிருவிகற்ப சமாதியிலே நிலைபெற்றிருக்கும். எ-று. (கள)

இதுவுமது.

களங்கமற்ற கண்ணாடி தன்முன்வேறோர் களங்கமற்ற கண்ணாடி காட்டும்போது, விளங்கியதன்மயமாகி யபேதமாகிவிகற்பமின்றி நிருவிகற்ப மானாற்போல, அளந்தறியப்

படாவிபுவாய்ச் சத்தாய்ச்சித்தா யாநந்தமாம்பிரமத் தைக்கிபமான, உளந்தெளிந்த படியிருந்தா லுலகமெங்கே யுலெவெங்கே யென்றுசங்கை யொழித்திடாயே.

இ-ள். நிர்மலமாகிய கண்ணுடிமுன் மற்ருெரு நிர்மலமாகிய கண்ணுடியைக் காண்பிக்கும்போது பிரகாசியாநின்ற தனது ஸ்வரூபமாய்ப்பேதமிறந்ததாகி வேறுபாடின்று ஒன்ருனதுபோல, அளவிட்டறியக்கூடாத வியாபகமாகியும் சத்தாகியும் சித்தாகியும்ஆநந்தமாகியும் விளங்குகின்ற பிரமஸ்வரூபத்தில் கரைந்த மனமானது பிரமமாகத் தெளிந்தவண்ணம் விளங்கிநின்ருல் திரிஸ்யமான சகத்து இன்று; அதைப்பற்றிய சஞ்சலம் இன்று என்று சங்கையை நீக்குவாய். எ-று.

இ–ம். சித்தம் சமானமனஞ் சித்தாகவே விளங்கின் சகமாதலும் அதிற் சலனம் அடைதலும் அதற்கு இன்றெென அறிவித்ததாம். (கஅ)

அ–கை. முற்கூறிய உத்தரத்திஞல் சித்தம் சமானமனஞ் சித்தே ஆயிற்று என அறிந்து, மேற் சடாம்சமான மனமும் அதன் தொழிலும் எவ்விதமாயினவென்பதை அறியும்நிமித்தம் மனஞ் சித்தில் இறக்கில் சீவன்முத்தர் எங்ஙனஞ்சஞ்சரிப்பாரெனல்.

ஏகமாய் மனமிறந்தாற் சீவன்முத்த ரிருக்குமட்டும் பிராரத்த மெதிஞலுண்பார், போகமா னதுபுசித்துத் தொலைப்பதன்ருே புசித்தாலு மனந்தானும் போனதன்றே, சோகமா மனமிறந்தாற் போகமில்லை தோன்றுமெனின் முத்தரென்று சொலக்கூடாதே, மோகமா மிதுதெளியக் குருவேநன்ருய் மொழிந்தருள வேண்டுமென்ருன் முழுதுமானேன்.

இ-ள். ஆசாரியரே! பிரமஸ்வரூபமாகி மனம் நசிக்கின் சீவன் முத்தர்கள் இருக்குமளவும் பிராரத்த கன்மங்களை யாதினாலனுப விப்பார்கள்? போகங்களை அனுபவித்து நீக்கவேண்டுமென்றோ? அனு பவிக்கின் மனமிறந்ததன்றே? துன்பமாகிய மனமிறக்கின் போகா னுபவமில்லை; மனமுதிக்குமாயின் சீவன் முத்தரென்று உரைத்தல் கூடாதே; மயக்கமான இச்சங்கை தெளியுமாறு யாவுமான சீடன் தெளிவாகச் சொல்லவேண்டுமென்று கேட்டான். எ-று.

இ-ம். வெளிப்படை. (௧௧)

அ-கை. அச்சங்கைக்கு உத்தரங் கூறுவான் தொடங்கி மனோ நாசம் இருவிதமாகக் கூறுகின்றார்.

மனநாசஞ் சொரூபமென்று மரூபமென்றும் வகுத்து ரைப்பா ரிருவகையாய்வருமிவற்றில், வினவாத சீவன்முத்த ரிடத்திலொன்றும் விதேகமுத்த ரிடத்திலொன்று மேவு மைந்தா, தனதான சத்துவமாய் மனஞ்சேடித்துத் தாம தம்ரா சதநசித்தல் சொரூபநாசம், அனகாசத் துவந்தானு மிலிங்கதேக மடங்கும்போ தடங்குவதே யரூபநாசம்.

இ-ள். மாணாக்கனே! மனோ நாசமானது உருவநாசமெனவும் அருவநாசமெனவும் வகுத்துச்சொல்வார்கள்; இரண்டுவிதமாகவரு கின்றவைகளில் சங்கையறத் தெளிந்த சீவன் முத்தர்களிடத்து உருவநாசமென்றும், விதேக முத்தர்களிடத்தில் அருவநாசமொன் றும், உண்டாகும்; தனது சுபாவமான சத்துவகுணமாக மனம் சேஷித்து, தமோ ரசோகுணங்கள் தாமே நசிக்கும், அப்படி நசித் தலே உருவ நாசமாம்; அச்சத்துவகுணமும் சூக்கும சரீர நசிக்கும் போது ஒக்க நசிக்கும், அப்படி நசித்தலே அருவநாசமாம். எ-று.

இ—ம். மனம் உருவநாசமாயின் சீவன் முத்தியும், அருவநாச மாயின் விதேகமுத்தியும் ஆமெனக் கூறினதாம்.　　　(உ0)

அ—கை. உருவம் இன்றி யருவமாய் அறிவுருவமான மனதிஞல் யாவும் அனுபவிக்கலாம் எனல்.

சுத்தமாம் சத்துவமே யுண்மையாகுந் துகளிருள்போ
ஞன்மனமென் சொல்லும் போம்போம், வர்த்தமானத்தில்
வந்தவுணவையுண்பார் வருவதும்போ வதுநினைந்துமகிழார்
வாடார், கத்தரா மகந்தையைவிட் டகர்த்தராகிக் கரண
விருத்திகளவத்தை காண்பாராகி, முத்தராயிருக்கலுமாம்
புசிப்புங்கூடு முட்டிலையென் றறிந்துசங்கை மோசிப்பாயே.

இ-ள். களங்கமற்ற சத்துவகுணமே தத்துவமாம்;ரசோதமோ குணங்கள் நீங்கிஞல் மனம் என்று உரைப்பது நீங்கும்; நிகழ்காலத் தில் கிடைத்த உண்டியைப் புசிப்பார்கள்; எதிர்காலத்துவரும் பொ ருளையும் கருதி மகிழார்கள்; செல்காலத்தில் போனபொருளையும் கருதி வாடார்கள்; யான் எனது என்னு மகந்தயை நீக்கி, அகர்த் தராய் அந்தக்கரண விருத்திகளையும் அவஸ்தாத் திரயங்களையும் பார்ப்பவர்களாகிச் சீவன்முத்தருமாயிருக்கலுமாம்;எல்லாவற்றையு மனுபவிக்கவுங் கூடும்; தடையில்லை யென்றறிந்து சங்கையை நீக்கு வாய். எ-று.

இ—ம். சத்துவமான மனதிஞல் எவற்றைப் புசிக்கினும் அவை களால் வருஞ் சுகதுக்கம் இவர்க்கில்லை என்பதாம்.　　　(உக)

அ—கை. மனஞ் சத்துவமாகவிவகரிக்கின் சமாதி எங்ஙனங்கூடும் என்ற விஞவிற்கு உத்தரம்.

விவகார வேளையெலாஞ் சமாதியென்றால் விகற்பமன்றோ மனமலைந்து விடாதோவிட்டால், அவதான நழுவுமன்றோ வென்றுயாகி லதற்கொருதிட் டாந்தங்கே ளாசைகொண்டு, நவமாகப் பரபுருடன் றன்னைக்கூடி நயந்துசுக மனுபவித்த நாரிநெஞ்சம், தவமான மனைத்தொழில்கள் செய்யும்போதுந் தழுவியனு பவித்தசுகந் தனைவிடாதே.

இ-ள். விவகரிக்குங் காலங்களனைத்தும் சமாதி என்றுசொன்னால் அவ்விவகாரந் திரிசிய வேறுபாட்டைத் தோற்றுவிக்கும் அன்றோ? அங்ஙனம் ஆயின் மனஞ் சஞ்சலத்தை அடையாதோ? அங்ஙனஞ் சஞ்சலத்தையடையுமாயின் ஞானநழுவுமன்றோ? என்றுகேட்பாயாகில், அத்தாட்டாந்தத்திற்கு யாம் ஒரு திட்டாந்தஞ் சொல்லுவோங் கேட்பாய்: காமமுற்று நூதனமான சோரபுருடனை இன்புற்றுப் புணர்ந்து விடயாநந்தத்தை அனுபவித்த பெண்ணின் மனமானது தவத்துக்குரிய இல்வாழ்க்கைக்குத்தக்கசெயல்களைச்செய்யுங் காலத்தும் முன் கூடியனுபவித்த விடயாநந்தத்தை நீங்காது. எ-று.

நெஞ்சஞ் சுகந்தனை விடாதென்பதைச் சுகம் நெஞ்சந்தனை விடாதெனப் பொருள் கொள்க, மனதை விழுங்குவது சுகமாதலின்.

இ—ம். விவகாரங்களைச் சத்துவத்தின் உதயமான சுகபோதம் விழுங்கிக் கோடலின் அவ்விவகாரஞ் சமாதியே ஆம் என்பதாம்.()

அ—கை. விவகாரங்களில் அகம்பாவம் நீங்குதற்பொருட்டுச் சிற்சுகமான சீவன்முத்தரது சத்துவமான மனதிற்கு அகங் கூடுமோ? என்ற வினாவிற்கு உத்தரமாக விரதத்திரயங்கூறல்.

தேகத்தனலனுகி யகர்த்தனுகிச் சீவனின்றிப் பிரமமாய்த் தெளிந்தமுத்தன், போகத்தை யுண்பனென்ருற் கர்த்தாவாமே பூரணமா மகர்த்தனுக்குப் போகமுண்டோ, சோகத்தை யறுத்தருளுங் குருவேயிந்தத் துகளறுக்க வேண்டுமென்று சொன்னுயாகில், மாகர்த்தன் மாபோகி மாத்தியாகி வகைமூன்ரு யவரிருக்கு மகிமை கேளாய்.

இ-ள். துன்பத்தைக் கெடுத்து இன்பத்தைக் கொடுக்கின்ற ஆசாரியரே! உடலை நான் என்பதல்லாதவனுய் அகர்த்தாவாய்ச் சீவேஸ்வரத்துவம் இல்லாமல் கூடஸ்த பிரம ஐக்கியமாகித் தெளிந்த சீவன்முத்தனவன் விடயபோகங்களைப் புசிப்பானென்ருல் யான் என்பவனுமே பரிபூரணமான அதர்த்தாவுக்கு விடயபோகமுளவோ! இக்குற்றத்தை நீக்க வேண்டுமென்று கேட்பாயாகில், மாகர்த்தனும் மாபோகியும் மாத்தியாகியும் ஆகிய மூன்று விதமாக அச்சீவன்முத்தர்கள் இருக்கின்ற பெருமையைக் கேட்பாய். எ-று.

இ—ம். கர்த்தத்துவம் இன்றி அகர்த்தத்துவமான சீவன் முத்தருக்குப் போகங் கூடுந்தன்மை எங்ஙனம் என்ற வினுவிற்கு உத்தரங் கூறத்தொடங்கினதாம். (உரு)

அ—கை. மாகர்த்தன் இலக்கணங் கூறல்.

செய்கையுஞ் செய்விக்கையுமற் றிருக்குங் காந்தச்சிலைமலைமுன் னிரும்புகள்சேட் டிக்குமாபோல், செய்கையுஞ் செய்விக்கையுமற் றிருக்குமென்முன் சடமான வுலகமெல்லாஞ் சேட்டைசெய்யும், மெய்கலந்த விந்திரிய விகாரரூப விவகார விருத்திக்கு விருத்திதானும், மெய்கலந்தசமாதிக்

குஞ் சாக்ஷியேநான் வெயில்போலென் றுரைத்தவனே விபு மாகர்த்தன்.

இ-ள். தொழில் செய்தலும் தொழில் செய்வித்தலும் இல்லாதிருக்கின்ற காந்தக்கல்லின்முன் இரும்புகள் அசையுமாறுபோலப் பிரேரகப் பிரேரியங்கள் இல்லாதிருக்கின்ற என்முன் சடமாய் உள்ள சகங்கள் அனைத்தும் அசைந்துகொண்டிருக்கும்; தேகத்திற் சேர்ந்த ஞானேந்திரிய கன்மேந்திரிய பேதரூபங்களான பிரேரகம் பிரேரியமான விருத்திகளுக்கும் அவ்விருத்திகள் அடங்கித்தன்மயமான உண்மை கலந்திருக்கும் ஸ்வரூபசமாதிக்கும் சூரிய கிரணத்தைப்போலச் சர்வசாக்ஷியே நானென்று ஸ்திரமானவனே சர்வவியாபகமாகிய மாகர்த்தனும். எ-று.

இ-ம். அத்துவிதமான எனது சந்நிதியில் நடக்குந் தேக முதலிய விவகாரங்களுக்கும் இவைகள்இறந்துநின்ற ஞானசமாதிக்கும் சாக்ஷி நானே என்று அவைகளோடுங் கூடாமல் கூடியிருப்பவனே மாகர்த்தன் என்பதாம். (உச)

அ-கை. மாபோகி மாத்தியாதிகளின் இலக்கணங் கூறல்.

அறுசுவையின் குணங்குற்ற மசுத்தஞ்சுத்த மபத்தியம் பத்தியமெனவூ ணுய்ந்திடாமல், பொறுமையுடன் கிட்டினதைக் காட்டுத் தீப்போற் போகங்கள் புசிப்பவன் மாபோகியாகும், சிறிதுவலி துகடனதன் னியங்கணன்மை தீமைகள்சே ரினும்படிகச் செயல்போற் சித்தம், வெறிதிருக்கு மவனே மாத்தியாகி யாவன் விரதமிம்மூன் றுள்ளவரே வீடுள்ளோரே.

இ-ள். அறுவகை ரசங்களின் குணகுணங்களைச் சுத்தா சுத்தங்கள் பத்தியாபத்தியங்கள் என உணவை ஆராய்ந்து பாராமல் சாந்தத்தோடும் நேரிட்டதைக் காட்டுத்தீப்போலப் போகங்களை

அனுபவிப்பவன் மாபோகியாம்; அற்பமும் மகத்துமானவைகளும், தன்னுடையதும் பிறருடையது மானவைகளும் புண்ணிய பாவங்களும் ஆகிய இவைகள் அடைந்தாலும் படிகத்தின் தன்மையைப் போலச் சித்தமானது பற்றின்றி நிற்பவனே மாத்தியாகியாவான்; இம்மூன்றுவிரதங்களும் உடையவர்களே முத்தியையுடைய சீவன் முத்தர்கள். எ-று.

இ-ம். உணவின் ரசாரசங்களைப் பாராமல் தனது ரசமாக யாவையும் புசிப்பவனே மாபோகி எனவும், தன்னிடத்தில் தனக்கு அன்னியமானவைகள் யாது பற்றினுந் தான் பற்றின்றிச் சுயமா விளங்குகின்றவனே மாத்தியாகி எனவுங் கூறினதாம். (உரு)

அ-கை. சீவன் முத்தன் விவகரித்துக்கொண்டிருக்க அஃதின்றிக் கிருத கிருத்தியனனது எங்ஙனம்? எங்ஙனம் என வினுதல்.

மெய்யுங்கொண்டு பிராரத்தந் தருவிதிவழி நின்றிடவும்
உய்யுங்கன்மிகளுக் கனுகுண மாவுறுதொழில் செய்திடவும்
செய்யுஞ்செய்கை முடிந்தவனென் றுரைசெப்புவ தெப்படி
னையுந்துன்ப மகற்றிய குருவே நலமாமருள்வீரே. [யோ

இ-ள். வருந்தும் பவத்துன்பத்தை நீக்கிய ஆசாரியரே! தேகத்தைத் தாங்கிக்கொண்டு பிராரத்த கன்மங்கொடுக்கின்ற நியதிமார்க்கத்தில் நிற்கவும், முமூட்சுக்களுக்கு அனுகூலமாகப்பொருந்திய சிரவணுதிகளைச் செய்து கொண்டிருக்கவும், கிருத கிருத்தியனென்று சொல்லுவது எவ்வண்ணம்? நன்ருகச் சொல்வீர். எ-று.

இ-ம். வெளிப்படை. (உசு)

அ-கை. மேல்வினுவிற்கு உத்தரங் கூறல்.

ஆடவர்செய்தொழின் மூவகையாகு மவித்தைவசத்து றுநாள், ஈடணைமமதை யகந்தையுளார்க்கே யிகபரவிவகா ரம், வீடணுகுவமெனு மிச்சையுளார்க்கே வித்தைபடிப்ப வெலாம், பாடன் மிகுந்தொழிலாற் பலனுண்டோபரிபூரண மானல்.

இ-ள். புருஷர்கள்செய்கின்ற கிரியையானது மூன்றுவிதமாம்; அஞ்ஞான வசமாய்ச் செல்கின்ற காலத்தினல் ஈஷணுத்திரயமும் மமதையும் அகந்தையும் உள்ளவர்களுக்கே இகலோக பரலோக விவகாரங்களுளவாம்; முமூட்சுகளுக்குச் சடசித்தைப் பகுத்தறியுஞ் சாஸ்திரங்களனைத்தையும் அப்பியாசித்தலுளவாம்; பரிபூரணமானவர்களுக்கு மிகுந்த சாஸ்திராப்பியாசத்தினல் பயனுளதோ? எ-று.

இ-ம். அஞ்ஞான திசையில் உலக விவகாரங்களும் முமூட்சு திசையில் சிரவணுதி விவகாரங்களும் உளவாம்; முத்தித்திசையில் பல வியாப்தியின்றி விர்த்தியாப்தியாக விவகாரங்களைச்செய்தலின் அவையுஞ் செய்துஞ்செய்திலர் என்பதாம். (உஎ)

அ-கை. சீவன் முத்தர்க்கு உலக விவகாரங்கள் இலவாயினும் சிரவணுதி விவகாரங்கள் வேண்டாவோ? என வினுதல்.

குரவர்சிகாமணியேநீர்கேளீர்கூறினவழியொக்கும், பரமுடனிகமு மிழந்தவரன்றே பழகுவர்மெய்ஞ்ஞானம், விரவுமுயற்சியின் மீண்டவரதையினி வேண்டுவரோ வேண்டார், சிரவணமன னுதிகள் வேண்டாவோ சித்த முறைத்திடவே.

இ-ள். தேசிக சிரோரத்தினமே! கேட்டருள்வீர்: தேவரீர் அருளிச்செய்த முறை சரியே; பரலோக இச்சையோடும் இக

லோக இச்சையையும் நீங்கின முமூட்சுக்கள் அன்றோ உண்மைஞா னத்தை அப்பியாசிப்பார்கள்? கலக்கின்ற முயற்சியில்நின்று நீங்கி னவர்கள் அவ்விகலோக பரலோக இச்சையை விரும்புவார்களோ? விரும்பார்கள்; ஆயினும், மனம் நிலைபெறும்பொருட்டுச் சிரவண மனன முதலிய ஐந்தும் வேண்டாவோ? எ-று.

இ-ம். வெளிப்படை. (உஅ)

அ—கை. மேல்வினாவிற்கு உத்தரங் கூறல்.

கிளர்மகனே கேள் தத்துவமறியார் கேட்டல்செயக்கடனே
தளர்வறு சிந்தித்தலின் முயல்வார் சிலர் சந்தேகங்களுளார்
தெளிதலினிற்பார் விபரீதப் பேய் தீராவாதனையோர் [டோ
வெளியுருவா யறிவாய் நிறைவாயினர் வேண்டுவதொன்றுண்

இ-ள். விளங்காநின்ற புத்திரனே! கேட்கக்கடவாய்: உண்மை ஞானத்தைத் தெரியாதவர்கள் சிரவணஞ் செய்யவேண்டியது கடமையாம், கேட்ட வஸ்து நிச்சயத்தில் சந்தேக முள்ளவர்களாகிய சிலர் தளர்வற்றிருக்கும்படி மனனஞ்செய்தலின் முயற்சி செய்வார் கள், ஒன்றை ஒன்றாக அறியும் நீங்காத வாதனையை உடையவர்கள் நிருத்தியாசனத்தைக் கொண்டு சமாதியி லிருப்பார்கள்; பரமாகாச மாய் அபரோட்ச ஞானமாய்ப் பரிபூரணமானவர்கள் விரும்புவ தொன்றுளதோ? எ-று.

இ-ம். கேட்டல் முதலிய மூன்று விவகாரங்களும் அஞ்ஞான முதலிய மூன்றும் உள்ளமட்டும் வேண்டுமேயன்றி மேல்வேண்டப் படுவன அல்ல என்றதாம். (உகூ)

அ—கை. விவகார நீங்கில் சீவன்முத்தர்க்கு எங்ஙனம் அகம் பாவம் உண்டாதல் கூடும்? என வினாதல்.

ஐயா கேளீர் தத்துவஞானியு மஞ்ஞானிகள் போலச் [மோ
செய்யா நின்றேன் கண்டேனுண்டேன் சென்றேனெனலா

பொய்யாம் விபரீதங்க ளவர்க்குப் போயின வென்றீரே
மெய்யாம் பிரம விகார மிதன்றே வெளியா யுரையீரே.

இ-ள். எனதாசிரியரே! கேட்டருள்வீர்; மெய்யுணர்வுடைய சீவன் முத்தனும் அஞ்ஞானிகளைப்போல இதைச் செய்கிறேன், இதைப் பார்த்தேன், இதைப் புசித்தேன், இங்ஙனம் சென்றேன் என்று சொல்லலாமா? அச்சீவன் முத்தர்களுக்கு அசத்தியமான பேதபாவனைகள் நீங்கினவென் றருளினீரே, தத்துவமான பிரம விகாரமானது இஃதன்றே? நன்றாகத் தெரியும்படி சொல்வீர். எ-று.

இ-ம். சீவன்முத்தர் அஞ்ஞானிகளைப்போல விவகரிக்கின் அவர்களுக்கு விபரீதம். எங்ஙனம் நீங்கிற்று? என வினாவினதாம்.

அ-கை. மேல்வினாவிற்கு உத்தரங் கூறல்.

ஓய்ந்த கனவிற்கண்ட பழங்கதை யோதுவன் வாதனை யால், ஆய்ந்தறிவுற்றவ னப்படிசெப்புவனா பாசனுமாகான், மாய்ந்ததனுடல்வே மளவும் விண்ணவன் மனிதனெனப்படு வான், வீய்ந்தசிதாபாசன்போமளவும் விவகாரந்தொடரும்.

இ-ள். இந்திரியங்களொழிந்த சொப்பனத்தில் கண்ட பழங்கதையை வாசனையால் சாக்கிரத்தில் ஒருவன் சொல்லுவன்; வேத முடிவான மகா வாக்கியார்த்தத்தை ஆராய்ந்து தன்னை யறிந்த சீவன்முத்தன் அத்தன்மையாகவே பூர்வ அஞ்ஞான வாசனையாய் இதைச்செய்கிறேன் இதைப் பார்த்தேன், இதைப்புசித்தேன்; இங்ஙனஞ்சென்றேன் என்று சொல்லுவான்; அப்படிச் சொல்லுவனாயினும் சிதாபாசனாகான்; தேவனாயினேன் தேவதத்துவ மடைவோமென்று அக்கினியிற் பிரவேசமாய் மாய்ந்த தன்தேகம்வெந்து

நீருகுமளவும் மனிதனென்று சொல்லப்படுவான்; சித்துருவமாக நசித்த சிதாபாசன் விதேகமுத்தியை அடையுமளவும் விவகாரந் தொடர்ந்துவரும். எ-று.

அரசனு யுள்ளோன், நித்திரா மோகத்தாற் சொப்பனத்தில் பிட்சை யேற்பவனுகத் தன்னைக்கண்டு விழித்தபின், அம்மோகம் நீங்கி அரசனு யிருந்துகொண்டு, முன்னே சொப்பனத்திற் கண்ட வாசனையால் தன்னைப் பிட்சகனுகச் சொல்லினும் உண்மையாகத் தான் பிட்சகனென்பது அவனுக்கு உள்ளே இல்லாமைபோல, ஞானியும் பூர்வ வாசனையால் சிதாபாசனுகத் தன்னை வியவகாரத்திற் சொல்லினும் அவனுள்ளே அகங்காரக் கிரந்தி யின்மையின் அவன் சிதாபாசனல்லன்.

தான் தேவனுக வேண்டுமென்று அக்கினியிற் புக்கிறந்தோன் உடனே தேவனுனுலும் அவன்தேகம் நசிக்குமளவும் மநுடனுக அந்நியரால் எப்படி வியவகரிக்கப்படுவனே அப்படித் தத்துவஞானத்தால் ஞானியும் உடனே பிரமமானுலும் பிராரத்ததேக நசிக்குமளவும் அந்நியருடைய திருஷ்டிக்குச் சிதாபாசனுக வியவகரிக்கப்படுவன்; அவ்வியவகாரம் விதேக கைவல்யமளவுந் தொடராநிற்குமென்பது கருத்து.

இ-ம். சொப்பனத்தில் கண்ட கற்பிதத்தைச் சாக்கிரத்தில் சொல்வதுபோல அஞ்ஞான திசையில் கற்பிதமாயுள்ள உலக விவகாரத்தை ஞானதிசையில் சொல்வதேயன்றி உண்மை அன்றெனினும் அதை விதேகமுத்தி பரியந்தந்தொடரும் என்பதாம். (௩க)

அ—கை. சகத்விவகார நீங்கச் சமாதிசெய்யின் அச்செயலும் ஒரு விவகாரம் ஆதலின் அவன் எங்஡னம் நிர்விவகாரி யாவான்? எனல்.

ஆனலையா குருவே காண்பதசத்திய மென்றாலும்
நானவிவகாரந் துயரலவோ ஞான சுகந்தருமோ
போனலன்றே நன்றாநிட்டை புரிந்திடல் வேண்டாவோ
தானநிட்டை புரிந்தாற்செய்கை தவிர்ந்தவ னெப்படியோ.

இ-ள். அப்படி வியவகாரம் விதேக கைவல்யமட்டுந் தொடரு மானல், ஐயா ஆசிரியரே! திரிசியம் பொய்யாயினும், அதைப் பற்றிய பல தொழில்கள் துன்பத்தைத் தருபவைக ளல்லவா? சிதானந்தத்தைக் கொடுக்குமா? அத்தொழில் நீங்கினல் அல்லவா நன்மையாம்? அவை நீங்கும்பொருட்டுச் சமாதி செய்யவேண்டாவோ? தன்மயமாகுஞ் சமாதிசெய்தால் எவ்விதம் தொழில் விட்டவன். எ-று.

இ-ம். வெளிப்படை. (௩௨)

அ-கை. மேல்வினவிற்கு உத்தரங் கூறல்.

தெரிதரு மகனே யாரம்பத்தொடு தீரும் விவகாரம்
உரியசமாதியும் விவகாரங்களுமுள்ளத் தொழிலன்றே[டோ
துரியபரம்பொரு ளானவர்வேறொரு தொழில்செய்வதுமுண்
அரிய சமாதிகள் பழகுவ னேலவன ரூடனுமன்றே.

இ-ள். உண்மையை அறிகின்ற புத்திரா! தனக்குரிய நிட்டையும் சகத்தொழில்களும் மனேவிவகாரங்களாதலால், பிராரத்த கர்மத்துடனே அத்தொழில்களும் சிரவணதிகளால் தீரும்; துரியமான பிரமவஸ்துவானவர்கள் மற்றொரு கிரியையைச் செய்வதும் உளதோ? அருமையான ஞானநிட்டைகளை அப்பியாசிப்பாளுகில் அவ்வப்பியாசி அனுபவியல்லன். எ-று.

சகத்விவகாரஞ் சமாதியினுஞ் சமாதி விவகாரஞ் சாக்ஷாத்கா ரத்தினும் நீங்குமெனக் கொள்க.

இ—ம். சித்து விவகாரமான சமாதியும் அப்பியாசிக்கே யன்றி ஆரூடனுக்கு இன்று என்பதாம். (ரு௩)

அ—கை. ஆரூடர்களிலுஞ் சிலர் சமாதி முதலியவற்றைச்செய்து என்னே? என விஞதலுக்கு உத்தரம்.

உத்தம குருவேயாரூ டருமாயொரு தொழிலற்ற வருள்
சித்த மடங்கு தியாஞதிகள் சிலர்செய்குவ தென்னென்ருல்
இத்தல மருவு பிராரத்தப் பிறிவெப்படி யப்படியே
முத்தரும்வெகுவிதமாகுவரென்பது முன்னேசொன்னேனே

இ-ள். மேன்மைதங்கிய தேசிகரே! சுவாஞபவம் உள்ளவர்களுமாய், ஒரு கிரியையும் இல்லாதவர்களுக்குள் மனமடங்குகின்ற சமாதி முதலியவைகளைச் சிலர்செய்வது என்னென்று கேட்பாயாகில், இப்பூமியிற் பொருந்தும் பிராரத்த கன்மப் பகுப்பு எவ்விதமோ அவ்விதமேயாம்; சீவன் முத்தரும் நாஞவிதமா யிருப்பார்களென்பதை முந்திய தத்துவவிளக்கப் படலத்தில் (பேத கன்மத்தால்வந்த) என்னும் கூ0 – வது பாடலில் சொன்னேன். எ-று.

இ—ம். ஆரூடன் தொழில் பிராரத்த கன்மமென அறிக என்பதாம். (ரு௪)

இதுவுமது.

நல்லவனேகே ளுலகுபகார ஞானிகள் விவகாரம்
அல்லது வேருெரு பெறுபேறு மிலேபதனற் பிணியுமிலே
வல்லசிருட்டி முதற்பல தொழிலால்வரு புண்ணிய பாவம்
எல்லவருக்கு மனுக்கிரகஞ் செயுமீச னடைந்திலனே.

இ-ள். நல்ல மாஞக்கனே! கேட்பாய், ஞானவான்கள் செயுந்தொழில் லோகோபகாரநிமித்தமேயன்றி, அதஞல் தாங்கள்வேறே

அடையக் கடவதாய பயன் ஒன்றும் இல்லை; அக்கிரியையினால் துன்பமும் இல்லை; அஃதெங்ஙனமெனின், வல்லமையான சிருட்டியாதி நாநாவித கிருத்தியங்களினால் வராநின்ற தருமா தரும த்தை யாவருக்கும் அனுக்கிரகஞ் செய்கின்ற ஈசன் அடைகிலன். எ-று.

இ-ம். ஆரூடன் செய்யுந் தொழில் ஈசனைப்போல உலகோப கார நிமித்தமே அன்றித் தன்னிமித்தம் அன்று என்பதாம். (௩௫)

அ—கை. "வஞ்சகம் இல்" என்ற செய்யுள் முதல் இதுகாறுஞ் சித்தில் உதித்தமனம் சலனமின்றிச் சித்தாக விளங்குகிற தென்பதை விளக்கி, இனிச்சித்து வியாபகத்தை விளக்கும் பொருட்டு அம்மனமுள்ள ஞானவான் ஈசனுக்கு ஒப்பாவான் என்ற வினாவுக்கு உத்தரம் கூறல்.

ஈசனுமா யருவா யுருவாகி யெழுந்தருளுங் குருவே
ஈசனு ஞானியு மொப்பென்றீரே யெப்படி யொப்பென்றால்
ஈசனு ஞானியு மமதை யகந்தையிகந் ததினாலொப்பாம்
ஈசனு மாம்பல சீவரு மாமுலகெல்லா மிவனாமே.

இ-ள். நிஷ்களமாய் மும்மூர்த்தியுமாய் மானிட வடிவுமாய் எழுந்தருளிய ஆசிரியரே! மாயாரகிதமான மும்மூர்த்திகளும் ஞான வானும் சமானம் என்றீரே, எவ்விதம் சமானம் ஆவர்? என்று கேட்பாயாகில், ஈஸ்வரனும் ஞானவானும் மமதையும் அகந்தையும் நீங்கி நிற்றலால் சமானமாவர்; இந்த ஞானி மும்மூர்த்தியுமாவன், அநந்த சீவர்களுஞ் சகங்களனைத்துமாவன். எ-று.

இ—ம். அறிஞன் ஈசனுக்கு ஒப்பாவன் என்பதற்கு ஏதுகூறி மற்றுஞ் சீவேஸ்வர சகத்தாகவும் விளங்குவான் எனக்கூறினதாம்.

அ—கை. அறிஞன் எங்ஙனஞ் சீவர்களாக விளங்குவான்? என வினுதல்.

எல்லாச்சீவரு மிவனுமென்றீ ரிவன்முன் முத்தியடைந்
தெல்லாச்சீவரு முத்திபெறும லிருப்பானேனையா
எல்லாச்சீவரும் வெவ்வேறுன லிவனெல்லாமலனே
எல்லாப்பொருளுமுரைத்தருள் குருவேயிதைநீர்மொழியீரே.

இ-ள். ஆசிரியரே! சகலசீவர்களும் இந்த ஞானியாவன் என்று சொன்னீர்; இந்த ஞானி வீடடையச் சகல சீவர்களும் வீடடையாமல் இருப்பதென்னை? சகல சீவர்களும் தனித்தனியாயிருப்பாராயின் இந்த ஞானி அனைத்தும் ஆகானே? சர்வார்த்தங்களையும் அருளுகின்ற தேசிகரே! இச்சங்கைக்கு உத்தரந் தேவரீர் அருள்செய்வீராக. எ-று.

முத்தி அடைய என்பது அடைந்தெனத் திரிந்து நின்றது.

இ—ம். ஞானவானுகிய ஒருவன் பெற்றபேறு ஏனைய உயிர்கள் பெறுமையால், இவனே எல்லாமாவன் என்பது எங்ஙனங்கூடும்? என வினவினதாம். (ருஎ)

அ—கை. மேல் வினுவிற்கு உத்தரங் கூறல்.

அகமெனு மான்மா பூரண மேகமநேகவிதஞ் சீவர்
அகமெனு மந்தக் கரணவுபாதிக ளளவில யாதலினுல்
சகமுழு துங்குளிர் சந்திரனேகஞ் சலசந்திரர் பலவாம்
சகமதி லேரிகுளஞ்சிறு குழிசால் சட்டிகுடம் பலவால்.

இ-ள். நான் என்னும் ஆத்மாவானது பரிபூரணமான ஒன்றும், நான் என்கிற மனேவுபாதிகள் மட்டில்லை, ஆதலால், சிதாபாசன் நானுவிதங்களாம்; உலகமனைத்தும் குளிர்ச்சி செய்கின்ற மதி

ஒன்று; உலகத்தின்கண் ஏரிகளும் தடாகங்களும் சிறிய பள்ளங்களும் சால்களும் சட்டிகளும் குடங்களும் பல ஆதலால், சலப்பிரதிபிம்பமான சந்திரர்களும் அநந்தமாம். எ-று. (௩அ)

இதுவுமது.

சட்டிகுடங்களி ளென்றுநசித்திட வதனுட் சலசந்திரன்
ஒட்டுமுதற் சந்திரனெடு கூடமொழிந் தவைகூடாவே
கட்டுமுபாதி நசித்திடுசீவன் காரண வான்மாவில்
கிட்டுமைக்கியமு பாதிகெடாதவர் கேவல மாகாரே.

இ-ள். சட்டி கடம் முதலியவைகளில் ஒன்றுகெட; அதற்குள் தோன்றிய பிரதிபிம்ப சந்திரன்தான் பொருந்துதற்குரிய முதற்காரண சந்திரனேடுஞ் சேரும்; ஏனைய பிரதிபிம்பசந்திரர்கள் அங்ஙனம் ஏகமாகக் கூடாவாம்; அதுபோலப் பந்தித்திருக்கும் அறியாமை இறந்த சீவன் தனக்கு ஆகாரமான ஆத்மஸ்வரூபத்தில் ஐக்கியமாம்; அவித்தை நீங்காத சீவர்கள் கைவல்லியத்தை அடைய மாட்டார்கள். எ-று.

இ—ம். ஒரு கடசலம் நசிக்கில் அதில் பிரதிபிம்பித்த சந்திரன் பிம்பசந்திரனுனவனன்றி, ஏனைய பிரதிபிம்ப சந்திரர்கள் ஆகான்; அதுபோல ஓரவித்தை நசிக்கில் அதிற்றோன்றிய சீவன் சிவமாவனே அன்றி ஏனைய சீவர்கள் ஆகான் என்பதாம். (௩௯)

அ—கை. முன்பு அறிஞன் ஈசனுக்கொப்பென்றீர்; அங்ஙனமாயின் அவர் மகிமை இவனுக்கேன் இன்று? என வினுதல்.

இவனயன்மால்சிவனுகிய வீசரொடெப்படி யொப்பாகும்
சிவன்முதன் மூவருமகிலசிருட்டி திதிநாசங்கள்செய்வார்
அவர்பிறர்மதிகளு முக்காலங்களு மறிவார்விபுவாவார்
தவமிகுகுருவே யிவனுக்கவைபோற் சற்றுங்காணேனே.

இ-ள். தவத்தின் மிகுந்த ஆசிரியரே! இந்த ஞானி பிரம விஷ்ணு ருத்திரராகிய மும்மூர்த்திகளுடன் எவ்விதஞ் சமான மாவன்? உருத்திரன் முதலிய மும்மூர்த்திகளும் சகத்தை உண் டாக்குதலும் இரட்சித்தலும் அழித்தலும் செய்வார்கள், அவ்வீஸ் வரர் பிறரறிவையும் திரிகாலங்களையும் தெரிவார்; வியாபகமாவார் கள்; இந்த ஞானிக்கு அவற்றைப்போல எவ்வளவும் பார்த்திலேன். எ-று.

இ-ம். வெளிப்படை. (௪0)

அ-கை. மேல்வினவிற்கு உத்தரம்.

தடத்துநீர் நிலாத்திரியெரி யுபயமுந்தழுவு மூர்தனைக் காக்கும், குடத்துநீர் விளக்கினிலொளி யிரண்டுமோர் குடு ம்பமாத் திரங்காக்கும், அடுத்தமைந்தனே ஞானியு மீசனு மறிவினுற் பிறிவில்லை, கெடுத்த மாயையின் குணங்களான் மேலென்றுங் கீழென்றும் பிரிவாமால்.

இ-ள். சத்துக்களை யடைந்த புத்திரா! தடாகத்துச் சலமும் பகல் வர்த்தியுமாகிய இரண்டும் பொருந்திய ஒரூரைக் காக்கும்; கடத்துச் சலமும் தீப்பிரகாசமுமாகிய உபயமும் ஒரு குடும்பத்தை மாத்திரம் காக்கும் ஞானவானும் ஈஸ்வரனும் ஞானத்தினுல் வேறு பாடிலர்; ஒன்றுபடாமற் கெடுத்த மாயையின் தன்மைகளால் உயர் வென்றும் தாழ்வென்றும் வேருகும். எ-று.

இ-ம். ஏரிநீர் ஊரையும் கடநீர் இல்லத்தையும் காக்குமிடத் தில் சிறிது பெரிதென்னும் தொழிற்பேதமே யன்றிக் காக்குந் தன்மை ஒன்ருவதுபோல, ஈசனுக்கும் ஞானிக்கும் மாயை அவித் தைகளால் தாரதம்மிய மிருக்கினும் அறிவின் தன்மையில் பேத மின்று என்பதாம். (௪௧)

இதுவுமது.

நரரின்மன்னனைச் சித்தரைப்போலவே நாரணன்முதலான
சுரர்கண்மாலிய வல்லவரணிமாதிக டொக்கமா தவமிக்கோர்
தரணிமானிடர்க் கவைகளில்லாமையாற் ருழ்வுளராலும்
பிரமபாவனையா லிவரவரெனும்பேத மொன்றிலைபாராய்.

இ-ள். மானிடரில் அரசனும் சித்துப்புருடனும் எங்ஙனம் அதிகாரத்தானும் மகிமையானும் மேலிட்டார்களோ, அவர்போலவே திருமால் முதலிய தேவர்களும், மாயையில் வல்லமை உடையவர்களாதலால், அணிமா முதலிய அட்டசித்திகள் நிறைந்த மகா தவத்தின் மிகுந்தவர்களாவர்; பூமியிலுள்ள மனிதர்களுக்கு அவைகள் இல்லாமையால் தாழ்வை உடையவர்களானுலும், பிரம திருஷ்டியினுல் இவர்கள் மானிடரெனவும் அவர்கள் தேவர்களெனவும் வேறுபாடொன்றிலர் எனக் காண்பாய். எ-று.

அட்டமாசித்திகளாவன:—அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பவைகளாம். அவற்றுள்.

அணிமா—மிகவுஞ் சிறிய வுயிர்கள்தோறும் தான் மிகவு நுண்ணிய அணுவளவாய்ச் சென்றிருக்கும் அதிநுண்மை.

மகிமா—பிருதிவி முதல் சிவமீருன முப்பத்தாறு தத்துவமும் உள்ளும் புறமும் வியாபித்து நீங்காதிருக்கும் பெருந்தகைமை.

இலகிமா—மேருமலைபோலக் கனமாகவிருப்பினும் பரமாணுக்கள்போல் எடுத்தற்கெளிதாய் இருப்பது.

கரிமா—பரமாணுப்போன்ற வடிவுடையதாயினும், மேருமலைபோல எடுத்தற்கரியதாய் இருப்பது.

பிராத்தி—பாதாளத்திலிருந்து பிரமலோகம் போய்ச் சஞ்சரித்து மீண்டும் பாதாளத்துக்கு வரத்தக்கது.

பிராகாமியம்—பரகாயப் பிரவேசஞ் செய்தலும், விண்ணுலகத்திற் சஞ்சரித்தலும், விரும்பிய போக மனைத்தையும் நினைத்தபடிக்கெல்லாம் இருக்குமிடத்திலேயே வருவித்து அனுபவித்தலு முதலிய வல்லது.

ஈசத்துவம்—சிருட்டியாதி முத்தொழில்களை நடாத்தவும், சூரியன்முதலாய கிரகங்களைத் தன்னேவற்படி நடக்கச்செய்யவும் வல்லது.

வசித்துவம்—அரசர், பக்ஷி, மிருகம், பூதம், மனிதர், இந்திரன் முதலிய அஷ்டதிக்குப்பாலகர் இவர்களெல்லாரையும் தன்வசமாக்கிக்கொள்ள வல்லது.

இ—ம். மானிடரில் சித்தருக்குள்ள மகிமைகள் மற்றவர்களுக்கு இன்றாயினும் அம்மானிடத் தன்மையில் ஒப்பாவதுபோல சித்துருவமான திரிமூர்த்திகளும் சீவன்முத்தர்களும் தேவத்தன்மை மானிடத்தன்மைகளால் வேற்றுமையுள்ளோராயினும் சித்துத்தன்மையில் ஒப்பாவர் என்பதாம். (௭௨)

அ—கை. அணிமாதிகள் ஈசனதாயின் அறிஞனுக்கு எங்ஙனம் உண்டாயிற்று? எனில், அவரை நோக்கி உபாசனை செய்ததினால் ஆம் எனக் கூறல்.

முத்திநல்கிய சற்குருவேபல முனிகளுக்கணிமாதி, சித்திபூமியிற் கண்டிருக்கவுமந்தச்செல்வமீசனதென்றீர், புத்தியொத்திட வுரைத்தருளென்றிடிற் புகழுமீசனை வேண்டிப், பத்திசெய்திடுந் தவத்தினால் யோகத்தாற் பலித்ததென்றறிவாயே.

இ-ள். வீடருளிச்செய்த ஞானதேசிகரே! வியாசர் முதலாய பல இருடிகளுக்கு அணிமா முதலிய அஷ்டமா சித்திகள் உண்டா

யிருப்பதை இவ்வுலகத்திற் பார்த்திருக்கவும், அச்செல்வமானது ஈஸ்வரனதென்று சொன்னீர்; அச்செல்வம் அவர்களுக் கெவ்வாறுற்றனவாயின வென்பதை என் புத்தி ஒத்திருக்கும்படிக்குச் சொல்லவேண்டும் என்றும்கேட்பாயாகில், துதியாநின்றஈஸ்வரனை நாடி மனமொழி மெய்களாற் செய்யாநிற்கும் வழிபாட்டினாலும், சாந்திராயணாதி தவங்களாலும், அஷ்டாங்கயோகத்தினாலும்கிடைத்ததென் றறிந்துகொள்வாய். எ-று.

சாந்திராயணம்—சந்திரன் கலை தேயத்தேய உணவில் ஒவ்வொரு கவளமாய்க் குறைத்துண்டு, அது வளர வளர ஒவ்வொன்றாய் உயர்த்தி யுண்பதாகிய தொருவிரதம்: சந்திர+அயநம் எனப் பிரியும்; அயநம்=ஓட்டம், சந்திரனுடைய கதியைப்பற்றியதெனப் பொருள்படும்.

அஷ்டாங்கயோகமாவது:—இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, ஸ்தம்பனம், சமாதி என்பனவாம்.

இ-ம். வெளிப்படை. (௩௫)

அ-கை. முன்புள்ள ஞானிகளைப்போல இவர்களுக்கு அணிமாதிகள் ஏன் இல்லை? என விணுதல்.

சிவசொரூபமாந் தேசிகமூர்த்தியே சித்திமுத்திக ளிரண்டும், தவமுளோ ரடைகுவரெனி லவர்கள்போற் சகலருமடைவாரோ, அவர்கள்பூருவசித்தியு ஞானமுமடைந்ததுங் கண்டோமே, இவர்கண்ஞானிக ளென்றிடிற்சித்திக ளிவர்க்கிலாவகையேதோ.

இ-ள். சிவாகாரமாகிய குருமூர்த்தியே! அணிமாதி சித்தியும் மோக்ஷமும் ஆகிய இரண்டையும் தவத்தை உடையவர்கள் அடை

வார்கள் என்றால், வியாசர் முதலான தவத்தரைப்போலஇக்காலத்துள்ள ஞானிகளனைவரு மடைவார்களா? அத்தவமுடையவர்கள் முன்புள்ள அணிமாதி சித்தியும் முத்தியும் பெற்றது ஆகமப் பிரமாணத்தால் பார்த்தோம்; இவர்களை ஞானவான்களென்று சொன்னால் அணிமாதி சித்திகள் இவர்களுக்கில்லாத விதம் யாது? எ-று.

இ—ம். வெளிப்படை. (சச)

அ—கை. மேல் வினாவிற்கு உத்தரம்.

காமியத்தவங் காமியமொன்றையுங் கருத்திடாத் தவமென்றும், பூமியிற்றவ மிருவகைச்சித்தியும் போதமுந்தருமைந்தா, ஆமிவற்றிலொன் றியற்றினரொன்றையே யடைகுவரிதுதீர்வை, யாமுரைத்தவவ் விரண்டையுமியற்றின ரன்றுள பெரியோரே.

இ-ள். மாணக்கனே! இச்சிக்கப்படும் பொருளை யடையக் கருதுவதான காமியத்தவம் எனவும், அப்படி இச்சிக்கப்படும் பொருளொன்றையும் அடையக் கருதாததான நிஷ்காமியத்தவம் எனவும், உலகத்தில் தவம் இரண்டுவிதமாம்; அவற்றுள் காமியத்தவஞ்சித்தியையும் நிஷ்காமியத்தவம் முத்தியையுங் கொடுக்கும்; ஆகிய இவ்விரண்டில் ஒன்றை யப்பியாசஞ் செய்தவர்கள் அவ்வொன்றினையே அடைவார்கள்; இது நிச்சயமாம்; பூர்வத்திலுள்ள வியாசர்முதலான மகான்கள் நாம் சொன்ன அக்காமியத்தவம் நிஷ்காமியத்தவம் என்னும் இரண்டிலு முயற்சி செய்தார்கள். எ-று.

இ—ம். முன்புள்ள ஞானவான்களில் சிலர் இரண்டு தவத்தையும் அனுசந்தித்ததனால், சித்தி முத்திகள் இரண்டனையும் பெற்றார்கள் என்பதாம். (சரு)

இதுவுமது.

அனகமைந்தனே முத்திஞானத்தையே யடைந்தனரல் லாமல், செனகன்மாவலி பகீரதன்முதலினுர் சித்திகள் படித்தாரோ, இனியசித்தியை விரும்பினுர் சிலர்சில ரிரண்டையுமுயன்ருர்கள், முனிவர் சித்திகள் விநோதமாத் திரந்தரு முத்தியைத்தாராவே.

இ-ள். களங்கமற்ற மகனே! சனகராசன், மகாபலிச்சக்கரவர்த்தி, பகீரதராசன் முதலானவர்கள் ஞானத்தை அப்பியசித்து மோட்சத்தைப் பெற்ருர்களே அன்றி, அணிமாதி சித்தியை அப்பியாசஞ் செய்தார்களா? சில முனிவர்கள் இனிமையான அணிமாதி சித்தியை மாத்திரம் விரும்பினுர்கள்; சில முனிவர்கள் சித்திமுத்திகள் இரண்டையும் அப்பியாசித்தார்கள்; முனிவர் அப்பியசித்த அணிமாதி சித்திகளானவை காலம்போக்கும் விளையாடலை மாத்திரங் கொடுக்கும், மோட்சத்தைக் கொடுக்கமாட்டா. எ-று.

இ—ம். யோகத்திஞல் அணிமாதிகளைப்பெற்றும் அவைகளால் பயன்படாமல் பின்னர் ஞானப்பேற்றிஞல் முத்தியைப் பெற்ருர்கள்; ஆதலால், அச்சித்திகளை ஞானிகள் விரும்பவில்லை என்பதாம்.

அ—கை. சித்திகளில் பயன் இன்று என்பது தெரிந்தும் சில ஞானிகள் என் அதை விரும்புகிருர்கள்? என விஞதலுக்கு உத்தரம்.

யோகஞானமே முத்தியைத்தருமெனி னெழிந்தசித்திகள்வேண்டி, மோகமாயுடல்வருந்திஞர் சிலசிலமுத்தர்களே னென்ருல், போகமாய்வரும் பிராரத்தகன்மங்கள் புசித்தன்

ரோநசித்தேகும்; ஆகையாலந்தச் சித்திகள் பிராரத்த மாகு மென்றறிவாயே.

இ-ள். ஐக்கியமான அத்துவித ஞானமே மோட்சத்தைக்கொடுக்குமாயின், அதுநீங்கிய அணிமாதி சித்திகளைவிரும்பிச் சில சீவன் முத்தர்கள் தேக வருத்தமுற்றார்கள், அவ்வாறுவருந்தியது யாதினாலென்னில், அனுபோகமாய் வருகின்ற பிராரத்தகன்மங்களானவை புசித்தல்லவாகெட்டுப்போம்? ஆதலால், அவர்கள்பெற்ற அணிமாதி சித்திகள் இச்சா பிராரத்த மாகுமென்று அறிந்துகொள்வாயாக. எ-று.

இ-ம். சித்தியை விரும்புவது பிராரத்தகன்மம் என்பதாம். ()

அ-கை. ஐயந் தெளிவித்த ஆசிரியரை அன்பின் வியந்துதுதித்தல்.

இலக்கமாயிரஞ் சுருதியாலூகத் தாலென்மன மசையாமல், பிலக்கவேண்டுமென்றருள்குருவேயகப் பிராந்திபோய்த் தெளிவானேன், துலக்கமானகண் ணாடியையடிக்கடி துலக்கினாற்பழுதன்றே, அலக்கண்மாற்றிய தேவரீரெனக்குரை யமுதங்க டெவிட்டாவே.

இ-ள். அளவிறந்த வேதங்களினாலும் யுத்தியினாலும் என் மனமானது சலனமின்றி ஸ்திரமாயிருக்கவேண்டும் என்று எனது சங்கைகள் தீரும்படி உத்தரம் அருளிய தேசிகரே! எனது மனதின் கண்ணுள்ள மயக்க நீங்கித் தெளிவையடைந்தேன்; விளக்கமானகண்ணாடியை மேலுமேலும் விளக்கினால் குற்றமல்லவே; எனது பவத்துன்பத்தை நீக்கிய சுவாமிகளே! அடியேனுக்கருளிய உபதேசாமுதங்கள் புசிக்கப் புசிக்கத் தெவிட்டாவாம். எ-று.

இ-ம். வெளிப்படை. (சஅ)

அ—கை. கிரம சிருஷ்டியான சீவேஸ்வர சகத்விவகாரங்கள் அறிஞனது பிராரத்தம் என்று அறிந்த சீடன் அதற்கு வித்தாக உகபற் சிருட்டியினுல் அமைந்து கிடக்கின்ற சஞ்சிதத்தைக் கெடுக்கும்பொருட்டு அஃதுநசிக்கும் என்ற இரண்டுவகையில் யாது உண்மை? என வினுதல்.

கைதவங்களைச் சாத்திரஞ்சொல்லுமோ கருணையாலெனையாளும், ஐயனேகுருவே யெவராகிலு மனுபவித்தாலன்றிச், செய்தகன்மங்கள் விடாதென்றவசனமுஞ் சென்மசஞ்சிதம்வேகத், துய்யஞானத்தீ சுடுமென்றவசனமுந் துணிவதெப்படிநானே.

இ-ள். கிருபையினுல் அடியேனை யாளாநின்ற என்னை யாளும் ஆசிரியரே! எனது குருசுவாமியே! அசத்தியங்களை நூல்களுரைக்குமோ? யாவராகிலும் தாங்கள் செய்த கர்மபலன்கள் அனுபவித்தொழித்தாலல்லது நீங்காதென்ற வாக்கியமும், அநந்த சனனங்கட்குக் காரணமான சஞ்சித கருமங்கள் வெந்து நீருகும்படி பரிசுத்தமான ஞாஞக்கினியானது எரிக்குமென்ற வாக்கியமும் ஆகிய இவ்விரண்டில், இது வாஸ்தவம் இது அன்று அடியேன் தெளிவது எவ்விதம். எ-று.

இ—ம். சஞ்சிதகன்மம் அனுபவித்தால்தீரும், ஞானத்தால்தீரும் என்ற வசனங்களில் யாது உறுதி? என வினுவினதாம். (சகூ)

அ—கை. மேல் வினுவிற்கு உத்தரம்.

சீவபேதங்க ளளவிலைமைந்தனே செய்கையுமளவில்லை, ஆவவாமவரவ ரதிகாரங்க ளறிந்துபக்குவநோக்கிப், பூவலர்ந்துபின்பலங்கள்காட்டுவனபோற்பூருவஞ்சித்தாந்தம், காவல்வேதங்க ளிரண்டையும் வசனிக்குங்காண்டமூவகையாலே.

இ-ள். மாணுக்கனே! சீவர்களுடைய வேறுபாடுகள்மட்டில்லே; அவர்கள் செயலு மட்டில்லே; அவரவர்களுக்கு ஆவன ஆம்; ஆதலால், அவர்களது அதிகாரந்தெரிந்து பருவம் பார்த்து, மலரானது விகசித்துப் பின்பு பலனேக்கொடுப்பதுபோல, நம்மைக் காக்கின்ற சுருதிகள், கர்மகாண்டம் பத்திகாண்டம் ஞானகாண்டம் என்னு மூன்று பகுப்பினுல், பூருவ பட்ச வாக்கியமும் சித்தாந்த வாக்கியமும் ஆகிய இரண்டுவகையுஞ் சொல்லும். எ-று.

இ-ம். சீடனது பக்குவத்திற்கு ஏற்கப் பூருவபட்சம் சித்தாந்தம் என இரண்டாக வேதங் கூறும் என்பதாம். (ருO)

இதுவுமது.

ஆனபாவிக ளடைவனநரகங்க ளவசியமாளுலும்
தானமந்திரவிரதவோமங்களாற் றவிருமென்பதுபொய்யோ
ஈனமாம்பல சன்மசஞ்சிதவினே யெத்தனேயாளுலும் [டே.
ஞானமாங்கனல் சுடுமென்ற மறைமொழி நம்பினுல் வீடுண்

இ-ள். கொடிதான பாவிகள் நரகங்களே அடைவது உண்மையாளுலும், தானங்களினுலும் மந்திரங்களினுலும் விரதங்களினுலும் யாகங்களினுலும் ஒழியும் என்பது அசத்தியமா? இழிவாகிய அநந்தசநநத்தைக் கொடுக்கும் சஞ்சிதகன்மம் எவ்வளவு சேர்ந்திருக்கினும், ஞானக்கினியானது எரிக்குமென்ற வேதவாக்கியத்தை நம்புவானுனல் முத்தி யுண்டாகும். எ-று.

இ-ம். அனுபவித்துத் தீருமென்ற பட்சத்தை நீக்கி, அறிவிற் கெடுமென்ற சித்தாநந்தத்தைக்கொண்டு அறிவை வளர்க்கில் அதனுற் சஞ்சிதங் கெடும் என்பதாம். (ருக)

அஃகை. சஞ்சிதத்தைக் கெடுக்கும் ஞானமிருக்கக் கன்மத்தை விரும்புவது என்? என வினுதல்.

8

என்மனந்திருக்கோயிலாத் தினங்குடியிருந்தருள் குரு மூர்த்தி, சென்மசஞ் சிதவினையை வேரறுத்திடுந் தேவரீர் மெய்ஞ்ஞானம், தன்மயந்தரு மகிமையை விபுதரர்சகத்து ளோரறியாமல், கன்மமாங்குழியினில் விழுந்தழிகின்ற கார ணமுரையீரே.

இ-ள். அடியேன் இதயாம்பரமே சிறந்த கோயிலாக எப்போ தும் குடிகொண்டிராநின்ற தேசிகமூர்த்தியே! சுவாமிகள் போதிக் கும் உண்மை ஞானமானது சநநத்திற்குக் காரணமான சஞ்சித கர் மங்களின் மூலமாகிய அவித்தையை அறியாநிற்கும்; சமஸ்தமும் தனது ஸ்வரூபமாகும்படி செய்யும் பெருமையை வானவரும் உல கத்தாரும் தெரியாமல் கிரியாமார்க்கமென்கிற படுகுழியில் வீழ்ந்து கெடுகின்ற காரணத்தைச் சொல்வீர். எ-று.

இ—ம். வெளிப்படை. (ரு௨)

அ—கை. மேல் வினாவிற்கு உத்தரம்.

அழிவிலாததற்பதந்தனை மைந்தனேயகமுகத்தவர்சேர்வார்
வழிநடப்பவர்பராமுகமாகினன் மலர்ந்தகண்ணிருந்தாலும்
குழியில்வீழ்வர்கா ணப்படிவெளிமுகங் கொண்டுகாமிகளா
பழிதரும்பிறவிக் கடலுழலுவார் பரகதியடையாரே. [னோர்

இ-ள். புத்திரா! கெடாத பிரமபதத்தை அந்தர்முகமுடையவர் கள் அடைவார்கள்; மார்க்கத்தில் செல்கின்றவர்கள் பராமுகமா னல் விகசிதமான நேத்திரங்களிருக்கினும் பள்ளத்தில் விழுவார் கள், அவ்வண்ணம் பகிர்முகமே தமக்குப் பயனாகக்கொண்டு விட யப்பயிற்சியை யுடையவர்களா யுழலுங் காமிகள் பழியைக்கொடுக்

கின்ற பிறவிக்கடலுள் சுழலுவார்கள்; முத்தியைப் பெறமாட்டார்கள். எ-று.

இ-ம். அகமுகமின்றிப் பகிர்முகமாகச் செல்லுதலே கன்மங்களில் செல்லுதற்கேது என்பதாம். (ருங)

அ—கை. சீவச்செயல் இவை சிவச்செயல் இவை எனத்தெளியும் நிமித்தம், சீவன் பகிர்முகமாதல் ஈசன் செய்விக்குஞ் செயலேயன்றிச் சீவர்கள் என்செய்வார்கள்? என்ற வினுவிற்கு உத்தரம்.

சிறந்தநன்மையுந் தீமையுமீசனுர் செய்விக்குஞ் செயலன்ருே, பிறந்தசீவர்க ளென்செய்வா ரவர்கண்மேற் பிழைசொலும் வகையேதோ, துறந்ததேசிக மூர்த்தியே யென்றிடிற் சுருதிநூற் பொருண்மார்க்கம், மறந்தமூடர்கள் வசனிக்கும் பிராந்திகாண் மைந்தனேயதுகேளாய்.

இ-ள். சகல பற்றுக்களையும் நீத்த குருவே! சிறப்பான நன்மையுந் தீமையும் ஈசனுர் செய்விக்குஞ் செய்கை அல்லவா? சனித்த சீவர்கள் என்ன செய்வார்கள்? அச்சீவர்கள்மேல் குற்றம்கூறற்குக் காரணம் என்னை? என்று கேட்பாயாகில், வேதசாஸ்திரார்த்த வழியை மறந்த அஞ்ஞானிகள் சொல்லுகின்ற மயக்கம்; புத்திரனே! அதைக்கேட்பாய். எ-று. (ருச)

இதுவுமது.

திகழ்ந்தவீசனுர் சிருட்டியுஞ்சீவனுர் சிருட்டியும் வெவ்வேறே, சகந்தனிற்பொது வீசனுற்சிருட்டிகள் சராசரப் பொருளெல்லாம், அகந்தையாமபி மானங்கள்கோபங்க ளாசைக ளிவையெல்லா, நிகழ்ந்தசீவனுர் சிருட்டிகளாகுங்காணிமலனுர் செயலன்றே.

இ—ள். சுத்தப்பிரமமாக விளங்காநின்ற ஈஸ்வர சிருட்டியும் சீவசிருட்டியும் வேறு வேறாம்; உலகத்தில் யாவர்க்கும் பொதுவான தாவரசங்கமங்களனைத்தும் ஈஸ்வர சிருட்டிகளாம்; நான் என்னும் அகந்தையாகிய அபிமானங்களும் துவேஷங்களும் ஆசைகளும் ஆகிய இவைகள் அனைத்தும் விளங்கிய சீவ சிருட்டிகளாம்; நின்மலமான ஈஸ்வர சிருட்டிகள் அல்ல. எ-று.

இ—ம். ஈஸ்வர சிருட்டி சீவசிருட்டிகள் இவையெனப் பகுத்துக் கூறினதாம். (௫௫)

இதுவுமது.

மூவராம்பரன் சிருட்டிக ளுயிர்க்கெலா முத்திசாதனமாகும், சீதனரது சிருட்டிக டங்களைச் செனிப்பிக்கும் பிணியாகும், தாவராதிக ணசித்திடி லொருவர்க்குஞ் சநநங்கணசியாவாம், கோபமாதிக ணசித்திடிற் பந்தமாங் கொடும்பிறவிகள் போமே.

இ-ள். திரிமூர்த்தி ரூபமான ஈஸ்வரனுடைய சிருட்டிகள் சீவர்களனைவர்க்கும் வீடடைதற்குச் சாதனமாம்; சீவசிருட்டிகளானவ்வ சீவர்களைப் பிறப்பிக்கின்ற சஞ்சித ரோகமாம்; ஈஸ்வர சிருட்டியாகிய தரு முதலிய பஞ்சபூத பௌதிகவடிவங்கள் நசிக்கில் யாதோருயிர்க்கும் ஜனனம் நீங்காவாம்; ஜீவசிருட்டியாகிய துவேஷ முதலியவை இறக்கின் பந்தமான கொடிய சநநங்கள் நசிக்கும். எ-று.

இ—ம். ஈஸ்வர சிருட்டியான பஞ்சபூத பௌதிக முதலிய தத்துவங்கள் முத்திக்குச் சாதனமும் சீவசிருட்டியான காமக்குரோதாதிகள் பவத்திற்கு எதுவுமாம் என்பதற்கு உத்தி கூறினதாம். (௫௬)

இதுவுமது.

ஈசர்காரியம்பிரளயத்தொழியவு மெவர்பவமொழிந்தார்கள்
தேசகாலதேகாதிக ளிருக்கவுஞ் சீவகாரியமோகம்
நாசமாக்கியவ் விவேகத்தினுயிரொடு ஞானமுத்தர்களானர்
பாசமோகங்கள் பசுபதி செயலன்றே.

இ-ள். ஈஸ்வர சிருட்டியான பஞ்சபூத பௌதிகங்கள் பிரளய காலத்தில் நாசமாகவும் யாவர் பிறவியை ஒழிந்தார்கள்? தேசம் காலம் தேகம் முதலிய ஈஸ்வர சிருட்டி யழியாதிருக்கும்போதே சீவசிருட்டியான காமமுதலியன நசிப்பித்து விவேகத்தினல் சீவன் முத்தர்களானர்கள்; ஆதலால் காமவெகுளி மயக்கங்கள் சீவச்செயலே அன்றிச் சிவச்செயல் அன்று என்பதாம். (கள)

இதுவுமது.

அச்சுவத்தமென்றொருமரமதி லிரண்டரும்பாவைகள்வாழும்
நச்சுமங்கொருபறவைபம்மரக்கனிநன் றுநன்றெனத்தின்னும்
மெச்சுமங்கொருபறவைதின்னுதென்வியங்கியப்பொருளாக
வைச்சமாமறை சீவனையீசனை வகுத்தவா றறிவாயே.

இ-ள். அரசென்று சொல்லப்பட்ட விருக்ஷ மொன்றுளது; அத்தருவில் அரிய பக்ஷிகளிரண்டு வாழ்ந்துகொண்டிருக்கும்; அவ்விடத்து (போகத்தை) விரும்புகிற ஒரு பக்ஷியானது அத்தருவின் பலத்தை நல்லது நல்லதென்று புசிக்கும்; அதன்கண் துதிக்கப் பெற்ற மற்றொருபக்ஷியானதுபுசியாது என்று அப்பக்ஷிகளைக் குறிப்புப் பொருளாகவைத்து மகா வேதமானது சீவனையும் ஈசனையும் பகுத்தவண்ணம் நீ விசாரித்து அறியக்கடவாய். எ-று.

அச்சுவத்தம் என்பது தலை கீழான மாயா விருக்ஷம் எனக் கொள்க.

இ—ம். மாயையில் வாழ்கின்ற சீவேஸ்வரர்களின் தாரதம்மியம் இஃதெனப் பகுத்துக் கூறினதாம். (ருஅ)

இதுவுமது.

இந்தச்சீவனால் வருமறு பகையெலா மிவன்செயலல் லாமல், அந்தத்தேவனால்வருமென்ற மூடர்கமூடர்களதோ கதி யடைவார்கள், இந்தச்சீவனால் வருமறுபகையெலா மி வன்செயலல்லாமல், அந்தத்தேவனா லன்றெனும் விவேகியே யமலவீ டடைவாரே.

இ-ள். இச்சீவனால் உண்டான காம முதலிய பகைகளாறும் இவன் செயலாலுண்டாமே அன்றி அவ்வீசனால் உண்டாமென்ற அறிவிலிகள் நரகத்தை அடைவார்கள்; இச்சீவனால் உண்டாகும் சட்பகைகள் முதலிய அனைத்தும் இச்சீவ சிருட்டியே அன்றி அவ் வீசனால் வந்தனவல்ல என்னும் விவேகிகளே நின்மலமான மோக்ஷ த்தை அடைவார்கள். எ-று.

இ—ம். காமாதிகளை ஈஸ்வர சிருட்டியெனக் கருதாமல் சீவசிரு ட்டி யெனக்கொண்டு அவற்றை விசாரத்தால் கெடுக்கின் முத்தி உண்டாம் என்பதாம். (ருகூ)

அ—கை. முன்பு ஈஸ்வர சிருட்டி பொது என்றமையால், அவரும் பொதுவாக வேண்டுமே? அங்ஙனமாயின், சீவர்களிடத்தில் பக்ஷபாதம் வருவானேன்? என்ற வினாவிற்கு உத்தரம்.

நலமெய்யையனே யெல்லவர்க்குந் தெய்வநாயகன்பொ துவானால், சிலரைவாழ்வித்தல் சிலரொடுகோபித்தல்செய்வ தேனென்றுயேல், குலவுமைந்தரைத் தந்தைபோற்சிட்டரை

க்குளிர்ந்து துட்டரைக்காய்வன், கலைகணல்வழிவரச் செயுந் தண்டமுங் கருணையென் றறிவாயே.

இ-ள். உண்மையே திருவுருக் கொண்டுவந்த ஆசிரியரே! அனைவர்க்கும் ஈஸ்வரன் பொதுமையானல் சிலரை இன்புறவும் சிலரைத் துன்புறவும் செய்வது என்னை என்று கேட்பாயாகில் குலவாநின்ற புத்திரர்களைப் பிதா தக்கபடி நேசிப்பதுங் கோபிப் பதும்போல, அவ்வீஸ்வரன் சற்சனருக்கின்பஞ் செய்து துர்ச்ச னருக்குத் துன்பஞ் செய்வன்; சாஸ்திரங்களின் விதிவழி ஒக்கும் படி சீவர்களைச் செய்யுஞ் சிட்சையும் கிருபையினலென்று உணர் வாய். எ-று.

இ-ம். சீவர்கள் சுகப்படும் பொருட்டு வருத்திய அஃதும் கரு ணையே யன்றிப் பக்ஷபாதமன்று என்பதாம். (௬0)

அ-கை. அங்ஙனம் ஆயின் ஈசன் யாவரையும் என் இரக்ஷிக்க வில்லை? என வருஞ் சங்கைக்கு உத்தரம்.

மணவிலங்கறு மைந்தனே கற்பகமரங்கனல் புனன் மூன்றும், தனையடைந்தவர் வறுமையுஞ் சீதமுந் தாகமுந் தவிர்த்தாலும், அனையவீசனு மடைந்தவர்க் கருள்செய் வானகன்றவர்க்கருள் செய்யான், இனையகுற்றங்க ளெவர் குற்றமாகுமென் றெண்ணிநீ யறிவாயே.

இ-ள். சம்சார விலங்கு நீங்கிய புத்திரா! கற்பக விருக்ஷமும் அக்கினியும் சலமும் ஆகிய இவை மூன்றும் தம்மைச் சேர்ந்தவர் களது தரித்திரத்தையும் குளிரையும் தாகத்தையும் நீக்கி இரட்சிக் கும்; அத்தன்மையனவாக ஈஸ்வரனும் தன்னை அடைந்தவர்களுக் குக் கிருபைசெய்வான், அடையாதவர்களுக்குக் கிருபைசெய்யான்; இத்தன்மையான குற்றங்கள் யாவர் குற்றமாமென்று ஆலோசித்து நீ தெரிந்துகொள்வாய். எ-று.

இ-ம். கற்பகவிருக்ஷ முதலியவற்றைச் சார்ந்தவர்க்குத் துன்பம் நீங்கி இன்பமுண்டாவதுபோல், ஈசனைச் சார்ந்தவர்களுக்குப் பவத்துன்ப நீங்கி வீட்டின்பமுண்டாவது உண்மையென அறிந்து அவனைச் சார முயற்சி செய்யாதது இவன் குற்றமே எனவறிக என்பதாம். (கூக)

அ-கை. ஞானம் உண்டாகச் சீவன் முயற்சிக்கும் மரபுகூறல்.

ஒன்றுகேண் மகனேபுமான் முயற்சியா லுரைத்து மானிடர்க்கீசன், நன்றுசெய்யவே காட்டியநூல்வழி நடந் துநல்லவர்பின்னே, சென்று துட்டவாதனை விட்டுவிவேகி யாய்ச் செனித்தமாயையைத் தள்ளி, நின்றுஞானத்தை யடைந்தவன் பவங்கள்போ நிச்சயமிதுதானே.

இ-ள். புத்திரா! ஒரு வசனங் கேட்பாய்; புருஷப் பிரயத்தினத்தினாலன்றி வேறொன்று லாகாதென முன்னர்க் கூறி, பின்பு ஈஸ்வரன் மனிதர்க்கு நன்மையைச் செய்யும் பொருட்டு காண்பித்த சுருதி மார்க்கத்திற் சென்று, சத்துக்கள் பின்திரிந்து, முன்னுள்ள குரோதாதியான அசுத்த வாசனையை நீங்கி, ஆன்மா அனான்மா என்கிற சிற்சடங்களைப் பகுத்தறியும் விவேகத்தையுடையவனாய், கற்பனையாக உதித்த சடமான மாயையை நீக்கி, விலக்ஷணமான கூடஸ்தனாயிருந்து பிரம சைதன்னியத்தைப் பெற்றவனுடைய பிறவிகள் நீங்கும், இதுவே சத்தியமாம். எ-று.

இ-ம். சீவன் தனது முயற்சியினால் ஈஸ்வரானுக்கிரகம் பெற்று, அவன் வாக்கியமான வேதாந்த முடிவைக் குருமுகமாக விசாரித்து, அதனால் விவேக முண்டாய் அஞ்ஞான நீங்கி ஞானம் உதயமாகில் பவம் நீங்கும் என்பதாம். (கூஉ)

அ—கை. யாதினுல் இந்த ஞானம் உதிக்கும்? என்ற வினுவிற்கு உத்தரம்.

இந்தஞானந்தான் வருவதெப்படியெனி லிடைவிடா விசாரத்தில், வந்தடைந்திடும் விசாரந்தா னேதெனின் மனு தியாஞ் சரீரத்தில், இந்தநானெவன் சித்தெது சடமேதுவிர ண்டு மொன்ருகக்கூடும், பந்தமேது வீடேதெனவு சாவுதல் விசாரமென் றறிவாயே.

இ-ள். இப்பிரமஞானமானது உதிப்பது எவ்வண்ண மென்று கேட்பாயாகில்,இடையருத ஆத்ம விசாரணையால் வரும்; விசாரணை யாவது யாது எனில், மன முதலிய தேகத்தி லிருக்கின்ற இந்த நான் யாவன்? சித்தென்பது யாது? சடமென்பது யாது? சித்தும் சடமும் ஆகிய இரண்டும் ஒன்ருகக் கூடப்பெற்ற பந்தம் யாது? அதனை விடப்பெற்ற முத்தியாது? என விசாரித்தல் விசாரணை யென்று அறிந்து கொள்வாய். எ-று.

இ—ம். சிற்சட விலக்கணங்களைப் பகுத்தறியும் விசாரமே ஞானம் உதிப்பதற்கு மூலம் என்பதாம். (சுங)

அ—கை. கன்மம் முக்கியம் என்னுங் கொள்கை நீங்கும்பொருட்டு ஞானம் உதிப்பதற்குச் சற்கருமம் இருக்க விசாரம் யாதுக்கு? என்ற வினுவிற்கு உத்தரம்.

போனசன்மங்க டமிலனுட்டித்தநற் புண்ணிய பரிபாகம்
ஞானமாகுமே விசாரமேனென் றிடி னுமுரைத்திடக்கேளாய்
ஆனபுண்ணிய மீசுராற்பணஞ்செயி னசுசிபோஞ்சுசியாகும்
மானதம்பினெவிசாரித்துஞானத்தை மருவுமென் றறிவாயே.

இ-ள். முன் சநநங்களில் அப்பியாசஞ்செய்த சற்கரும பரிபாகத்தால் ஞான முதிக்குமே, ஆன்மா அனான்மா என்கிற விசாரணை யாதுக்கு? என்றுயாகில், யாம் சொல்லுகிற உத்தரத்தைக் கேட்பாய்; தத்தம் வருணாச்சிரமங்கட்குரிய சற்கருமத்தை பலாபேக்ஷையின்றி ஈஸ்வரப்பிரீதி செய்யில் அந்தக்கரணத்திலுள்ள அசுத்தம் நீங்கும், சித்தசுத்தி வரும்; அம்மனம் பின்பு சிற்சடவிசாரஞ்செய்து ஞானத்தைப் பொருந்தா நிற்குமென்று தெரிந்துகொள். எ-று.

இ—ம். நிஷ்காமியமாகச் செய்யுஞ் சற்கருமம் சித்த சுத்தியையும்; விசாரம் ஞானத்தையுங் கொடுக்கும்; ஆதலால், விசாரமே வேண்டும் என்பதாம். (கூச)

அ—கை. பலபேற்றையுந் தரத்தக்க வலியுள்ள கன்மம் ஞானத்தைத் தராதோ? விசாரம் யாதுக்கு? என வினாதல்.

பத்தியும்வயி ராக்கியமும்பர லோகமுமணிமாதி
சித்தியுந்தவ நிட்டையும்யோகமும் தியானமுஞ்சாரூப
முத்தியுந்தரும்விசித்திரகருமங்கண் மோகமாத்திரந்தள்ளும்
புத்தியுந்தரலருமையோவிசாரமேன்புண்ணியகுருமூர்த்தி.

இ-ள். தருமஸ்வரூபமான ஆசிரியரே! ஈஸ்வர பத்தியையும், நிராசையையும், சுவர்க்காதி லோகங்களையும், அணிமா முதலிய அஷ்டமாசித்திகளையும், தவமும், சமாதியையும், இயமாதி அஷ்டாங்கயோகங்களையும், மூர்த்தியாகிய தியானங்களையும், சாரூபபத முத்தியையும் ஆகிய இவற்றைக்கொடுக்கின்ற பல சத்தியுள்ள கன்மங்களானவை, அஞ்ஞானத்தைக் கெடுக்கின்ற அறிவையுங் கொடுப்பது அரியதோ? விசாரணை யாதுக்கு? எ-று.

இ—ம். வெளிப்படை. (கூரு)

அ—கை. மேல்வினுவிற்கு உத்தரங்கூறுவான் ருெடங்கித் திருஷ்டாந்தங் கூறல்.

வேடமாறிய பேர்களையறியவே வேண்டினுன் மகனேகேள்
கூடமாமவர் சுபாவங்கள்சீலங்கள் குறிகளாய்ந்தறியாமல்
ஓடியுங்குதித்துந் தலைகீழ்நின்று முயர்ந்தகம்பத்தேறி
ஆடியும்பல கன்மங்கள்செய்யினு மவருண்மை தெரியாதே.

இ-ள். மாணுக்கனே! கேட்பாயாக; மாறுவேடங்கொண்டவர்களை யறிய விரும்பினுல் மறைந்திருப்பவைகளான அவர்களுடைய குணங்களையும் நடைகளையும் அடையாளங்களையும் ஆராய்ந்து; அவர் இணையர் என்றறியாமல், ஓடியும் குதித்தும் தலைகீழாக நின்றும் உன்னதமான ஸ்தம்பத்திலேறி ஆடியும் இவ்வாருன பல கன்மங்கள் செய்தாலும், அவர்களது யதார்த்த வடிவந் தெரியமாட்டாது. எ-று. (௬௬)

அ—கை. தாட்டாந்தங் கூறல்.

இன்னவாறந்தப்பிரமத்தையறிவிக்குமிலக்கணத்தால்
வேதம், சொன்னஞானமும் விசாரத்தால்வருமன்றிச்சுருதி
நூல்படித்தாலும், அன்னதானங்கடவங் கண்மந்திரங்களாசாரங்கள் யாகங்கள், என்னசெய்யினுந் தன்னைத்தா னறிகின்ற திவைகளால் வாராதே.

இ-ள். இத்தன்மையைப் போலப் பிரமஸ்வரூபத்தைத் தெரிவிக்கும் லட்சணத்தால் சுருதிசொல்லிய பிரஞ்ஞானமும்விசாரணையினுல் வருமே யல்லாமல், வேதசாஸ்திரங்களை வாசித்தாலும், அன்னதானங்களும் தவங்களும் மந்திரங்களும் ஆசாரங்களும் வேள்விகளுமாகிய இவைகளில் எந்தக் கருமங்களைச்செய்தாலும்

ஆத்மாவாகிய தன்னைத் தெரிந்துகொள்வது இக்கன்மங்களால் வரமாட்டாது. எ-று.

இ-ம். ஒருவன் உண்மையைத் தெரிவிக்குஞ் சத்தி உணர்வுக்கேயன்றித் தொழிற்கு இன்மைபோல, ஞானத்தை அறிவிக்குஞ்சத்தி விசாரத்திற்கேயன்றிக் கன்மத்துக்கு இன்று என்பதாம்.

அ-கை. ஞானம் உதிப்பதற்கு நீங்கவேண்டிய அஞ்ஞானம் கருமத்தால் அன்றி விசாரத்தால் எங்ஙனம் நீங்கும் எனல்.

துளங்கு தர்ப்பண மழுக்கறக் கைக்கொண்டு துலக்கினாற் போமன்றி, விளங்குபுத்தியா லுலகிலார் துலக்கினர் விமலதேசிகமூர்த்தி, களங்கமாகுமஞ் ஞானமுமப்படிகருமத்தாற் கழுவாமல், உளங்குறித்த ஞானத்தினா லெப்படியொழியுமீ தருள்வீரே.

இ-ள். நின்மலமான குருமூர்த்தியே! விளங்காநின்ற செப்புக்கண்ணாடியில் உள்ள களங்கம் அறும்படி கையால் விளக்கினால் போமே யல்லாமல், ஜகத்தின்கண் விளங்காநின்ற அறிவினால் எவர்கள் விளக்கினார்கள்? அவ்வண்ணமே களங்கமாகிய அஞ்ஞானத்தையும் சற்கன்மத்தினால் நீக்கப்படாமல், மனதிற் குறிக்கப்பட்ட அறிவினால் எங்ஙனம் நீங்கும்? இதைச் சொல்வீர். எ-று.

அஞ்ஞானத்தை "களங்கம்" என்றது ஆன்மாவை மறைத்தலினானென்க. (சூஅ)

அ-கை. ஞானம் உதிப்பதற்கு அஞ்ஞானத்தை நீக்குதல் விசாரத்தால் அன்றிக் கன்மத்தால் கூடாது எனல்.

தர்ப்பணத்தினிற் களிம்புவாஸ் தவமலஞ் சகசாமதலின்மைந்தா, கற்பளிங்கினிற் கருநிறஞ் சகசமாக் கறுத்

ததன் ருரோபம், தற்பணத்தினி லழுக்கற வேண்டினுற் சாதனத் தொழில் வேண்டும், கற்பளிங்கிலாரோபமே கறு ப்பெனக் கண்டிட மனம்போதும்.

இ-ள். மகனே! செப்புக் கண்ணுடியில் களிம்பாகிய உண்மை யான அழுக்கானது சுபாவம்; ஆதலால், படிகக்கல்லில் தோற்றிய கருமை நிறமானது சுபாவமாகக் கறுத்ததன்று, கற்பிதமாம்; செப் புக் கண்ணுடியில் களங்கமறும்படி விரும்பினுல் கருவிகளாற் செய் யுஞ் செயல்கள் வேண்டும்; படிகக் கல்லில் தோற்றிய கருநிறம் கற்பிதமே என்று பார்த்திட மனமே போதும். எ-று. (சுகூ)

அ—கை. மேல் உத்தரத்திற்கு உபமேயங் கூறல்.

இங்குமப்படிச் சச்சிதானந்தத்தி லிடர்சடம் பொய் மூன்றும், தங்குமாயையின் கற்பிதமன்றியே சகசவாஸ்த வமன்றே, பங்கமாகுமஞ் ஞானத்தைக் கருமங்கள் பகை செயா துறவாக்கும், துங்கஞானமே கருமவஞ்ஞானத் தைச் சுடுகின்ற நெருப்பாமே.

இ-ள். இத்தாஷ்டாந்தத்தினும் அத்திஷ்டாந்தத்தைப் போல அஸ்திபாதிப் பிரியரூபமாகிய தன்னில் அனுர்தம் சடம் துக்கம் ஆகிய மூன்றும் தங்கிநின்ற மாயாகற்பிதமே யல்லாமல் சுபாவமா யுள்ளதன்று; பழுதான அஞ்ஞானத்தை புண்ணிய கன்மங்களா னவை பகை பண்ணுமல் நட்பாக்கும்; மேலான ஞானமே கன்ம ரூபமாகிய அஞ்ஞானத்தை எரிக்கின்ற அக்கினியாம். எ-று.

இ—ம். செம்பில் களிம்புபோல ஆத்மாவுக்கு அஞ்ஞானஞ் சகச மாகாமல் பளிங்கில் பஞ்சவன்னம் போலப் பிராந்தியாதலால், அங்ஙனந்தோற்றுங் கன்மசம்பந்தமான அஞ்ஞானத்தைக் கெடுப் பது விசாரரூபமான ஞானமே ஆம் என்பதாம். (எ0)

அ—கை. மேற்கூறியதை வற்புறுத்தல்.

மனைக்குள்வைத்த பண்டங்களை மறந்தவன் வருடநூ றழுதாலும், நினைத்துணர்ந்தபின் கிட்டுமெப்படியிந்த நிருமல வான்மாவும், அநர்த்தமானதன் மறதியைக் கெடுக்குந்தன் னறிவினாற் காணமல், கனத்தகன்மங்க ளூறுகஞ்செய்யி னுங் காணுமே காணாதே.

இ-ள். வீட்டிற்குள்வைத்த வஸ்துக்களை வைத்தவிடந் தெரி யாது மறந்தவன் நூறுண்டு துக்கித்தாலும், முன்வைத்த விடத்தை ஞாபகஞ்செய்து அறிந்தபின் அவைகள்கிடைக்கும்; அதைப்போல, இந்த நிருமலமான ஆத்மஞானமும் துக்கத்திற்குக் காரணமாகிய தனது அறியாமையைப் போக்கும் தனது அறிவினால் தரிசிக்கப் படாமல், கனமான கன்மங்களை அநேகயுகஞ் செய்தாலும் காணப் படுமோ? காணப்படாது. எ-று.

இ—ம். ஞாபகத்தால் மறதிநீக்கின் முன்வைத்த பொருள் வெ ளிப்படும் அல்லது தொழிலால் வெளிப்படாததுபோல, விசார ஞானத்தால் அஞ்ஞானம் நீங்கின் முன்னுள்ள பிரமப்பொருள் வெளிப்படும் அல்லது கன்மத்தால் வெளிப்படாது என்பதாம். ()

அ—கை. பிரமசுகத்தை விசாரஞானங் கொடுக்கும் என்ற வேதம் அச்சுகத்தைக் கன்மமுங் கொடுக்குமென்பது யாது? என வினாதல்.

நன்மையாங்குரு வேசுகந்தருவது ஞானமேயெனும் வேதம், தன்மபாவமிச் சிரங்களாற்றேவர்க டருவிலங்கு கண்மாந்தர், சென்மமாகுவ சாதியாசாரமே செய்தவஞ்சுக மென்று, கன்மகாண்டத்தில் விதிப்பதேன் விதித்துவகா ரண முரையீரே.

இ-ள். நல்ல ஆசிரியரே! பிரமாநந்தத்தைக் கொடுப்பது அறிவே என்கிற சுருதியானது, புண்ணிய கன்மங்களால் தேவர்களும், பாவகன்மங்களால் விருட்சமுதல் மிருகம் ஈருகிய ஐவகைத்தோற்றமும், மிஸ்ரகன்மங்களால் மனிதர்களுமாகிய ஜநநம் ஆவன என்றும், வர்ணுச்சிரம தருமப்படிசெய்கிற தவமே சுகமெனவும், கிரியாகாண்டத்தில் விதித்ததென்னை? அங்ஙனம் விதியாநின்ற காரணத்தைச் சொல்வீர். எ-று.

இ—ம். வெளிப்படை. (எஉ)

அ—கை. அங்ஙனம் விதித்த வேதத்தின் அபிப்பிராயம் வேறு எனக்கூறல்.

தினமுமண்ணுகர் பிள்ளைநோய்க் கிரங்கியேதீம்பண்டமெதிர்காட்டிக், கனமருந்துக ளொளித்துவைத் தழைக்கின்ற கருணையாந் தாய்போல, மனையறங்கள் செய்மகங்கள் செய் நன்றென்று மலர்ந்தவா சகஞ்சொல்லும், நினைவுவேறுகாண் சுவர்க்ககா மிகளந்த நிர்ணயந் தெரியாரே.

இ-ள். நாள்தோறும் மண்ணைப்புசிக்கின்ற குழந்தையின்வியாதிக்கு இரக்கமுற்று, கனமான ஔஷதங்களை மறைத்துவைத்து, தித்திப்புள்ள வஸ்துக்களை எதிரே காண்பித்து, அக்குழந்தையைக் கூப்பிடுகின்ற கிருபையுள்ள தாயைப்போல, இல்லற தருமங்களைச் செய், யாகங்களைச்செய், அஃதுநன்மையென்று விகசிதமானவேத வாக்கியம் சொல்லுகின்ற கருத்து வேருகும்; சுவர்க்க விருப்பமுள்ளவர்கள் அக்கருத்தின் நிண்ணயத்தை அறியார்கள். எ-று.

ப—ம். 'மண்ணுகர் பிள்ளை' என்பதனுல் விடயத்தை நுகரும் அறிவிலி என்பதும், 'நோய்' என்பதனுல் பிறவித் துன்பம் என்பதும், 'இரங்கி' என்பதனுல் அருளுற்று என்பதும், 'தீம்பண்டங்

காட்டி' என்பதனுல் சுவர்க்காதி பதங்களைக் காட்டும் என்பதும், 'மருந்துகளொளித்துவைத்து' என்றதனுல் ஞானமுதத்தையொளித்துவைத்து எனவும், 'அழைக்கின்றதாய்' என்றதனுல் அவ்வமுதத்தைக்கொடுக்க வேதம்விளிக்கும் என்பதுங்கொள்ளக்கிடந்தன.

இ-ம். வேதம் இம்மை இன்பத்தை நீக்குவான் மறுமை இன்பத்தைக்கூறி அஃது நீங்கினபின் இதையும்நீக்கிப் பரமசுகமாக்கும் பொருட்டு அங்ஙனங் கூறின தென்பதாம். (எங)

அ-கை. வேதம் போகபாக்கியங்களை அனுபவிக்க விதி யாது என்பதற்கு உவமை கூறல்.

போகமாருயிர் கண்டதை யுண்பதும் புணர்வதுமியல்பேகாண், ஆகமங்களுஞ் சுபாவத்தை விதிக்குமோவத்தனை தெரியாதோ, காகமே கறுத்திடு நெருப்பேசுடு கசந்திடுவேம்பேநீ, வேகவாயுவே யசையென யொருவரும் விதித்திடல் வேண்டாவே.

இ-ள். போகத்தைப் புசிக்கின்ற சீவர்களுக்கு நேர்ந்த பதார்த்தங்களை அருந்தலும், நேரிட்ட பெண்களைப் பொருந்தலும் சுபாவமேயாம்; வேதங்களும் சுபாவத்தை நியமிக்குமோ? அவ்வளவுதெரியாதா? காக்கையே! நீ கறுத்திடுவாய், அக்கினியே! நீ சுடுவாய், வேம்பே! நீ கசந்திடு, அதிவேகமுள்ளகாற்றே! நீசலிப்பாய், என்று ஒருவரும் நியமிக்க வேண்டுவதில்லையே. எ-று.

ப-ம். அறிவின்மையால் உயிர்கட்கியல்பான அருந்தல் பொருந்தலென்னும் வாசனையை வேதம் விலக்குமே யன்றி விதிக்குமோ என்பார் "போகமா ருயிர் கண்டதை யுண்பதும் புணர்வது

மியல்பேகாண், ஆகமங்களுஞ் சுபாவத்தை விதிக்குமோ" எனக் கூறினர்.

இ-ம். வேதம் போகபாக்கியமே பயனுன கன்மத்தை விலக்கினதே யன்றி விதித்ததன்று என்பதாம். (எச)

அ-கை. கன்மகாண்ட வாக்கியம் பூருவபக்ஷம் என்பதற்கு உத்தி கூறல்.

கள்ளுமூனுநீ விரும்பினுன் மகங்கள்செய் காமத்தின் மனதானல், கொள்ளும் பெண்டொடு கலவிசெய் யெனி லிவன் குறையெலாந் தொடாநின்றே, தள்ளும்வேதத்தின் சம்மதஞ் சகலமுந் தவிர்வதே கருத்தாகும், விள்ளுமிவ் விதியென்னெனிற் பூருவநியமமாம் விதியன்றே.

இ-ள். மதுவையும் மாமிசத்தையும் நீ யுண்ண இச்சித்தால் யாகங்களைச்செய்து புசிப்பாய்; காமவேட்கை யுண்டானல் விவாகஞ்செய்யு மனைவியோடு புணர்ச்சிசெய்வாய் என்ருல், இக்காமிமற்றவைக ளனைத்தையுந் தீண்டாது நீக்குவதே வேதத்தினுடைய சம்மதம்; அப்படி அனைத்தும் நீங்குவதே அதன் அபிப்பிராயமுமாகும்; சொல்லாநின்ற இக்கன்மகாண்டவிதி என்னவென்ருல் பூருவபக்ஷமாக நியமித்த விதியாம். எ-று. (எரு)

அ-கை. இவ்விதி பூருவபக்ஷம் என்பதை வற்புறுத்தல்.

மதுவிறைச்சிக ளுண்ணென்ற சுருதிபின் மணந்துபாரெனல்பாராய், மிதுனவிச்சையும் புத்திரோற் பத்தியால் விரும்பென்ற விதிபாராய், இதையும் விட்டொழி யதிநயிட்டிக வன்னிக் கிகழ்ச்சியற் றதும்பாராய், அதையறிந்து கன்மங்க ளாசைகளொழிந் தானந்தமடைவாயே.

இ-ள். மதுமாமிசங்களைப் புசியென்ற வேதமானது பின்பு ஆக்கிராணஞ் செய்தாற்போதும் என்பதைப்பார்; மனைவியோடு புணர்ச்சி யின்பமும் மகப்பேறுண்டாம் பொருட்டு இச்சிப்பா யென்ற விதியைப் பார்; இவ்விதியையும் விட்டொழிந்த சந்நியாசிக் கும் நைஷ்டிகப் பிரமசாரிக்கும் நிந்தையில்லாததும் பார்; அக் கருத்தை உணர்ந்து கன்மங்களின்மேல் வைத்த இச்சைகள் நீங்கி ஞானத்தினாற் பிரமாநந்தத்தை அடைவாய். எ-று.

ப-ம். இல்லறதருமஞ் செய்யாமையால் துறவிக்கும் பிரமசா ரிக்கும் இழிவின்மை பாரென்பார், "அதிநயிட்டிக வன்னிக்கிகழ்ச் சியற்றதும் பாராய்" எனக் கூறினர்.

"மிதுனவிச்சையும் புத்திரோற்பத்தியால் விரும்பென்ற விதி பாராய்" என்றமையால், நேரிட்ட ஸ்திரீகளைப் புணரில் இம்மை யிற் பாவமும் பழியும், மறுமைக்கண் நரக துக்கமுமுண்டாகு மாத லால், ஒருத்தியை மணஞ்செய்து அவளைப் புணர்தி என்ற வேதம், பின்னே விதியாத தினத்திற்கூடில் துர்ப்புத்திரனுண்டாய் அவ னால் இம்மையிற் பாவமும் பழியும் மறுமையில் நரகதுக்கமும் வரு மாதலால் சற்புத்திரனுண்டாய் உனக்கும் உன்குலத்துக்கும் இம் மையிற் புகழும், மறுமையிற் சுவர்க்கமு முண்டாதற்பொருட்டு விதித்ததினத்தில் அவளைப்புணர்தி என்று சொல்லும் விதியையும் நீ பார்ப்பாய் என்பதாயிற்று.

இல்வாழ்வான் மனைவியோடு கூடுதற்கு விதித்த தினமா வன:—மாதர்கட்கு இருதுகாலம் வழக்கமாகப் பதினாறு நாட்க ளென்பர். அவற்றுள், மாதவிடாயானது முதல் நான்குதினம் பெரி யோர்களால் நிந்திக்கப்படுகின்றது; ஆதலால் அந்நான்கு தினமும், ஏகாதசி, திரயோதசிகளும் நீக்கி ஏனைப் பத்துதினத்திற் கூடுவது முறைமை: மாதவிடாயான நாள்தொடங்கி ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினான்கு, பதினாறுந் தினங்களிரவிற் சேர்ந்தால்

பிள்ளைகளும், ஐந்துமுதல் ஒற்றைப்பட்ட நாட்களிற் சேர்ந்தால் பெண்களும் பிறக்கும்; ஆதலால் புத்திர விருப்பமுள்ளவன் இரட்டைத்தினத்திற் சேரவேண்டியது; எவன் நீக்கவேண்டியமுதல் ன்கு தினத்தையும், ஏகாதசி, திரயோதசி, அமாவாசை, பௌர ைகளையும் நீக்கி மற்றைத்தினத்தி னிரவிற் றன் மனைவியோடு சருகிறானோ அவன் கிரகஸ்தனாக விருப்பினும், பிரமசாரியென் ற சொல்லப்படுகிறானென்று தர்மசாஸ்திரத்திற் சொல்லப்பட் உருப்பதால் அவையே மனைவியோடு புணர்தற்கு விதித்ததினமா மென்க.

இ—ம். வேதம் கன்மகாண்டத்தில் கூறும் வருணாச்சிரம கன்மங்கள் அதனாலுண்டாகும் போகவின்பங்கள் அனைத்தும் பின்பு துன்பங்களாக வருத்துதலைக் கண்டு அவற்றைவிடுத்துப் பரம சுகத்தைத் தேடவேண்டும் என்பது அதனபிப்பிராயம்; ஆதலால், இவற்றை ஒழித்துச் சுகத்தைத்தேடல்வேண்டும் என்பதாம். அதாவது பரமாத்வை ஞானத்தாலன்றிக் கர்மத்தால் அடையப்பாற் றன்று எனக்கூறினதாம். (எசு)

அ—கை. முற்கூறிய வண்ணம் ஞானம் அஞ்ஞானத்துக்குச் சத்துருவாயின், அஃது இஃதோடுஞ் சேர்ந்து ஒருதொழிலைச் செய்யலாமோ? என வினாதல்.

உலகமானவஞ் ஞானமுங்கருமமு முறவென்ற வழி
கூடும், பலவுமானவஞ் ஞானமுஞானமும் பகையென்பதுள
தானல், நிலவிலேமறுப் போலவஞ்ஞானமு நிமலஞானத்
தோடே, குலவிநின்றிந்தச் சிருட்டிகள் செய்யவுங் கூடு
மோ குருமூர்த்தி.

இ-ள். ஆசிரியரே! சகத்துருவமான அறியாமையும் சற்கருமங்களும் நட்பென்ற மார்க்கம் ஒக்கும்; நானாவிதமான அஞ்ஞா

மும் ஏகமான ஞானமும் சத்துரு என்பது உள்ளதானல் சந்திரனிடத்தில் களங்கம் இருப்பதுபோல அஞ்ஞானமானது களங்கமற்ற ஞானத்தோடும் சேர்ந்திருந்து, இச்சிருட்டியாதிகளைச் செய்யவுங் கூடுமோ? எ-று.

இ—ம். தமப்பிரகாசங்கள் தம்மின் விரோதிகளாகலின் இரண்டுங் கூடிநிற்றல் கூடாதென்பது சீடன் கருத்து. (எஎ)

அ—கை. மேல்வினவிற்கு உத்தரங் கூறல்.

சொரூபஞானமும் விருத்தி ஞானமுமென்று சோதி ஞானமுமிரண்டாம், சொரூபஞானமே விருத்தியின்ஞானமாய்த் தோன்றும் வேறிலைமைந்தா, சொரூபஞான மஞ்ஞானசத் துருவென்று சுழுத்தியிற் கண்டாயே, சொரூப ஞானத்தின் மருவுமஞ் ஞானத்தைச் சுடும் விருத்தியின் ஞானம்.

இ-ள். மாணக்கனே! சுயம்பிரகாசமான சைதன்னியமே சொரூபஞானம் எனவும், விருத்திஞானம் எனவும் இருவகையாம்; சொரூபஞானமே விருத்தி ஞானமாய்த் தோன்றுமே அன்றி மற்றொன்றில்லையாம்; ஸ்வரூப ஞானமானது அஞ்ஞானத்துக்குப் பகையென்று, சுழுத்தி யவத்தையில் பார்க்கின்றாயே; ஸ்வரூபஞானத்தில் கூடியிருந்த அறியாமையைச் சமாதியிலுதித்த விருத்திஞானமானது எரிக்கும். எ-று.

ப—ம். சுத்தசைதன்னியம் என்பார் "சோதிஞானம்" எனவும், பரஞானம் என்பார் "சொரூபஞானம்" எனவும், விசாரஞானம் என்பார் "விருத்திஞானம்" எனவும் சுழுத்தியில் அறிவின்மையின் வசமாகாமல் தானறிவாக இருந்ததை எதிரிட்டுக் காண்கின்றது என்பார், "சொரூபஞான மஞ்ஞான சத்துரு வென்று சுழுத்தியிற் கண்டாயே" எனவும், சமாதியில் உதயமான இவ் வறிவினல்

அஞ்ஞானம் நசிக்கும் என்பார், "சொரூப ஞானத்தின் மருவு மஞ் ஞானத்தைச் சுடும் விருத்தியின் ஞானம்" எனவுங் கூறினர்.

இ–ம். ஆத்ம சங்கற்பமான அறிவிற்கு உண்டான அறியாமை அவ்வறிவில் உதயமான அனுபூதியினுல் கெடும் என்பதாம். (எஅ)

அ–கை. காரணத்தால் கெடாத அஞ்ஞானம் காரியத்தால் எங்ஙனங் கெடும்? என்ற வினுவிற்கு உத்தரம்.

துருத்திமாயையைச் சுழுத்தியிற்சுடாதது சொரூப ஞானந்தானே, விருத்திஞானமாய்ச் சுட்டதெப்படியெனில் வெய்யிலா துலகெங்கும், பரித்தசூரியன் சூரியகாந்தத்திற் பற்றியக்கினியாகி, எரித்தவாறுபோற் சமாதியில்விருத்தி யா லெறிக்குமென் றறிவாயே.

இ-ள். துருத்தியைப் போல உசுவாச நிசுவாசங்களையுடைய சடமாகிய அஞ்ஞானத்தைச் சுழுத்தியின்கண்ணே கெடுக்காதது சொரூபஞானந்தானே; அதுவே விருத்தி ஞானரூபமாய் எரித்தது எங்ஙனம்? எனின், சகத்தில் எவ்விடத்தும் வியாபித்த தனது உஷ்ண கிரணத்தினுல் எரிக்காமல் சூரியனுனவன் சூரிய காந்தக் கல்லிற் பற்றி அக்கினி ரூபமாய்ச் சகல வஸ்துக்களையுந் தகித்த தன்மையைப்போல, நிட்டையின்கணுதிக்கும் பூரணவிருத்தி ஞானத்தினுல் திரிசிய ரூபமான அஞ்ஞானத்தைக் கெடுக்கும் என்று உணர்வாய். எ–று.

இ–ம். காரணமான கிரணத்தால் கெடாதபொருள்கள் காரியமான அக்கினியால் கெடுவதுபோல, சொரூபஞானத்தால் கெடாத அஞ்ஞானம் அதிலுதயமான பூரணவிருத்தி ஞானத்தால் கெடும், என்பதாம். (எக)

அ—கை. விருத்திஞானம் அந்தக்கரண காரியம் ஆதலின் அதைக் கருமம் எனப்படாதோ? என வினுதல்.

அருளுமையனே திரிவித கரணத்தா லாகிய தொழி லெல்லாம், கருமமல்லவோ விருத்திஞானமு மந்தக்கரண காரியமன்றோ, உரியகன்மமஞ் ஞானத்தைக்கெடுக்குமென் றோதினு லாகாதோ, பெரிய ஞானமென் றதற்கொரு பேரி ட்ட பெருமையை யுரையீரே.

இ-ள். அடியேன் சங்கைக்கெல்லாம் தக்கவிடைஅனுக்கிரகஞ் செய்யாநின்ற எனது குருவே! மனம் வாக்குக் காயம் என்கின்ற, மூக்கரணங்களால் உண்டான கிரியைகள் அனைத்தும் கன்மம் அல் லவா? அகம் பிரமமென்னும் விருத்திஞானமும் அந்தக்கரணத்தின் பரிணாமமாதலின் அதன் காரியமல்லவா? இங்ஙனங் காரியமாக்கற் குரிய விருத்தி ஞானமென்னும் மானச கன்மமானது அஞ்ஞானத் தை நசிப்பிக்கும் என்று உரைக்கின் ஆகாதா? மஹத்தான ஞான மென்று அக்கன்மத்திற்கு ஒரு நாமந் தரித்த மகிமையைச் சொல் வீர். எ-று.

இ—ம். வெளிப்படை. (அ0)

அ—கை. மேல் வினுவிற்கு உத்தரம்.

விருத்திஞானமந் தக்கரணத்தொடு விருத்தியாகிலு மைந்தா, ஒருத்திமக்களே தங்களிற் பகைக்கின்றதுலகெங் கும் கண்டோமே, கருத்தணுகிய புருடதந்திரங்களாங் கரு மங்களவைபோல, வருத்தஞானமோ புருடதந்திரமன்று வத்துதந்திரமாமே.

இ-ள். மாணுக்கனே! நான் பிரமமாகின்றேன் என்னும், விரு த்தி ஞானமானது மனத்தினுடைய விருத்தியானுலும், ஒருதாயின்

புத்திரர்கள் தங்களுக்குள்ளே பகைக்கின்றதை சகம் எங்கும்பார்த் திருக்கின்றோம்; கன்மங்களானவை அகம்பாவமுள்ள புருட தந்தி ரங்களேயாம்; விசாரப் பிரயத்தனத்தா லுளதாகாநிற்கும் விவேக ஞானமானது அவற்றைபோலப் புருடதந்திரம் அன்றாம், வஸ்துவி னது தந்திரமாம். எ-று.

இ-ம். விருத்திஞானமுங் கன்மமும் அந்தக்கரணகாரியம் ஆயி னும், புருடதந்திரத்தால் மனதிலுதிக்கும், கன்மத்தை வஸ்துதந் திரத்தால் மனதிலுதிக்கும், பூரணவிருத்தி ஞானங்கெடுக்கு மாத லின், அவ்விருத்திஞானங் கன்மம் ஆகாது என்பதாம். (அக)

அ-கை. போன சன்மங்களென்ற செய்யுள் முதல் இதுகாறும் கன்மமானது ஞானம் உதிப்பதற்கு ஏது அன்றெனை, அதை விசாரஞானத்தால்நீக்கி, மேல் அவ்விசாரஞானத்தையும் நீக்கு வான் தொடங்கி, அதை யோகஞானமும் விவேகஞானமும் என, இருதிறனுகக் கூறுகின்றார்.

வகுத்தகன்மங்கள் செய்யவுந்தவிரவு மற்றொன்றாக்க வுங் கூடும், மிகுத்தஞானமப்படியன்று தியானமும் விவேக ஞானமும் வேறே, செகத்தி லொன்றையொன் றுவிவன்பா விக்குந் தியானங்கற் பிதயோகம், முகத்தமாக்கண்டஞான மேவாத்தவ மோகமாய் மயங்காதே.

இ-ள். புருடர்களால் வகுக்கப்பட்ட கன்மங்களானவை விதி த்தபடி செய்தற்கும் ஒழிதற்கும் மற்றொருவிதமாக விரும்பியபடி செய்தற்கும் ஆம்; பூரண ஞானமானது அத்தன்மையையுடைய தன்று; தியானமும் விவேகஞானமும் வேறாகும்; உலகத்தின்கண் ஒருவஸ்துவை மற்றொரு வஸ்துவாக இப்புருடன் பாவிக்கின்ற கற் பனு யோகமானது தியானமாம்; பிரத்தியக்ஷமாகத் தரிசித்த

ஞானமே உண்மையான விவேக ஞானமாம்; இவற்றிலறியாமை யுடைவனாய் மயங்காதே. எ-று.

இ—ம். யோகஞானம் கற்பிதமான பரோக்ஷமும் விவேக ஞானம் உண்மையான அபரோக்ஷமும் ஆம், என்பதாம். (அஉ)

இதுவுமது.

கண்டறிந்தது ஞானங்கேட்டதுதனைக் கருதுபாவனை யோகம், கண்டபேர்சொலக் கேட்டது மறந்துபோங் கண்டது மறவாதே, கண்டவத்துமெய் தியானவத்துக்கள்பொய் கறுவியஞ்ஞானத்தைக், கண்டவக்கணங் கொல்வது ஞானமே கருமமென் றறிவாயே.

இ-ள். அனுபவமாகப் பார்த்துணர்ந்தது ஞானமாம்; கேட்டதைத் தியானிக்கின்ற பாவனையானதுயோகமாம்; பார்த்தவர்கள் சொல்லக்கேட்ட பொருள் மறந்துபோம்; பார்த்தது மறக்காது; பார்த்த பொருளானது உண்மையாம்; பாவிக்கின்ற பொருள்களானவை மித்தையாம்; கோபித்து அறியாமையைப் பார்த்த அந்த க்ஷணத்தில் கெடுப்பது ஞானமேயன்றிக் கன்மம் அன்று; இதனை யுணர்வாயாக. எ-று.

இ—ம். தியானயோகம் கேட்டவண்ணம் பாவித்தலும், விவேக ஞானம் பாவித்தவண்ணம்கண்டாலும் ஆதலால், இஃதே உண்மை என்பதாம். (அ௩)

அ—கை. தியானயோகம் கற்பிதம் எனின், அதில் உதிக்கும் முத்தியும் கற்பிதம் அன்றோ? என்னும் வினாவிற்கு உத்தரம்.

சருவமுத்தியைத் தருகின்ற தியானமுஞ் சத்தியமன்றென்றால், சருவமுத்தியுஞ் சத்திய மன்றென்று சங்கியா

தேநீகேள், உருவங்கேட்டவன் றியானிக்கும்பொழுதி லவ்வுருவம் வாத்தவமன்றே, உருவமாகு மப்பொழுது கண்ணுற்கண்ட வுருவம்வாத்தவமாமே.

இ-ள். சர்வம் பிரமமயம் என்னும் வீட்டைக் கொடுக்கின்ற தியானத்தையும் உண்மை அன்றென்று சொன்னல், அத்தியானத்தில் வரும் பூரணனுபவமும் உண்மை அன்றென்று நீ சங்கியாதே; அதற்குச் சமாதானம் சொல்வோம் கேட்பாயாக; பிரமஸ்வரூபத்தைக் கேள்வியுற்றவன் சிந்திக்கும்பொழுது அப்பாவனு ரூபமாகிய ஸ்வரூபம் உண்மை அன்று; அப்பாவனேயானது அந்த ஸ்வரூபமாகும்போது ஞானதிருஷ்டியினுற் பார்த்த ஸ்வரூபமானது உண்மையாம். எ-று.

இ-ம். பாவனே கற்பிதமும் அதில் நின்று அதைக் கரைத்தெழாநின்ற பாவிப்பவன் உண்மையும் ஆதலால், அப்பாவனே மித்தையே, அதனுல் உதயமாகு முத்தி சத்தியமே ஆம் என்பதாம். (அசு)

அ—கை. பொய்க்கு மெய்யை உதிப்பிக்குஞ் சத்தி எது? என்ற வினுவிற்கு உத்தரம்.

சடமதாகிய தியானமெய்யாகியசர்வமுத்தியைநல்கும்,
திடமதானதெப் படியெனிலவரவர் தியானமே பிறப்பாகும்,
உடலமாசையாற் றியானிக்கிற் றியானித்த வுடல்களாகுவர்
மைந்தா, தொடர்பவங்கெடச் சொரூபமே தியானிக்கிற்
சொரூபமாகுவர் மெய்யே.

இ—ள். மாணுக்கனே! பொய்யாகிய தியானமானது சத்தியமாகிய பரிபூரணமான கைவல்யத்தைக் கொடுக்கின்ற திடத்தையுடையதாயிருப்பது எங்ஙனம்? என்று கேட்கில், அவரவர் மரண

காலத்திலே சிந்திக்கிற ரூபமாகவே மறுசநநமுண்டாகும்; ஆகை யால், தேக இச்சையினுற் சிந்திக்கச் சிந்தித்த வடிவமாவார்கள்; தொன்றுதொட்டு வருகின்ற சநநம் மீண்டுண்டாகாமல் கெடும் பொருட்டு ஆத்மஸ்வரூபத்தைச் சிந்திக்க அச்சொரூபமே ஆவார் கள்; இஃது உண்மையாம். எ-று.

ப—ம். தியானம் சிற்சட வுருவமாகும் என்பார், "தியானித்த உடல்களாகுவர்" எனவும்; "சொரூபமாகுவர்" எனவுங் கூறினர்.

இ—ம். தியானத்திற்குக் காரண உருவம் சத்தும் காரியவுரு வம் அசத்தும் ஆதலின், அதற்கு அந்தச் சத்தை அறிவிக்கும் வல் லமை உண்டாயிற்று என்பதாம். (அரு)

அ—கை. தியானத்திற்கு இச்சத்தி யிருக்க விசாரஞானம் யாதுக்கு? என்ற வினுவிற்கு உத்தரம்.

பிரமரூபத்தைத் தியானித்த பேர்களும் பிரமமாகுவ ரென்ருல், நரசரீரமாங் குரவனே விசாரமேன் ஞானமே னென்னுதே, பரமபாவனை பரோக்ஷமாம் பின்பந்தப்பரோ க்ஷமே யபரோக்ஷம், திரவிசாரமா ஞானமேமுத்தியாந் தீர் வையீ தறிவாயே.

இ-ள். மானிடவடிவமாக வெழுந்தருளிய குருவே! பிரமஸ்வ ரூபத்தைச் சிந்தித்தவர்களும் அப்பிரமமே ஆவார்களென்றுசொன் ஞல், விசாரம் யாதினுக்கு? ஞானம் யாதினுக்கு? என்றுகேளாதே; பிர்மத்தியானமானது முன்னே தியானிக்கும்போது பரோக்ஷஞா னமாம், அத்தியானம் பரிபாகமான பின்பு அந்தப் பரோக்ஷஞான மே உபாசனு வீக்ஷணியத்தால் அபரோக்ஷ ஞானமாம்; திடமான

விசாரத்தினல் உதிப்பதான அந்த அபரோக்ஷ ஞானமே மோக்ஷமாம்; ஆதலால் இதுவே முடிவென்றறிவாயாக. எ-று.

இ—ம். தியானத்தின் காரியம் யோகமும், காரணம் விசாரஞானமும்ஆதலால், அவ்விசாரஞானமே வீடடைவதற்கு வேண்டும் என்பதாம். (அசு)

அ—கை. முன்பு தியானயோகத்தைநீக்கி மேல் விசாரஞானத்தை நீக்குவான் விருத்திஞானம் இருக்கின் சுபானுபவம் எங்ஙனங் கூடும்? என்ற வினவிற்கு உத்தரம்.

வீடதாம்பரி பூரணசொரூபத்தில் விருத்திஞானமுங் கூடிச், சேடமாகினு லகண்டமா மனுபவ சித்தியெப்படியென்ருல், சாடிநீர் மண்ணைப் பிரித்ததேற் ரும்பொடி தானுமண் ணெடுமாயும், ஊடிஞானமு மறிவிலாமையைக்கெடுத் தொக்கவே கெடுந்தானே.

இ-ள். முத்திரூபமாகிய பரிபூரணமான பிரமஸ்வரூபத்தில் அந்தக்கரணத்தின் விருத்திரூபமான தத்துவஞானமுஞ் சேர்ந்து விசேடமானல், அகண்டாகார அனுபவம் சித்திப்பது எங்ஙனம்? என்னின், சாடியிலிருக்கும் சலத்தின்கண் உள்ள சேற்றை வேறு செய்த தேற்ருங்கொட்டைத் தூளும் அச்சேற்ருேடுங் கெடும்; அதுபோல, விருத்திஞானமும் பகைத்து அஞ்ஞானத்தைக் கெடுத்துத் தானுங் கூடவே நசிக்கும். எ-று.

இ—ம். விசாரஞானம், அறிவுதயமாம் பொருட்டு அறிவின்மையைக் கெடுத்து, அதனேடுங் கெடுவதே அன்றிச் சேடிக்கமாட்டாது, என்பதாம். (அஎ)

அ—கை. கைதவங்கள் என்றசெய்யுள் முதல் இதுகாறும் உகபற் சிருட்டியால் உண்டான சஞ்சிதம் பரஞானத்தால் கெடும் எனவும், அதனுல் உண்டான மனேகாரியமான கன்மத்தை அதன் காரணமான விசாரஞானங் கெடுத்து, அஃதும் இதனேடுங் கெடும், எனவும் கூறி, இச்செய்யுளில் அவ்வனுபவமுள்ள சீவன் முத்தர் இலக்கணங் கூறல்.

இந்தநிச்சய முத்தருளனுபவ மிருப்பதெப்படியென்றுல், சிந்தையற்றபூ மண்டலவிசாரனுஞ் சிசுவும்போற் சுகமாவர், பந்தமுத்திகண் மறந்துபோமுண்டென்று பலர்சொலினகையாவர், அந்தரத்தையுண் டுமிழ்ந்ததோர் கொசுகெனுமவர்களே நகையாரோ.

இ-ள். இந்த நிச்சயரூபமான வகண்டாநுபவமானது சீவன் முத்தருக்குள்ளே அனுபவமாக இருக்கின்றது எவ்வண்ணம்? என்றுல், பகைவர் உளரென்னுஞ் சிந்தையின்றிப் பூவுலகமுழுதும் ஆளுகின்ற சக்கரவர்த்தியையும் நன்கு தீதென்றறியாத குழந்தைகளேயும்போல, அவர்கள் சுகஸ்வரூபராயிருப்பார்? பந்தமுத்திரூபமான பாவனு விகற்பங்கள் ஒழிந்துபோம்; அவை உளவாம் என்று அநேகருரைக்கில் சிரிப்பார், ஒருமசகமானது ஆகாயத்தை விழுங்கிக் கக்கிற்றென்னு மவர்களே யார்தான் நகையார்கள்? எ-று.

ப—ம். சுவானுபூதி எப்போதும் ஒருதன்மையாக விளங்குகின்ற தனக்கு, அறியாமையால் பந்தமும் அதன் நிவர்த்தியான வீடும் இப்போது உண்டானது இன்று என்பார், "பந்த முத்திகண் மறந்துபோ முண்டென்று பலர்சொல்லி னகையாவர்" எனக் கூறினுர்.

இ—ம். அறிவறியாமை இன்றி முன்னுள்ள சத்தமாத்திரமாக விளங்கிச் சுகித்திருப்பவனே சீவன் முத்தன் என்பதாம். (அஅ)

அ—கை. மத்தியில் அவாந்தரமாகத் தோன்றும் கற்பனையில் மயங்காமைக்கு ஓர் கதை கூறல்.

மலடிமைந்தனுந் தாணுவிற்புருடனும் வான்மலர் முடிசூடி, இலகுகந்தர்ப்ப நகரிலேசுத்திகை யிரசதம் விலைபேசிக், கலகமாயினு ரிடையினிற் கயிற்றராக் கடித்திரு வருமாண்டார், அலகையாயினு ரெனும்விவ காரத்தை யறிந்தவன் மயங்கானே.

இ-ள். மலடி புத்திரனும், குற்றியிற் றோன்றிய புருடனும், ஆகாயதாமரைப் பூவைச் சிரசில் தரித்து, விளங்காநின்ற கந்தர்வ நகரத்திலே கிளிஞ்சில் வெள்ளியை விலைபேசி பிணக்கடைந்தார்கள்; நடுவில் ரச்சு சர்ப்பந் தீண்டி முன் சொன்ன இரண்டுபேர்களும் இறந்து போயினார்கள் என்கிற கதையினது நியாயத்தைத் தெரிந்தவன் மயங்கமாட்டான். எ-று.

இ—ம். கற்பனையின் மூலந் தெரிந்தவன் அதனிடத்தில் மயங்கான் என்பதாம். (அகூ)

அ—கை. இதுகாறும் காரியோபாதியான அவித்தையினால் உண்டான மயக்கத்தை நீக்கி, மேற்காரணோபாதியான மாயையினால் உண்டாகும் மயக்கத்தைக் களைதற்பொருட்டு, அஃதும் மித்தையாதலின், அதனால் வரும் பலப்பிராப்திகளும் மித்தை என்று அகற்றி, நீ சுவானுபூதியாக விளங்குவாய் எனக்கூறல்.

மாயை யென்பது பொய்யெனிலதுபெற்ற வகையெலாம் பொய்யாமே, தாயையன்றி மக்களுக்கொரு பிறவியுஞ் சாதியும் வேறுண்டோ, சேயசொர்க்கமு நரகமு நன்மையுந் தீமையும் பாராமல், தூயசத்துச்சித் தானந்த பூரணசொரூபமா யிருப்பாயே.

இ-ள். மாயையென்று சொல்லப்படுவது மித்தை யென்றால், அதனால் உண்டான பொருளனைத்தும் மித்தையேயாம்; எங்ஙன மெனின், தாயின் பிறப்புஞ் சாதியுமன்றி அவள் புத்திரருக்கு வேறு ஒரு பிறப்பும் குலமும் உண்டோ இல்லை; ஆதலால், செவ்வி தான சுவர்க்காதி பதங்களும், ரௌரவாதி நரகங்களும் நன்கென் பவையும் தீங்கென்பவையும் இவையெனப் பாராமலே பரிசுத்த மான சச்சிதாநந்தமாகிய பரிபூரண ஸ்வரூபமாக இருப்பாய். எ-று.

இ-ம். மாயை மித்தையாதலின் அதன் காரியங்கள் அனைத்து மித்தையேயாம் என்பதாம். (கய0)

அ-கை. மாயாகாரியம் மித்தை ஆயின் பிரமன் முதலிய அனைத்தும் மித்தையாமே? அங்ஙனங் கூறின் குற்றம் வாராவோ? என வினாதல்.

பங்கயாசனன் முதற்பல தேவரும் பாருள பெரியோ ரும், கங்கையாதியாந் தீர்த்தமுந் தேசமுங் காலமுமறை நாலும், அங்கமாறுமந் திரங்களுந்தவங்களு மசத்தியமெ னச்சொன்னால், எங்கணாயகரே யதனாற்குற்றங்களில்லையோ மொழியீரே.

இ-ள். எமதாண்டவரே? பிரமன் முதலிய சமஸ்த தேவர்க ளும், பூமியின்கண்ணுள்ள மகான்களும், பகீரதி முதலிய தீர்த்தங் களும், புண்ணிய தேசங்களும், திரிகாலங்களும் வேதங்கள் நான் கும், சாத்திரங்களாறும், பிரணவாதி மகாமந்திரங்களும், தவங் களும் மித்தை என்றுரைக்கில், அங்ஙனஞ் சொல்லுவதனால் பிழை களில்லையோ? சொல்வீர். எ-று.

இ-ம். வெளிப்படை. (கக)

அ-கை. மேல்வினாவிற்கு உத்தரம்.

சொப்பனந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல்வது பிழையானல், அற்பமாயையிற் ரேன்றிய சகங்களே பசத்தெனல் பிழையாமே, சொப்பனந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல்லலா மெனின்மைந்தா, அற்பமாயை யிற்ரேன்றிய சகமெலா மசத்திய மெனலாமே.

இ-ள். புத்திரா! கனவில் கண்டதை மித்தையென்று சொல்வது குற்றம் ஆயின், அற்பமாகிய மாயையினிடத்திற் ரேன்றிய உலகங்களனைத்தும் மித்தை யென்ருல் குற்றமாம்; கனவில் கண்டதை மித்தையென்று சொல்லலாமெனில், சிறுமையாகிய மாயையினிடத்தில் உண்டான உலகமனைத்தையும் மித்தை யென்றுரைக்கலாம். எ-று.

இ-ம். சொப்பனம்போல மாயாகாரியமான சகசீவ பரங்கள் என்றும் மித்தையாதலின், அவைகளின் இயல்பைக் கூறுதலால் குற்றமில்லை என்பதாம். (கூஉ)

அ-கை. சத்து அசத்தின் உண்மை இஃதெனக் கூறல்.

பொய்யை மெய்யென்ற மூடர்புண்ணியரென்று புராணங் கூப்பிடுமானல், மெய்யை மெய்யென்ற ஞானிக்குக் குற்றங்கள் விதித்த சாத்திரமுண்டோ, பொய்யதே தெனி ஞமரூபங்களாம் பூதமாகிய மாயை, மெய்யதேதெனிற் சச்சிதானந்தமாய் வியாபிக்கு மான்மாவே.

இ-ள். மித்தையைச் சத்தியமென்ற அறிவிலாரைத் தருமவான்களென்று அஷ்டாதச புராணங்களு முறையிடுமாயின், உண்மையை உண்மையென்ற ஞானவான்களுக்குக் குற்றங்களை நியமித்த நூல்களுமுளவோ? மித்தையாவது எது? எனில் நாமரூப வடிவங்களான பஞ்சபூத பௌதிகங்களாகிய மாயையேயாம்; தத்து

வம் யாது? எனில், சச்சிதாநந்த ஸ்வரூபமாக வியாபித்திருக்கும் ஆத்மஸ்வரூபமேயாம். எ-று.

இ–ம். ஆத்மா அநாத்மாவின் இலக்கணங் கூறினதாம். (கரு)

அ–கை. மாயையின் தன்மை இஃதெனத் தோன்ற அறுவகையால் வினாதல்.

மாயையென்பதே துடையராரெப்படி வந்தது வருவானேன், மாயையென்பது பிரமத்தின் வேறெனின் வத்துவுமிரண்டாமே, மாயையென்பதும்பிரமமு மொன்றெனின்வத்துவும் பொய்யாமே, மாயையென்ற மேகங்களுக் கொரு சண்டமாருதகுருமூர்த்தி.

இ-ள். மாயை என்கின்ற மேகங்களுக்கு ஒப்பற்ற பெருங்காற்றாகிய தேசிகமூர்த்தியே! மாயை என்று சொல்லுவது யாது? அதனை உடையவர் யாவர்? எவ்விதம் உதயமாயிற்று? உண்டான காரணம் என்ன? மாயை என்று சொல்வது பிரமத்துக்கு வேறானது என்றுரைக்கின் வஸ்துவுந் துவிதமாமே? மாயையென்று சொல்லப்படுவதும் பிரமமென்றுசொல்லப்படுவதும் ஏகமென்றால், மாயாவஸ்துவைப்போலப் பிரமவஸ்துவும் அசத்தியமாமே? இதனை அருளுவீராக. எ-று.

இ–ம். மாயையின் உருவத்தையும், அதை உடையவர்களையும், அதனுற்பத்தியையும், அஃது உதித்தற்குக் காரணமும், அஃது பிரமத்திற்குப் பின்னமாயின் வஸ்து துவிதமாமே எனவும், அபின்னமாயின் வஸ்துவும் மித்தையாமே எனவும், அதனுண்மையைத் தெரிய வினாவினதாம். (கச)

அ–கை. மேற்கூறிய அறுவகை வினாக்களில் முதல்நான்கு வினாவிற்கு உத்தரங் கூறல்.

அதனையின்னதென் றுரைத்திடப்படாமையா லவாச்சியவடிவாகும், இதுதனக்குளதுடலியா னுலகுமெய்யெனு மவருடையோர்கள், கதையிலாதபொய் வந்ததிப்படியென்று கண்டபேரில்லைமைந்தா, விதனமாயையேன் வந்ததென் றுற்புத்தி விசாரமற்றதனாலே.

இ-ள். மகனே! அம்மாயையை இத்தன்மையுள்ளதென்று சொல்லக்கூடாமையால் அவாச்சிய உருவமாம்; இஃது எனக்குள்ளது, இத்தேகம்நான், இச்சகம் சத்தியம் என்னும் அபிமானமுடையவர்களே அதனை யுடையவர்கள்; காரணமில்லாத மித்தையான மாயை யுதித்தது இவ்விதமென்று பார்த்தவர்கள் இல்லை. துன்மயமான மாயையானது என் தோற்றிற்று எனில், ஆத்மஞானவிசாரம் செய்யாததினால் வந்தது. எ-று.

ப-ம். உருவம் அருவம் உருவாருவம் என மாயையைப் பகுத்துச் சொல்லக்கூடாதென்பார், "அவாச்சிய வடிவு" எனவும், தேகாதி பிரபஞ்சத்தை உண்மையென்று கொள்பவரே அம்மாயை உடையவரென்பார் "உடலியானுலகு மெய்யெனு மவருடையோர்கள்" எனவும், மித்தையாகத் தோன்றல் மாத்திரமே அன்றி உற்பத்தி இல்லை என்பார் "பொய்வந்ததிப்படியென்று கண்டபேரில்லை" எனவும், அங்ஙனந் தோன்றுதல் யாதினால் என விசாரிக்கும் விசாரம் இன்மையே அதனுற்பத்திக்குக் காரணம் என்பார், "மாயையேன் வந்ததென்றுற் புத்திவிசார மற்றதனாலே" எனவுங் கூறினார்.

இ-ம். மாயையின் உருவத்தையும், அதனை உடையவர்களையும், அதனுற்பத்தியையும், அஃது உதித்தற்குக் காரணத்தையும் இவையெனக் கூறினதாம். (கரு)

அ-கை. ஐந்தாம் வினுவிற்கு உத்தரம்.

அருவமாகுமாயாவி வித்தைகள்விளை யாடுமுன்றெரியாவே
உருவமாம்பலகந் தர்ப்பசேனையா யுதித்தபின்வெளியாகும்
பிரமசத்திகள னந்தமாமதைக் கண்டுபிடித்திடல்கூடாதே
பரவுபூதங்கள் கண்டனுமானத்தாற் பலருக்கும்வெளியாமே.

இ-ள். இந்திரசாலஞ் செய்பவன் அருவமாகிய கந்தர்வ நகர முதலானவைகளைக் காட்டி விளையாடுதற்கு முன்பு அவன் மாயா வித்தைகள் தோன்றுவாம்; வடிவங்களாகத் தோன்றுகின்ற அநந்த கந்தர்வசேனைகள் உண்டானபின்பு அவ்வித்தைகள் விளக்கமாகும்; (அதுபோல) பிரமத்தினதுசத்திகளானவை அநேகமாம்; அம்மாயா சத்தியைக் கண்டுபிடித்தல் கூடாததாம்; விரியும் பஞ்சபூதங்களைப் பார்த்து அனுமானப் பிரமாணத்தால் யாவர்க்கும் அப்பிரம சத்திக ளுண்டென்று விளங்கும். எ-று.

இ-ம். மித்தையான சகந்தோன்றுதலின், அங்ஙனந் தோற்று விக்கும் மித்தையான மாயாசத்தி ஒன்று உளது என உணரவேண் டும் என்பதாம். (கூசு)

இதுவுமது.

காரியங்களுஞ்சத்தியா தாரமுங்காணுமற் றதுமாயம்
பாரினின்றமா யாவியுஞ் சேனையும் பார்ப்பவர்கண்காணும்
வீரியந்திகழ்வித்தையா யினசத்தி வெளிப்படாததுபோலப்
பேரியற்பிர மத்துக்கு முலகுக்கும் பிறிதுசத்திகளுண்டே.

இ-ள். அச்சத்தியினது ஆதாரமான பிரமமும் சீவேஸ்வரசகத் தாகிய காரியங்களுந் தோன்றும்; அம்மாயாசத்தியானது மாயமா யிருக்கும்; பூமியின்கண் இருந்த மாயாவித்தை செய்பவனும், அவ னாற் காட்டப்பட்ட சேனைகளும், காண்பவர் கண்ணிற்குத் தோன்

றும்; கெம்பீரமாய் விளங்குகின்ற வித்தையாகிய சத்தியானது தோன்ருது; அதைப்போல, மகத்துவமுள்ள பிரமஸ்வரூபத்துக்கும் சகத்துக்கும் மத்தியில் சில சத்திகள் உளவாம். எ-று.

இ—ம். பிரமத்திற்கும் பிரபஞ்சத்திற்கும் மத்தியில் அவாந்தரமாகத் தோன்றுகின்ற மாயை தனியே ஓர்முதலாகிப் பிரமத்திற்கு வேறுபட்டிராது, அதனுல் வஸ்து இரண்டாகமாட்டாது என்பதாம். (கூஎ)

அ—கை. ஆறும் விஞவிற்கு உத்தரம்.

சத்திசத்தனைத் தவிரவே றன்றுகாண் சத்தனுமாயாவி
வித்தைகாட்டிய விந்திரசாலம்போய் வித்துவானும்போலப்
புத்திமைந்தனே சத்திமானுகிய பூரணவான்மாவின் [வாயே.
வத்துநிர்ணயஞ்சொன்ன திட்டாந்தத்தின்வழிகண்டு தெளி

இ-ள். அறிவுள்ள மகனே! இந்திரசால சத்தியானது அதனைக் காட்டிய சாலக்காரனைவிட வேறன்ரும்; சத்தியையுடையானுகிய சாலக்காரன் காண்பித்த வித்தையாகிய இந்திரசாலம் நீங்கி வித்துவானும் வண்ணம்போல, சர்வசத்திமானுகிய பரிபூரணவாத்மாவின் ஸ்வரூப நிச்சயத்தைச் சொல்லிய திருஷ்டாந்தத்தினுடைய மார்க்கத்தைப் பார்த்துத் தெளிந்து கொள்வாய். எ-று.

இ—ம். சத்தனைத் தவிரச் சத்தி என்று ஒருவஸ்து வேறு இன்மையானும், அச்சத்து இல்லாதவிடத்தும் சத்தன் இருக்கையானும், அச்சத்தனுஞ் சத்தியும் எங்ஙனம் ஒன்ரும்? அங்ஙனம் ஒன்ருகாமையான் அச்சத்தியைப்போல அச்சத்தன் சத்தாகான் என்பதாம். ()

அ—கை. பிரதிபிம்பமான மாயாசத்தியை நீக்கி, பிம்பமான சிற்சத்தியை வெளிப்படுத்துவான், அசத்தான மாயாசத்தி உள்ளது என்பது எங்ஙனம்? என்ற வினாவிற்கு உத்தரம்.

இல்லையாகிய சத்தியை யுண்டென்ப தெப்படி யெனக்கேட்கில், புல்லையாதியா மசேதனப் பொருளெலாம் பூத்துக்காய்ப்பனபாராய், நல்லையாமகனேயதிற் சிற்சத்தி நடந்திடா திருந்தக்கால், தொல்லை யாய்வருஞ் சராசர வுயிர்க்கெலாஞ் சுபாவங்கள் வேறுமே.

இ-ள். நற்குணங்களையுடையபுத்திரனே! மித்தையாகிய மாயாசத்தியை உளதென்பது எங்ஙனம்? என்று கேட்பாயாகில், புல்முதலியனவாகிய சடவஸ்துக்களனைத்தும் அதததற்குரியகாலத்தில் புஷ்பித்துக் காய்ப்பனவற்றைப் பார்த்திடாய்; அவ்வப்பொருள்களிற் சிற்சத்தியானது செல்லாதிருக்குமாயின் தொன்றுதொட்டு வருகின்ற தாவரசங்கமமாகிய உயிர்களனைத்திற்குங் குணங்கள்மாறும். எ-று. (கூக)

இதுவுமது.

கருப்பைமுட்டையுட் பறவைகள் பலநிறங் கலந்த சித்திரம்பாராய், அருப்ப மாஞ்சத்தி நியமமில்லாவிடி லரசிலா நகர்போலாம், நெருப்புநீர்களாங் கசப்புமே மதுரமா நீசனுமறையோதும், பொருப்புமேகமாங் கடலெலா மண்களாம் புவனமிப்படிபோமே.

இ-ள். கருப்பையிலிருக்கும் முட்டையிலுள்ள பக்ஷிகள் அநந்தவர்ணமுடையதாகும் விசித்திரத்தைப் பார்; அருமையான சிற்சத்தியின் நியமம் இல்லாமற்போனால் அரசன் இல்லாத பட்டணத்தைப்போல எல்லாம் மாறுபடும்; (அஃதெங்ஙனமெனில்) அக்கினி

யானது சலமாகக் குளிரும்; கைப்பும் தித்திப்பாகும்; சண்டாள னும் வேதாத்தியயனஞ் செய்வான்; மலையும் மேகம்போற் சஞ்சரிக்கும்; சமுத்திரங்கள் அனைத்தும் மண்ணாகும்; இவ்வண்ணம் சகத்தானது தன் சுபாவம் மாறுபடும். எ-று.

இ-ம். சூரிய கிரணமே பகிர்முகத்தில் மித்தையான சலமாகவும் அந்தர்முகத்தில் உண்மையான கானலாகவும் தோற்றுவன போல, பிரமப்பிரகாசமே பகிர்முகத்தில் மித்தையான மாயாசத்தியாகவும், அந்தர் முகத்தில் உண்மையான சிற்சத்தியாகவும், தோன்றிய இச்சத்தியே, அனைத்திற்கும் உள்ளீடாயிருந்து நடாத்துதலின், அஃதின் தன்மையை அதன்மேல் வைத்துக்கூறினதே அன்றி அதற்கு இன்றென்பதாம். (க00)

அ—கை. இச்சத்திகள் நீங்கலும், சத்தனைத் துவிதம் இன்றித் தரிசித்தலும், முத்தியை அடைதலும் எங்ஙனம்? என்று, மூன்று வகையாய் வினுதல்.

ஆர்க்குங் காணவு மறியவும் படாதென்று மவாச்சிய
வடிவென்றும், சேர்க்கு நாமரூபப் பயிர்வித்தென்றுஞ் செப்பிய சிற்சத்தி, பேர்க்குமா றெங்ஙன் பிரித்திடப் படாதெ
னின் பிரமபாவனை யொன்றுப், பார்க்குமா றெங்ஙன் முத்
தியாகுவ தெங்ஙன்பரம சற்குருமூர்த்தி.

இ-ள். மேலான தேசிகரே; யாவருக்கும் பார்க்கவும் உணரவும் கூடாது எனவும்; இன்னதென வுணர்த்தக்கூடாத ரூபம் எனவும், கற்பனையாகச் சேர்க்கின்ற நாமரூபப் பிரபஞ்சமாகிய பயிருக்கு விதை எனவும் சொல்லிய சிற்சத்தியை நீக்குமாறு எப்படி? நீக்கக்கூடாது என்றால், ஸ்வரூப சமாதியில் அத்துவிதமாகத் தரிசிக்குமாறு எப்படி? வீடு உண்டாவது எப்படி? எ-று.

இ—ம். வெளிப்படை. (க0க)

அ-கை. முதல் இரண்டு வினுவிற்கு உத்தரங்கூறல்.

வாயுத்தம்பனஞ் சலத்தம் பனமணி மந்திர மருந்தாலே
தேயுத்தம்பனஞ் செய்திடி லதிலதிற் சிறந்தசத்திகளெங்கே
நீயச் சச்சிதா நந்தமாய்வேறென்று நினைந்திடா திருப்பாயே
மாயச் சத்திபோமீதன்றி மந்திர மறைகளிற் காணேமே. [ல்

இ-ள். மணிமந்திர ஔஷதங்களினுல் வாயு ஸ்தம்பனமும் ஜலஸ்தம்பனமும் அக்கினி ஸ்தம்பனமும் செய்தால் அவ்வவற்றில் சிறந்திருக்குஞ் சலனம் நெகிழ்ச்சி உஷ்ணம் ஆகிய மூன்று சத்திகளும் எங்கேயிருக்கின்றன? நீ அந்தச் சச்சிதாநந்த வடிவமாகி மற்றென்றையும் நினையாதிருப்பாய் ஆகில் மாயாசத்தி நீங்கும்;இதைத் தவிர உபாயம் வேதங்களிற் பார்த்திலம். எ-று.

இ-ம். குருவாக்கியப்படி உண்மையான சச்சிதாநந்த ஸ்வரூபமே தானுகச் சிந்திக்கின் அதன்மயமாதலும், இல்லாததான மாயா சத்தி யில்லாததாகவே நீங்குதலும் ஆம் என்பதாம். (கഠஉ)

அ-கை. மூன்ரும் வினுவிற்கு உத்தரங் கூறல்.

மேவுமண்ணிலவ் வியத்தமே வியத்தமாம் விவகரித்
திடவேண்டின், நாவினுன் மண்ணைக் குடமென்ப ரக்குட
நசிப்பது நாவாலே, பாவுநாம ரூபங்களை மறந்துமண் பார்ப்
பதே பரமார்த்தம், சீவபேத கற்பிதங்களை மறந்துநீ சின்
மய மாவாயே.

இ-ள். கடக சத்தி தங்கிய மண்ணில் அக்கடம் ரூபிகரிக்கு மட்டும் மறைப்பட்டிருந்த அச்சத்தி, கடகமாகிய பின்னர் வெளிப்படும்; விவகரிக்கு நிமித்தம் நாவினுல் அம்மண்ணைக் கடமென்று சொல்லுவார்கள்; அக்கடநாமம் போய் மண்ணுக நிற்பதும் நாவாலேயாம்; கற்பனையாக வழங்குகின்ற நாமரூபவடிவங்களை நினை

யாது மண்ணுகப் பார்ப்பதே உண்மை ஞானமாம்; அங்ஙனம் சீவன் ஈஸ்வரன் சகத்து என்னும் வேறுபாடுகளை நீக்கி நீ சின்மாத்திரம் ஆவாய். எ-று.

இ—ம். கடத்தை மண் என்று அறியின் கடம் என்பது நசித்து அது மண்ணுக விளங்குவதுபோல, சிற்சத்தியைச் சித்தெனக் காணின் அச்சத்தி நீங்கி அது சித்தாக விளங்குவதே மாயா நிவர்த்தியாகிய முத்தி என்பதாம்.

இஃது மேற்கூறும் எண்வகை ஆநந்தத்தில் ஒன்ருன அத்துவிதாந்தம் எனக்கொள்க. (கOரு)

அ—கை. அச்சத்திகள் நீங்கின விடத்தும் அதன்காரியமான திரிசிய நீங்காமையால் அஃது நீங்கும் உபாயம் அனுக்கிரகிக்கவேண்டும் என்ற வினவிற்கு உத்தரம்.

பூரிக்குங்கண சச்சிதா நந்தத்திற் பொய்சடந்துயர் மூன்றும், தூரத்தாயினுந் தோன்றுபாழ் விபரிதந் துடைப்பதெப்படியென்ருல், நீரிற்ருேன்றுந் தன்னிழ றலைகீழதாய் நின்றலையினுநேராய்ப், பாரிற்ருேன்றிய தன்னைநோக்கிடிலந்தப் பாழ்நிழல்பொய்யாமே.

இ-ள். பூரணமாயிருக்கின்ற கனமான சச்சிதாநந்த ஸ்வரூபத்தில் அனுர்தசட துக்கமாகிய திரிவிதமும் இலவாயினும் மெய்போலத் தோன்ருநின்ற பாழாகிய விபரீதத்தைக் கெடுப்பது எவ்விதம் என்னில், சலத்தில் பிரதிபலித்துத் தோன்ருநின்ற தனது சாயையானது தலைகீழாயிருந்து அலைந்தாலும் செவ்விதாய்ப் பூமியிற்ருேன்றிய தனதுருவத்தைப் பார்க்கில் அப்பாழான சாயையானது இல்லாமற்போம். எ-று.

இ—ம். தன்னைத்தரிசிக்கில் தனது சாயையான திரிசியந் தானுகவே நீங்கும் என்பதாம். (கOசு)

இதுவுமது.

ஞானங்காரண வறிவுகாண்காரிய நாமரூபப்பேர்கள், ஆனதெப்படி யழிந்ததெப்படி யெனவாய்குதல் பலனன் ரூே, மானமைந்தனே தீர்க்கச்சொப்பனசகம் வந்ததும்பா ராமல், போனதுந் நினையாமலுன் போதமாய்ப் பூர்ணமா யிருப்பாயே.

இ-ள். பெருமையுள்ள புத்திரா! காரணமானது ஞானத்தை அறியும் அறிவாம்; காரியமானது நாமரூபமான சீவேஸ்வர சகங் களாம்; இவற்றின் உற்பத்தி நாசம் எவ்வண்ணமென்று விசாரித் தல் பயன் இல்லையாம்; நீண்ட கனவாகிய உலகங்கள் உதித்த தையும் நசித்ததையும் விசாரியாமல் உனது ஞானப் பிரகாசமான பரிபூரண ஸ்வரூபமாய் இருப்பாய். எ-று.

இ-ம். காரணமான சின்மாத்திரமாகத்தான் விளங்கின் காரிய மான யாவும் அஃதாகவே விளங்கும் என்பதாம். (க0ரு)

அ-கை. சிந்திக்கு முறையும் அதில் உதிக்கும் அத்துவிதாந்த முங் கூறல்.

அசத்திலெம்மட் டுண்டம்மட்டும் பராமுகமாகினுயம்மட்டும்
நிசத்திலுள்விழிப் பார்வையாயிப்படி நிரந்தரப்பழக்கத்தால்
வசத்திலுன்மன நின்றுசின்மாத்திர வடிவமாகிடின்மைந்தா
கசத்ததேகத்தி லிருக்கினுமாநந்தக் கடல்வடிவாவாயே.

இ-ள். மகனே! மெய்போலத் தோன்றிய சக சீவ பரங்களா கிய மித்தையில் எவ்வளவு காலஞ் சம்பந்தமாயிருந்தனையோ அவ் வளவுகாலமும் பகிர்முகமானுய்; இப்படி பகிர்முகமான அவ்வளவு காலமும் அறிவென்னுமுண்மையில் அந்தர்முக திஷ்டியாய் இடை விடாத அப்பியாசத்தினுல் உன்மனமானது உனது வசமாகஇருந்து

சைதன்னிய ஸ்வரூபமானால், வெறுக்கப்பட்ட சரீரத்தில் நீ இருந்தாலும் பிரமாநந்த சாகர ஸ்வரூபமாவாய். எ-று.

இ—ம். இங்ஙனஞ் சிந்தித்துச் சித்துருவ மாவானாயின், அவ்வுருவமான ஆநந்த ஸ்வரூபமே தானாக விளங்குவன் என்பதாம். (கo௬)

அ—கை. மாயை அவித்தை முதலிய சட பாவ நீங்கிச் சிற்சத்தியாகிய சிற்பவம் ஆத்மாவிற் கரைந்து அலைதான பின்பு, அவ்வாத்மா சச்சிதாநந்த ஸ்வரூபம் என்று உணர்த்தின ஆசாரியரை நோக்கி, அங்ஙனமாயின் சத்தையுஞ் சித்தையும்போல ஆநந்தமே அதனிடத்திற் காணப்பட இல்லை என வினாதல்.

தானன்றி வேறொன்று மில்லாத பூரணச் சச்சிதாநந்த குணமாம், ஊனின்ற வுயிர்தோறு மொன்றாகு மென்றால தொக்கின்றபடிகண்டிலேன், நானென்றசீவன்கள்சத்தான வகையொக்கு ஞானங்கள் வெளிகண்டதாம், ஆனந்தமிவை போல வெளியாக வுதியாத வடைவேது குருநாதனே.

இ-ள். தேசிகரே! ஆன்மா தன்மாத்திர மிருப்பதன்றித் தன்னைத் தவிர இதர வஸ்துக்களில்லாத பரிபூர்ணமாகிய சச்சிதாநந்த சுபாவமாய்த் தேகத்தின்கண் இருந்த சீவர்கள் தோறும் ஏகமாயிருக்குமாயின், அவ்வான்மா அங்ஙனம் ஒத்திருக்கும் வண்ணம் பார்த்திலன்; அகம்பாவமுள்ள சீவர்கள் சத்தென்னுந் தன்மை ஒக்கும்; சித்தும் விளங்குகின்றது; இவற்றைப்போல ஆநந்தமானது வெளியாகத் தோன்றாத காரணம் ஏது. எ-று. (கoஎ)

அ—கை. மேல்வினாவிற்கு உத்தரங் கூறல்.

உருவங்க ளிரதங்கள் பரிசங்க ளொருபூவி லொன்றாகு மொன்றாலுமே, கரணங்களோரொன்றி னேரொன்று தெரி

யுங் கணக்கன்றி வாராதுகாண், அருமந்த சச்சிதா நந்தச் சுபாவங்க ளான்மாவின் வடிவாகினும், பிரபஞ்ச மயமாம் விருத்திபே தத்தினற் பேதங்க ளாமைந்தனே.

இ-ள். மகனே! வடிவங்களும் சுவைகளும் பரிசங்களும் ஒரு மலரில் ஒன்ருயிருக்கு மெனினும், இந்திரியம் ஒவ்வொன்றிற்கு அததற்குரிய ஒவ்வொரு விடயந்தெரியுமே யல்லாமல் ஒன்றிற்கு மற் ருென்றின் விடயந் தெரியமாட்டாது; அப்படியே அருமருந்தன்ன சச்சிதாநந்த இயல்புகள் ஆத்மஸ்வரூபமானுலும் சகத்துருவமான விருத்தியின் வேற்றுமையினுல் வேறுபட்டிருக்கும். எ-று. (கOஅ)

இதுவுமது.

தாமச மிரசசதஞ் சாத்துவித முக்குணத் தால்வரும் விருத்திமூன்ரும், ஆமவைகண் மூடமுங் கோரமுஞ் சாந்த மும் மபிதான மாகுமகனே, ஏமுற விருக்கின்ற சச்சிதாநந் தங்க ளென்றென்று மொன்ருகிலும், நாமுரைக் கும்விருத் திப்பிரிவி னுற்சொரூப ஞானுதி.பிரிவாகுமே.

இ-ள். மைந்தா! தமசும் இரசசும் சத்துவமும் ஆகிய திரி குணங்களால் உண்டான விருத்திகள் திரிவிதமாம்; அம்மூன்றும் மூடவிருத்தி எனவும் கோரவிருத்தி எனவும் சாந்தவிருத்தி என வும் பெயரைப் பெறுவனவாம்; இன்புற விருக்கின்ற சச்சிதானந்த மானவைகள் எப்போதும் ஏகமானுலும் நாம் சொல்லும் விருத்தி பேதத்தினல் சச்சிதாநந்த ஸ்வரூபங்கள் பேதங்களாம். எ-று. ()

இதுவுமது.

சடமான மூடத் தருக்கல்லு மண்களிற் சத்தொன்று மேதோன்றுமால், விடமான காமாதி கோரத்தி லாநந்தம்

விளையாது மற்றவைகளாம், திடமான வொழிவாதி சாந்தத் திலே சச்சிதாநந்த மூன்றும் வெளியாம், மடமான மூடங் கள் கோரங்கள் விடுசாந்த மனமாகி லாநந்தமே.

இ-ள். சடமாகிய மரம் கல் மண்களின் மூடவிருத்தியில் சத்து மாத்திரந் தோன்றும்; விஷரூபமான காம முதலிய கோர விருத் தியில் ஆநந்தம் உதியாது, சத்துஞ் சித்துந் தோன்றும்; உறுதி யான ஒழிவு முதலிய சாந்த விருத்தியில் சத்து சித்து ஆனந்தம் ஆகிய மூன்றும் வெளிப்படும்; அறிவின்மையாகிய மூடவிருத்திக ளையும் கோரவிருத்திகளையும் விடாநின்ற மனமானது சாந்தவிருத் தியைப் பெறில் ஆநந்தம் வெளியாம். எ-று.

இ-ம். ஆத்மஸ்வபாவமான சச்சிதாநந்தம் விருத்தி பேதங்க ளினல் மறைபட்டதும் வெளிப்பட்டதும் போலத் தோன்றினதே அன்றி அவைகள் அதனிடத்து இல்லாதது அன்று என்பதாம். ()

அ-கை. அச்சச்சிதாநந்த இலக்கணம் யாது? என்ற விணுவிற்கு உத்தரம்.

இகமான குருநாதனே சச்சிதா நந்தமெனு மிலக்கண மறிகிலேன், அகலாத சத்தாவ தேதுசித் தாவதே தாநந்த மேதென்றிடின், மிகுகால மூன்றுங் கெடாதிருப்பது சத்து வேறுபா டறிதல்சித்தாம், மகிழ்காம நுகர்போதுசுகமாகு மனுபூதி வாழ்வென்ப தாநந்தமே.

இ-ள். இம்மானிட வடிவமாக எழுந்தருளிய குருசுவாமியே! சச்சிதாநந்த மென்கிற இலக்கணத்தைத் தெரிந்திலன்; நீங்காத சத்தென்பது யாது? சித்தென்பது யாது? ஆநந்தமென்பது யாது?

என்று கேட்பாய் ஆயின், மிகுந்த திரிகாலங்களினும் நசியாதிருப் பது சத்தாகும்; சிற்சட பேதங்களை அறிதல் சித்தாகும்; விரும் பும் காமத்தை அனுபவிக்கும்போது உண்டாகும் இன்பம் போன்ற சுவானுபூதி சுகமென்று சொல்லப்படுவது ஆநந்தமாம். எ-று.

இ-ம். சச்சிதாநந்த இலக்கணம் இவையெனக் கூறினதாம்.

அ—கை. ஆத்மா சச்சிதாநந்தம் என்பதற்கு அனுபவம் வினுதல்.

நாசச்சரீரத் திருக்குஞ் சரீரிதனை நால்வேத மாவாக்கி யம், நீசச்சிதாநந்த மென்றிடினு மாசிரியர் நீபிரமமாகு மெ னினும், மாசற்ற சச்சிதானந்த நானென்ன விவன்மன்னு மனுபவ மெங்ஙனே, கோசப் புரங்களை யிடித்துத் தகர்த்த மத குஞ்சரக் குருநாதனே.

இ-ள். பஞ்சகோசமாகிய மூன்று தேகங்களையும் உடைத்துத் துகளாக்கிய யானையாகிய குருசுவாமியே! நசிக்கின்ற தேகத்தில் இருக்கின்ற தேகியை, நான்கு சுருதியின் முடிவிலுள்ள மகா வாக் கியங்களும் நீயே சச்சிதாநந்த ஸ்வரூபமென்றுசொல்லினும், தேசி கருபதேசமும் நீயே பிரமமென்று சொல்லினும், நின்மலமான சச் சிதாநந்தமே நானென்று இம்மாணுக்கன்பொருந்தும் அனுபவமா னது எவ்விதம். எ-று.

இ—ம். வெளிப்படை. (ககஉ)

அ—கை. ஆத்மா சத்தென்பதற்கு அனுபவங் கூறல்.

சென்மாந் தரஞ்செய்த வினைகளுட றருமெனிற் செல் காலமிவனுண்டலோ, கன்மாநு பவநரக சொர்க்கமெனில் வருகின்ற காலத்துமிவனுண்டலோ, உன்மாதயாதனுவுடல்

கடவுளுடன்மனுட வுடன்மாறி மாறியழியும், தன்மாய வுடல்கெடினு மிவனிருப்பது கொண்டு சத்தென்பதொக்கு மகனே.

இ-ள். மைந்தா! முற்சநநங்களிற் செய்த கன்மங்களானவை தேகத்தைக் கொடுக்குமென்றால், சென்ற காலத்தினும் இப்புருட னிருந்தான் அல்லவா? இப்போது செய்த கன்ம மனுபவித்தற்குத் தக்க இனி நரக சொர்க்கங்களை அடைவன் என்றால், எதிர்கால த்தினும் இவனிருப்பான் அல்லவா? சித்தப் பிரமைக்குக் காரண மான யாதனுசரீரமும் தேவசரீரமும் மானுடசரீரமுமாக மாறி மாறி நசிக்கும்; தனது மித்தையாகிய தேக நசிக்கினும் இத்தேகி கெடாம லிருப்பதனால், இவனே சத்தென்னு மனுபவமொக்கும். எ-று.

இ-ம். தேகமுதலியன நசிக்கினும் தான் நசியாமல் மூன்று காலங்களினும் இருத்தலின் ஆத்மாவே சத்தென்பதாம். (கக௩)

அ-கை. ஆத்மா சித்தென்பதற்கும் ஆநந்த மென்பதற்கும் அனு பவங் கூறல்.

இருளாகமூடுஞ் சுழுத்தியி லிராத்திரியி லிரவிசுடரற்ற பொழுது, மருளாம லிருளையும் பொருளையுந் தெரிகின்ற வகைகொண்டு சித்தாகுமே, பெருவாழ்வு மிக்கதானே தன் னிடத்தினிற் பேராதபிரியமதனால், அருகாத பிரியஞ் சுகத் தில்வரு மாதலா லாநந்த மாமைந்தனே.

இ-ள். மகனே! அந்தகாரமாக மூடிக்கொள்ளுஞ் சுழுத்தி அவத்தையிலும் இரவிலும் சூரியப்பிரகாச மில்லாதபோதும் மய ங்காமல் இருட்டையும் வஸ்துக்களையும் காண்கின்ற வகையினால் ஆன்மா சித்தாகும்; பேராநந்த மிகுந்த தானே தன்னிடத்தில்

நீங்காத பிரியம் வைப்பதனுல் குறையாத பிரியமானது தனது சுகத்தில் வருவது அனுபவம், ஆதலால் ஆன்மாவே ஆநந்த மாம். எ-று.

இ-ம். ஆத்மா அறிவறியாமை இன்றி அறிவாயிருந்து அறிதலின் சித்தும், விடயங்கள் அனைத்தினுமுள்ள பிரிய நீங்கினும் தனது பிரிய நீங்காமையின் ஆநந்தமும் ஆம் என்பதாம். (ககச)

அ—கை. சுகசாதனங்களில் பிரிய மிருப்பதுபோல ஆத்மாவிலும் பிரிய மிருத்தலின் அது ஆநந்தத்திற்குச் சாதனமாகாதோ? எனில், அங்ஙனம் ஆகாது என்பதற்கு அனுபவம் கூறல்.

அன்னபானுதிசுக சாதனமதாகையா லார்க்கும்வெகு பிரியமாகும், இன்னவாருன்மாவு மாநந்தசாதன மெனக்கருதல் பொருளல்லவே, சொன்னவான் மாவையொரு சுகசாதனங்களொடு சொல்லுவாயாகின் மனமே, உன்னதாநந்தம்வே ருேவனு பவிப்பதா முயவான் மாவுமுளவோ.

இ-ள். மைந்தா! உண்பன பருகுவன முதலியவை சுகத்துக்குச் சாதனமாகையால் யாவர்க்கும் மிகுந்த பிரியமாம்; இவ்வண்ணம் ஆத்மாவும் ஆநந்தத்துக்குச் சாதனமென்று நினைப்பது அருத்தமல்லவே; சொல்லிய ஆத்மஸ்வரூபத்தை ஒரு சுகசாதனங்களோடுங் கூடச் சொல்லுவையாகில்; உனதாநந்தமானது உன்னை விட வேருே? அனுபவிப்பதாகிய இரண்டா மாத்மாவும் உண்டோ. எ-று.

இ-ம். சாதனம் இறந்து சாத்தியமான இடத்தில் சேஷித்த நிரதிசயாநந்தம் வேறும், அஃது அனுபவிக்கும் ஆத்மா வேறும் இன்று; ஆதலினுல், அவ்வாத்மா ஆநந்தமாவதன்றி அதற்குச் சாதனமாகாது என்பதாம். (ககரு)

அ—கை. ஆத்மா ஆநந்த ஸ்வரூபமாயின் எதிரிட் டனுபவிக்கும் ஆநந்தம் அஃது ஆகாதோ? எனின், அஃது விடயாநந்தமாத லின் ஆகாது என்பதற்கு அனுபவங் கூறல்.

விடயசுக மதில்வருதல் பிரியமாத் திரமாகும் வெகுபி ரிய மான்மாவிலாம், விடயசுகம் வருபிரிய மாறிவருமான் மாவில் வெகுபிரிய மாருதுகாண், விடயசுகம் விடலுமாங் கொளலுமா மான்மாவை விடுவதெவர் கொள்வதெவர்பார், விடயசுக போகங்கள் விடுமவனை யவனுல் விடப்படாதொரு நாளுமே.

இ-ள். விஷயாநந்தத்தில் இன்பமுண்டாதல் பிரீதியின் அள வினதாம்; ஆத்மாவினிடத்தில் அதனினும் மிகுந்த பிரியமுண்டா கும்; விடயாநந்தத்தில் உதிக்கின்ற பிரியமானது நிலையாது மாறி மாறி உண்டாகும்; ஆத்மாவினிடத்திலுள்ள மிகுந்த பிரியமானது மாருது ஒரு தன்மைத்தாம்; விஷயசுகம் வெறுத்துவிடுதற்கும் விரு ம்பியேற்றுக்கொள்ளுதற்கும்தகுதியாகும்; இப்படிஆத்மாநந்தத்தை விடுகின்றவர் யாவர்? கொள்ளுகின்றவர் யாவர்? நன்ருகப் பார்; விடயாநந்தானுபவங்களை ஒருவன் வெறுத்துவிடக்கூடும்; அங்ங னம் வெறுத்துவிட்டவன் தன்னுல் தன்னை வெறுத்துப் புறம்படுத் தக் கூடுமோ? ஒருநாளுங் கூடாதே. எ-று.

இ-ம். விடய இன்பங்களனைத்தும் ஆத்மப்பிரியலேச மாத லின்: அஃது நசித்தும் இஃது நசியாதிருத்தலின், அவ்வாநந்தம் ஆத்மாநந்தமாகாது என்பதாம். (கககூ)

அ—கை. ஆத்மா ஆனந்த வடிவமாகின் அதனிடத்தில் வெறுப் பிருக்கின்றதே எனில், அங்ஙனம் இன்றென்பதற்கு அனுப வங் கூறல்.

வேகின்ற கோபங்க ளாலென்னை நான்கொன்று விடு கிறேனென்றுசிலபேர், சாகின்ற படியினுற் றன்னையேதான் கொன்று சாவனெனல் சங்கையலவே, தேகந்தனைக் கொல் லுமவனுல் விடப்பட்ட தேகமவ னல்லன் மகனே, ஆகந்த னிற்கோப மிலதுதனை யொருநாளு மான்மா வெறுப்பதி லையே.

இ-ள். மைந்தா! கொதித்தெழா நின்ற கோபங்களால் என்னை யான் கொல்லுகின்றே னென்று சொல்லிச் சிலர் இறக்கின்றபடியி னுல்; ஆன்மா தன்னைத்தானே கொலை செய்துகொண்டு சாவது என்று சங்கிப்பது சங்கை அன்ரும்; உடலைக் கொல்கின்ற அப்பு ருடனுல் நீக்கப்பட்ட தேகமானது அவ்வாத்மா அன்று, தேகத் தில் கோபம் வந்ததேயல்லாமல் ஆத்மாவை எப்போதும் ஆத்மா வெறுப்பதில்லை. எ-று.

இ-ம். ஆத்மா தற்பிரியத்தில் குறைவு வாராமல் தேகத்தை நீக்கினதே யன்றித் தன்னிடத்தில் வெறுப்புண்டானதன்று என்ப தாம். (ககஎ)

அ-கை. தனது ஆனந்த முதலிய ஆநந்தங்கள் ஆத்மா என`வரு மெனில் அங்ஙனம் ஆகா எனக்கூறி, ஆத்மாநந்தமே முக்கியம் எனக்கூறல்.

தாகப்படும் பொருளு லும்மகன்பிரியமாந் தநயனிலு முடல்பிரியமாம், ஆகத்திலும்பிரிய மிந்திரியமாங் கரணமத னிலும் பிரியமுயிராம், ஏகப்பிராணனிலும் வெகுபிரியமான மாவி லிந்தவான்மா முக்கியம், ஊகத்தினுற் கௌவுண மித் தைகர்த்தாமூன்று மொன்றினுென் றதிகமகனே.

இ-ள். மைந்தனே! பிரியமாகச் சம்பாதிக்குந் தனங்களி னும் புத்திரன் பிரியமாகும், அப்புத்திரனிலும் தேகம் பிரியமா

கும்; அத்தேகத்திலும் இந்திரியங்களானவை பிரியமாகும், அவ் விந்திரியங்களிலும் சீவனுனது பிரியமாகும், ஒன்ருன அச்சீவனி லும் கூடஸ்தனிடத்தில் மிகுந்த பிரியமாம், ஆதலால் இவ்வாத் மாவே முக்கியமாம்; உத்தியினுல் கௌணுத்மா மித்தையாத்மா கர்த்தாத்மா ஆகிய மூன்றும் ஒன்றினென்று அதிகமாம். எ-று.

இ—ம். தனமுதலிய ஆறினும் வைக்கின்ற பிரியம் கௌணம் எனவும், ஆத்மப்பிரியமே முக்கியம் எனவுங் கூறினதாம். (ககஅ)

அ—கை. ஆத்மாநந்தமே முக்கியமாயின், புத்திரன் முதலியவை கள் ஆத்மா எனவும், அவைகள் முக்கியம் எனவுங் கூறியது என்னே? எனின், அதற்கு உத்தரங் கூறல்.

கெடலானபொழுதிவன் காணிக்குமகனுன கௌண வான்மாமுக்கியம், விடலாதவுடலம்பரிக்குநாளுடலானமித் தையான்மாமுக்கியம், திடமானநன்மைகதி வேண்டினுற் கர்த்தனுஞ் சீவவான்மாமுக்கியம், சடமாயுமுத்தியினின் ஞானவான்மாவான தானேமகாமுக்கியம்.

இ-ள். மரணகாலத்தில் இவன் ஆதீனத்துக்கு வேண்டிய புத்திரனுன கௌணுத்மாவே முக்கியமாம்; நீங்காத தேகத்தைத் தாங்குகின்ற நாளில் அத்தேகமான மித்தையாத்மா முக்கியமாம்; பலமாகிய நல்லகதியை விரும்புங்காலத்தில் நானென்னுஞ் சீவா த்மா முக்கியமாம்; திரிசியங்கள் நீங்கிய மோக்ஷத்தில் ஞானுத்ம ஸ்வரூபமாகிய தானே மிகவு முக்கியமாம். எ-று.

இ—ம். புத்திரன் முதலிய மூன்றையும் முக்கியாத்மாவென் றது ஒவ்வோர் சமயத்து ஆதலால் பூர்வபக்ஷமும், ஆத்மாவை முக்கியம் என்றது என்றும் ஆதலால் சித்தாந்தமுமாம் என்பதாம்.

அ—கை. விருப்பு முதல் மூன்று நீங்கிய ஆநந்தமே ஆத்மஸ்வரூபமாம் எனல்.

புலியுமனுகூலமெனி லிட்டமாம்பகைசெயிற் புதல்வனெனினும்வெறுப்பாம், உலகிலிருவகையுமல்லாத புல்லாதியிலு தாசீன மாமாதலால், மலினமறு சின்மயன்பலவகையுமிப்படி மகிழ்ச்சியில் விருப்பமிகழான், அலகிலானந்த வடிவாடுமுன் சொரூபத்தை யாராய்ந்து பார்மைந்தனே.

இ-ள். மைந்தனே! வெறுக்கத்தக்க புலியும் அனுகூலஞ்செய்யும் ஆயின் சிநேகமாகும்; புத்திரனாயினும் பகைக்கின் துவேஷமாம்; பூமியின்கண் இவ்விரண்டும் அல்லாத திரண முதலியவைகளில் உபேக்ஷையாம்; ஆதலினால் களங்கமற்ற ஞானஸ்வரூபனானவன் நானாவிதத்திலும் இவ்வண்ணம் ஆத்மாநந்தத்தில் பிரியத்தை நீங்கான்; அளவற்ற பிரமாநந்த ஸ்வரூபமாகிய உனது ஆத்மஸ்வரூபத்தை ஆராய்ந்தறிவாயாக. எ-று.

இ—ம். விருப்பு வெறுப்பு உதாசீனம் ஆகிய மூன்றும் ஆத்மசுகத்திற்கு மாறுபடுதலினாலும், இவைகளில்லாத அச்சுகம் மாறுபடா திருத்தலினாலும், இவ்வாநந்தமே ஆத்மஸ்வரூபமாம் என்பதாம். இஃது மேற்கூறும் அஷ்டவித ஆநந்தத்தொன்றான ஆத்மாநந்தம் எனக்கொள்க. (கஉ0)

அ—கை. ஆத்மா நிரதிசயாநந்தம் என்பது அனுபவமாம்பொருட்டு, அதிசயாநந்தம் எண்விதமாகக் கூறுவான் தொடங்கி, ஆநந்தம் எத்தனை வகை? என்ற வினாவிற்கு உத்தரங் கூறல்.

மானஞ்சிறந்த குருநாதனே யானந்தவகைகளெத்தனை யென்னிலோ, ஞானந்திகழ்ந்த பிரமாநந்தம் வாசனாநந்தம் விடயாநந்தமென், றானந்தமூன்றுவிட மெட்டுவகை

பென்பர்சில ரவ்வைந்துமிதி லடக்கம், யானந்த வகைசொ
லக்கேண் மைந்தனே யெட்டுமிஃதின்ன தின்னதெனவே.

இ-ள். பெருமை மிகுந்த தேசிகோத்தமரே! ஆநந்தப்பிரிவு கள் எவ்வளவென்று கேட்பாயாகில், சித்துவிளங்கிய பிரமாநந்தம் எனவும், வாசனானந்தம் எனவும், விஷயாநந்தம் எனவும் ஆநந்தம் மூன்றுவிதமாம்; சிலர் எட்டு விதம் என்று சொல்லுவார்கள்; மற்றைய ஐந்தும் இம்மூன்றி லடக்கமாம்; 'எண்வகை ஆநந்தமும் இஃது இன்னது இன்னது என்று நாம் அப்பகுப்பைச் சொல்ல, மகனே! நீகேட்பாயாக. எ-று.

ப-ம். பிரமாநந்தத்தில் ஆத்மாநந்தமும், முக்கியாநந்தமும், நிசாநந்தமும், அத்துவிதாநந்தமும், ஞானாநந்தமும், ஆகிய ஐந்தும் அடங்கியிருக்கின்றது என்பார், 'அவ்வைந்து மிதிலடக்கம்' என, ஒருமையாகக் கூறினர். (கஉக)

அ—கை. அவ்வஷ்டவித ஆநந்தத்தின் வகை கூறல்.

போகத்தில்வரு சுகம்விடயசுக நித்திரைப்போ துளது
பிரமசுகமாம், மோகத்த னந்தலிற் சுகம்வாசனைச் சுகமுழு
ப்பிரிய மான்மசுகமாம், யோகத்தி லுளதுமுக்கிய சுகமு
தாசீன முற்றசுக நிசசுகமதாம், ஏகத்தை நோக்கலத்துவித
சுகம்வாக்கிய மெழுந்தசுக ஞானசுகமே.

இ-ள். போகங்களில் வருகின்ற ஆநந்தம் விடயாநந்தமாம்; சுழுத்திகாலத்துள்ள ஆநந்தம் பிரமாநந்தமாம்; மயக்கமாகிய நித்திரை தெளிந்துவருஞ் சமயத்துள்ள ஆநந்தம் வாசனாநந்தமாம்; எங்கும் தனது பிரியவடிவாகக் காணுஞ்சுகம் ஆத்மாநந்தமாம்; சமாதியிலுள்ள சுகம் முக்கியாநந்தமாம்; உதாசீனத்திலுள்ள ஆநந்தம் நிசாநந்தமாம்; அத்துவிதமான தன்னை நாடாநிற்கும் சுகம்

அத்துவிதாநந்தமாம்; மகாவாக்கிய விசாரத்தி லுதயமான ஆனந்தம் வித்தியாநந்தமாம். எ-று.

ப—ம். ஞேயத்தில் உதிக்கும் இன்பம் என்பார், "போகத்தில் வருசுகம்" எனவும், நனவிற் சுழுத்தியிலுள்ளது பிரமசுகம் என்பார், "நித்திரைப் போதுளது பிரமசுகம்" எனவுங் கூறினர்.

இ—ம். சுருக்கமான அருத்தத்துடன் அவ்வாநந்தங்களின் நாமங்களைக் கூறினதாம். (கஉஉ)

அ—கை. அவற்றில் விடயாநந்த இலக்கணங்கூறல்.

இவ்வா றுரைசெய்த சுகபேதங் களினியல்பா மவை சொல மகனேகேள், ஒவ்வாநனவினி லுழல்வாணிடர் கெடவுறங்குஞ் சயனத்திலுறுநேரம், செவ்வாமனமக முகமா மதிலொளிர்சித்தின் சுகநிழல்சேருங்காண், அவ்வா றிவ னுளமகிழ்வா மனுபவமதுதான் விடயசுகாநந்தம்.

இ-ள். மைந்தா! இந்தப்பிரகாரம் சொல்லிய ஆநந்த வேறுபாடுகளின் இயல்பான தன்மைகளைச் சொல்லக் கேட்பாயாக; இன்பம் பொருந்தாத சாக்கிரத்தில் சுழல்பவனுடைய துன்ப நீங்கும்பொருட்டு படுக்கையில் நித்திரைசெய்யுஞ் சமயத்தில் செவ்விதான மனமானது அந்தர்முகமாகும்; அம்மனதில் பிரகாசிக்கின்ற சிதாநந்தச் சாயையானது சேரும்; அவ்வண்ணம் இவன் மனமானது மகிழ்ச்சியாகும்; அனுபவமான அதுவே விடயாநந்தமாம். எ-று.

ப—ம். அறிவறியாமையில் சுழலும் பவத்துன்ப நீங்கும்பொருட்டுச் சமாதியில் அகமுகமாய் மனஞ் சித்தைத் தரிசிக்கில் சுகமுண்டாகும் என்பார், "நனவினி லுழல்வாணிடர் கெடவுறங்குஞ்சயனத்திலுறுநேரம், செவ்வா மனமகமுகமா மதிலொளிர் சித்தின் சுகநிழல் சேருங்காண்" எனவும், அங்ஙனம் மகிழ்தல் ஞேயாநந்

தம் என்பார் "அவ்வாறிவனுள மகிழ்வானனுபவ மதுதான் விடய சுகாநந்தம்" எனவுங் கூறினுர்.

இ—ம். சமாதியில் அகமுகமாகச்சென்று அறியுமிடத்து உண்டானது பிரமசுகம் ஆயினும், அதை எதிரிட்டறிந்து மனமகிழ்தலின் அச்சுகம் விடயாநந்தமாயிற்று என்பதாம். (கஉங)

அ—கை. பிரமாநந்த இலக்கணங் கூறல்.

ஈனந்தருசுக விடயந்திரிபுடி யிடராமென மனமசையாமல், சேனந்தனதுகு லாயந்தனில்விழு செயல்போ னித்திரைசெறிசீவன், தானந்தமில்பர னுடனென்றுவனெரு தனைபல்லதுபிற நினையாமல், ஆனந்தம்மய மாவன்சுகமிகு மதுதானுயர் பிரமாநந்தம்.

இ-ள். இழிவைக் கொடுக்கின்ற விஷய சுகமானது திரிபுடியான துன்பமாம் என்று மனஞ் சலியாமல், பருந்தானது தனது கூண்டில் அடங்குந்தொழிலைப்போல நித்திரைசெய்கின்ற சீவனனவன் முடிவில்லாத பிரமத்தோடுகூடுவன்; ஒப்பற்றதன்னையல்லாது வேறு கருதாமல் ஆனந்தாகாரமாவன்; சுகமிகுந்த அவ்வாநந்தமே மேலான பிரமாநந்தமாம். எ-று.

ப—ம். பிரமத்தை எதிரிட்டறியின் அறிபவன் அறிவு அறிபொருள் என மூன்றும். அதனுல், துன்பமாம் என்பார் "ஈனந்தருசுக விடயந்திரிபுடி யிடராம்" எனவும், மனதை அடக்கிச் சொரூபசமாதி செய்கின்ற ஆத்மா பிரமத்தில் கலக்கும் என்பார், "மனம் அசையாமல் நித்திரை செறிசீவன், தானந் தமில்பர னுடனென்றுவன்" எனவும், அங்ஙனம் பிரமத்திற் கூடிய ஆத்மா அப்பிரமாநந்தமாக ஆநந்திப்பான் என்பார், "ஒருதனை யல்லது பிறநினையாமலாநந்தம் மயனுனவன்" எனவும், இஃதே பேரானந்தம் என்பார், "சுகமிகு மதுதானுயர் பிரமாநந்தம்" எனவுங் கூறினுர். நித்திரை என்பது அறிதுயில் எனக்கொள்க. (கஉச)

இதுவுமது.

தூங்குஞ் சுகமது பிரமச்சுகமெனல் சுருதிப் பொருள் விழி துயில்வோர்கள், தாங்கும் மலரணை நன்முகச்சிலர் சம் பாதிப்பது தானசுகம், தீங்குந்நன்மையு மாண்பெண்முறை மையுந் தெரியா தமஸிசெய் பொழுதேபோல், ஆங்குள்வெ ளிகளு மறியாவனுபவ மதனலதுபிர மாநந்தம்.

இ-ள். அறிதுயிலில் உதயமாகும் ஆனந்தமானது பிரமாநந்தம் என்று கொள்வது வேதமுடிவான மகா வாக்கியப் பொருளாம்; நித்திரை செய்பவர்களிற் சிலர்தாங்காநின்ற புஷ்பசயனத்தை நல்ல தாகச் சேகரிப்பது ஸ்தானசுகமாம்; நன்மை தீமையும் ஆண்பெண் என்கின்ற முறைமையும் அறியாமல் நித்திரை செய்கின்ற காலம் போல அவ்விடத்து அகம்புறங்களுந் தெரியாத சுவானுபவ மாத லால் அவ்வறிதுயில் பிரமாநந்தமாம். எ-று.

ப-ம். வேதமுடிவான மகாவாக்கியார்த்த உபதேசத்தில் ரமிக் கும் யோகநித்திரையே பிரமாநந்தம் என்பார், "தூங்குஞ் சுகமது பிரமச் சுகமெனல் சுருதிப்பொருள்" எனவும், அங்ஙனஞ் சமாதி அடைதற்குச் சாதனமான ஞானபூமி முதலியவைகளைப் பெற்று ஏகாந்தமாய் இருத்தலே இடம் என்பார், "துயில்வோர்க டாங்கும் மலரணை நன்முகச் சிலர் சம்பாதிப்பது தானசுகம்" எனவும், அகம் புறம் இன்றிப் பரிபூரணமாக விளங்கும்போது உள்ள சுகமே பிர மாநந்தம் என்பார், "உள்வெளிகளு மறியா வனுபவமதன லதுபிர மாநந்தம்" எனவுங் கூறினர்.

இ-ம். சுழுத்தியைப்போலச் சமாதியில் அகமுகமாய் ஆத்மா பிரமத்தில் சேர்ந்து அதன் மயமாச் சுகத்தை அனுபவித்தலின் அஃது பிரமாநந்தம் ஆயிற்று என்பதாம். (கஉரு)

அ—கை. சித்தில் சுகம் விளங்கும் அனுபவந் தெரிவான், அறிவின்றி ஆநந்தம் அறிவில் எங்ஙனந் தோற்றும்? என்று இடையில் வினுதல்.

உதவும்புவியினி லொருவன்னனுபவ மொருவன்மனதினிலுதியாதே, மதியுங்கெடுகிற துயில்கொண்டானந்தமயனன்றோசுக முறுகின்றான், இதுவிஞ் ஞானமயனுஞ் சிந்தையினினைவாய் வந்திடு மெனல்கண்டேன், சுதைவிண்ணோர் புகழ்குருவே நீரிதுசொல்லீர் சகலமும் வல்லீரே.

இ-ள். முத்திக்குச்சகாயமாகிய இப்பூமியில் ஒருவனுக்கு உதிக்கும் அனுபவமானது வேறொருவன் மனதில் உண்டாகாதே; மனோமயகோசத்தோடு விஞ்ஞானமயகோசமும் இறக்கின்ற யோகநித்திரையைக்கொண்ட ஆநந்தகாரனல்லவா பரமசுகத்தை அடைகிறான்? இச்சுகமானது விஞ்ஞானவடிவமாகிய மனதில் நினைவாக வருமென்பதை அறிந்தேன்; இஃதெங்ஙனங்கூடும்? அமிர்தபானஞ் செய்யுந் தேவர்கள் துதிக்கின்ற சமஸ்த வல்லமையுமுள்ள தேசிகரே! நீர் இதை அருளிச்செய்வீராக. எ-று.

இ—ம். வெளிப்படை. (கஉசு)

அ—கை. மேல்வினுவிற்கு உத்தரங்கூறல்.

நெய்யும்வெண்ணெயு மிருபேர்களுமறிநினை விற்பிறிவறிவினிலில்லை, செய்யுந்நனவினி லிருக்கும் மனதொடு சேருஞ்சின்மய விஞ்ஞானன், நையும்துயர் மனநழுவும் பொழுதுணர்ஞானச் சுகமுணு மாநந்தன், பெய்யுந் துளிகளு நீருங் குளமொடு பாகும்போ லிவர்பிறிவன்றே.

இ-ள். நெய் என்பதும் வெண்ணெய் என்பதுமாகிய இரண்டு நாமங்களும் நாமரூபமாக அறிகின்ற மனதிற்பேதமே அன்றி

அவற்றின் சுவையைக் கொள்கின்ற வறிவினில் பேதம் இல்லை; இச்சா ஞானக் கிரியைகளைச்செய்கின்ற சாக்கிரத்தில் ஸ்திரமான மனதோடும் சேருகின்ற சின்மாத்திரமான விஞ்ஞானமயனும் வருந்துகின்ற துன்பமுள்ள மனமும் நீங்குங்காலத்தில் அறிகின்ற ஞானநந்தத்தை அனுபவியாநின்ற ஆநந்தமயனும் ஆகிய இவர்கள் மேகம் பொழியாநின்ற மழைத்துளிகளும் சலமும் போலவும், வெல்லமும் பாகும்போல்வும், வேறல்லர். எ-று.

இ-ம். அறிவிறந்து உதிக்கும் ஆநந்தம் தெளிவாக விளங்குதலினாலும், ஆநந்தத்தினின் றுதிக்கும் அறிவு 'சுகமாயிருத்தலினாலும், இச்சிற்சுகம் அனுபவித்தல் ஒன்றுதலின் அறிவில்வரும் என்பதாம். இதைக் குருமுகமாகச் செய்யுஞ் சகச நிட்டையிற்காண்க.

அ—கை. அங்ஙனம் ஆயின் பிரமாநந்த மயமாக நின்றுவிடாமல் அறிவில் வருவானேன்? என்ற வினாவிற்கு உத்தரமும் வாசனாநந்த இலக்கணமுங் கூறல்.

ஒன்றாகிய பிரமாநந்தன்சுக மொழிவானேன் வெளி
வருவானேன், என்றான்முன்செய்த கருமம்வெளியினிலிழுக்
குஞ் சுழுத்திவிட் டெழுந்தோனும், நன்றாயினசுகமகலான்
வெளியிலுநடவான்மறதியும் பெறமாட்டான், அன்றுமென
விருந்துறங்குஞ்சிலகண மதுவேவாதனை யாநந்தம்.

இ-ள். ஆநந்தமயனான சீவன் ஏகமாகிய பிரமாநந்த சுகத்தை நீங்குவானேன்? வெளியே சாக்கிரத்தில் வருவானேன்? என்று கேட்கில், பூர்வத்தில் செய்த கன்மமானது வெளியினிற்கொண்டு வரும்; அப்படிச் சுழுத்தியினின்று வெளிப்பட்டவனும் நன்மையான அச்சுகத்தை நீங்கான்; புறம்பிலும் செல்லான்; மறதியை

யும் அடையான்; அன்றெனவும் ஆம் எனவும் நின்று நித்திரை செய்கின்ற சொற்பகாலமாகிய அதுதான் வாசனுநந்தமாம்.எ-று.

இ–ம். ஆநந்த மயத்துனின்றும் விஞ்ஞானமயத்தில் வருதல் சகச நிட்டையும் பிராரத்த கன்மானுபவத்தையுங் குறிதெனவும், துயிலைப்போலச் சமாதியினின்று நீங்குஞ் சமயத்தில் பிரமாநந்த சமஸ்காரத்தோடும் வருதலின் அச்சுகம் வாசனுநந்த மாயிற்றென வுங் கூறினதாம். (கஉஅ)

அ–கை. நிசாநந்த இலக்கணங் கூறல்.

அந்தக்கணமுட லகமென்றி டர்களிலலைந்தே சுகந்த ணைமறந்தேபோம், முந்தைச் செயும்வினை சுகதுக்கந்தரு மோனந் தருநடுவடிவேகாண், எந்தப்புருடனு மொருசிந் தையுமறவிருந்தே னெனலனுபவமாகும், இந்தப் படிதனு தாசீ னச்சுகமிதுவே நிசமெனுமாநந்தம்.

இ-ள். தேகத்தை நானென்று நினைத்த அப்போதே ஆன்மா துன்பங்களிற் சுழன்று ஆநந்தத்தை மறந்துவிடும்; முன்செய்த கன்மமானது இன்பங்களையேனும் துன்பங்களையேனும் கொடுக் கும்; மகாமௌனங் கொடுப்பது மத்தியகத நிலையையே ஆம்; எத்தன்மையான புருஷனும் ஒரு நினைப்பும் இன்றி இருந்தேன் என்பது அனுபவமாம், இப்படி தனது உதாசீனத்திலுண்டான ஆநந்தமான இதுதான் நிசாநந்தமாம். எ-று.

இ–ம். சமாதியில்விருப்பு வெறுப்பு இன்றிச் சமரசமான உண் மையாய் இருத்தலின், அச்சுகம் நிசாநந்தமாயிற்று என்பதாம்; இதை முக்கியாநந்தம் எனக் கூறுவாரு முளர். (கஉகூ)

அ–கை. முக்கியாநந்த இலக்கணமுங் கூறல்.

நிசமானதுமுக் கியமோகுடத்துள நீரன்றேவெளியிற ந்தான், வசமாமகங்கர மறைந்தானிசமது படிந்தான் முக்

கியவகையாகும், திசையார்திரிசிய மறியாதேதுயில் செறியாதேயுட றறிபோலே, அசையாதேமதி சமமாகிய நிலையது தான் முக்கியவாநந்தம்.

இ-ள். நிசாநந்தமானதும் முக்கியாநந்தமாமோ எனில், கடத்துக் குள்ளிருக்குஞ் சலமல்லவோ புறம்பிலிருக்கின்ற ஈரம்; அதுபோல வசமான அகங்கார மறைபட்டு நிசமானது கூடினுல் முக்கியமாம்; திக்குகளில் நிறைந்திருக்கின்ற விடயத்தை அறியாமலும் நித்திரையை அடையாமலும் தேகமானது ஸ்தம்பத்தைப்போல அசையாமலும் அறிவானது சமமாக நிற்றலே முக்கியாநந்தமாம். எ-று.

இ-ம். சமாதியில் அறிவறியாமை இன்றி அறிவே முதலாகச் சுகித்திருத்தலின் அச்சுகம் முக்கியாநந்தம் ஆயிற்றென்பதாம்; இதை நிசாநந்தமெனக் கூறுவாருமுளர். அங்ஙனங் கூறாது இங்ஙனம் கூறியது என்னையெனின், 'நடுநிலையினிற்கின் முக்கியமான ஸ்வரூபம் வெளிப்படுதலின் எனக்கொள்க. சமாதியில் தன்னிடத்தில் தானே சுகித்தலின் அச்சுகம் ஆத்மாநந்தமாயிற்று எனவும், சமாதியில் ஆநந்தம் ஆநந்தி என்னும் இரண்டற்ற சுகமாக விளங்குதலின் அச்சுகம் அத்துவிதாநந்தமாயிற்று எனவும், சமாதியில் அது நீ என்பது இன்றி ஆநந்தபோதமாய்ச் சுகித்தலின் அச்சுகம் வித்யாநந்தமாயிற்று எனவும் கொள்க. நிரதிசயாநந்த அம்சமான இவ்வஷ்டவித ஆநந்தங்களும் அதிசயமாகச் சமாதியின்கண் நவநவமாய் விளங்குதலின் அதிசயாநந்தமெனக் கூறப்படுவனவாம். (கரு௦)

அ-கை. ஆநந்த மகான்மியங் கூறல்.

மனுடன்மனுடகந் தருவன்றேவகந் தருவன் பிதிர்கருமத்தேவன், தனுடன் கருமசுரன்சுர னிந்திரனுசான் பிர

சாபதியானேன், கனவிராட்ட னிரணிய கர்ப்பன் முறை கரு துமிப்பதி னொருபேர்கள், பினவாநந்தங்க ளுரையாம் பிரளப் வெள்ளக்கடல் பிரமாநந்தம்.

இ-ள். மானுடனும் மானுடகந்தருவனும் தேவகந்தருவனும் பிதிர் கருமத்தேவனும் அசுரனும் தேவனும் இந்திரனும் பிரகஸ்ப தியும் பிரமனும் கனமாகிய விராட்புருடனும் இரணியகர்ப்பனும் ஆகிய முறையாக நினைக்கின்ற இந்தப்பதினொரு பெயர்களின் ஒன் றுக்கொன்று பேதமாயுள்ள ஆநந்தவகைகள் பிரமாநந்த மென்னும் கற்பாந்த வெள்ள சாகரத்தின் நுரைகளாம். எ-று.

இ-ம். நிரதிசயாநந்த மென்னுங் கடலில் அஷ்டவித ஆநந்த மென்னு நீரில் மனுடாநந்தமுதல் பதினோராநந்தங்களும் நுரை முதலிய லேசங்களாகத் தோற்றும் என்பதாம். (கஙக)

அ-கை. மேலே கூறிய ஆநந்தமே அதீதமாம் எனல்.

எவனுகினுமிந்தத்துரியா தீதத்திலேழாம் பூமியிலிரு ந்தானேல், அவனு ரதன்சுகன்சிவன்மா லயன்முத லறிவோ ரனுபவ சுகபோதம், விவகாரதிர்சிய மிதுவேயனுபவமென முன் சொல்லிய விவகாரி, உவமானமுமறி மகனேயவனடி யுதிரும் பொடிகளென் முடிமேலே.

இ-ள். மைந்தா! யாவனுனலும் இந்தத் துரியாதீதமென்னும் எழாம் பூமியில் இருந்தானகில், அம்மகாபுருடன் அரன் அரி அய னென்னும் மும்மூர்த்திகளுக்கும் நாரதர் சுகர் முதலிய அறிஞரு க்குமுள்ள சுவானுபவமாகிய ஆநந்த சின்மயனுவன்; விவகாரங்க ளில் திரிசியதிஷ்டியில்லாத இதுவே சுவானுபவமென்று முன்னே சொல்லி யிருக்கின்ற விவகாரியின் திஷ்டாந்தமுந் தெரிவாயாக; அவ்வனுபவியினுடைய பாதத்தில் உதிராநின்ற தூள்களானவை என் சிரசின்மேலிருக்கின்றன. எ-று.

இ-ம். துரியாதீதத்தை அடைந்தவனது மகிமையைக் கூறின தாம். (கநு உ)

அ-கை. சச்சிதாநந்த இலக்கணங்கூறி இன்னஞ் சந்தேகமுள தேல் கேட்பாய் எனல்.

இந்தவாறைந்துசுகஞ் சொல்லினோம் வித்தை சுகமினி மேற்சொல்வோம், முந்தைமாயையுஞ் சச்சிதாநந்தப்பொரு ளுமே பொழியும்போதில், அந்தமா மத்துவித சுகமான்ம சுகமிரண்டு மங்கேசொன்னோம், தொந்தமாற் றியமகனே யின்னமுனக்கைய முண்டேற் சொல்லுவாயே.

இ-ள். சுகதுக்காதி பந்தங்களைக் கெடுத்த மைந்தா! இவ்வி தம் விடயாநந்தம், பிரமாநந்தம் வாசனாநந்தம், நிசாநந்தம், முக் கியாநந்தம் என்னும் ஐந்துவித ஆநந்தத்தை உரைத்தோம்; வித் தியாநந்தத்தை இனிமேலுரைப்போம்; முன் மாயாரூபத்தையும் சச்சிதாநந்தார்த்தையும் சொல்லுமிடத்தில் வேதமுடிவான அத் துவிதாநந்தமும் ஆத்மாநந்தமும் ஆகிய இரண்டாநந்தத்தையும் அவ்விடத்திலுரைத்தோம்; இன்னமும் உனக்குச் சந்தேகமுண் டானல் கேட்பாய். எ-று.

இ-ம். வெளிப்படை. (கநுந)

அ-கை. ஆத்மா சச்சிதாநந்த ஸ்வரூபம் எனத் தெரிந்தும் அத னுண்மையான ஸ்வானுபூதி வெளிப்படும் நிமித்தம், சுருதி யுத்தி அனுபவங்களுக்கு ஒத்திருக்கும் அவற்றின் ஒருமை யைத் தெரிய வினவுதல்.

குகன்றனையு மெனையு முலகினையு மீன்றளித் தருளுந் குருவேகேளீர், புகன்றசச் சிதாநந்தப் பதங்கடனித் தனி பாயே பொருள்வேருனல், உகண்டமனமுறைப்ப தெங்ஙன்

பரியாய பதங்களைப்போ லுறவுகாணேன், அகண்டமாயொ ருசுவையாய்த் தேனீக்கூட்டி யமதுவாவறிவிப்பீரே.

இ-ள். குமரனையும் என்னையும் சகங்களையும் சிருட்டித்து ரக்ஷித்தருளுகின்ற இறைவனே! கேட்பீராக; முன்சொல்லிய சத்து, சித்து, ஆநந்தம் என்னும் முப்பதங்களும் வெவ்வேறாகி அருத்தமும் வேறுபடுமொனால், விடயங்களிற் பாயாநின்ற மனமானது ஸ்திரமாய் நிற்பதெப்படி? பரியாய நாமங்களைப்போலச் சம்பந்தமும் தெரிகிலன்; ஆதலால், ஏகமாகவும் ஒரே ருசியாகவுந் தேனீக்களாற் கூட்டப்பெற்ற தேனாகத் தெரிவிப்பீர். எ-று.

இ—ம். வெளிப்படை. (கருச)

அ—கை. சச்சிதாநந்த ஒருமையைச் சுருதிப் பிரமாணத்தால் கூறுவான் தொடங்கி அவற்றின் காரணமும் ஒருமையுங்கூறுகின்றார்.

குளிரிளகல் வெண்மையென்ற பதங்களினாீர்மூன்று கூறாயிற்றோ, வொளிதபனஞ் செம்மையென்ற பதங்களாலக்கினியு மொருமூன்றாமோ, வெளிமுதலாஞ் சகமசத்து மூடமிடரெனப் பிரித்துவிலக்கிவேதம், எளிதறிய முரண்மொழிந்த சத்தாதியெனும்பிரம மேகந்தானே.

இ-ள். குளிர்ச்சியும் நெகிழ்ச்சியும் வெள்ளையுமெனச் சொல்லிய சொற்களினால் சலமானது மூன்று பொருளானதோ? பிரகாசமும் சூடும் சிவப்புமெனச் சொல்லிய சொற்களினால் நெருப்பும் மூன்றுபொருளாகுமோ? அதுபோல ஆகாயமுதலான உலகத்தை அனுர்தமெனவும் சடமெனவும் துக்கமெனவும்வேறுபடுத்தி நீக்கிச சுருதியானது பக்குவிகள் எளிதிலுணர அவற்றிற்கு எதிராகச் சொன்ன சத்து சித்து ஆநந்தம் என்னும் பிரமமானது ஒன்றேயாம். எ-று.

சச்சிதாநந்தங்கள் பரஸ்பரம் பின்னமல்ல, ஏகந்தான்; குணமாயின், பின்னமாம்; பிரமசரூபமாகலின் பின்னமாகா; பிரமமொன்றே, நிவர்த்தியின்மையின் சத்தென்றும், சடத்தில் விலக்ஷணமான பிரகாசரூபமாகலின் சித்தென்றும், துக்கத்தின் வேருய்முக்கியப்பிரீதிக்கு விஷயமாகலின் ஆநந்தமென்றுங் கூறப்படுகின்றது. சலமானது எப்படி நெகிழ்ச்சி குளிர்ச்சி வெண்மை ரூபமோ, அக்கினியானது லோகிதோஷ்ணப் பிரகாச ரூபமோ அப்படியே பிரமமும் சச்சிதாநந்த ரூபமென்றறிக.

இ—ம். சகத்தை அனுர்த சடதுக்கமெனக் கண்டு அதனை நீக்குதற்காகக் குறித்த நாமம் சச்சிதாநந்தமெனவும், அதனருத்தம் ஒன்றுன பிரமமெனவுங் கூறினதாம். (கநடு)

அ—கை. சச்சிதாநந்தம் ஒருமையென்பது உறுதிப்பட நிமித்தம் வேதம் ஒருமையாகச் சொல்லிய பரியாயநாமங்களில் விதி நாமங் கூறல்.

நித்தியம் பூரணமேகம்பரமார்த்தம் பரப்பிரம நிதானஞ்சாந்தம், சத்தியங்கே வலந்துரியஞ் சமந்திருக்குங்கூடஸ்தன் சாக்ஷிபோதம், சுத்தமிலக்கியஞ்சனு தனஞ்சீவன்றத்துவம்விண் சோதியான்மா, முத்தம்விபு சூக்குமமென்றிவ்வண்ணம்விதி குணங்கண் மொழியும் வேதம்.

இ-ள். நித்தியம் எனவும், பூரணம் எனவும், ஏகம் எனவும், பரமார்த்தம் எனவும், பரப்பிரமம் எனவும், நிதானம் எனவும், சாந்தம் எனவும், சத்தியம் எனவும், கேவலம் எனவும், துரியம் எனவும், சமம் எனவும், திருக்கு எனவும், கூடஸ்தன் எனவும், சாக்ஷி எனவும், போதம் எனவும், சுத்தம் எனவும், லக்ஷியயம் எனவும், சநாதனம் எனவும், சீவன் எனவும், தத்துவம் எனவும், விண் எனவும், சோதி எனவும், ஆத்மா எனவும், முத்தம் எனவும், விபு

எனவும், சூக்குமம் எனவும் இந்தப்பிரகாரம் விதியால் குணப்பரி யாய நாமங்களைச் சுருதிகள் சொல்லும். எ-று.

இ—ம். நிதானம்-ஆதிகாரணம், சநாதனம்-அநாதி. (கஙசு)

அ—கை. விலக்குநாமங்கூறல்.

அசலநிரஞ்சனமமிர்தமப்பிரமேயம் விமலம்வசனாதீதம்
அசடமநாமயசங்கமதுலநிரந்தரயநணு நிருபாகண்டம்
அசமனந்தம்விநாசிநிர்க்குணநிஷ் களநிரவயவமநாதி
அசரீரமவிகாரமத்துவிதமெனவிலக்கு மநேகமுண்டே.

இ-ள். சலனம் இன்மையும், அஞ்சனம் இன்மையும், மிர்தம் இன்மையும், பிரமேயம் இன்மையும், மலம் இன்மையும், வாக்குக் கெட்டாமையும், சடம் இன்மையும், ஆமயம் இன்மையும், சங்கம் இன்மையும், துலம் இன்மையும், அந்தரம் இன்மையும், அணு இன் மையும், ரூபம் இன்மையும், கண்டம் இன்மையும், சன்மம் இன்மை யும், அந்தம் இன்மையும், நாசம் இன்மையும், குணம் இன்மையும், சகளம் இன்மையும், அவயவம் இன்மையும், ஆதி இன்மையும், சரீ ரம் இன்மையும், விகாரம் இன்மையும், துவிதம் இன்மையும் என்று சொல்லப்பட்ட விலக்கு நாமங்களும் அநேக முள்ளனவாம். எ-று.

அப்பிரமேயம்-அறியப்படாதது, அநாமயம்-நோயில்லாதது, அதுலம்-கனமில்லாதது, நிரந்தரம்-இடையில்லாதது, நிரவயவம்-அவயமில்லாதது, அசம்-பிறப்பில்லாது. (கஙஎ)

அ—கை. இவ்விதி விலக்கு நாமங்களின் ஒருமை கூறல்.

இன்னவகைவிதிவிலக்குக் குணங்கணன்றுச்சேர்ந்தொ ருமித் தெல்லாங்கூடிச், சொன்னபொருளொன்றன் றியி ரண்டில்லை யொருபொருளைச் சொல்லுஞ் சொற்கள், பின்

னபதமாமதனுற் சத்தாதிகுணப் பொருளாம் பிரமமேகம்,
அன்னபொருளொருமைபறிந் தகண்டபரிபூரணமாயாவாய்
நீயே.

இ-ள். இத்தன்மையவாக விதியும் விலக்கும் ஆகிய குணங்கள் நன்ருகச் சேர்ந்து ஒன்றுபட்டு அனைத்துங் கூடிச் சொல்லிய அருத்தம் ஏகமே அன்றி துவிதமில்லை; ஏகவஸ்துவை உரைக்கும் வசனங்கள் வெவ்வேறு சொற்களாம்; ஆதலினுல், சத்து சித்து ஆநந்தம் என்னுங் குணப்பதங்கட்குப் பிரமமொன்றேபொருளாம்; அத்தன்மையான அருத்தத்தின் ஒருமையைத் தெரிந்து அகண்டமான பூரண ஸ்வரூபமாக நீ ஆகக்கடவாய். எ-று.

இ-ம். இவ்விதிவிலக்கு நாமங்கள் பலவாயினும், கைம்மலை, கறையடி, புழைக்கை என்னுஞ் சொற்கள் வெவ்வேறு பதமாயினும், அவைகளின் பொருளான யானை பின்னமாகாமல் ஒன்றேயாவதுபோலும், ஒருபுருடனைப் பிதா மகன் தம்பி என்னும்அநேக சொற்களாற் சொல்லினும் அவன் அநேகன் ஆகாமல் ஒருவனேயாவதுபோலும், அவைகளால் உணர்த்தப்படும் பொருள் ஒன்ருதல்போலச் சத்து சித்து ஆநந்தம் என்னும் பதங்கள் மூன்ருயினும் அவையுணர்த்தும் பொருள் ஒன்ருன அத்துவித வஸ்துவாயிருத்தலால் சந்தேகமொழிந்து அதுவாயிருத்தி என்பதாம். ().

அ—கை. குணுதீதமான வஸ்துவிற்குக் குணங்கூறலாமோ? என்பதற்கு உத்தரங் கூறல்.

நிற்குண வஸ்துவின் குணங்களுரைப்பதுதாய் மலடி
யெனனிகரென்னுதே, சற்குணனேவஸ்துநிலை யுரையாம
லறியவல்ல சதுரருண்டோ, நற்குணவே தங்களிந்தச்சிவன்

முத்தி பெறப்பிரம ஞானந்தோன்றச், சொற்குணங்கள்பிர
மத்தின் குணங்களல்ல பிரமமாஞ் சொரூபந்தானே.

இ-ள். சற்குணனே? குணரகிதமான பிரமவஸ்துவிற்கு இத்தன்மையான நாமங்களைச் சொல்வது தாய் மலடி என்பதற்குச் சமானமென்று சொல்லாதே; வஸ்து நிச்சயத்தை ஆசிரியர் சொல்லாமல் தானே தெரிந்து கொள்ளும் வல்லமையுள்ள சதுரரான சீடருமுளரோ? ஆதலால், நல்ல சுபாவத்தையுடைய சுருதிகளானவை இச்சீவன் முத்தியை அடையும்பொருட்டுப் பிரம ஞானம் உதிக்கும்படி உரைத்த சத்தாதி குணங்கள் பிரமத்தின் குணங்களல்லவாம், அதன் அருத்தம் பிரமஸ்வரூபமேயாம். எ-று.

இ-ம். அறிதல் இறந்தவிடத்து அனுபவமாய் உள்ள நிர்க்குணவஸ்து, அறிவிற்கு அவதானமாகும் பொருட்டு, உரைக்கும் பரியாய நாமங்களின் அருத்தப்படி சிந்திக்கின் இக்குணரூபம் இறந்து, அக்குணாதீத ஸ்வரூபம் வெளிப்படும் அன்றி, மற்றொன்றால் வெளிப்படாது. ஆதலால், அங்ஙனம் கூறுஞ் சுருதிப் பிரமாணத்தை உணர்த்தியதாம். (கரு௯)

அ-கை. சச்சிதாநந்தப் பொருள் ஒன்று என்பதைச் சுருதியில் காட்டினதுபோல யுத்தியிலுங் காட்டல் வேண்டும் என வினாதல்.

மோகவிருள் கெடக்கோடி யருணனென வருகுருவே
மொழியக்கேளீர், ஏகபரிபூரணமா மென்சொரூப மென்னு
ளத்தி லிருக்கும்வண்ணம், ஆகமங்கள் சொன்னபடி யென்
ணயகண்டாத்தமா வறிந்தேனையா, ஊகமுமொத்திட வுரை
த்தாற் பசுமரத்திலாணிபோ லுறைக்குநெஞ்சே.

இ-ள். மோகாந்தகாரம் நீங்கக் கோடிசூரிய ருதயமானது போல எழுந்தருளிய ஆசாரியரே! அடியேன் சொல்வதைக் கேட்

டருள்க; ஒன்றான பூரணஸ்வரூபமாகிய எனது பிரமஸ்வரூபம் என் இதயத்தில் அழுந்துமாறு சுருதிகள் சொல்லியபடி எனது ஸ்வரூபத்தை அகண்டப் பொருளாகத் தரிசித்தேன்; எனது ஆசிரியரே! யுத்தியும் பொருந்தும்படி அருளிச்செய்தால், மனம் பச்சைமரத்தி லறையும் ஆணியைப்போல் ஸ்திரப்படும். எ-று.

இ-ம். வெளிப்படை. (கசௐ)

அ-கை. மேல் வினாவிற்கு உத்தரங் கூறல்.

சத்தேசித்தாகுமய லெனிலசத்தா மசத்தானாற் சாக்ஷி
யெங்கே, சித்தேசத்தாகுமய லெனிற்சடமாஞ் சடங்களுக்
குத்திதியுமில்லை, ஒத்தேதோன்றிய சத்துஞ்சித்து நல்லசுக
மாகு மூகத்துக்கோர், வித்தே யன்னியமாகிற் சடமசத்
தாஞ் சுகானுபவம் விளைந்திடாதே.

இ-ள். சத்தாக விளங்குதலே சித்தாகும் சத்துக்குச் சித்து வேறென்றால் அப்போது சத்து இல்லாததாம்; இல்லாததாயின் நடுவாயிருந்தறியும் சாக்ஷி எங்ஙனமாம்? சித்தாயிருத்தலே சத்தாகும்; சித்துக்குச் சத்து வேறென்றால் அறியாமையாம், அத்திரிசயங்களுக்கு விளங்குந் தன்மையு மில்லையாம்; (ஆதலால்) பொருந்தத்தோன்றிய திரிகாலங்களிலும் நசியாதிருக்கின்ற சத்தும் முக்காலங்களிலுந் தெளிவாக விளங்கிய சித்துமே நிரதிசயாநந்தமாகும்; உத்திக்கோர் விதையாகும்; வேறானால் சித்துஞ் சத்துஞ் சடமும் அசத்துமாம்; அங்ஙனமாயின், ஆநந்தமுதியாமல் துக்கமுண்டாகும். எ-று.

ப-ம். சத்தே சித்தாகாவிடின் தன்னையறியுந் தன்மை இல்லை என்பார், 'சாக்ஷியெங்கே' எனவும், சித்தேசத்தாகாவிடின் சர்வம் பிரமமயமாக விளங்குதல் இன்றென்பார்; 'சடங்களுக்குத் திதியு மில்லை' எனவும், இவ்விருமையின் ஒருமையி னுதிப்பதே நிரதிசயா

நந்த மென்பார், 'நல்ல சுகமாகும்' எனவும், இவ்வுத்தி அனுபவத் துக்கு மூலமென்பார், 'ஊகத்துக்கோர்வித்து' எனவும், வேறு படின் இச்சச்சிதாநந்தம் அனுர்தசட துக்கமாமென்பார், 'அன் னியமாகில் சடமசத்தாஞ் சுகானுபவம் விளைந்திடாது' எனவுங் கூறினர். (கசுக)

இதுவுமது.

வீயாதசத்துமுன்னம் விளங்குவதுதன்னாலோ வேறொ ன்றாலோ, வாயால்வேறெனிலதுவு மசத்தோசத்தோ வசத் தேன் மலடிமைந்தன், பேயாகாரியஞ்செயுமோ வசத்தென விப் படியதையும் பிரித்துச்சொன்னால், ஓயாதவவத்தை யாங் குதர்க்கவிகற் பங்களைவிட்டொழிந் திடாயே.

இ-ள். பேயனே! திரிகாலங்களினும் நசியாத சத்தானது முன் பிரகாசிப்பது தன்னாலேயா? மற்றொன்றாலேயா? வாக்கினால் வேறென்றால், அச்சத்தமும் இல்லாததா இருப்பதா? இல்லாத தென்றால், வந்தியா புத்திரன் தொழிலைச் செய்வானா? அக்கிரி யைகளையும் இங்ஙனம் அசத்தென்று பகுத்துச் சொல்லின் நீங் காத அவத்தையாம், குதர்க்கமாகிய வேறுபாடுகளைவிட்டு நீங்கு வாயாக. எ-று.

ப-ம். தன்னை அறிவது தானே அன்றி வேறாமோ என்பார், 'வீயாத சத்துமுன்னம் விளங்குவது தன்னாலோ வேறொன்றாலோ' எனவும், அங்ஙனம் உரைக்குஞ் சத்தமும் இருந்ததை உரைக்குமா? இல்லாததை உரைக்குமா? என்பார், "வாயால் வேறெனிலதுவு மசத்தோ சத்தோ" எனவும், இல்லாதது நிகழுமா? என்பார், 'அசத் தேன்மலடி மைந்தன் காரியஞ் செயுமோ' எனவும், இல்லாதது நிக ழும் என்னின் நீங்காத சநநாவத்தை உண்டாகும் என்பார் 'அசத் தென விப்படி யதையும் பிரித்துச்சொன்னாலோ யாதவத்தையாம்' எனவும், இருந்ததே அறிவென்னும் அனுபவங்கொண்டு இல்லா

தனை நீக்குவாய் என்பார், 'குதர்க்க விகற்பங்களை விட்டொழிந் திடாய்' எனவுங் கூறினர்.

இ-ம். இருந்தது விளங்குதலின் சத்தே சித்தெனவும், விளங்குவதே இருத்தலின் சித்தே சத்தெனவும், இவ்வொருமையில் சுகம் விளைதலின் இஃதே ஆநந்தமெனவும், இவ்வனுபவத்தால் உத்திப் பிரமாணம் உணர்த்தியதாம். (கசஉ)

அ-கை. சச்சிதாநந்தப் பதங்களின் பொருள் ஒன்றென்பதற்கு அனுபவங் கூறல்.

சுருதியுத்தி யொத்ததுபோ லனுபவமுங் கேள்சுழுத்திச் சுகவாநந்தம், மிருதிவடிவாதலினவ் வானந்தமேயறிவாம் வேறங்கில்லை, கருதுபிரளயஞ்சுழுத்தி யிரண்டிலுநீ யிருந்திருளைக் காண்கின்றயே, இருதயத்திப் படிநோக்கி யேகபரி பூரணமா யிருந்திடாயே.

இ-ள். சுருதியும் உத்தியும் பொருந்தினதுபோல அனுபவத்தையுங்கேளாய்; சுழுத்தி அவத்தையில் உள்ள ஆநந்தமானது, பூரணஸ்வரூபமாதலின் அந்த ஆநந்தமே ஞானமாம்; அவ்விடத்து மற்றென்றில்லை, நினைக்கின்ற கற்பாந்தமும் சுழுத்தி அவத்தையும் ஆகிய இரண்டு காலத்தும் நீ சத்தாக நின்று அந்தகாரத்தைப்பார்க்கின்றய் அல்லவா? உனது இருதயத்தில் இவ்விதமாகப் பார்த்து ஒன்றன பூரணஸ்வரூபமாகவே இருப்பாயாக. எ-று.

ப-ம். அறிதல் இறந்த சுழுத்தியில் ஆநந்தம் விளங்குதல் அதற்கே தெரிதலின் அவ்வாநந்தமே அறிவென்பார், 'சுழுத்தி சுகவாநந்த மிருதிவடிவாதலி னவ்வாநந்தமே யறிவாம் வேறங்கில்லை' எனவும், இருளை அறியுமிடத்து அவ்வறிவே தானயிருத்தலின் அறிவே சத்தென்பார், 'பிரளயஞ் சுழுத்தியிரண்டிலு நீயிருந்திருளைக் காண்கின்றய்' எனவுங் கூறினர்.

இ-ம். சச்சிதாநந்தத்தின் பொருள் ஒருமை என்பதற்கு அனுபவங் கூறியதாம். சுருதி யுத்தி அனுபவங்களோடும் உணர்த்திய சச்சிதாநந்தத்தின் பொருளொருமையின் ஸ்வரூபத்தைத் தேசிக ருபதேசமுகத்தால் தெரிந்துகொள்க. (கசஙு)

அ-கை. சுருதி யுத்தி அனுபவப்படி சீடன் சகச நிட்டையில் பெற்ற அனுபவங் கூறல்.

பலகலையுமுணர்ந்தகுரு மொழிந்தபடி யிவனுமனுபவம் விடாமல், பலமலரின்மதுப்போலச் சச்சிதாநந்தமொன்றும் பரமார்த்தத்தைப், பலபொழுதுங்கண்மூடிச் சமாதியிருந் தான் விழித்துப் பார்த்தபோது, பலவடிவாஞ் சராசரசித் திரங்களெலாந் தோன்றுமொரு படமானனே.

இ-ள். சகல சாஸ்திரங்களையும் அறிந்த தேசிகர் அனுக்கிரகித்தவண்ணம் இச்சீடனும் அனுபவத்தைவிட்டு நீங்காமல் பல மலர்களிலிருக்குந் தேன் ஒருமித்ததுபோலச் சத்துச்சித்தாநந் தங்கள் ஏகமாகிய பிரமப்பொருளை எப்போதும் ஊனக்கண்ணை மூடி ஸ்வரூப சமாதியிலிருந்து ஞானவிழியால் பார்க்கும்போது நாநாவித உருவங்களான தாவரசங்கமமாகிய சித்திரங்க ளனைத்தும் தோன்றுகின்ற ஓர் சித்திரப்படமானன். எ-று. (கசச)

அ-கை. துரியாதீதமே துரியமாக விளங்கும் அனுபவத்தில் நவநவமா ரமிக்கும் பொருட்டு அஃது உதயமாதற்கு இடமான ஞானபூமியைக்குறித்து நான்கு வகையாக வினுதல்.

இதயமொத்த சற்குருவே நமக்கிதுவே விநோதமன்றி யினிவேறுண்டோ, அதையுரைத்து மதைநினைத்து மிருப்பதன்றோ ஞானிகளுக்கானநீதி, முதலுரைத்த துரியாதீதமுமேழாம் பூமியுமுக்கியமாமென்ற, பதமுமதின் வகையுமெனக் கெளிதாகத் தெரியும்வண்ணம் பணித்திடீரே.

இ-ள். மனமொத்த என்னுடைய ஆசிரியரே! நமக்கு இவ்வி சாரமே லீலையல்லாமல் இனிவேறும் ஒன்றுளதோ அப்பிரமத்தை வாக்கினுல் பேசியும் மனதினுல் தியானித்தும் இருப்பதல்லவா ஞானவான்களுக்கான நியாயம்; முன்சொன்ன துரியாதீதத்தை யும் ஏழாவது பூமியும் முக்கியமாமென்று சொல்லிய பதமும் அதின் பகுப்பையும் அடியேனுக்குச் சுலபமாகத் தெரியும்படி அருளிச்செய்வீராக. எ-று.

இ-ம். வெளிப்படை. (கசரு)

அ-கை. சுவானுபவத்தில் செல்லு மனோலயமார்க்கமான ஞான பூமியைக் கூறுவான் தொடங்கி உற்பத்திக்கிரமமான அஞ் ஞான பூமியின் வகையாகிய நாமங்கள் ஏழையும் முற்கூறு கின்றார்.

வினவுமிடத்தஞ்ஞான பூமிகளேழ் ஞானபூமிகளேழெ ன்பர், இனியவற்றுளஞ்ஞான பூமிகளேழையுமுந்தி யியம் பக்கேளாய், தனிவித்துச் சாக்கிரஞ்சாக் கிரமகாசாக்கிரஞ் சாக்கிரத்தைச்சார்ந்த, கனவுகனுக்கனவுசாக் கிரஞ்சுழுத்தி யென்றெழுபேர் கணித்தார்மேலோர்.

இ-ள். விசாரிக்குமிடத்தில் அஞ்ஞான பூமிகள் ஏழு ஞான பூமிகள் ஏழு என்று சத்துக்கள் சொல்லுவார்கள்; இனி அவை களுக்குள் அஞ்ஞானபூமிகள் ஏழினையும் முன்பு சொல்லுவோம் கேட்பாயாக: தனிமையான வித்து நனவு எனவும், நனவு என வும், மகாநனவு எனவும், நனுக்கனவு எனவும், கனவு எனவும், கனுநனவு எனவும், சுழுத்தி எனவும் ஏழுநாமங்கள் மகான்கள் கூறினார்கள். எ-று.

இ-ம். வெளிப்படை. (கசகூ)

அ-கை. அவற்றுள் நான்கு பூமிகளின் இலக்கணமுங் கூறல்.

முந்தவகண் டத்தெழுமோ ரறிவுமாத் திரமதுதான் முதல்வித்தாகும், இந்தவறி விற்பண்டில்லாவகந்தைமுளைப் போலா மிதுநனுவாம், வந்துவந்து பிறவிதொறு மகமமதை வளருமது மகாநனுவாம், நந்துமகங் கொடுநனவின் மனோ ராச்சி யஞ்செயலே நனுக்கனுவே.

இ-ள். முன்னரே உள்ள அகண்டமாகிய சத்தில் உதித்த ஒருணர்வாகிய அதுவே முன்னுண்டான வித்து நனவாம்; இவ் வித்தாகிய உணர்வில் முன்பில்லாத அகந்தையானது முளை போல உண்டாம் இது சாக்கிரமாகும்; உண்டாகிச் சநநங்கள் தோறும் யான் எனது என்கின்ற விருக்ஷம் வளரும் அது மகா சாக்கிரமாம்; நசிக்கின்ற அகத்தைக்கொண்டு சாக்கிரத்தில் மனோ ராச்சியஞ்செய்வது சாக்கிரசொப்பனமாம். எ-று.

ப—ம். அறிவு அறியாமை இன்றி அறிவாக விளங்குகின்ற தன்னிடத்தில் எதிரிட்டறிய உதித்தபோதமே சகசீவபரத்துக்கு மூலமான பிரகிருதியென்பார் 'முதல் வித்தாகும்' எனவும் இவ் வறிவில் பிரதிபலனமாக வெளிப்படுஞ் சாயையா னென்னுமறிவே சகசீவபர வுற்பத்திக்கு அடையாளமான மகதத்துவ மென்பார் 'நனு' எனவும், அச்சகசீவபரங்களை யான் எனது என மமதாகங் காரமாக வெளிப்படும் அறிவே அகங்கார தத்துவம் என்பார், 'மகா நனவு' எனவும், அச்சகசீவபரங்களின் உருவமே நான் என வியாபித்து அதுவாக நிற்கும் அறிதல்போலத் தோற்றுமென்பார் 'நனுக்கனு' எனவுங் கூறினர். (கசஎ)

அ—கை. ஏனைய மூன்று பூமிகள் இலக்கணமுங் கூறல்.

உண்டுறங்கி மனோராச்சி யஞ்செயல்சொப் பனமெனும் பே ருடையதாகும், பண்டுகனுக் கண்டுமறந் ததைமீண்டு நினைப்பது சொப்பன நனுவாம், மண்டுமிருண் மூடுவதுசுழுத்

தியர்மஞ்ஞான வகைகள்சொன்னேம், விண்டுநிறை முத்தி தரு ஞானபூமிகளேழும் விளம்பக் கேளாய்.

இ-ள். புசித்து நித்திரைசெய்து மனோராச்சியஞ்செய்வது கனு என்னு நாமமுள்ளதாம்; முன்சாக்கிரத்திற் பார்த்து மறந்து விட்டதைத் திரும்ப ஞாபகப் படுத்துவது சொப்பன சாக்கிரமமாம்; மிகுந்த இருள் மூடிக்கொள்வது சுழுத்தியாகும்; அஞ்ஞான பூமிகளின் விதத்தைச் சொன்னேம்; சட முதலியவைகள் வேறுபட்டுப் பரிபூரணமான (கைவல்லியத்தைக் கொடுக்கும்) ஞானபூமிகளேழையும் சொல்லக் கேட்பாயாக. எ-று.

ப-ம். அச்சகசீவ பரங்களின் யதார்த்தம் இஃது எனத் தோன்றாது அதனில் வியாபிக்கும் அறிவே மனோராச்சியம் என்பார், 'சொப்பனம்' எனவும், அவ்வறிவு சகசீவபரங்களை மறந்து நினைக்கும் என்பார், 'சொப்பன நனு' எனவும், அச்சகசீவபரங்களை தானாகி நின்று தன்னை முழுதுமறந்த அறியாமையே மீளாத மகா சுழுத்தி என்பார் 'இருள் மூடுவது சுழுத்தியாம்' எனவுங் கூறினர்.

இ-ம். வித்துநனவு, நனவு, மகாநனவு ஆகிய இம்மூன்றும் அறிவு பரிணமித் தாகாரமாய் எதிரிடுதலால் சாக்கிரம் எனவும், சாக்கிரசொப்பனம் சொப்பனம் சொப்பனசாக்கிரம் ஆகிய இம் மூன்றும் எதிரிடுகின்ற ஆகாரங்களின் அறியாமையோடு விவகாரங்கள் செய்தலின் சொப்பனம் எனவும், சுழுத்தி ஒன்றுஞ் சிருட்டி முதல் இதுகாறுந் தன் யதார்த்தந் தெரியாமல் விடயாநந்தகாரமாக உறங்குதலின் சுழுத்தியெனவுங் கூறினரென்பதாம். (கசஅ)

அ-கை. ஞானபூமிகளின் நாமங்கள் ஏழையுங் கூறுகின்றார்.

புலவர்புகழ்முதற் பூமிசுபேச்சை விசாரணையி ரண்டாம் பூமியாகும்; நலதனுமானசிமூன்ரும் பூமிசத்துவாபத்

திநாலாம்பூமி, சொலுமசஞ்சத்திப்பேரும் பதார்த்தபாவ ஊைப்பேருந் துரியப்பேரும், மலினமறுமகனே யைந்தாறே ழுபூமிகளா வகுத்தார் மேலோர்.

இ-ள். களங்கமற்ற மைந்தனே! அறிஞர்கள் துதியாநின்ற முந் தின பூமியானது சுபம் விரும்பல் எனவும், இரண்டாம் பூமியானது விசாரம் செய்தல் எனவும், மூன்றும் பூமியானது மனஞ் சிறுகல் எனவும், நான்காம் பூமியானது உண்மையிலே நிலைபெற்று நிற்றல் எனவும், சொல்லாநின்ற சங்கற்பம் அறல் என்னு நாமமுடையதை யும் பதார்த்த எண்ணம் அறுத்திடல் என்னும் நாமமுடையதையும் துரியம் என்னும் நாமமுடையதையும் முறையே ஐந்தாம்பூமி, ஆறும்பூமி, ஏழாம்பூமிகளாக மகான்கள் பிரித்தார்கள். எ-று.

இ-ம். வெளிப்படை. (கசகூ)

அ-கை. அவற்றுள் நான்கு பூமிகளின் இலக்கணங் கூறல்.

துர்ச்சங்க நிவிர்த்திவந்து சிவஞானம் விரும்புவதுசுபே ச்சையாகும், நற்சங்கமொழிவினவி ஞானநூல் பழகல்விசா ரணையாநம்பி, முற்சங்க வீஷணைகள் விடறலுமா னசியிந்த மூன்றினும், சற்சங்க மனதிலுண்மை யறிவுதித்தல் சத்து வா பத்திதானே.

இ-ள். துர்ச்சங்க நீங்கிச் சிவஞானத்தை யாசிப்பது (சுபத்தை விரும்புதலாகிய) சுபேச்சையாகும்; சாது சங்கத்தைச்சேர்ந்து அவ ருரைக்கும் வாக்கியத்தைக்கேட்டு, ஞானசாஸ்திரத்தை அப்பியா சிப்பது விசாரணையாகும்; விசாரத்தின் வெளிப்படும்பொருளைநம்பி முன்னுள்ள இச்சைகளை நீக்குதல் (மனஞ்சிறுகுதலாகிய) தனுமா னசியாகும்; இம்முப்பூமிகளின் பழக்கத்தினுலும் சற்சங்கம் பழகிய

மனதில் மெய்யுணர்வு பிறத்தல் (உண்மையிலே நிலைபெற்று நிற்ற லாகிய) சத்துவா பத்தியாகும். எ-று. (கரு௦)

அ—கை. ஏனைய மூன்று பூமிகளின் இலக்கணங் கூறல்.

தத்துவத்தின் மனமுறைந்து மித்தையெலா மறத்தல சஞ்சத்தியாகும், அத்துவிதாநந்தம்வருந்திரிபுடிபோம்பதா ர்த்த பாவனையதாகும், வத்துநிலை யிருந்தபடி யிருந்தமவுன சுபாவந் துரியமாகும், இத்துரிய பூமியைமுன். றுரியாதீதப் பதமென் றதுவுங்கேளாய்.

இ-ள். உண்மையில் மனம் ஸ்திரப்பட்டுப் பொய்ம்மைக ளனை த்தையும் மறந்துவிடுவது (சங்கற்பம் அறலாகிய) அசம் சத்தியா கும்; அத்துவிதாநந்த முண்டாதலும் திரிபுடி நீங்குதலும் (பதார் த்த எண்ணம்) அறுத்திடலாகிய பதார்த்த பாவனையாகும், பிரம வஸ்துவின் நிச்சயம் இருந்த வண்ணமிருக்கின்ற மோனத்தன் மையே துரியமாம்; இந்தத் துரியபூமியை முன்பு துரியாதீதப் பதம் என்று சொன்னதையும் கேட்பாயாக. எ-று.

இ—ம். சாதன சதுட்டய முதித்து விஷய தோஷ திருஷ்டி உண்டாய்த் தன்னைத் தரிசிக்க விரும்புவதே சுபேச்சை எனவும், விருப்பத்தால் அவனுகிய சித்துருவமும் தானல்லாத சடவுருவ மும் இஃதென விசாரித்தல் விசாரணை எனவும், அவ்விசாரத்தி லுள்ள சித்தில் வாசனை உண்டாய்ச் சடவாசனை விட்டு மனமடங் குதலே தனுமானசி எனவும், அச்சித்து வாசனை மிகுந்து அது அனு பவமாக வெளிப்படுதல் சத்துவாபத்தி எனவும், அச்சித்து யத்தி னல் சடபாவநீங்குதல் அசஞ்சத்தியெனவும், அச்சித்தில் ஆநந் தோதயமாய் இரண்டற யாவுந்தானே தானுயிருத்தல் பதார்த்தபா வனை எனவும், இவ்வனுபவம் எப்போதும் உள்ளதாக விளங்குதல் துரியம் எனவுங் கூறினதாம். (கருக)

அ-கை. இந்தத் துரியபூமியே துரியாதீதமாகும் இயல்புதோன்றச் சத்தபூமியையும் பஞ்சாவத்தை ஆகப் பகுத்து அதன்வகையும் இலக்கணமுங் கூறுகின்ருர்.

முப்புவி மூன்றினு முலகந் தோன்றுதலாற் சாக்கிரமாமூன்றற் கப்பால், சொப்பனமா மதுவுமெள்ள நழுவுமஞ்சாம்பூமியே சுழுத்தியாகும், அற்புதமாஞ் சுவானுபவ மிகுமாரும் புவிதுரிய மதற்கப்பாலோர், கற்பனையிலாத விடமதீதமென்று மவுனமாக் காட்டும்வேதம்.

இ-ள். முதற்கட்கூறிய பூமிகள் மூன்றிலும் சகந்தோன்றுகின்றபடியால் அம்மூன்று பூமியும் நனவாகும்; நான்காவதுபூமி கனவாகும்; அக்கனவு மெள்ள நீங்குகின்ற ஐந்தாம் பூமியே சுழுத்தியாம்; அதிசயமாகிய சுவானுபவ மிகுந்த ஆரும்பூமி துரியமாகும்; ஏழாம் பூமி ஒரு கற்பனையும் அற்ற விடம் துரியாதீதமென மௌனமாகச் சுருதியானது தரிசிப்பிக்கும். எ-று.

இ-ம். சுபேச்சை விசாரணை தனுமாசி ஆகிய இம்மூன்றில் சகம் விஷயரூபமாகத் தோற்றுதலின் அவை சாக்கிரம் எனவும், சத்துவாபத்தியில் சகம் நினைவுருவாகத் தோற்றுதலின் அது சொப்பனம் எனவும், அசஞ்சத்தியில் சகந்தோன்ருமையின் சுழுத்தி எனவும், பதார்த்தா பாவனையில் சகம் சின்மாத்திரமாகத்தோற்றுதலின் அது துரியம் எனவும், துரியத்தில் காண்பானும் காணப்படுஞ்சகத்தும் சத்தா மாத்திரமாக விளங்குதலின் அது துரியாதீதம் எனவுங் கூறினதாம். அனுபவிக்கும் பூமிகள் ஐந்தவத்தையானதெனக் கொள்க.

அ-கை. இவ்வேழாம் பூமியைத் துரியம் என்பதற்கு அனுபவங் கூறல்.

துரியநிலந் தனைத்துரியா தீதமெனின் மயக்கமென்று கருதிமேலோர், அரியதொரு விதேகமுத்தி யதீதமென்பா ரதுகணக்கி லாறும்பூமி, மருவுசுழுத்தியிற்காட்சி சுழுத்தி என்பாரென்பது நீமனத்திற் கொள்வாய், பெருமை தரு ஞானபூமியின்விகற்ப மின்னுமுண்டு பேசக்கேளாய்.

இ-ள். துரியம் பூமியைத் துரியாதீதமென்றால் மயக்கம் உண்டாமென்று கருதி வேதாந்த முணர்ந்த மகான்கள் எட்டுதற்கரிய ஒப்பற்ற விதேக கைவல்லியத்தைத் துரியாதீதமென்று சொல்லுவார்கள்; அந்தக்கணக்கிற்கு ஆறுவது பூமியான பதார்த்தபாவனை பொருந்தாநின்ற சுழுத்தியைக்காணும் அறிவாகிய சுழுத்தியென்று சொல்லுவார்கள் என்று அதை நீ மனதில் வைப்பாய்; மாட்சிமையைக் கொடுக்கின்ற ஞானபூமிகளின் பேதங்கள் இன்னுமிருக்கின்றன அதைச் சொல்லக் கேட்பாய். எ-று.

இ-ம். இவ்வேழாம் பூமியைத் துரியம் எனவும், துரியாதீதம் எனவுங் கூறின் ஐயம் உண்டாம் எனக் கருதி அதனைச் சீவன் முத்தியின் திறமான துரியம் எனவும், இது நீங்கிய விதேகமுத்தியைத் துரியாதீதம் எனவுங் கூறுவர். அங்ஙனங் கூறுமிடத்து ஐந்தாம் பூமியாகிய சுழுத்தியில் சகந்தோன்றாமல் தான்தோன்றி நிற்றல் துரியம் ஆதலின், துரியம் என்னும் ஆறும்பூமியைக் காட்டிச் சுழுத்தி எனக்கொண்டு அதனோடுசேர்த்து இவ்விரண்டையுஞ் சுழுத்தி என்று கூறினர் என்பதாம். (கருரு)

அ—கை. ஞானபூமிகளை அடைந்த சீவன்முத்தர்களின் அவசர நாமங் கூறல்.

முன்னிலங்க ளேறியமூ வருமப்பியாசிகளா முத்தரல்லர், பின்னிலங்கள் வரன்வரியான் வரிட்டனெனுஞ் சீவன்

முத்தர் பேதமாகும், சொன்னநடுப் பூமிவந்த ஞானிகளே பிரமவித்தாந் தூயமுத்தர், இன்னமுமப் பூமிகளின் பெருமைதனை நீயறிய யான்சொல்வேனே.

இ-ள். முதற்கணுள்ள மூன்று பூமிகளில் ஏறிவந்த மூன்று பேர்களுஞ் சாதகர்களாம்; சீவன் முத்தர்கள் அல்லர்; இறுதியிலுள்ள மூன்று பூமிகள் ஐந்தாம் பூமியில் ஏறியவன் பிரமவரன் எனவும், ஆறும் பூமியில் ஏறியவன் பிரமவரிட்டன் எனவும், சீவன்முத்தர்களின் பேதங்களாம்; இப்போது சொல்லிய பூமிகளின் மத்தியாகிய நாலாம் பூமியில் ஏறிய ஞானவான்கள் பிரமவித்து என்னும் மேலான சீவன்முத்தர்களாம்; மேலும் அந்த ஞானபூமிகளின் பெருமையை நீயறிய உனக்குத் தெரியும்பொருட்டு யான் சொல்வேன் எ-று.

இ-ம். முதன் மூன்று பூமியை அடைந்தவர் அப்பியாசிகள் எனவும், மற்ற நான்கு பூமியை அடைந்தவர் சீவன்முத்தர்கள் எனவுங் கூறினதாம். (கடுச)

அ—கை. ஞானபூமிகளில் முன் மூன்றின் அப்பியாசத்தால் வரும் பயனும் அதில் முதற்பூமியின் அருமையுங் கூறல்.

நாலாம்பூ மியில்வருமுன் மூன்றுபூமியுமடைந்து நடந்துமாண்டோர், மேலானபதமடைந்து பிறந்துமெல்ல மெல்லவந்து வீடுசேர்வார், மாலான பவத்தில்வீழார் முதற்பூமி கிடைப்பதுவே வருத்தமைந்தா, காலான முதற்பூமி கைவந்தான் முத்தியுங்கை வந்ததாமே.

இ-ள். மகனே! நான்காம் பூமியில் வருவதற்குமுன்னம் மூன்று பூமியையுஞ் சேர்ந்து அவற்றை அனுஷ்டித்து வரும்போது மரித்தவர்கள் உயர்ந்த பதவியைப் பெற்றுப் பூமியிற்சனித்துக் கொஞ்சங் கொஞ்சமாக ஏறி முத்தியை அடைவார்கள்; இச்சாரூபமான

சநநத்தில் விழார்; முதற்பூமியான சுபேச்சையுண்டாவதே பிரயாச மாம்; ஆதியான முதற்பூமி கைவசமானால் மோட்சமும் கைவச மானதாம். எ-று.

இ-ம். வெளிப்படை. (கருரு)

அ-கை. அப்பியாச பூமியை அடைந்தவன் எவ்விதத்திலும் அனு பவியாவன் என்பது கருதி அவன் அனுபவியே எனக் கூறு தல்.

இப்புவியிலிஞ்ஞான பூமியொன்றி லிரண்டிலடைந்திரு ந்தாரானால், அப்புருடாமிலேச்ச ராகிலுமுத்தர் குருபாதந் தாணைமெய்யே, தப்புரையென்றவர்கெடுவார் நடுவானமறை களைநீ சங்கியாதே, செப்புமொரு வழிதிடமாயகம்பிரமமெ ன்றிருந்து தெளிந்திடாயே.

இ-ள். இவ்வுலகத்தின்கண் இந்த ஞானபூமிகள் எழில் சுபேச் சையிலாவது விசாரணையிலாவது சேர்ந்திருப்பாராயின் அந்தப் புருடர்கள் மிலேச்சர்களானாலும், தேசிகள் திருவடியாணை சீவன் முத்தராவர் என்பது சத்தியமே; இதைப்பொய்வசனம் என்றவர் கள் பவத்தில் அழிவார்கள், நடுவு நிலைமையான வேதவாக்கியங் களைக் குதர்க்கமாக நீ சங்கைபண்ணாதே போதிக்கின்ற உபதேச மார்க்கத்தில் ஸ்திரமாகச் சென்று கூடஸ்தனே பிரமம் என்று சகச சமாதியிலிருந்து தெளிவாய். எ-று.

இ-ம். இவ்வப்பியாச பூமியை அவசியம் அடையும் பொரு ட்டு அவைகளின் பெருமையையும் அவைகளாற் பெறும் பயனை யுங் கூறினதாம். (கருசு)

அ-கை. முத்தியை அடைதற்கு வர்ணாச்சிரமபேதம் வேண்டுவது இன்று என்பது தோன்ற இப்பூமிகளின் முடிவான துரி

யாதீதந் துறவறத்தார்க்கு அன்றி இல்லறத்தார்க்குவாரா என்னும் ஐயத்தை நீக்கவேண்டும் என விஞதல்.

பொல்லாத மிலேச்சருக்கும் விதேகமுத்தி தருஞான பூமியென்றும், நெல்லாகி முளைக்குமெனைத் தண்டுலமாக்கிய குருவே நீர்சொன்னீரே, இல்லாளும் குடும்பம்விட்டுச் சந்நியா சம்புகுந்தே காங்கியானோர், அல்லாமன் முத்திபெருரென்றுசிலர் சொன்மயக்க மகற்றுவீரே.

இ-ள். கொடியரான மிலேச்சர்களுக்கும் விதேக கைவல்லியத்தைக் கொடுப்பது ஞானபூமியாம் என்று தேவரீரருளினீர்; நெல்வித்தைப்போலச் சயனித்துக்கொண்டிருக்கும் அடியேனை அரிசியைப்போலச் சனியாமற்செய்த ஆசிரியரே! மனைவி முதலிய குடும்பத்தைத் துறந்து துறவைப்பெற்றுத் தனித்தவர்களே அன்றி மற்ற இல்லறத்தார் மோக்ஷம் அடையமாட்டார்களென்று சிலர் சொல்லுகின்ற பிரமையை நீக்குவீர். எ-று. (கடுஎ)

அ—கை. நால்வகைத் துறவின் நாமமும் அவற்றின் காரணமுங் கூறல்.

சிட்டர்புகழ் மகனேநீ சங்கித்தசங்கைநன்று தெரியக் கேளாய், கட்டழியுந் துறவுநால் வகையாகு மவைகளுக்கங் காகும்பேர்கள், பட்டதுயர்கெடுங்குடீ சகம்பகூதக மம்சம் பரமஹம்சம், விட்டகலுந் துறவுக்கு விராகங் கரணமன்றி வேடமன்றே.

இ-ள். சற்சனர் துதிக்கின்ற மைந்தா! நீ விஞவின விஞவானது நன்றும், தெரியக்கூறுவோம் கேள்: பந்தமழிகின்ற சந்நியாசமானது நான்குவிதமாம்; அந்நான்குக்கும் அவ்விடத்தாகும் நாமங்கள் உண்டான துன்பம் நசிக்கின்ற குடீசக சந்நியாசம் எனவும், பகூதக சந்நியாசம் எனவும், அம்ச சந்நியாசம் எனவும், பரமாம்ச

சந்நியாசம் எனவும், பந்தத்தைவிட்டு நீங்கும் இச்சந்நியாசங்களுக்கு நிராசை காரணமே அல்லாமல் வேடங் காரணம் அன்றும். எ-று.

இ-ம். வெளிப்படை. (கருஅ)

அ—கை. துறவின் காரணமான விராக மூன்றின் நாமமும் அவைகளின் இலக்கணமுங் கூறல்.

மந்தமுந்தீவிரமுந்தீ விரதரமுமெனமூன்று வகைவிராகம், வெந்துயரம் வரும்பொழுது குடும்பத்தை வெறுத்துவரும் விராகமந்தம், இந்தவுடலளவுமனை தனம்வேண்டாவெனவிடறீ விரமென்பார்கள், அந்தணர் நூன்மித்தைபென விடலதுதீவிரதரமா மறிந்திடாயே.

இ-ள். விராகமானது மனது விராகமும் தீவிரவிராகமும் தீவிரதர விராகமும் என்று மூன்றுவிதமாம்; அவற்றில் வெவ்விய துன்பம் வரும்போது சம்சாரத்தை வெறுக்கா நின்ற விராகமானது மந்தவிராகமாம்; இத்தேகாந்தபரியந்தம் மனைவியும் திரவியமும் முதலியவைகள் வேண்டா என்று துறத்தல் தீவிரவிராகம் என்று சொல்லுவார்கள்; வேதியர்க்குரிய கன்மகாண்டங்களைக் கற்பிதம் என்று துறத்தலானது தீவிரதர விராகம் ஆகும்; இவற்றைத் தெரிந்துகொள்வாயாக. எ-று.

அ—கை. மந்தவிராகம் பயன் இன்று என்றும், தீவிரவிராக சந்நியாசம் இரண்டின் தன்மை இஃது என்றுங் கூறல்.

பாவிமந்தவிராகத்திற் சந்நியாசங்களொன்றும் பலித்திடாவே, தீவிரத்திற்குடீசகமும் பகூதகமு மென்றிரண்டு திறங்களுண்டாம், தாவிநடந்திடத்திடமி லாதவர்க்குக்குடீ

சகமுஞ் சகங்களெங்கும், மேவிநடந்திடத் திடமுள்ளவர்க் குப் பகூதகமு மெனவிதித்தார்மேலோர்.

இ-ள். தீதான மந்தவிராகத்தில் துறவானவைகள் ஒன்றுஞ் சித்தியாது; தீவிர விராகத்தில் குடீசக சந்நியாசமும் பகூதக சந் நியாசமும் என இரண்டு விதங்கள் உளவாம்; எட்டி நடக்கப் பல மில்லாதவர்களுக்குக் குடீச சந்நியாசமும் உலகில் எவ்விடத்தும் அடைந்து நடக்கப் பலமுள்ளவர்களுக்குப் பகூதக சந்நியாசமும் உரியது என்று மேலோர் நியமித்தார்கள். எ-று.

இ—ம். குடீசக பகூதக சந்நியாசிகளின் இலக்கணங் கூறிய தாம். (கசுo)

அ—கை. தீவிரதர விராக சந்நியாசங்கள் இரண்டின் பயன் கூறல்.

இருவகைதீ விரகரத்து மம்சனென்றும் பரமாம்ச னென்றுஞ்சொல்வார், வருமம்சனுக்குமுத்திசத்தியலோகத் தன்றி வாராதென்பார், பரமாம்சனுக்குமுத்தி யிவ்வுலகின் ஞானத்தாற் பலிக்குமென்பார், திரமருவும் பரமாம்சன் றுனுமிரு வகையாகுஞ் செப்பக்கேளாய்.

இ-ள் தீவிரதர சந்நியாசத்தும் அம்சசந்நியாசி எனவும், பர மாம்ச சந்நியாசி எனவும், இரண்டு விதமாகச் சாதுக்கள் உரைப் பார்கள்; வராநின்ற அம்ச சந்நியாசிக்கு மோட்சமானது அயனு லகத்திற் கிடைப்பது அன்றி இம்மையிற் கிடையாது என்று சொ ல்லுவார்கள்; பரமாம்ச சந்நியாசிக்கு மோட்சமானது இவ்வுலக த்தின்கண் ஞானத்தினுற் கிடைக்கும் என்று சொல்வார்கள்; ஸ்திரம் பொருந்திய பரமாம்ச சந்நியாசியும் இரண்டு விதமாம்; இதைச் சொல்லுவோம் கேளாய். எ-று.

இ-ம். அம்ச பரமாம்ச சந்நியாசிகளின் பயன் கூறினதாம்.()

அ-கை. பரமாம்ச சந்நியாசிகள் அப்பியாசியும் அனுபவியும் என இருவகையாவார் எனல்.

சிஞ்ஞாசுஞானவா னென்றிரண்டுபேர்களவரிற் சிஞ் ஞாசு, மெய்ஞ்ஞான பூமியின்முன் மூன்றுபூமியுண்டாக்கும் விவேகியானோன், சுஞ்ஞானவானென்போன் சீவன்முத்தி யடைந்திருக்குந் தூயமேலோன், அஞ்ஞான மகனுமந்தச் சிஞ்ஞாசுமிருவகையா மதுவுங்கேளாய்.

இ-ள். சிஞ்ஞாசு எனவும் சுஞ்ஞானவான் எனவும் இருவர்களாம்; அவ்விருவர்களில், சிஞ்ஞாசு என்பவன் ஞானபூமியேழில் முந்தின மூன்று பூமிகளில் செல்லுகின்ற விவேகமுள்ளவனுவன்; சுஞ்ஞானவானென்பவன் சீவன்முத்தியைப் பெற்றிருக்கின்ற பரிசுத்தமான மகானும், அறிவின்மை நீங்கும் அச்சிஞ்ஞாசுவும் இரண்டு விதமாம்; அதையுங் கேளாய். எ-று.

இ-ம். பரமாம்சத்தின் கூறுன சிஞ்ஞாசு சுஞ்ஞாசு என்னும் இரண்டு சந்நியாசிகளின் இலக்கணங் கூறினதாம். (கசுஉ)

அ-கை. சிஞ்ஞாசு என்பவன் இல்லறத்திலேனும் துறவறத்திலேனும் இருந்து முத்தியை அடைவன் எனல்.

பந்தமனை துறந்துசில ரதிதிகளா யிருந்தடைவர்பரம ஞானம்,அந்தணர்மன் னவர்வணிகர் சூத்திரரா யிருந்துசில ரடைவர்ஞானம், இந்தவகைசாத்திரத்து முலகத்துநடப்ப துங்கண் டிருந்துமைந்தா, சிந்தனையின் மயக்கமென்ன சுருதியுத்தியனுபவத்தாற் றெளிந்திடாயே.

இ-ள். மகனே! சிலர் பந்தமான இல்வாழ்க்கையைவிட்டுத் துறவிகளாக இருந்து பிரமஞானத்தைப் பெறுவார்கள்; சிலர் பிராமணராகவும் க்ஷத்திரியராகவும் வைசியராகவும் சூத்திரராகவும் இருந்து பிரமஞானத்தை அடைவார்கள்; இவ்வகையை ஆகமப் பிரமாணத்திலும் உலகத்தில் நடப்பதாகிய பிரத்தியட்சப் பிரமாணத்திலும் பார்த்திருந்தும் மனதில் சந்தேகம் என்? சுருதி யுத்தி அனுபவம் என்னு மூன்றினாலும் தெளிவாய். எ-று.

இ-ம். முத்தியை அடைதற்கு விராகத்தால் வருஞ் சாந்தியே காரணம் அன்றி இல்லறம் துறவறம் என்னும் இரண்டும் அல்ல எனக்கூறியதாம். (கசுந)

அ-கை. மேற்கூறுவோம் என்றவாறே முற்கூறிய சர்வார்த்தங்களும் அடங்கிய வேதங்களின் முடிவான வித்தியாநந்தமாகக் கூறுவான் தொடங்கி இச்செய்யுளில் பிரமமே கூடஸ்தன் எனக் கூறுகின்றார்.

பிறந்ததுண்டானலன்றே பிறகுசாவதுதானுண்டாம்
பிறந்ததேயில்லையென்னும் பிரமமாவதுவுநானே
பிறந்ததுநானன்றாகிற் பிரமமென்றந்தநானே
பிறந்ததுமிறந்ததற்ற பிரமமாநானேநானே.

இ-ள். சநித்தது உளதாயின் அன்றே பின்மரித்தலும் உளதாம்; சநித்தே இன்று என்னும் பிரமம் என்பதும் நானேயாம்; சநித்தது நானல்லன் ஆயின் பிரமம் என்று சொல்லப்பட்ட அந்த நானே உற்பத்தியும் லயமும் இல்லாத பிரமம் ஆகிய கூடஸ்தனே நான். எ-று.

ப-ம். சாமவேத மகாவாக்கியப்படி அது நீயானாய் என்பார், 'பிரமமா நானே' என்றார், பிரமம் என்பது அது என்னும் ஆனந்த

மும் நான் என்பது நீ என்னும் வித்தையும் ஆம் என்பது ஆனாய் என்னும் ஐக்கியமும் ஆமெனக்கொள்க. (கசுச)

அ-கை. கூடஸ்தனே பிரமம் எனக் கூறுகின்றார்.

நானென்றபிரமமான நானேநானறியேனென்றால்
நானென்பதேதுபின்னை நம்முடைப்புந்தியென்னில்
தானதுமயக்கந்தன்னிற் சாகுமேசாவாதாகில்
நானெனநிறைந்திருந்த ஞானமாநானேநானே.

இ-ள். யானென்றும் சொல்லும் பிரமமாகிய யானே யான் காண்கிலேன் என்னின் யான் என்பது யாது? பின்பு நமது புத்தி யென்று சொல்லில் அப்புத்தியும் சுழுத்தி மயக்கத்திலிறக்குமே, அங்ஙனம் இறவாதிருக்குமாயின் யானே நான் என்று பூரணமாக விளங்கிய மெய்ஞ்ஞானமாம். எ-று.

ப-ம். இருக்குவேத மகாவாக்கியப்படி ஞானமே பிரமம் என் பார், 'நானென்ற பிரமம்' என்றார், நான் என்பது ஞானமாகிய வித்தை எனவும் பிரமம் என்பது ஆனந்தம் எனவும் கொள்க.(கசுரு)

அ-கை. வித்தியாநந்தத்தின் ஒருமை கூறல்.

நிறைந்தவாறெந்தவாறு நிலைதெரிந்திலனென்றாயேல்
அறிந்ததாஞ்சுழுத்திதன்னி லாநந்தமதுவேயாகும்
குறைந்ததுக்காநந்தந்தான் குவலயந்தன்னிலில்லை
நிறைந்ததேயிந்தவான்மா நிதானமிவ்வறிவுதானே.

இ-ள். யான் பரிபூரணமானவிதம் எவ்வண்ணம் நிச்சயந்தெரி கிலன் என்பாயானால், நனவிற் சுழுத்தியின்கணுள்ள நிரதிசயாநந்த மானது அப்பூரணமேயாம்; ஏகதேசமான சுகதுக்கங்கள் உலகத்

தின்க ணில்லையாம்; இவ்வாத்மாவே பூரணமானது; இச்சைதன் னியமே நிதானமாம். எ-று.

ப-ம். யசுர்வேத மகா வாக்கியப்படி, அகம் பிரமாஸ்மி என் பார், 'நிறைந்ததே யிந்தவாத்மா நிதானமிவ் வறிவுதானே' எனக் கூறினர். நிறைந்ததென்பது பிரமம் என்னும் ஆநந்தமும், ஆத்மா என்பதும் அகம் என்னும் வித்தையும், நிதானம் இவ்வறிவு என்பது அஸ்மி என்னும் ஐக்கியமும் ஆமெனக்கொள்க. (கசுசு)

அ-கை. வித்தியாநந்த ஒருமையான சுவானுபூதியே தானெ னல்.

மனத்தினு லெண்ணித்தானே வந்ததிவ் வுலகமாகும்
நினைத்திடி லநேகலோக நிற்பதவ் வறிவிலன்றோ
அனைத்தையுங் கடந்தப்பாலு மந்தமற் றறிவிதாமென்
றெனைத்தனி விசாரித்திட்டா லேகமாய் நிறைந்தோனனே.

இ-ள். மனோசங்கற்பத்தினுல் இவ்வுலகம் உதித்ததாம்; கருது மிடத்து அநேக உலகங்களும் இருப்பது அந்த ஞானத்திலன்றோ? யாவையுந்தாண்டி மேலும் முடிவிறந்த ஞானமிதுவாம் என்று என் னைத் தனிமையாக விசாரணைசெய்தால் யானே பூரணமாக நிறைந் தவன். எ-று.

ப-ம். அதர்வணவேத மகாவாக்கியப்படி அயமாத்மா பிரமம் என்பார் "ஏகமாய் நிறைந்தோ னனே" என்றார், அற்ற என்பது அற்றெனத் திரிந்துநின்றது. ஏகம் என்பது பிரமம் என்னு நித் தியாநந்தமும், நிறைந்தது என்பது ஆத்மா என்னும் வித்தையும், நானென்பது இவ்வித்தியாநந்தத்தின் ஐக்கியத்தி லுதித்த சுவானு பூதியாகிய அயம் என்னுந் தானும் ஆம் எனக்கொள்க.

இ—ம். நான்கு வேதங்களின் முடிவாயுள்ள மகாவாக்கியார்த்த சென்னியமான வித்தியாநந்த ஐக்கியஸ்வரூபமான நிரதிசயாநந்த சாக்ஷாத்கா.ரமே தானெனக் கூறியதாம். (௧௯எ)

அ—கை. முற்கூறிய கற்பிதங்கள் அனைத்தையும் விருத்தியுள் அடக்கி அவ்விருத்தியை நீக்கின் சுவானுபவம் உதயமாம் எனக்கூறல்.

அந்தவா றிருந்துகொண்டே யானந்த மனுபவிக்க
எந்தவா றிருந்துகொண்டா லெனக்கிது தெரியுமென்னில்
இந்தமூன் றவத்தைதம்மு ளெழுந்திடும் விருத்திநீக்கில்
அந்தவா றிருந்துநீயு மாநந்த மடையலாமே.

இ-ள். அவ்வாறு பூரணமாக இருந்துகொண்டே பூரணாநந்தத்தை அனுபவிக்க, எவ்வண்ணமிருந்தால் எனக்கிவ்வனுபவந் தரிசனமாம் என்பாய் ஆயின், சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்னும் இம்மூன்றவத்தைக்குள் உதிக்கின்ற விருத்தியைத் தள்ளில், அவ்வாறு பரிபூரண ஞானமாயிருந்து நீ நிரதிசயாநந்தத்தை அடையலாம். எ—று.

இ—ம். வெளிப்படை. (௧௯அ)

அ—கை. விருத்தி நீங்குதற்கு மூவகை உபாயங் கூறுவான்றொடங்கி இச்செய்யுளில் அனுபவ உபாயங் கூறுகின்றார்.

வாதனா வசத்தினாலே வருகிற விருத்தியெல்லாம்
ஏதினா லடக்கலாகு மென்றுதான் விசாரஞ்செய்யின்
போதமா மிராசன்றானைப் புந்தியைப் புலன்களெல்லாம்
தாதரா யிருக்கப்பெற்றார் சகலமு மடங்குந்தானே.

இ-ள். பழக்கவாசனையால் வருகின்ற விருத்திகள் அனைத்தையும் யாதினால் ஒடுக்கலாம் என்று விசாரிக்கின் தான் ஞானவாச

ஞய்ப் புத்திமுதலிய விடயங்கள் அனைத்தும் தன்னேவலாளா யிருக்கப்பெறின் அனைத்தும் ஒடுங்கும். எ-று.

இ-ம். தானாகிய நித்தியாநந்த போதமே ஸ்புரண முதலிய யாவிலும் விளங்கின் விருத்திகள் நீங்கும் என்பதாம். (ககூகூ)

அ-கை. ஏனைய அப்பியாச உபாயங்கள் இரண்டையுங்கூறல்.

விருத்திக டாமுமின்னும் விநோதமாம் யோகத்தாலே
துருத்திபோ லூதுமூச்சைச் சுகமுட னடக்கினிற்கும்
கருத்ததற் கில்லையென்னிற் காரண சரீரமாகிப்
பெருத்ததோ ரவித்தைதன்னைப் பிடிங்கிடி லடங்குந்தானே

இ-ள். மேலும் விநோதமான யோகத்தினால் துருத்தியைப் போல ஊதாநின்ற சுவாசத்தை இன்பத்தோடும் ஒடுக்கின் விருத்திகளானவை அடங்கும், அதற்கு மனம் இன்றாயின் காரணதேகமாகத் தடித்த ஒப்பற்ற அவித்தையை நீக்கின் ஒடுக்கும். எ-று.

இ-ம். பிராணபந்தன உபாயத்தைக் கெவுணமாகக் கூறி அவித்தையை நீக்க உபாயத்தை முக்கியமாகக் கூறினார் என்பதாம். ()

அ-கை. அவித்தையைக் களையும் உபாயம் யாது? என வினாதலுக்கு உத்தரங் கூறல்.

காரண சரீரந்தன்னைக் களைவதெவ் வாறென்றோதில்
ஆரணம் பொய்சொல்லாதே யதன்பொரு ளகத்திலுன்னி
பூரணமாகு மென்மேற் புவனங்க டோற்றுமென்று
தாரணை வந்ததாகிற் றரித்திடு மவத்தையெங்கே.

இ-ள். காரண தேகத்தைக் கொடுப்பது எவ்விதமென்றுகேட்கில் வேதமானது நிச்சயத்தைச் சொல்லும்; ஆதலால், அதன் மகா

வாக்கியார்த்தத்தை உளத்திற் சிந்தித்துப் பரிபூரணமாகிய என்னிடத்தில் ஆரோபமாகச் சகங்கள் தோற்றுமென்று உறுதி வந்ததானல் அவித்தையானது எவ்விடத்திலிருக்கும். எ-று.

இ-ம். வேத நிச்சயப்படி குருவாக்கியத்தால் சர்வம் பிரமமயம் என்னும் அனுபவ முண்டாயின் அவித்தை நசிக்கும் என்பதாம். (கஎக)

அ-கை. சர்வம் பிரமமயம் என்னும் ஞானம் உதித்தற்கு அனுபவங் கூறல்.

அப்படி யிருக்கச்சித்த மலைதலால் விவகாரத்தில்
எப்படி கூடுமென்னி லென்னைவிட் டொன்றுமில்லை
இப்படி கண்டவெல்லா மென்மய மென்கனுப்போல்
கற்பித மென்றுதானே காண்கின்ற சித்துநானே.

இ-ள். விவகாரங்களில் மனமானது சுழல்வதனல் அங்ஙன நிற்க எங்ஙனங் கூடும் என்றால், என்னைத்தவிர வேறொரு வஸ்துவும் இல்லை; இவ்விதமாகக் கண்ட திரிசியங்கள் அனைத்தும் எனது சொரூபம்; எனதுசொப்பனத்தைப்போலக் கற்பிதமென்று தானே பார்க்கின்ற சைதன்னியமே நான். எ-று.

இ-ம். கற்பிதமாகக் காணப்பட்ட திரிசியங்கள் அனைத்தும் தனது சிற்பிரகாசமாக விளங்குகின்றது என்னும் அனுபவ திருஷ்டியால் யாவுந் தன்மயமாய் விளங்கும் என்பதாம். (கஎஉ)

அ-கை. இச்சித்தே ஆனந்தவடிவாம் எனல்.

சித்துநா னிறைந்தோனென்ற திடமற வாதிருந்தால்
எத்தனை யெண்ணினலு மேதுசெய் தாலுமென்ன
நித்திரை யுணர்ந்தபின்பு நிற்கின்ற கனவைப்போல
அத்தனையும் பொய்தானே யாநந்த வடிவுநானே.

இ-ள். யான் சைதன்னியமாகப் பூரணமானவ னென்னும் திடச்சித்தத்தோடுகூடி யிருந்தால் எவ்வளவு சங்கற்பித்தாலும் எக்கிரியை செய்தாலும் அதனுற்குற்றம் என்ன? நித்திரைதெளிந்த பின்பு நிற்குஞ் சொப்பனம்போல அவ்வளவும் மித்தையாம், யானே ஆநந்தஸ்வரூபமாம். எ-று.

இ-ம். தானே சித்தென்னும் அனுபவம் உதிக்கில் யாவும் மித்தையாய்த் தான் அந்தவடிவனுனவன் என்பதாம். (கஎங)

அ-கை. இவ்வனுபவம் உதிப்பதற்கு ஏதுவான உறுதிகூறல்.

நானென வுடலைத்தானே நம்பினே னநேகசென்மம்
ஈனராய் பெரியோராகி யிருந்தவை யெலாமிப்போது
கானலில் வெள்ளம்போலக் கண்டு சற்குருவினுலே
நானென வென்னைத்தானே நம்பி யீடேறினேனே.

இ-ள். அநந்த சநநங்களில் தேகத்தையே யானென்று நம்பினேன்; இழிந்தவராகவும் உயர்ந்தவராகவும் இருந்தவைகள் அனைத்தையும் இச்சமயத்தில் கானற்சலத்தைப்போல ஆசிரிய ருபதேசத்தினுல் பார்த்து எனது பிரமவடிவத்தையே யானென்று நம்பி ஈடேறினேன். எ-று.

இ-ம். குரு கிருபையினுல் தேகம் நானென்னும் நம்பிக்கையை விடுத்துச் சித்தே நானென்னும் நம்பிக்கை உண்டானுல் சின்மாத்திரமான முத்தியைப் பெறுவன் என்பதாம். (கஎச)

அ-கை. குரு கிருபையை வியந்து மகிழ்தல்.

என்னபுண்ணியமோசெய்தே னேதுபாக்கியமோகாணேன்
நன்னிலந்தனிலெழுந்தநாரணன் கிருபையாலே
தன்னியனுனேனுனுத் தரீயத்தைவீசுகின்றேன்
தன்னியனின்னுநானே தாண்டவமாடுகின்றேன்.

இ-ள். என்னதருமஞ் செய்தேனோ யாதுபாக்கியம் பெற்றேனோ தெரிகிலன்; நன்னிலமென்னு நகரத்தில் மானுடராக அவதரித்த நாராயணனென்னும் எனதாசிரியரது கருணையினால் கிருதார்த்தனான யான் அங்கவஸ்திரத்தை ஆகாயத்தி லெறிந்து விளையாடுகின்றேன், கிருதார்த்தனான யானே மேலும் நடனஞ் செய்கின்றேன். எ-று. (கஎரு)

அ—கை. தன் அனுபூதி விளக்கத்துக்குத் தக்கநாமந் தனக்குத் தரித்த மாதாபிதாவைப் புகழ்தல்.

தத்துவ ஞானம்வந்த சந்தோஷ வதிசயத்தால்
நித்தமாடுவன் காணென்ற நிலைமுன்னமே யறிந்த
சத்திய மகனாலன்றோ தாண்டவாவென் றழைத்தார்
அத்தனை மகிமையுள்ளோ ரன்னையும் பிதாவுந்தாமே.

இ-ள். அத்துவிதஞானம் உதித்த பேருவகையான அற்புதத்தினால் எப்போதும் ஆநந்த நடனஞ்செய்வன் என்னும் நிலையை முன்பேதெரிந்த உண்மையினால் அன்றோ? அத்தனை மகிமையை உடைய தாய்தந்தையர்கள் தாண்டவராயன் என்னும் நாமந்தரித்துக் கூப்பிட்டார்கள். எ-று. (கஎசு)

அ—கை. நிரதிசயாநந்த அனுபூதியின் ஆராமை கூறல்.

வந்தவோ ரிவ்வாநந்த மகிழ்ந்ததா ரோடேசொல்வேன்
சிந்தையி லெழுந்துபொங்கிச் சகமெலா நிறைந்துதேங்கி
அந்தமில் லாததாயிற் றப்படி குருவேதந்த
மந்திர மருளுமீசன் மலரடி வணங்கினேனே.

இ-ள். அறிவிலுதித்த ஒப்பற்ற இந்த நிரதிசயாநந்தத்தினால் மகிழ்ச்சி அடைந்ததை யாருடன் உரைப்பேன்? உள்ளத்திலூறி மேலிட்டு உலகங்க ளனைத்தும் பூரணமாய் முடிவில்லாததாயிற்று;

அவ்வண்ணம் வேதமுடிவான மகாவ:ாக்கியார்த்த ரகசியத்தை அருளாநின்ற இறைவனாகிய தேசிகரது கமலமலர்போன்ற திருவடிகளைத் தொழுதேன். எ-று.

இ-ம். சிந்தனத்து உதித்த ஆநந்தமதனைக் கரைக்கச் சீவபரமான அனைத்துந் தானாகிய சிதாநந்த வடிவமாகவே விளங்குகின்றது என வித்தியாநந்தத்தை முடித்ததாம். (௧௭௭)

அ-கை. இந்நூலால் விளையும் பயன் கூறல்.

வித்தியா நந்தமிந்த விதமென விளம்பினோமே
பத்தியா யிந்தநூலைப் பார்த்தனு பவித்தபேர்கள்
நித்திய கருமநிட்டை நிலைதனை யறிந்துசீவன்
முத்தியை யடைந்திருந்த முநீஸ்வர ராகுவாரே.

இ-ள். ஞானநந்தமானது இவ்வகையாம் என்று சொல்லினோம்; அன்பாக இஞ்ஞான சாஸ்திரார்த்தத்தை உணர்ந்து அப்பொருளை அறிந்தபடி அனுபவமான பேர்கள் நித்தியமான ஞான நிஷ்டையின் நிலைமையைத் தெரிந்து சீவன் முத்திபதத்தைப் பெற்றிருந்த முனிசிரேஷ்டராவார்கள். எ-று.

இ-ம். வெளிப்படை. (௧௭௮)

அ-கை. குருவாக்கியப்படி இந்நூல் சம்பூரணமாயிற்று எனல்.

ஆரணப் பொருளாம்வித்தை யாநந்தம் விளங்கவேதும்
காரணங் குருவில்லாமற் கைவல்ய நவநீதத்தைப்
பூரணமாக்க வேண்டிப் பூர்வமா நன்னிலத்தில்
நாரணகுருநமக்கு நவின்றனர் கனவில் வந்தே.

இ-ள். வேதமுடிவிலுள்ள மகா வாக்கியார்த்தமான ஞானநந்தம் விளங்கும்பொருட்டு கைவல்ய நவநீதம் என்னும் ஞானசாஸ்திரத்தை எவ்வளவும் எடுத்துக்காட்டுங் காரணங்களில் குறைவு

படாமல் நிறைவாகச் செய்ய விரும்பிப் பழமையாகிற நன்னில மென்னுந் தலத்தில் மானிட வடிவமாக எழுந்தருளிய நாராயண தேசிகரானவர் எனக்குச் சொப்பனத்தில் தோன்றி அருளிச்செய் தார். எ-று.

இ—ம். வெளிப்படை. (கஎகூ)

அ—கை. இந்நூலாசிரியரது சிறப்புக்கூறல்.

அண்ணறன் னருளினலே யகம்புற மின்றியொன்ருல்
எண்ணவி லிலக்கியார்த்தத் தின்பொரு ளதுநானென்ன
நண்ணின சரீரமாதி நாதத்தி னுபாதியென்றே
கண்ணதா யனைத்துங்காணக் காட்டினன் ருண்டவேசன்.

இ-ள். தேசிகரது கிருபையினல் உள்வெளி என்பது இன்றி ஏகமாய் எண்ணுதற்கரிய இலக்கியார்த்தத்தின் பொருட்படி பிர மம் ஆகிய அதுவே கூடஸ்தனுகிய நான் என்னும்படி பொருந்திய தேகமுதலியவற்றை மாயா உபாதி என்று களைந்து சகலத்தையும் ஞானுகாரமாய்த் தரிசிக்கும்படி தாண்டவேசன் என்னும் இந்நூ லாசிரியர் தரிசிப்பித்தார். எ-று.

இ—ம். வெளிப்படை. (கஅ0)

அ—கை. இம்மரபினல் அனுபவம் உதிக்குமவர்களே சுவானு பவிகள் எனல்.

ஆன்றபதமாமூன்றற்கு மதுநீயானு யெனும்பொருளில்,
சான்றதுரியா தீதமெனுந் தடையற் றிலங்கொண் சைதன் னியம், ஊன்றியுணர்ந்தோர் விகற்ப மயக்கொழித்துத் தடையுமுடறுத்துத், தோன்றித்தானே தானவர் துலங்கு மவர்க்கே சுவானுபவம்.

இ-ள். மாட்சிமையாகிய மகா வாக்கியத்தின் தத்தொமசியெ ன்னு மூன்று பதத்திற்கும் அதுவென்னும் பிரமமும் நீயென்னுங் கூடஸ்தனும் இவ்விரண்டின் ஐக்கியமும் என்கிற அர்த்தத்தில் நிறைந்த துரியாதீதம் என்கின்ற மறைப்பின்றி அபரோக்ஷமாக விளங்குகின்ற சுயந்தேசசு உள்ள மெய்யுணர்வை ஸ்திரமாகத் தெரிந்தவர்கள் பேதமான பிரமையை நீக்கி அறிவின்மையையுங் கெடுத்துச் சகோதயமாய்த் தன்மயமாவர், அவ்வறிஞர்க்கே சுவானு பவமானது பிரகாசிக்கும். எ-று.

இ-ம். வெளிப்படை.　　　(கஅக)

அ-கை. இந்நூலாசிரியர் தன்னாசிரியரைப் புகழ்தல்.

என்னுமாவாக்கிய நான்குமிசைக்கும் வித்யாநந்தமிது,
சொன்னநாராயணன் பாதந்தொழுது துதித்தோர் துகளற்
றோர், இன்னமாணுக்கர்கள் குருவாற்சந்தேகந் தீர்ந்திடபெ
தத்தே, துன்னிநிறைந்து நின்றோர்கடேயமுத்த ராகுவரே.

இ-ள். சுபாவம் என்கின்ற நான்குவேதத்தின் முடிவான நான்கு மகாவாக்கியங்களும் சொல்லுகின்ற ஞானநந்தம் இதுவாம்; இதனை அருளிய நாராயணன் என்னும் ஆசிரிய ருபயபாதங்களை வணங்கித் துதிசெய்தவர்கள் களங்கமற்றவராவர்; இத்தன்மை யான சீடரானவர் ஆசிரியரால் ஐயநீங்கி இப்பதத்தையடைந்து பூர ணமாகியிருந்து பரிசுத்தமான சீவன்முத்தராவார்கள். எ-று.

இ-ம். நான்கு வேதங்களின் முடிவிலுள்ள நான்கு மகாவாக் கியார்த்தமும் ஒன்றான வித்தியாநந்தமே அனுபவம் எனவும் அதை அடைந்தவர்களே சீவன் முத்தர் எனவுங் கூறினதாம்.　　(கஅஉ)

அ-கை. இந்நூல் செய்தவிதங் கூறல்.

தத்துவவிளக்கத்தாலுஞ் சந்தேகந்தெளிதலாலும்
ஒத்திருள்விடாதமாயா வுள்ளிருளிரியவோங்கும்
சித்ததாமொளிவிளங்கச் செய்துபின்விருத்திபேதப்
புத்தியால்வருமையத்தைப் புரையறத்தெளிவித்தாண்டான்.

இ-ள். தத்துவவிளக்கமென்னும் படலத்தினாலும் சந்தேகந் தெளிதல் என்னும் படலத்தினாலும் பொருந்தச்செய்து அந்தகார நீங்காத மாயையென்னும் அகத்திருள்கெட உயராநின்ற ஞானப் பிரகாசத்தைத் திகழும்படிசெய்து பின்பு விருத்தி விகற்பமான அறிவினால் வாராநின்ற சந்தேகத்தைக் குற்றமறத் தெளிவித்து இரட்சித்தார் (இந்நூல் ஆசிரியர்.) எ-று. (கஅந)

அ—கை. இந்நூல் ஆசிரியரைத் துதித்தல்.

ஆண்ட தேசிகனுமைய நாரணனனந்தன்பாதம்
பூண்டுமூவா ரோபத்தாற் பொய்ம்மயக்காய் வந்தத்தை
மாண்டநல் லபவாதத்தான் மாய்த்தரு ணோக்கத்தென்று
காண்டிட வைத்தளித்த காரணா போற்றிபோற்றி.

இ-ள். தடுத்தாண்ட குருசாமியாகிய நாராயணன் என்னும் முடிவற்றவனது திருவடியைச் சிரசில் தரித்துச் சீவேஸ்வரசக த்தென்னு மூன்றுவித கற்பனையால் இல்லாத மயக்கமாய் உண் டானதை மாட்சிமையாகிய நன்மையான அபவாத உத்தியினால் கெடுத்துக் கிருபாநோக்கத்தினால் எப்போதும் பரோக்ஷ ஞான மாகத் தரிசிக்கத் திருவடிசூட்டி இரக்ஷித்த காரணனே சரணஞ் சரணம். எ-று. (கஅச)

அ—கை. இந்நூலைப் புகழ்தல்.

குலவுசற் குருவின்பாதக் குளிர்புன றலைமேற்கொண்டால்
உலகினிற் றீர்த்தமெல்லா முற்றபே றடைவார்போல

நலமெய்யாகிய கைவல்ய நவநீத நூலைக்கற்ருல்
பலகலைஞான நூல்கள் படித்தஞானிகளாய் வாழ்வார்.

இ-ள். விளங்காநின்ற சற்குருவின் அகத்தையும் புறத்தையுங் குளிரச்செய்கின்ற பாததீர்த்தத்தைச் சிரசின்மேல்தரிக்கின் சகத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்கள் அனைத்தினும் ஸ்நாநஞ்செய்த பலனைப் பெறுவார்கள்; அதுபோல, நன்மையும் உண்மையுமாகிய கைவல்யநவநீதம் என்னும் ஞானசாஸ்திரத்தை அப்பியாசித்தால் அநந்தங் கல்விநூல்களின் சாரமான ஆத்மஞான சாஸ்திரங்களை அப்பியாசித்த ஞானவான்களாக வாழ்வார்கள். எ-று.

இ-ம். சுருதி குரு சுவானுபவங்களை நவநவமாகத் துதித்ததாம். (கஅ௫)

கைவல்லியநவநீதம்

முற்றிற்று.

௨

கடவுள் துணை.

பாட்டு முதற்குறிப்பு அகராதி.

பாட்டு,	பக்கம்.
அ	
அகமெனு	௧௦௩
அக்கினிக	௬௫
அசத்திலெம்	௧௫௨
அசலநிறஞ்	௧௭௫
அச்சுவத்த	௧௧௭
அடங்கிய	௨௧
அண்ணற	௨௦௪
அதனையின்	௧௪௫
அதுதானெ	௨௮
அத்தியாரோ	௨௬
அந்தக்கண	௧௬௯
அந்தமுநடு	௧௧
அந்தவாறிரு	௧௯௮
அப்படியிரு	௨௦௦
அரவன்று	௩௯
அரிதாகு	௭௧
அரியமெய்ஞ்	௭௪
அருவமாகு	௧௪௬
அருளுமை	௧௩௪
அழிவிலாத	௧௧௪
அழுக்கொ	௩௧
அளிமகனெ	௬௨
அறியாத	௪௮
அறிவுக்கு	௫௫
அறுசுவை	௯௪
அனகமை	௧௧௦
அனுபவா	௬௨
அன்னபா	௧௫௮
அன்னதன்	௧௯
ஆ	
ஆகமப்பிர	௮௦
ஆடவர்	௯௬
ஆண்டதே	௨௦௬
ஆதாரம்	௪௨
ஆதிமுக்கு	௩௩
ஆரணப்	௨௦௩
ஆரோப	௨௭
ஆர்க்குங்	௧௪௯
ஆனபாவி	௧௧௩
ஆனவிம்ம	௧௭
ஆனுலையா	௧௦௦
ஆன்றபதமா	௨௦௪
இ	
இகமான	௧௫௫
இக்குணங்	௩௦
இங்குமப்படி	௧௨௫
இதயமொத்த	௧௮௧
இதுநினக்	௪௮
இந்தச்சீவனு	௧௧௮

பாட்டு.	பக்கம்.
இந்தஞான	௧௨௧
இந்தநிச்ச	௧௪0
இந்தநீதொ	௫௬
இந்தமாயை	௪௬
இந்தவாறை	௧௭௨
இப்படிப்போ	௨௭
இப்புவியி	௧௯0
இம்பரினஞ்	௪௬
இராசத	௩௩
இருவகை	௧௯௩
இருளாக	௧௫௭
இலக்க	௧௧௧
இல்லையா	௧௪௮
இவனதி	௧௭
இவனயன்	௧0௪
இவ்வாறு	௧௬௪
இவ்வுடன்	௩௪
இன்னதுதே	௨௪
இன்னவகை	௧௭௫
இன்னவாற	௧௨௩
ஈ	
ஈசர்காரிய	௧௧௭
ஈசனுக்கி	௩0
ஈசனுமா	௧0௨
ஈனந்தரு	௧௬௫
ஈன்றளித்	௮
உ	
உண்டுறங்	௧௮௩
உதவும்புவி	௧௬௭
உத்தமகுரு	௧0௧
உத்தமவெரு	௨௮
உருக்கியதரா	௮௪
உருவங்களி	௧௫௩
உலகமான	௧௩௧
உன்முகம்	௮௩
எ	
எத்தனைநான்	௬௬
எரிகின்ற	௮௫
எல்லாங்கண்	௫௪
எல்லாசீவ	௧0௩
எவருடைய	௯
எவனாகிலு	௧௭௧
எனவுரைத்த	௭௯
என்மனந்	௧௧௪
என்னபுண்	௨0௧
என்னுடை	௧0
என்னுமா	௨0௫
என்னைத்தா	௨௩
ஏ	
ஏகமாய்	௮௯
ஏமமாயா	௩௨
ஐ	
ஐந்துபூதமு	௩௬
ஐயனேயெ	௬௩
ஐயாகேளீர்	௯௭
ஒ	
ஒருவழியிது	௨௯
ஒன்றாகிய	௧௬௮
ஒன்றுகேண்	௧௨0
ஓ	
ஓய்ந்தகணா	௯௮

பாட்டு.	பக்கம்.
க	
கங்கையிற்	௫௮
கடனீரின்	௬௧
கடமெனுமு	௭௫
கண்டறிந்த	௧௩௬
கரணமா	௫௧
கருதுமனே	௮௭
கருப்பை	௧௪௮
களங்கமற்ற	௮௮
கள்ளுழுனு	௧௨௯
கற்பனைவந்	௩௮
கா	
காமமாதிக	௬௮
காமியத்த	௧௦௯
காரணசரீ	௧௯௯
காரியங்க	௧௪௬
கானநீர்	௭௬
கி	
கிளர்மக	௯௭
கு	
குகன்றனை	௧௭௨
குரவர்சிகா	௯௬
குலவுசற்கு	௨௦௬
குளிரிளகல்	௧௭௩
கெ	
கெடலான	௧௬௧
கே	
கேவலநிலை	௪௩
கை	
கைதவங்க	௧௧௨

பாட்டு.	பக்கம்.
ச	
சகமதிலிது	௪௨
சடமதாகி	௧௩௭
சடமான	௧௫௪
சட்டிகுட	௧௦௪
சத்திசத்தனை	௧௪௭
சத்தேசித்	௧௭௮
சத்தொடுசி	௫௨
சந்ததம்புரு	௭௮
சமந்தமம்	௧௫
சருவமுத்	௧௩௬
சா	
சாதனமின்றி	௧௬
சி	
சிஞ்ஞாசு	௧௯௪
சிட்டர்புகழ்	௧௯௧
சிட்டனில்	௬௩
சித்துநாணி	௨௦௦
சிரவணப்	௧௬
சிவசொரூ	௧௦௮
சிறந்தநன்	௧௧௫
சீ	
சீரியவீசனர்	௩௭
சீவபேத	௧௧௨
சீவன்முத்த	௭௨
சு	
சுத்தமாஞ்	௯௧
சுத்தியில்	௪௫
சுருதியுத்தி	௧௮௦
சுழுத்தியிற்	௪௪

பாட்டு.	பக்கம்.
சூ	
சூக்குமசக	௩௫
செ	
செய்கையு	௬௩
சென்மாந்த	க௫௬
சென்றது	எ0
சொ	
சொரூபஞா	க௩உ
சொப்பன	க௪௩
சொல்லிய	எ௫
சொன்னது	உ0
ஞா	
ஞானங்கார	க௫உ
ஞானமார்	௬எ
த	
தசபுமான்	௪௬
தஞசமாங்	௬க
தடத்துநீ	க0௫
தடைகளே	௬௪
தத்துவஞா	உ0உ
தத்துவத்தின்	க அ ௬
தத்துவப்பதங்	௬0
தத்துவனு	௬௬
தத்துவவிசா	௪எ
தத்துவவிள	உ0௬
தர்ப்பணத்	கஉ௪
தன்பதியல்	அக
தன்னையுந்	உஉ
தா	
தாகப்படும்	க௬0
தாமதமிரா	க௫௪
தாலத்தின்	உ௬
தானன்றி	க௫௩
தானிகர்	௪0
தி	
திகழ்ந்தவீ	கக௫
தினமுமண்	கஉஎ
தீ	
தீரராய்	௬எ
து	
துரியநிலங்	க அ அ
துருத்திமா	க௩௩
துர்ச்சங்க	க அ௫
துளங்குத	கஉ௪
தூ	
தூங்குஞ்சுக	க௬௬
தூடணத	௪0

பாட்டு.	பக்கம்.
தூலசூக்கு	௫௪
தூலமே	௩௬
தெ	
தெரிதரும	௧௦௦
தே	
தேகத்தன	௯௩
தேகமதல்லா	௨௪
தொ	
தொடர்பவ	௧௯
தோ	
தோற்றமாஞ்	௩௨
தோற்றமாஞ்சத்	௪௪
ந	
நரரின்மன்	௧௦௬
நரர்குழிபறி	௭௭
நலமெய்	௧௧௮
நல்லவனே	௧௦௧
நற்கருத்து	௭௮
நனவுகண்	௨௫
நன்மையா	௧௨௬
நா	
நாசச்சரீர	௧௫௬
நாலாம்பூ	௧௮௯
நானென்ற	௧௯௬
நானெனவு	௨௦௧
நி	
நிசமானது	௧௬௯
நித்தியம்பூ	௧௭௪
நித்தியவ்நி	௧௫
நிர்க்குண	௧௭௬
நிறைந்தவா	௧௯௬
நீ	
நீநானென்	௬௪
நெ	
நெய்யும்	௧௬௭
ப	
பங்கயாசன	௧௪௨
பஞ்சகோச	௫௩
பஞ்சிலேயூ	௭௩
படமுநூலு	௩௯
படர்ந்தவேதா	௧௨
பத்தியும்வ	௧௨௨
பந்தமுனேதூ	௧௯௪
பலகலையுமு	௧௮௧
பன்னிய	௫௯
பா	
பாவிமந்த	௧௯௨

பாட்டு.	பக்கம்.
பி	
பிரமஞானிக	௭௨
பிரமபாவனை	௬௫
பிரமமாந்தனை	௪௭
பிரமரூபத்	௧௩௮
பிறந்ததுண்	௨௯௫
பிறிவதெப்ப	௫௧
பின்னைமூவ	௭௧
பு	
புண்ணியப	௪௯
புலவர்புக	௧௮௪
புலியுமனு	௧௬௨
பூ	
பூச்சியவீ	௫௦
பூரிக்குங்	௧௫௧
பூன்றமா	௪௧
பே	
பேதகன்ம	௬௯
பேதமான	௫௭
பொ	
பொய்யை	௧௪௩
பொல்லாத	௧௯௧
பொறுமை	௭௪
பொன்னில	௭
போ	
போகத்தில்	௧௬௩
போகமாரு	௧௨௮
போனசன்ம	௧௨௧
ம	
மதுரமாங்	௫௬
மதுவிறைச்சி	௧௨௯
மந்தமுந்	௧௯௨
மந்திரமூர்த்	௮௦
மரங்கள்	௩௭
மலடிமைந்	௧௪௧
மற்றைமுப்	௮௧
மனதுசத்து	௮௮
மனத்தினு	௧௯௭
மனநாசஞ்	௯௦
மனுடன்	௧௭௦
மனைக்குள்	௧௨௬
மனைவிலங்	௧௧௯
மா	
மாயையென்பது	௧௪௧
மாயையென்பதே	௧௪௪
மானஞ்சிற	௧௬௨

பாட்டு.	பக்கம்.
மு	
முத்தனே	௧௪
முத்திநல்கி	௧௦௭
முந்தவகண்	௧௮௩
முந்தியசங்	௮௩
முப்புவிமூ	௧௮௭
முன்புகறச	௫௩
முன்னிலங்	௧௮௮
மூ	
மூவராம்	௧௧௬
மெ	
மெய்யுங்	௯௫
மே	
மேவுமண்	௧௫௦
மோ	
மோகவிருள்	௧௭௭
யோ	
யோகஞா	௧௧௦
வ	
வகுத்தகன்	௧௩௫
வஞ்சகமில்	௮௬
வடநூல்வல்	௫௮
வணங்கிநி	௧௮
வந்தவோரி	௨௦௨
வா	
வாக்கியந்த	௮௨
வாதனுவசத்	௧௯௮
வாயுத்தம்ப	௧௫௦
வாராயென்	௨௧
வி	
விடயசுக	௧௫௯
விண்ணெணென்	௫௦
வித்திகடா	௧௯௯
வித்தியா	௨௦௩
விருத்திஞா	௧௩௪
விருத்தியு	௮௫
விவகாரவே	௯௨
வினவுமிட	௧௮௨
வீ	
வீடதாம்ப	௧௩௯
வீயாத	௧௭௯
வே	
வேகின்ற	௧௬௦
வேடமாறிய	௧௨௩

பாட்டு முதற்குறிப்பு அகராதி
முற்றிற்று.

பட்டினத்தடிகள் அருளிச்செய்த

திருப்பாடற்றிரட்டும்

பத்திரகிரியார் அருளிச்செய்த

திருப்புலம்பலும்

மூலமும் விருத்தியுரையும்.

எல்லா நிலைகளிலும் உயர்ந்தநிலை துறவறநிலையென்று நம் முன்னோர்கள் அறிவுறுத்தியிருப்பது எவரும் அறிந்ததொன்றே. அத்தகை நிலைக்குச் சிறந்த இலக்கியமாக விளங்குபவர் பட்டினத்தடிகள் என்பதை விரித்துரைக்க வேண்டுவதில்லை. பட்டினத்தடிகள் துறவுநிலையைத் தாயுமானுருள்ளிட்ட பல சான்றோர் போற்றியிருக்கின்றனர்.

துறந்தவருள் தலைசிறந்து விளங்கும் பட்டினத்தடிகள் திருவாய் மலர்ந்தருளிய பாடல்களின் மாண்பை அறியாதாரில்லை. அப்பாடல்களை ஓதுவோர் உலகப்பற்றில் வெறுப்பும், கடவுள்பற்றில் விருப்புங் கொள்வர் என்பது உறுதி. அத்துணைச் சிறப்பு வாய்ந்த அவர் திருப்பாடல்களை ஓதி உய்யவேண்டுவது ஒவ்வோர் அறிஞர் கடனும்.

பட்டினத்தார் திருப்பாடல்களைப் பொருளுணராது ஓதுவதனால் பெரும்பயன் விளைதல் அரிது. அக்காரணம்பற்றிக் கற்றவர்க்கும் மற்றவர்க்கும் பயன்படவேண்டிப் பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டுக்கும், பத்திரகிரியார் திருப்புலம்பலுக்கும் ஸ்ரீமான்-திரு.வி. கலியாணசுந்தரமுதலியார் அவர்களைக்கொண்டு எளியநடையில் பல மேற்கோள்களடங்கச் சிறந்த விருத்தியுரை எழுதுவித்து; அவையடங்கிய நூலை நாம் வெளியிட்டுள்ளோம்.

அந்நூல் உயர்ந்தகாகிதத்தில் பிழையறச் சுத்தமாக அச்சிடப் பட்டிருக்கிறது. ஸ்ரீமான் முதலியார் தமிழ்நாட்டுக்கு நன்கு தெரிந்தவராதலால் அவரெழுதிய உரையைப்பற்றி நாமொன்றும் இங்கே விரித்துக் கூறவேண்டுவதில்லை. புத்தகத்தை வாங்கி வாசித்தால் அதன் நிலையும் தன்மையும் செவ்வனே விளங்கும். விலை ரூபா-2.

அ. இரங்கசாமிமுதலியார் அண்டு சன்ஸ்

நெ-24, தாண்டவராயப்பிள்ளைவீதி, சென்னை.